# கணேச தீபம்

## யா/ புங்குடுதீவு, ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

## நூற்றாண்டு மலர்

# 100

## CENTENARY JUBILEE

## 1910-2010




# Sri Ganesha Maha Vidyalayam
# Pungudutivu

தாய் மொழி புகட்டினாய், தமிழராய் வாழ,
வழி செய்தாய், தரணியெங்கும் தமிழர் புகழ்பாட
வழி சமைத்தாய், நூறு ஆண்டுகள் தமிழுக்கு
நீ ஆற்றிய சேவை தொடர வாழ்த்துகிறோம்.

*With Best Compliments From:*

# MEENAN TRADING CO.

**General Merchants & Commission Agents**

**No. 82, 4th Cross Street,**
**No. 208, Prince Street,**
**Colombo-11.**
**Tel:011-2324092**



# கணேச தீபம்

## நூற்றாண்டு விழா மலர்

## 1910-2010




யா/புங்குடுதீவு

ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

03.03.2010

# வித்தியாலய நிறுவநர்



## அமரர் வ. பசுபதிப்பிள்ளை

"புங்குடுதீ வென்றாற் புகல்பசுப திப்பிள்ளை
எங்கும் புகழ் நிறுவி ஏகினார் - இங்கிவர்போல்
தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று."

- பண்டிதமணி - சி.க-

# கணேச தீபம்

தீபம்: 01 | யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் | சுடர் : 01

## மலரைப் பற்றி....

மலர் மனதுக்கு மகிழ்ச்சியையும் கண்ணுக்குக் கவர்ச்சியையும் நல்கும் கவின்மிகு சக்தி வாய்ந்தது. உள்ளத்தைத் தன்பாலீர்த்து உயரிய நறுமணத்தை நுகர்வோர் மனங்குளிர நிறைத்திடும் நீர்மையது. அத்தகைய வியப்புறு நறுமலரின் மணத்தில் மயங்காதோர் மகிழ்வடையாதோர் எவருமிலர்.

புங்குடுதீவின் கலைக்கோயிலாக மிளர்வது ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம். கடந்த நூறு ஆண்டுகளாகக் கல்வியெனும் அரும்பயிரைத் தெய்வ அருளெனும் விளைநிலத்தில் அன்பெனும் நீரிட்டு அழியாது வளர்த்து வரும் இவ்வித்தியாலயத்தின் நூற்றுண்டு மலராகக் ***"கணேச தீபம்"***

இம் மலர் ஐந்து பெரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன :

1. **வாழ்த்துரைகள்**
2. **நினைவுச் சுவடுகள்**
3. **கவிதைக் களம்**
4. **சிறு கதைகள்**
5. **கட்டுரைகள்**

இந்த ஐந்து அம்சங்களும் அடங்கியதாக புதுமையும், அழகும் பூத்துக் குலுங்கும் நறுமலராகக் "கணேச தீபம்" மலர்கிறது. அதன் மலர்ச்சிக்கு உறுதுணை புரிந்தோர் அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியை உரித்தாக்குகிறோம். "கணேச தீபம்" ஆண்டு

அனைத்து அன்பு இதயங்களுக்கும் எங்கள் நன்றிகள்.

**- மலர்க்குழுவினர்.**

கணேச தீபம் ~~~



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

கல்விசார் பெருந்தகையீர் :-

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பல சிறப்புக்களைக் கொண்டது புங்குடுதீவு. நீண்ட கல்விப் பாரம்பரியத்தை பலதுறைகளிலும் வளர்த்துத் தந்த பெருமை தீவக மக்களை சாரும். இவ்வரிசையில் ஒழுக்கத்திற்கும் கல்வி பாரம்பரியத்திற்கும் 100 ஆண்டுகள் பணியாற்றிய பெருமை இப்பாடசாலையையே சாரும். பல இடர்பாடுகளுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய நூலின் நெறிநின்று 100 ஆண்டுகளைக் கடந்திருப்பது அனைவருக்கும் மகிழ்வைத் தருகின்றது. மனிதனை மனித நேயத்தோடு வாழ வழியமைத்து தருபவை கல்வி. இதனையே வள்ளுவரும்,

**"உடையார் முன் இல்லார் போல், ஏக்கற்றும் கற்றார்**

**கடையரே கல்லாதவர்"**

என்றார். இதனை அடிப்படையாகக் கொண்டே எல்லோருக்கும் கல்வி என்ற பாரம்பரியம் நம் நாட்டில் உருவானது. இதற்காகவே பாடசாலைகள் அனைத்தும் முனைந்து வருகின்றன. 100 ஆண்டுகள் இப்பாடசாலை தன்னிகரில்லா பணியாற்றியமையால் இந்நாட்டில் கல்வி வளர்ச்சியில் தனக்கொரு இடத்தை வகுத்துக்கொண்டது. இப்பணியை புனிதப் பணியாக செய்து வந்த அதிபர்கள், ஆசிரியர்கள் நன்றியுடன் வாழ்த்துதலுக்குரியவர்கள். இப்பணியில் இணைந்திருக்கும் அதிபர், ஆசிரியர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இன்று போல இன்னும் பல்லாண்டு காலம் வளர்ச்சியடைந்து ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்க இறைவன் ஆசீர்வதிப்பாராக

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

**- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

# வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையட்டும்!

# நூற்றாண்டு விழாக் குழுத் தலைவரின் செய்தி.

"கன்னலொடு செந்நெல்விளை பொன்னகர் தன்னிலுறை கண்ணகிக் கற்பரசியே" என்று பாடினார் வரகவி முத்துக்குமாருப் புலவர். புலவர் பலரும் போற்றும் புங்குடுதீவு, கண்ணகிக் கற்பரசி, கடல் பல கடந்து, வந்தணைந்து கோவில் கொண்ட திருப்பதியாகும். இத்தகு வரலாற்றுப் பெருமைமிகு புங்குடுதீவில் செந்தமிழும் சிவநெறியும் செழித்தோங்க வேண்டுமென்னும் பெருவிருப்புடன் சைவப் பெருமக்கள் பலரதும் ஒத்துழைப்புடன் 03.03.1910இல் சைவப் பெரியார் அமரர் வ. பசுபதிப்பிள்ளையின் பெரு முயற்சியினால் உருவானதே இவ்வித்தியாலயமாகும்.

புங்குடுதீவின் கலைக்கூடமாக, நாடு போற்றும் நல்லாசான்களையும் பொறியியலாளர்களையும், மருத்துவர்களையும், சடட்டத்தரணிகளையும், எழுத்தாளர்களையும், இசை வல்லுநரையும் உருவாக்கிய பெருமைக்குரியதாக இது விளங்குகின்றது. இங்கு கல்வி பயின்றோர் இன்று உலகளாவிய ரீதியில் பேரோடும் புகழோடும் திகழ்கின்றனர். அவர்களனைவரும் இன்று தங்களுக்கு எழுத்தறிவித்த கணேச வித்தியாலயத்தை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றனர். கடந்த நூறாண்டுகளாக அனைத்து மாணவர்க்கும் பாகுபாடு எதுவுமின்றிக் கல்விப் பணிசெய்த இவ்வித்தியாலயம் தான்தோன்றிய திகதியிலேயே தனது நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடுவது பெருமகிழ்ச்சிக்குரியதாகும். நூறாண்டுகால வரலாற்றில் மட்டுமன்றிப் புங்குடுதீவின் வரலாற்றிலேயே இந்நூற்றாண்டு விழா புதியதோர் திருப்பு முனையாக அமையுமென எதிர்பார்க்கிறோம். இவ்விழாவைச் சிறப்புற நடத்துவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வரும் பழைய மாணவர்களையும் நூற்றாண்டு விழாக் குழுவினரையும் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகிறேன்.

புங்குடுதீவில் முதன் முதலில் தோன்றிய சைவப் பாடசாலை என்ற வகையிலும் பல்லாயிரம் மாணவர்களுக்கு பயன்தரும் பயிற்சிகள் அளித்து அவர்கள் தம் சீரிய வாழ்வுக்குச் சிறப்புற வழிகாட்டிய கல்விக் கூடம் என்ற முறையிலும் இதன் பணிகள் என்றும் நினைவு கூரத்தக்கன என்றாலதுமிகையல்ல. நூறு ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இவ்வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரென்ற வகையிலும் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவரென்ற முறையிலும் இவ்விழாக்காண வாரீர்! வாரீரென அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன். "கணேச சங்கமம்" புங்குடுதீவின் வரலாற்றில் புதியதோர் திருப்பத்தை உருவாக்குவதாக! கணேச தீபம் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதாக! நிறைந்த மனதுடன் வாழ்க! வாழ்கவென இவற்றை வாழ்த்துவோமாக!

**- த. துரைசிங்கம்**

*நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர்*



வட மாகாண

கல்வி அமைச்சின் செயலாளர்

# திரு. இ. இளங்கோவன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

யா / புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் நூற்றாண்டு கால கல்விச் சேவையை வழங்கி இறும்பூதெய்துகிறது. சைவத் தமிழ்ப் பண்பாட்டிற்கமைய புங்குடுதீவுப் பகுதிச் சிறார்களுக்கு உயர்ந்த விழுமியங்களைக் கொண்ட கல்வியை வழங்கி பலரையும் ஆளாக்கி வைத்த பெருமையைக் கொண்டுள்ளது. சமூகத்தில் பல்வேறு தலைமைத்துவப் பண்பையும் ஒரு நடுநாயகமான நிலையையும் இவ்வித்தியாசாலை கொண்டுள்ளது.

உயர்ந்த கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு இடைநிலை வகுப்பு வரையும் கல்வியோடு இதர புற கல்விச் செயற்பாட்டுத் திட்டங்களையும் முன்னெடுத்த பெருமை இப்பாடசாலைக்கு உண்டு. இடப்பெயர்வின் போது சிறிது நலிவடைந்தாலும் மீண்டும் மீண்டும் தழைத்து முன்நோக்கிச் செல்லும் நோக்குடையதாக இருக்கின்றது. எனவே எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு சமூகத்தினரின் ஒத்துழைப்பும் ஈடுபாடும் வேண்டப்படுகிறது.

நூற்றாண்டு மலரை உருவாக்கி அச்சேற்றி வரலாற்று ஆவணமாக்கிய அதிபர், ஆசிரியர், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் போற்றுதற்குரியவர்கள்

நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் சிறப்புற என் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

"கேடில் விழுச்செல்வம் கல்வி, ஒருவற்கு மாடல்ல மற்றையவை". உலகில் எந்தவொரு நாட்டின் விழுமைக்கும், பண்பாட்டு பாரம்பரியச் சிறப்புக்களுக்கும் அளவுகோலாய் அமைவது கல்வியேயாகும். கல்வியைக் கண்ணெனப் போற்றும் யாழ் மண்ணில், கல்வியின் வரலாறு திண்ணைகளிலேயே தொடங்கியது. இவ்வழியில் இன்று நூற்றாண்டு காணும் யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம், தனது வரலாற்றில் பல படிகளைக் கடந்து இன்று மகாவித்தியாலயமாய் மலர்ந்துள்ளது.

கசடறக் கற்று, கற்றவழி நிற்கும் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனும் கல்வியின் நோக்கம் யா/புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயத்தினால் செவ்வனே நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பள்ளியில் படிப்போடு புகட்டப்பட்ட பண்புகள் புங்குடுதீவு மக்களிடையே பண்பாடாய் பிரதிபலித்தன.

ஆரம்பநாளில் பல அல்லல்கள் மத்தியில் தளராது நின்று, தனிச்சிறப்புடன் வளர்ந்த, யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம், அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் பின்னரும், இத்தகையதொரு எழுச்சியுடன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடல் பெருமைக்குரியதாகும். இம்மகாவித்தியாலயம் சகல வளங்களையும், நலன்களையும் பெற்று, நவீன தொழில்நுட்பத்தின் துணையோடு மாணவரின் அறிவுச் செல்வத்தைப் பெருக்கி, வளர்பிறையென வளர்ந்திட இந்நூற்றாண்டு நிறைவு நாளில் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**- க. கணேஷ்**
*அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,*
*யாழ் - மாவட்டம்.*



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்து

கல்வியே எங்களின் பெருஞ் சொத்தாகும். கல்வியெனும் வல்லமையாலேயே எங்களின் சமூக வரலாறும் பண்பாட்டு வாழ்வும் காக்கப்படுகின்றது இந்த வகையில் எங்கள் பாரம்பரிய புலங்களின் ஒன்றான புங்குடுதீவில் விளங்கும் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் நூற்றாண்டுவிழாக் காணும் செய்தி பெருமகிழ்ச்சி தருகின்றது.

அந்நிய பண்பாட்டு ஆதிக்கங்களிடை சுதேச பண்பாட்டினை மீட்கும், காக்கும் நாவலர் பெருமானின் வழியில் புங்குடுதீவைச் சேர்ந்த சமூக சமய உணர்வாளரான திரு. வ. பசுபதிப்பிள்ளை அவர்களின் அயரா முயற்சியால் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் துணையுடன் ஆரம்பிக்கப்பெற்ற இந்தப் பாடசாலையின் தொடக்க வைபவத்தில் சைவ அறிஞர் திரு. சிவபாதசுந்தரனார், ஞானசித்தி பத்திராதிபர் திரு. சி. தாமோதரம்பிள்ளை போன்ற சான்றோர்கள் கலந்து ஆசிதந்த வரலாறு பெருமைக்குரியது.

தீவகத்தின் பாடசாலைகளில் பல காலம் ஆசிரியப் பணிபுரிந்த என் தந்தையாரின் வழியாக இப்புலங்களின் கல்விமான்கள் பலரை இளவயதிலேயே அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இடரினும் தளராத இக்கல்வியாளர்களின் அர்ப்பணிப்பினாலே ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் தான் சந்தித்த பின்னடைவுகளையும் தாண்டி இன்று நூற்றாண்டு விழாக் காண்கின்றது.

இன்றைய நூற்றாண்டுகால பெருமையுடன் வித்தியாலயத்தின் வளங்களைப் பெருக்குவதுடன் வித்தியாலய சமூகத்தின் வாழ்க்கை தரமேம்பாட்டுக்கான திட்டங்களையும் வகுத்துச் செயற்படுதல் இன்றியமையாதது. இந்த பெரும்பணியில் உழைக்கின்ற வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாக் குழுவினருக்கும் ஏனைய பாடசாலை சமூகத்தினருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்

**- பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கம்**
*துணைவேந்தர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*



# பலநூற்றாண்டு பணிசெய்ய வாழ்த்துகின்றேன்

யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் 2010ல் தனது நூறாவது ஆண்டை நிறைவுசெய்வதையிட்டு வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு மிகவும் கடினமாக உழைத்த சைவப்பெரியார் ஸ்ரீமான் பசுபதிப்பிள்ளையையும் அவருடன் இணைந்து செயற்பட்ட பெரியோர்களின் முயற்சிக்கும் தீரக்கதரிசனத்திற்கும் தீவுப் பகுதியினர் என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இப்பாடசாலை தீவுப்புகுதியில் சைவவித்தியா விருத்திச் சங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட முன்னோடிக் கல்வி நிறுவனமாகும். இதனைத் தொடர்ந்து சைவவித்தியா விருத்திச் சங்கத்தினர் தீவகமெங்கும் பல சைவப் பாடசாலைகளை நிறுவி கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்தனர்.

ஸ்ரீகணேச மகா வித்தியாலயம் கடந்த 100 ஆண்டுகள் தனது கல்விப் பணியை திறம்படச் செய்துள்ளது. காலத்துக்குக் காலம் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து பல கண்டங்கள், தடைகள் தாண்டி இன்று புதுப்பொலிவும் புத்துணர்ச்சியும் பெற்று 21ம் நூற்றாண்டுக்குரிய கல்வியை வழங்கக்கூடிய கல்வி நிறுவனமாக வளரத் துடிக்கின்றது.

1960களிலிருந்து புங்குடுதீவின் நடுத்தர வகுப்பினர் யாழ்ப்பாண நகருக்கு இடம்பெயர்ந்தாலும் 1991ல் புங்குடுதீவு மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்ததால் இப்பாடசாலையின் செயற்பாடு பெரிதும் பாதிக்கப்பட்டது. 1991- 1996க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இப்பாடசாலை யாழ்ப்பாணத்திலும், சிறுகாலம் தென்மராட்சியிலும் இயங்கவேண்டியதாயிற்று. 1991க்குப் பின்னர் 1996ம் ஆண்டின் நடுப்பகுதியிலேயே இப்பாடசாலை தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.

1910, 1920, 1930 களில் தீவுப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட சைவப் பாடசாலைகள் தீவுப்பகுதிப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களித்தன. இப்பாடசாலைகள் ஆரம்பித்ததுடன் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மாத்திரமல்லாமல் சமூக அமைப்பிலும் பெரிய மாற்றம் ஏற்பட்டது. தீவுப் பகுதியில் தமிழர் ஆசிரிய சமூகமும் உருவாகியது.

இவர்கள் தீவுப் பகுதியின் சமூக பொருளாதார வளர்ச்சியில் மிகப்பெரும் சக்தியாக உருவெடுத்தனர். சமூக மேம்பாட்டுக்கு முன்னின்று உழைக்கும் படையாக மாறினர். கிராமிய மட்டத்தில் சமூக செயற்பாடுகளில் இவர்களின் பணி காத்திரமாக இருந்தது. இச்சமூகத்தினரின் அடுத்த பரம்பரை கல்வியிலும் தொழிலிலும் சிறப்புற்றது. தீவுப் பகுதியினரின் வாழ்வை மேம்படுத்த உதவியது. இத்தகைய மாற்றங்களுக்கெல்லாம் ஸ்ரீகணேச மகா வித்தியாலய ஆரம்பமும் நிறுவனர்களின் தூரநோக்கமும் தந்திரோபாயங்களும் பணிகளும் காரணமாகின.

100 ஆண்டைப் பூர்த்திசெய்து புதிய காலத்துக்குள் பிரவேசிக்கும் இப்பாடசாலையை மேலும் வளர்த்தெடுக்க வேண்டியது புங்குடுதீவு மக்களினதும் தீவுப்பகுதி மக்களினதும் கடமையாகும். புங்குடுதீவின் புனர்வாழ்வு, புனருத்தாரணம், வருங்கால அபிவிருத்தி யாவற்றுக்கும் அடித்தளமாக அமைவது கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியாகும்.

இந்நிலையில் புங்குடுதீவின் வளர்ச்சியில் இக்கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியும் தொடர்புபடுகின்றது. இதனால் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை சமூகம், புலம்பெயர்ந்த சமூகம் ஆகியன இணைந்து இப்பாடசாலையை கல்விப் பணியில் விளைதிறனானதும் வினைத்திறனானதுமான நிறுவனமாக வளர்த்தெடுப்போமாக.

**- பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
*வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்*
*யாழ் - பல்கலைக்கழகம்*

# வாழ்த்துச் செய்தி

யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் தீவக கல்வி வலயத்தில் உள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகும். கற்றல், கற்பித்தல் செயற்பாடு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஊடாக, பாடசாலையின் பண்புசார் சுட்டியையும் தரத்தையும் பாடசாலை சமூகத்தினர் உயர் நிலையில் பேணி வருவது போற்றப்பட வேண்டியது. இடம்பெயர்ந்த நிலையிலும் தனது பெயரை நிலைநிறுத்தியது மட்டுமன்றி இன்றும் இப் பாடசாலையானது வீறு கொண்ட தனது பயணத்தை தொடர்ந்து வருவதை சான்றாதாரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய செயற்பாடுகளுக்கு காரணமாக விளங்குகின்ற பாடசாலையின் அதிபர், ஆசிரியர் குழாத்தினர் மற்றும் பாடசாலை சார்ந்த சமூகத்தினரின் பங்களிப்பு பாராட்டுதற்குரியது.

மேலும் பல கல்விமான்கள் உருவாகுவதற்கு அடித்தளமிட்டு தன்பெயரை பொலிவுடன் புகழ்மணம் பரப்புகின்ற சிறப்பும் கொண்டது எனக் கூறுவது பெருமைக்குரியதாகும்.

எனவே பாடசாலை தன் கல்விப் பயணத்தை தொடர்ந்து செய்வதோடு இனிவரும் காலங்களில் மேலும் உயர்தரப் பெறுபேறுகள் ஊடாக நல்ல சமூகத்தினரை உருவாக்க வேண்டும் என்ற அவாவில் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலர் சிறப்புற வெளிவர எனது நல்லாசிகள்.

**- வீ. இராசையா**
*வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*வடமாகாணம்.*

# வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் இவ்வருடம் நூற்றாண்டு விழா காண்பதை இட்டு பெருமகிழ்வடைகின்றோம். மனிதனின் சிந்தனைகள் உற்பத்தியாவது சிரசில் அமைந்துள்ள மூளையில் இருந்தே ஆகும். அதேபோன்று இலங்கைத் திருநாட்டின் சிரசு போன்று அமைந்துள்ள யாழ் குடா நாட்டில் தீவகப் பகுதியானது மூளை போன்று அமைந்துள்ளது என்று சொன்னால் மிகையாகாது. காரணம் நற்குடி மக்கள், கல்விமான்கள், ஆன்மீகவாதிகள், பெரும் தொழிலதிபர்கள் போன்றோரை உருவாக்கிய பெருமை தீவகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அளவில் சிறப்பாக உள்ளது. அதிலும் புங்குடுதீவு கிராமம் உயர்வு அடைய அங்கு வாழ்ந்த மக்களின் கடின உழைப்பு, இறைவன் பால் கொண்ட அதியுன்னத பக்தி, ஆசாரமான குடும்ப விழுமியங்கள் என்பவற்றின் காரணமாக புங்குடுதீவு ஆனது சிதறிக் கிடக்கும் வைரங்களில் (தீவுகளில்) பட்டைத் தீட்டிய வைரம் போன்று பிரகாசிக்கின்றது.

புங்குடுதீவு கிராமத்தின் சிறப்பான நிலைக்கு கிழக்கூர் பகுதி மக்களின் பங்களிப்பு எப்படி சிறப்பானதாக இருந்ததோ அந்த கிழக்கூர் மக்களின் கல்விக்கு, கல்வி வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பை புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் வழங்கியது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அன்போடு பண்பும் சேர்ந்ததுவே அறநெறி ஆகும். அதேபோன்று ஏட்டுக்கல்வியோடு அனுபவக்கல்வியும் அதாவது பட்டறிவும் பகுத்தறிவும் இணையும் போதே ஆளுமையான மாணவர்களை ஓர் கல்லூரி உருவாக்க முடியும். இப்பாடசாலையும் இப்பாடசாலையின் சிறந்த ஆசான்களும் தம் மாணாக்கர்களுக்கு சிறந்த ஏட்டுக்கல்வியையும், நல் அனுபவங்களையும் அறிவுரைகளையும் வழங்கி சமூகத்திற்கு சிறப்பான பல மாணாக்கர்களை உருவாக்கி இருக்கின்றனர். அந்த வகையில் குறிப்பிடக் கூடிய புகழ் பூத்த மாணவர்களில் சிலராக வித்துவான் சி. ஆறுமுகம், கவிஞர் த.துரைசிங்கம், சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம், திருப்பூங்குடி ஆறுமுகம், வைத்திய கலாநிதி சு. சண்முகலிங்கம், ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் கெங்காதரம்பிள்ளை, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், அகில இலங்கை ரீதியில் உயர்தர கணிதப்பிரிவில் முதலாமிடம் பெற்ற அ. இளங்குமரன் போன்றவர்களை கூறலாம்.

2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி எப்படி ஒரு சுனாமி இலங்கையை தாக்கியதோ, 2010ம் ஆண்டு எப்படி ஒரு பூகம்பம் கெய்ற்றியை தாக்கியதோ அவ்வாறே 1991ம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் காரணமாக ஏற்பட்ட முற்று முழுதான இடப்பெயர்வானது புங்குடுதீவையும் அதனோடு சேர்ந்த கல்வி நிலையையும் பாரிய பின்னடைவிற்கு இட்டுச் சென்றது என்பது வெளிப்படையான உண்மை. அந்த வகையில் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயமும் பின்னடைவை எதிர்நோக்கிய சூழ்நிலை உருவாகியது. எனினும் இவ்வாறான சிறப்பான நூற்றாண்டு விழா கொண்டாட்டமானது இப்பாடசாலை மீண்டும் தன்னுடைய உயரிய நிலைக்கு உயர்வதற்கு முத்தாய்ப்பாக விளங்க வேண்டும் என்பது எனது பேரவாவாக உள்ளது. நூற்றாண்டு விழா குழுவினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மனநிறைவு அடைகின்றேன்.

**- திரு. மு. நந்தகோபாலன்**
*வேலணை பிரதேச செயலாளர்*



# வாழ்த்துகின்றேன்

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்வெய்துகின்றேன்.


1910 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் மூன்றாம் நாள் உதயமான இவ்வித்தியாலயம் பல சகாப்தங்களாக புங்குடுதீவு வாழ் மக்களின் அபிலாசையைப் பூர்த்தி செய்யும் வகையில் பெரும் பணியாற்றியுள்ளது.

புங்குடுதீவில் முதற் சைவக் கல்விக் கூடமாகத் தோற்றுவிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இந்நாட்டிலும் கடல்கடந்த நாடுகளிலும் பெரும் சிறப்புடன் வாழும் அறிஞர்களையும் செல்வந்தர்களையும் தோற்றுவித்துள்ளமை பெருமைக்குரியது.

1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஐந்நூற்றிற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு சிறப்புற இயங்கிய இவ் வித்தியாலயம் நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல், பாரிய இடப்பெயர்வு காரணமாக நலிவுற்றபோதிலும் தளராது மீண்டும் தழைத்து சிறப்புற இயங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது. இப்பாடசாலையில் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்தி சங்கமும் பெரும் பங்காற்றி வருகின்றமை சிறப்பிற்குரியது.

இவ்வித்தியாலயத்தின் சேவை பல்கிப் பெருக வேண்டுமென வாழ்த்துவதுடன் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் அதிபரையும் அவருக்கு உறுதுணையாக இருந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் நூற்றாண்டு மலர் சிறக்க இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**- வ. இராதாகிருஷ்ணன்**
*வலயக் கல்விப் பணிப்பாளர்*
*தீவகம், வேலணை.*



# வாழ்த்துரை

புங்குடுதீவின் கலைக்கோயில் எனப் போற்றப்படும் ஸ்ரீ கணேச வித்தியாலயம் நூற்றாண்டு விழா கொண்டாடுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.


1910 ஆண்டு பங்குனித் திங்கள் 3ஆம் நாள் "பொன்கொடு தீவு" எனப் புகழப்படும் புங்குடுதீவிலே இவ்வித்தியாலயம் உதயமாகியது. புங்குடுதீவின் கல்விப் பாரம்பரியம் மிகவும் தொன்மையானது. 19ஆம் நூற்றாண்டிலே நிறுவன மயப்பட்ட கல்விச்சாலைகள் நிறுவப்படுவதற்கு முன்னரே இப்பகுதியில் திண்ணைப்பள்ளிகள் பல இருந்தன என அறிய முடிகின்றது. இத்திண்ணைப்பள்ளிகளை நடத்திய கணக்காயர்கள் மரபுவழிப் புலமையாளர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மிஷனரிமாரின் வருகையுடன் நிறுவனமயப்பட்ட ஆங்கிலக்கல்வி முதன்மை பெற்றது. ஆங்கிலக்கல்வியைப் பெறவிரும்பியவர்கள் கிறிஸ்தவச் சூழலை நாடவேண்டியிருந்தது. உண்மையில் உள்ளத்தால் கிறிஸ்தவத்தை உள்வாங்காமல் ஆங்கிலக்கல்வியை மாத்திரம் சிறப்பாக உள்வாங்கிய பல அறிஞர்கள் 19ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தனர். சைவப்பிள்ளைகள் சைவச்சூழ்நிலையில் ஆங்கிலக்கல்வியைப் பெறவேண்டுமென்ற கருத்தினை நாவலர் முன்வைத்தார். நாவலரின் கருத்து யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி இலங்கை முழுவதுமே வியாபித்தது. சைப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை மனங்கொண்டு ஊர்கள் தோறும் பாடசாலைகள் நிறுவப்பட்டன ஆசிரியர்கள் மெய்வருத்தம்பாராது கண்துஞ்சாது பொருளாதாரத்தை எதிர்பாராது அர்ப்பணிப்புடன் பணியாற்றினார் .

இந்த மரபிலேதான் புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம் என்னும் கல்விக்கூடம் தோற்றம் பெற்றது. அதன் கல்விப் பயணம் நூற்றாண்டைக் கண்டுவிட்டது. பண்பாலும், படிப்பாலும் உயர்வுபெற்ற மாணாக்கர் பரம்பரையை உருவாக்கிய பெருமை இக்கலைக் கூடத்திற்கு உண்டு. "அன்ன புண்ணியம் யாவினுங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவத்தல்" என்ற பாரதியின் கருத்துக்குச் சாட்சியாக இவ்வித்தியாலயத்தைக் கொள்ளலாம். டாக்டர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள் பொலிவோடு நூற்றாண்டு கண்டு தளராத இளமையுடள் இருக்கும் கல்லூரித் தாயை வணங்குவோம். வாழ்த்துவோம் அவள் திருப்பணியிலே ஈடுபட்டுழைக்கும் அனைவரையும் பாராட்டுகிறோம்.

**- பேராசிரியர்ஈ கலாநிதி எஸ். சிவலிங்கராஜா**

*தலைவர் - தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*



# வாழ்த்துச் செய்தி


புகழ்பூத்த புங்குடுதீவு மண்ணில் கடந்த நூறு வருடங்களாகச் சிறந்த கல்விப் பணி பரியும் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன்.

கல்வி வசதிகளைக் காட்டி மதமாற்றம் நடைபெற்ற காலகட்டத்தில் சைவ சமயத்தையும் தமிழ்மொழியையும் பாதுகாக்கும் பிரசாரங்கள் நாவலர் பெருமான் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இதனடிப்படையில் புங்குடுதீவுக் கிராமத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சைவப் பாடசாலை இதுவாகும். "இந்து போர்ட்" நிறுவனத்தினரின் பாடசாலையாகப் பதிவு பெற்று சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் கல்வி பெறும் வாய்ப்பு இக்கிராம மக்களுக்கு இப்பாடசாலையூடாகக் கிடைத்தது

பல ஆயிரம் பிள்ளைகளுக்குக் கல்விக் கண் திறந்த இப்பாடசாலை காலக்கிரமத்தில் அனைத்து வளங்களையும் உள்ளடக்கிய சிறந்த பாடசாலையாக வளர்ச்சி பெற்றது. 1990 களில் ஏற்பட்ட மக்கள் இடப்பெயர்வால் பொலிவிழந்தாலும் மீளவும் உயிர்ப்படைந்து வருவது மகிழ்வான விடயமாகும்.

நூறாண்டு நிறைவில் இப்பாடசாலைச் சமூகத்தினர் ஒன்றிணைந்து தமது அன்னையின் புகழை மீளவும் நிலைநிறுத்தும் நிகழ்வாக இவ்விழாவினை எடுப்பது மகிழ்ச்சிக்குரிய செயலாகும். இப்பணியில் ஈடுபடும் அனைவரையும் பாராட்டுவதுடன் பற்றுறுதியுடன் வழிகாட்டும் அதிபரையும் வாழ்த்துகிறேன். பாடசாலை மேலும் பல துறைகளிலும் வளர்ச்சிபெற இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

**- ப. விக்னேஸ்வரன்**
*வலயக் கல்விப் பணிப்பாளர்*
*வலிகாமம்.*



# வளர்ச்சிப் பாதையில் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

யாழ் நகரிலிருந்து தீவகம் நோக்கிப் பயணிப்போர் புங்குடுதீவுப் பாலம், பின்னர் நுழைவாயில், பிள்ளையார் ஆலயம் என்பவற்றைக் கடந்து புங்குடுதீவுச் சந்தியை அடைவதற்கு இரு மார்க்கங்களில் பயணிக்கலாம். இதில் பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவோர் வீதியின் வலது புறத்தில் அமைதியான சூழலில் ஒரு நூற்றாண்டைக் கடந்தது என்பதைப் பறைசாற்றும் பழைமையான இவ்வித்தியாலயத்தை நிச்சயம் அவதானித்திருப்பர். தரமான கல்வி, அபரிதமான பொருளாதார வாழ்வு, சிறப்பான வாழ்க்கை என்பவற்றை நாடிப் பலரும் தீவகத்திலிருந்து புலம்பெயர்ந்துள்ள இந்நாளில் கல்வியில் சமவாய்ப்பு, சமசந்தர்ப்பம், யாவருக்கும் தரமான கல்வி என உதட்டளவில் ஒப்புவிக்கப்படும் கல்விப் பூட்கைகளை ஓரளவுக்கேனும் நிதர்சனமாக்கும் உயரிய நோக்குடன் இயங்கிவரும் தீவகப் பாடசாலைகளில் இவ்வித்தியாலயமும் ஒன்றாகும்.

யான் இப்பிரதேசத்தில் பணியாற்றிய காலப்பகுதியில் பல தடவைகள் இப்பாடசாலையைத் தரிசித்துள்ளேன். சிறந்த பயன்தரு பாடசாலை ஒன்றிற்கான நல்ல அம்சங்கள் பலவற்றை இப்பாடசாலையில் அவதானித்துள்ளேன். "நல்ல அதிபர் உள்ள கூடாத பாடசாலை இல்லை" என்பது கல்வியியலாளர் கருத்து. இக்கருத்தை நிதர்சனமாக்கும் அதிபர் ஒருவர் தற்போது கடமையில் உள்ளார். நல்லாசிரியர்கள் பெரும்பாலானவர்கள் கொண்ட ஆசிரியர் குழாம் ஒன்று இங்கு சேவையாற்றுகிறது. அதிபர் - ஆசிரியர் - மாணவர் உறவுகள் மேம்பட்ட நிலையில் உள்ளன. கணனி, நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம் என பௌதீக வளங்கள் மேம்பட்டுள்ளன. பாடசாலைக்கென உயர்வான குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதனை எய்த அக்கறையுள்ளோர் அனைவரும் அயராது உழைக்கின்றனர். இவர்களின் தளராத முயற்சிக்கு இந்நூற்றாண்டு விழா ஓர் எடுத்துக்காட்டு. "கஞ்சி குடிக்க வழியுமில்லை அதன் காரணங்கள் ஏதென்ற அறிவுமில்லை" என்ற வைர வரிகள் மூலம் அறியாமை நிறைந்த சமுதாயத்திற்கு அறிவுரை பகர்ந்தான் பாரதி. அறியாமையைப் போக்க ஒரு நூற்றாண்டுக்கு மேல் நின்று நிலைத்துள்ள இது போன்ற பாடசாலைகளே இன்றும் சாட்சிகளாக உள்ளன.

தீவகப் பகுதியில் நூற்றாண்டு விழாக்காணும் இப்பாடசாலை குறித்து நாம் அனைவரும் பெருமிதமடையலாம். ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சியில் ஒரு நூற்றாண்டு என்பது பிரமிப்பூட்டும் காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் இதன் வளர்ச்சிக்காக உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். நூற்றாண்டு விழா சிறப்பாக நடந்தேற வேண்டுமென வாழ்த்தும் பல நல்ல உள்ளங்களுடன் யானும் இணைந்து கொள்கின்றேன்.

**- ஆர்.ராஜேந்திரன்**

*பிரதிக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்*

# வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவினை இவ்வாண்டு கொண்டாடுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சைவமும் தமிழும் இரு கண்களாகப் போற்றப்பட்ட இடம் புங்குடுதீவு. கல்வி கேள்விகளாலும் தம் அயராத முயற்சியினாலும் உயர்ந்தவர்கள் இவ்வூர் மக்கள்.

எக்காரியத்தை ஆரம்பித்தாலும் இந்துக்களின் முதல் வணக்கம் விநாயகப் பெருமானுக்கே. "கணேசா" நாமத்தினையே பாடசாலைக்கும் சூட்டி சைவப் பிள்ளைகளை மதமாற்றத்திலிருந்து மீட்டு சைவப்பாரம்பரியத்தில் கல்வி கற்க வழி சமைத்தவர் அமரர் வ.பசுபதிப்பிள்ளை. ஒரு நூற்றாண்டு காலம் மங்காப் புகழுடன் இப்பாடசாலை மிளிர்கிறது. பல சாதனைகளை இங்கு கல்வி கற்ற மாணவர்கள் நிகழ்த்தி இருக்கிறார்கள். பேராசிரியர்கள் தொடக்கம் பெரும் பதவிகளில் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர் சிறப்புப்பெற்றுள்ளனர். இங்கு கல்வி கற்ற மாணவர்கள் தாம் வாழுகின்ற இடங்களிலெல்லாம் தம் பிறந்த பொன்னாட்டையும் தாம் கல்வி கற்ற பாடசாலையையும் மறக்காமல் பழைய மாணவர் சங்கங்களாக நிறுவி ஆண்டு தோறும் விழாக்களையும், போட்டிகளையும், நிகழ்வுகளையும் நடாத்தி எல்லோரும் ஒன்றிணைந்து நன்றி கூறுவதை பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். எங்கு வாழ்ந்தாலும் தம் தாய்நாட்டை நேசிக்கின்ற உயர்ந்த பண்பினைக் காண்கின்றோம். தம் உழைப்பில் ஒரு பகுதியை தம் பொன்னாட்டிற்கும் தாம் கல்வி கற்ற பாடசாலைகளுக்கும் கொடுக்கின்ற நல்மனப்பாங்கு வளர்ந்திருக்கின்றது. நூற்றாண்டு விழாவென்றால் சொல்லவும் வேண்டுமா? அதற்கான செயற்பாடுகளில் முழுமூச்சுடன் செயற்படுகின்றனர். நூற்றாண்டு மலரொன்றினையம் வெளியிடவுள்ளது. இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

பல அதிபர்களைக் கண்டு அவர்களைப் பெருமைப்படுத்தியது இப்பாடசாலை. அதன் வழியில் தற்போது கடமையாற்றும் S.K.சண்முகலிங்கத்தையும் பாராட்டாமல் இருக்க முடியாது. பாடசாலகள் மூடப்பட்டு இருந்த காலம் பல இடையூறுகளுக்கு மத்தியில் துணிந்து வந்து இப்பாடசாலையை மீளவும் செயற்பாட்டில் இயங்க வைத்தது பாராட்டத்தக்கது. தொடர்ந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் அனைவரையும் பாராட்டி, பல நூற்றாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

**- கு.சரவணபவானந்தன்**
*(கோட்டக் கல்விப் பணிப்பாளர்)*
*வேலணை*

# எங்கள் அதிபர்



எஸ். கே. சண்முகலிங்கம் J.P

# நூற்றாண்டு விழாக் குழுவினர்



அமர்ந்திருப்போர் :-

திருமதி. ஸ்ரீ லங்கநாயகி பத்மநாதன்,
திருமதி. நிர்மலா தனசிங்கநாதன்,
திருமதி. ஸ்ரீலதா சிவஞானசுந்தரம்,
திரு. இ. வைத்திலிங்கம்,
திரு. த. துரைசிங்கம் (தலைவர்)

திரு. வே. சிவசாமி,
திரு. செ. தில்லைநாதன் (உபதலைவர்)
திரு. நா. தனசிங்கநாதன்,
திரு. ச. முத்துலிங்கம்

நிற்பவர்கள்:-

திரு. சி. சண்முகம்,
திரு. சே. சுந்தரலிங்கம்,
திரு. சு.சசிகுமார்
திரு. தம்பிஜயா தேவதாஸ், (செயலாளர்)

திரு. நா. சுந்தரலிங்கம்,
திரு. கு. செந்தீபன் (உபசெயலாளர்)
திரு. ப. இந்திரன் ,
திரு. சி. முருகானந்தவேல் (பொருளாளர் )


# "கணேச தீபம்" நூற்றாண்டு மலர்க் குழுவினர்



அமர்ந்திருப்போர் :- திரு. சி. முருகானந்தவேல், திரு. செ. தில்லைநாதன், திரு. த. துரைசிங்கம்

நிற்போர் :- திரு. கு. செந்தீபன் . திரு. தம்பிஜயா தேவதாஸ்

# நூற்றாண்டு விழா ஆலோசகர் குழு



**அமர்ந்திருப்போர் :-**

திரு. ச. முத்துலிங்கம் ,
திரு. இ. ஐவத்திலிங்கம்,
திரு. செ . தில்லைநாதன்,
திரு. த. துரைசிங்கம் ,
திரு. வே. சிவசாமி

**நிற்போர் :-**

திரு. சி. சண்முகம்,
திரு. கு. செந்தீபன்,
திரு. தம்பிஜயா தேவதாஸ்,
திரு. சி . முருகானந்தவேல்.

# புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம் ஆயிரம் ஆண்டு காலம் நிலைத்திடட்டும்

யாழ்ப்பாணக் கல்வி சமூகத்தில் இந்து பண்பாட்டுக்கும் தாய் மொழி வழி கல்விப் பணிக்கும் வித்திட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சைவப் பாடசாலைகளை ஆரம்பித்தார். இதன் பலனாக சைவப் பாடசாலைகள் இன்று கல்வி சமய, சமூகப் பணிகளில் தமது ஆளுமையைப் பதித்து வருகின்றன. நூற்று ஐம்பது வருடங்களுக்கு மேல் இலங்கை வாழ் சைவ, தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றார்கள் கல்விபெறுகின்றார்கள்.

மனிதன் குறைந்தது நூறு ஆண்டுகளாவது வாழவேண்டும். வித்தியாலயத்தின் ஆரம்ப நிகழ்வைச் சொல்வதற்கு ஒருவரும் எம்மத்தியில் இல்லை. புங்குடுதீவில் முதல் தோன்றிய சைவப் பாடசாலையான ஸ்ரீ கணேச வித்தியாசாலை தனது நூறாவது ஆண்டைப் பூர்த்தி செய்து நூற்றாண்டு விழா கொண்டாட இருப்பது கல்வியுடன் தொடர்புடைய எல்லோருக்கும் மன மகிழ்வைத் தருகின்றது. மனிதனாய்ப் பிறந்த எல்லோருக்கும் கல்வி கிடைக்க வேண்டும். நல்வாழ்வு வாழ கல்வியே வழி. நூறு ஆண்டுகளுக்கு முன்பும் கல்வியின் தேவையை உணர்ந்த கல்வியாளர்கள் ஊரில் வாழ்ந்தார்கள். இலட்சிய நோக்கு கொண்டவர்கள் தத்தம் ஊர்களில் சைவப்பாடசாலைகளை ஆரம்பித்தார்கள்.

அன்று புங்குடுதீவில் வாழ்ந்த கல்வியாளர்கள், சைவப் பண்பாளர் அமரர் உயர்திரு. வ. பசுபதிப்பிள்ளை அவர்கள் சேர் பொன் இராமநாதன், சேர் வை. துரைச்சாமி, திரு. சு. இராசரத்தினம் போன்ற கல்விமான்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். பல ஆண்டுகள் உள்ளூர் ஆட்சிமன்ற தலைவராக இருந்தவர். ஊர் பிள்ளைகளுக்கு ஒரு கல்விச் சாலையை அமைக்க வேண்டும் என்ற லட்சிய எண்ணம் இவருக்கும் ஏற்பட்டது. விரும்பியது நிறைவெய்தியது. 1910ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் மூன்றாம் நாள் ஊரின் கிழக்குப் பகுதியில் ஸ்ரீ கணேச வித்தியாசாலை உதயமானது. இன்று நூறு வருடங்களின் பின் வித்தியாலயத்தின் வளர்ச்சி எங்களை அதிசயிக்க வைக்கின்றது. மனப்பூரிப்பில் ஒரு விழா எடுக்க இருக்கின்றோம். விழா மலருக்கு ஒரு ஆசிச்செய்தி எழுதுவதில் மிகவும் மன மகிழவு பெறுகின்றேன். பல ஆண்டுகளாக, பாடசாலை வளர்ச்சியில் தொடர்புகொண்டவன்.

எத்தனையோ இடையூறுகளையும், கஷ்டங்களையும் தாண்டி வளர்ந்து நிமிர்ந்து ஆயிரம் ஆண்டுகள் வாழ்வேன் என்று தலைநிமிர்ந்து நிற்கிறது கணேச வித்தியாசாலை. நாம் இருக்க மாட்டோம் எங்கள் வாரிசுகளுக்கு அதன் கல்விச் சேவை கிடைக்கும். வேலணையிற் பிறந்தவர். சைவத்திருவாளர் பண்ணிசைப் புலவர் திரு. கா. நமசிவாயம் பிள்ளை (நாகலிங்கம் உபாத்தியாயர்) வித்தியாலயத்தின் முதல் தலைமை ஆசிரியர். வித்தியாசாலையின் வளர்ச்சிக்காக நூறு ஆண்டுகள் அயராது உழைத்த அதிபர்கள். ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரும் நன்றியுடன்

நினைவு கொள்ளப்பட வேண்டியவர்கள். நிர்வாகத் திறன் உடைய அதிபர்கள் வழிகாட்டினார்கள். வித்தியாலயம் வளர்ந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வியின் பயன் பெற்று பண்பான மக்களாக ஊர்ச் சமூகத்தில் இணைந்து தீவுக்கு சிறப்பும் பெருமையும் கொடுத்து வாழ்ந்து மறைந்தார்கள்.

கல்வி பயின்ற மாணவர்களில் பலர் பண்டிதர்கள், வித்துவான்கள், ஆசிரியர்கள், வைத்திய கலாநிதிகள், எழுதுவினைஞர், அரச ஊழியர்கள், புகழ்மிக்க வர்த்தகர்கள், கல்வி அறிவு பெற்ற பண்பான ஊர் மக்கள் வித்தியாலயத்தின் புகழ் சொல்லி இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்தார்கள். இன்றும் பெருமை கொடுத்து வாழ்கின்றார்கள். இவ்விதம் நூறு ஆண்டுகளாக, தனது பணியினைச் செவ்வனே ஆற்றி பெருமை கொண்டது கணேச வித்தியாசாலை. அறிவாற்றல் உள்ள சமுதாயம்தான் நாட்டின் பெறுமதிமிக்க செல்வம். பணம், பொன், செல்வம் ஒருவன் விரும்பும் போது தான் அதற்கு பெறுமதி உண்டு. எவரும் விரும்பவில்லையாயின். அப்போது அங்கு பெறுமதி இல்லை. பண்பான நல்ல மனித சமுதாயம், அறிவினால் கல்வியினால் தான் உருவாகும் அவர்கள் தான் நாட்டின் செல்வம். இன்றைய நிலை பாடசாலையின் வீழ்ச்சி மக்கள் இடப்பெயர்வு யுத்தம் கல்விகற்கும் மாணவர்களின் குறைவு யாவும் நூற்றாண்டு தொடர் வளர்ச்சியில் சிறு தாக்கம் உண்டானதை உணர்கின்றோம். நிலைமை மாறும். மத்திய மகா வித்தியாலயமாக வளரும் இன்றுள்ள கல்விமான்கள் லட்சிய நோக்குடன் செயலாற்றுவார்களாக.

ஊரில் உள்ள பதினைந்து பாடசாலைகளும் கொத்தணி முறை நிர்வாகத்தில் இணைக்கப்பட்ட போது நிர்வாகத்துக்குப் பொறுப்பாக புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் கொத்தணி அதிபராக பணி செய்ய வாய்ப்புப் பெற்றேன். சிறந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெரும் தொகையான மாணவர்கள் பதினைந்து பாடசாலைகளிலும் இருந்தார்கள். சிறப்பாகக் கல்விச் சேவை நடந்தது. மக்கள் இடம்பெயர்வு இல்லை. இன்றைய நிலை கவலைக்குரியது. எனது சேவைக்காலத்தில் திரு. ந. கார்த்திகேசு, திரு. த. துரைசிங்கம் (கல்விப் பணிப்பாளர்), அதிபர்களாக இருந்தார்கள். அயராது பணி செய்து வித்தியாலயத்தின் தரத்தை உயர்த்தினார்கள். வித்தியாலயம் வளர்ந்தது.

இன்று திரு. எஸ். கே. சண்முகலிங்கம் அவர்களின் தலைமையில் வித்தியாலயம் பல்துறைகளிலும் உயர்வுகண்டு வருவதை எல்லோரும் பார்க்கிறார்கள். பெருமைப்படுகின்றார்கள். சைவப் பெரியார் அமர் பசுபதிப்பிள்ளை அவர்கள் ஊர் மக்களுக்காக ஆரம்பித்த கணேச வித்தியாசாலை ஆயிரம் காலப் பயிராகட்டும். நல்ல அறுவடை வரும் சந்ததிக்கு. நூறு ஆண்டுமலர் நறுமணத்துடன் மலரட்டும். நல்லாசி சொல்வதில் இன்புறுகின்றேன்.

**- சீ. இராஜநாயகம்**
*(கல்வி அதிகாரி (ஓய்வு)*
*முன்னாள் அதிபர், புங்குடுதீவு மகாவித்தியாலயம்)*

# வாழ்க! ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

அன்பும் பண்பும், நன்றியும் வணக்கமும், விஞ்சும் எழில்கொண்ட புங்கை மண்ணில் பெருந்தெருவோரம் கீழைத்திசையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தல்லையப்பற்று முருகமூர்த்தி ஆலயத்தின் மேலைத்திசையில் நெற்றியில் திலகமிட்டாற்போல்; அமர்ந்திருக்கும் ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் 03.03.2010 இல் 1200 பௌர்ணமிகளைக் கண்டு நூற்றாண்டு விழாக்கோலம் பூணுவதை எண்ணி நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கல்விமான்கள், பெரியார்கள், வித்துவான்கள், ஆன்மீகவாதிகள், கொடையாளர்கள், துறைசார் வர்த்தகர்கள் என பல பெருமக்களை ஈன்றெடுத்து உருவாக்கி இன்று கிராமத்திற்கு பெருமை சேர்க்கும் பழைய மாணவர் சங்கம் என்ற வலுமிக்க அமைப்பை தன்னகத்தே கொண்டு விழாக்காணும் ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தையும், புங்குடுதீவு அன்னையையும் புகழ்பாடும் ஆண்டாகக் காண்பதில் அளவிலா மகிழ்ச்சி அடைகின்றோம் இவ் அன்னையவள் இலக்கியப் பெண்கள், அறம்சார்ந்த குடும்பங்கள், மரியாதை மனிதர்கள், சமய சமூக நீதியை மதிக்கும் பண்பியல்புகளைக் கொண்ட பலபேரை உருவாக்கிய கலைமகளும் ஆவாள்.

1910 இல் கால் பதித்து வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழா அனைத்தையும் கடந்து இன்று நூற்றாண்டு விழா நாயகியாய்க் கோலமிட்டு இருக்கும் அன்னைக்கு வயது 100 என்று எண்ணும் போது அன்னை நடந்து வளர்ந்து வந்த பாதையைசிறிது சிந்திக்க வைக்கின்றது. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன்' என்ற முதுமொழிக்கிணங்க பலபெரியார்கள் இங்கே தடம் பதித்துள்ளதை நூலின் நுழைவாயிலில் அறியக் காண்கின்றோம். தாம் பெற்ற மைந்தர்களினால் அன்னைக்கு நூற்றாண்டு விழாவை எடுத்து ஸ்ரீ கணேச வித்தியாலயத்தை கௌரவிக்கும் நோக்கோடு இங்கே அரும்பாடுபட்டு செயலாற்றி வருகின்ற வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினரை நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

'பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் - தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க நூற்றாண்டு விழா எடுக்கும் பழைய மாணவர் சங்கத்தினரான அருள்நிதி சி. முருகானந்தவேல் உயர்திரு. த. துரைசிங்கம் (இளைப்பாறிய அதிபர்) போன்ற பல உறுப்பினர்கள் தாய், நாட்டுப்பற்றினாலும், சகோதரத்துவ உணர்வினாலும், எமது நகரமும், நமது கிராமமும், அன்னை ஸ்ரீகணேசா வித்தியாலயமும் எழுச்சியுடன் திகழ்வதற்கு வழிகோலியவர்களாவர். கணேச வித்தியாலய அன்னை பெற்றெடுத்த பழைய மாணவர்களின் நூற்றாண்டு விழாவின் சேவை உலகளாவிய ரீதியில் இன்று ஓங்கி நிற்பதை நாம் காணமுடிகின்றது. இது ஏனைய எமது கிராமத்தின் பாடசாலைகளுக்கும் முன்னுதாரணமாக விளங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல சிவயோக சுவாமிகளின் பாதம் நினைந்து பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்க! வளமுடன்!**

**வட இலங்கை சர்வோதய குடும்பத்தினர்,**
*புங்குடுதீவு.*

# புங்குடுதீவின் புகழ் மணக்கும் நூற்றாண்டு விழா!

உலகின் மூத்த இனங்களில் நம் தமிழினம் முதன்மையானது.

நம் இனத்தின் பெருமையின் உறுதிபட்ட ஆதாரங்களாய்,

இன்றும் நம் கைக்குக் கிடைக்கும்,

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கண, இலக்கியங்கள்,

நம் இனத்தின் தொன்மைக்கும், வன்மைக்கும் சான்று பகர்வன.

நீண்ட உலக வாழ்வின் அனுபவத்தால்,

நம் மூதாதையர் பெற்ற அறிவு ஆழமானது.

இன்றைய மேற்குலக அறிவுலகம் போல்

புறவளர்ச்சி மட்டும் காணாமல்,

அகவளர்ச்சியும் கண்டு உயர்ந்தது நம் அறிவுத்துறை.

உணர்வுக்கும் அறிவுக்குமான சமநிலை கண்டு,

நெறியோடு கூடிய உணர்வுசார் வாழ்க்கையை,

அற்புதமாய் அமைத்துத் தந்தனர் நம் ஆன்றோர்.

கற்றதனாலாய பயன் இறையின் நற்றாள் தொழலே என்றும்,

கற்றவை கசடறக் கற்று அதற்குத் தக நிற்க என்றும்,

வள்ளுவன் கூறும் முடிவு,

தமிழர்தம் கல்விநெறி,

புத்தியையும், இதயத்தையும் ஒன்றிணைத்து நிற்பதை,

நமக்குத் தெளிவுபட உணர்த்தும்.

இத்தகு பெருமைமிக்க நம் தமிழர்தம் கல்விநெறியை,

ஈழத்தமிழினமும் ஏற்றத்துடன் போற்றி வருகிறது.

இலங்கையின் சிரசாய் விளங்கும் யாழ்ப்பாணம்,

ஈழத்தமிழினத்தின் அறிவுக்காம் அடையாளம்.

யாழ்ப்பாணம்,

தனக்கெனத் தனித்த கலாசாரப் பண்பாட்டு அத்திவாரங்களைக் கொண்டது.

அம்மண்ணின் பக்தி கலந்த பண்பாட்டின் முதிர்வுகளை உள்வாங்கி,

தீவகங்கள் உயர்ந்து நிற்கின்றன.

கடலால் சூழப்பட்டிருப்பினும்,

தம் அரிய முயற்சியினால்

உறவும், உணர்வும், உயர்வும் வளர்த்து வெற்றி கண்டனர் அம்மண்ணின் மைந்தர்கள்.

அத்தீவகங்களில் தலையாய பெருமை கொண்ட மண் புங்குடுதீவு.

பல துறைசார் அறிஞர்களை இத்தேசத்திற்கு ஈந்த மண் அது.

எனையாளாக்கிய ஆசிரியர் சிவராமலிங்கம்பிள்ளை,

வித்துவான் ஆறுமுகம் ஆகிய பெருமக்களை ஈன்ற பெருமை அதற்குண்டு.

அந்நல்லோரின் வாழ்விலூடு அம்மண்ணின் மகிமை உணர்ந்தவன் நான்.

அப்புங்குடுதீவு மண்ணின் கல்விப் பெருமையில் பெரும்பங்கு,

ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்திற்கு உண்டு.

நூற்றாண்டைத் தொடுகின்ற அதன் வரலாற்றுப் பெருமை,

கற்றோர் நெஞ்சைக் களிக்கச் செய்வது.

தம் கல்லூரித்தாயின் நூற்றாண்டு விழாக்காண,

பழைய மாணவர்கள் நன்றியோடும், மகிழ்வோடும் விழா எடுக்கின்றார்கள்.

அறிவுக்கண் தந்த கல்லூரி அன்னை,

புறக்கண் தந்த தாயை ஒத்தவளே,

அவளைப் போற்றுவதும், புகழ்வதும் புதல்வர்தம் கடமையாம்.

பொன்னான அவர் பணி சிறக்க,

கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடிப் பரவும் பரம்பொருளை,

வேண்டிப் பணிகின்றேன்.

"இன்பமே எந்நாளுந் துன்பமில்லை"

- கம்பவாரிதி இ. ஜெயராஜ்

# வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகின்றேன்

**"கற்க கசடறக் கற்றவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக"**

ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் 100 ஆண்டுகளைத்தாண்டி நிற்கின்றது. இந்த நூறு ஆண்டுகளில் 50 வருட காலத்திற்கு முன் என் ஆரம்பக் கல்விக்கு வித்திட்டு என்னையும் சமுதாயம் போற்றும் நிலைக்கு ஏற்றி வைத்த கல்விக் கூடத்திற்கும் ஆசிரியர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் நம் சமுதாயத்திற்கு கல்வி மட்டுமன்றி நற்பண்பு, சமயம், சமுதாயப் பணிகள் எனப் பல்வேறு திசைகளிலும் மிக சிறந்த வழிகாட்டியாக விருந்தது.

காலையில் பாடசாலை செல்லும் பொழுது எம்மை வரவேற்ற, பண்பான வெள்ளை உடையும் நெற்றியில் திருநீறும் சந்தனமும், புன்சிரிப்பும் கொண்ட தலைமை ஆசான் உயர்திரு செல்லத்துரை அவர்களை எம்மால் மறக்க முடியுமா?

அ, ஆ தொடக்கம் கல்விப் பொதுத் தராதரம் வரை எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எம் ஆசான்களுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

வெள்ளி தோறும் எல்லா மாணவர்களும் சிவபுராணம் இசைத்து தல்லையபற்று முருகன் ஆலய வழிபாடு செய்தமை, சரஸ்வதி பூசை விழாக்கள் மூலம் சமய கலாசார ஈடுபாடுள்ளவர்களாக எம்மை வளர்த்தது எம் கலைக்கூடம். நம் தோட்டத்தில் மரக்கறி வகைகள், விவசாயம் செய்து அதே மரக்கறிகளை சமைத்து, அன்னம் பாலிக்கும் என்று பாடி மதிய போசனம் வழங்கியமை இன்றும் என்மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது. நூற்றாண்டு விழாக்காணும் எம் வித்தியாலயத்தை வாழ்க வாழ்கவென உளமார வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**- டாக்டர் S. சண்முகலிங்கம்**

*தலைவர்,*
*புங்குடுதீவு நலன்புரிச் சங்கம், ஐக்கிய இராச்சியம்*






# என்றும் உதவுவோம்

புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசலைக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்றது என்பதைக் கேட்கும்போது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி எழுகின்றது. சீரிய சிந்தனையும் தூர நோக்கும் கொண்ட பெருந்தகைகள் அன்றும் நம் மண்ணில் வாழ்ந்திருக்கிறார்களென்பதற்கு அடையாளமாக இந்தப் பாசடாலை விளங்குகின்றது. இன்றும் சிறப்போடு இயங்கிவருகின்றது.

ஒரு நூற்ாண்டுக்கு முன்னர் தீவகப் பகுதியின் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும். அந்நாட்களில் ஊர்ப்பிள்ளைகளுக்கு படிக்க என்னென்ன வசதிகள் இருந்திருக்கும். சிறிது சிந்தனை செய்தால் இந்த நற்கருமத்தின் பிதாமார்களை எண்ணி நாம் பெருமைப்படலாம்.

1910 ம் ஆண்டு உயர்திரு வைத்திலிங்கம் பசுபதிப்பிள்ளை (எமது பேரனார்) அவர்களினால் இந்த வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து தமது வாழ்வின் இறுதிவரை (1954) தாபகராகவும் முகாமையாளராகவும் இருந்து செவ்வனே நடாத்தி வந்தார். இவரது மறைவின் பின்னர் இவரது மைத்துனர் விதானையார் திரு. மு. சின்னத்துரை (1955 - 1957 வரை) முகாமையாளராக இருந்து வித்தியாசாலை சிறப்புற இயங்க ஆவன செய்தார். இவரின் மறைவின் பின்னர் தாபகரின் ஒரே மகனான திரு. கதிரவேலு அவர்களின் துணைவியார் திருமதி தையல்நாயகி கதிரவேலு 1958இல் இருந்து 1962ல் நிறுவனம் அரசுடைமையாகும்வரை முகாமையாளராக இருந்து தனது மாமனாரின் நற்பணியினைத் தொடர்ந்து செய்தார். அக்காலத்தில் பாடசாலையை ஆரம்பிப்பது இலகுவான விடயமல்ல. அதிகாரிகளின் ஆதரவு, அரச அங்கீகாரம்பெறல், சமுதாயத்தின் ஒத்துழைப்பைப் பெறல், இன்னோரன்ன விடயங்களில் அவர் எதிர்நோக்கிய சவால்கள், இடர்கள் என்பவை பற்றி எமது தந்தையார் சொல்லக் கேட்டிருக்கின்றோம். பெரியார் உயர்திரு. வைத்திலிங்கம் - பசுபதிப்பிள்ளையின் வழித்தோன்றல்கள் (பேரன்மார்) ஆகிய நாம் இச்சந்தர்ப்பத்தில் அப்பெரியாரை நினைவு கூருவதில் மகிழ்ச்சியும் அவரது பரோபகார செயல்பாடுகள் தொடர்பில் பெருமிதமும் அடைகின்றோம். அத்துடன் இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக இருப்போமென உறுதியளிக்கின்றோம்.

**கெங்ககுமாரன் கதிரவேலு,**
**சிவகுமாரன் கதிரவேலு.**



# வாழ்த்துச் செய்தி


தீவகத்தின் தொன்மையையும் சிறந்த கலாசார விழுமியங்களையும் கொண்டு முதல் முதல் உருவாக்கப்பட்ட எமது சைவ பாடசாலை நூற்றாண்டு விழா 03.03.2010ல் கொண்டாடும் இவ்வேளையில் எனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பாடசாலை பல கல்விமான்களையும் உயர்தொழில் வல்லுனர்களையும் தொழில் அதிபர்களையும் தேசிய கல்விக் கொள்கைக்கு அமைய மாணவர்களை உருவாக்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாடசாலையின் தனித்துவத்தைப் பேணி வருகின்றமை ஒரு சிறந்த அம்சமாகும்.

நாட்டுச் சூழ்நிலை காரணமாக சொந்த இடத்தைவிட்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்து இயங்கிய போதும் தனது தனித்துவத்தை விட்டுக்கொடுக்காது தீவகத்தின் முதன்மை தர பெறுபேற்றை 1994ம் ஆண்டு க. பொ. த (சா.த)இல் தயானந்தன் என்ற மாணவர் பெறுவதற்கு வழிவகுத்தது. அத்துடன் இக்காலகட்டத்தில் உப அதிபர் திரு. சதாசிவம், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் உதவியுடன் மிகச் சிறப்பாக பரிசளிப்பு விழாவும் நடைபெற்றதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த மூன்று தசாப்தங்களாக தொடர்ச்சியாக இருந்து வந்த இன்னல்கள் நீங்கி தற்போது அரசியல், சமூக, கலாசார ரீதியாக ஒருபுதிய சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருப்பதை உணரும் இவ்வேளையில் அமைதியான சூழ்நிலையில் இவ்விழாவினை எமது பாடசாலை சொந்த இடத்திற்குச் சென்று தொடர்ந்து மூன்று நாட்கள் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன். மீண்டும் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படுவதினால் அவர்களையும் அன்புடன் அரவணைத்து அவர்களும் நற்பிரஜையாக வருவதற்கு இப்பாடசாலை முன்மாதிரியாக இருப்பதையிட்டு நான் புளகாங்கிதம் அடைகின்றேன். இவ்விழாவின் மூலம் புதிய யுகத்தில் பிரவேசிக்கும் போது பழைய இன்னல்கள், அனுபவங்கள் எமக்கு ஒரு பாடமாக அமைய அதன் நல்ல விடயங்களை கவனத்தில் கொண்டு கல்லூரி முகாமைத்துவம், மாணவர்களின் பெறுபேறுகள், அர்ப்பணிப்பான சேவைகள் தொடரவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

மேலும் இவ்விழாவினை நடத்துகின்ற மதிப்பிற்குரிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவ சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இவ்விழா இனிதே சிறப்பாக நடைபெற மனதார வாழ்த்துகின்றேன்.

**- ச. அமிர்தலிங்கம்**
*முன்னாள் அதிபர்*
*உப பீடாதிபதி - ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி*
*பத்தனை.*




# வரலாற்றுப் புகழ்மிக்க கல்விக்கூடம்

புங்குடுதீவின் புகழ்மிக்க சைவப் பாடசாலையான ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழாக் காண்பது குறித்து உளம் மகிழ்கிறேன். வரலாற்றுச் சாதனைகள் பலவற்றிற்கு மூல காரணமாய் விளங்கியதோடு தன்னை நாடி வந்த அனைவருக்கும் கல்விச் செல்வத்தை வாரி வழங்கிக் கண்ணியம் மிக்க பிரஜைகளாக வாழ வழிகாட்டிய பெருமை இதற்குண்டு என்றால் அது மிகையல்ல.

இவ்வித்தியாலயத்தில் பல்லாண்டுகள் ஆசிரியையாகப் பணியாற்றிய எனது மனைவி திருமேனிப்பிள்ளை அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைகளை அனைவரும் அறிவர். கணேச மகா வித்தியாலயத்தை தன் உயிர் மூச்சாகக் கொண்டுழைத்தவர் அவர். நூற்றாண்டு விழாக்காணும் இவ்வேளையில் அவர் இங்கில்லாவிடினும் அவரது ஆத்மா சூக்குமமாக இவ்விழாவைக் கண்டுகளிக்குமெனத் திடமாக நம்புகிறேன்.

ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் புங்குடுதீவின் கலைக்கூடம். அதன் பணிகளுக்கு பழைய மாணவர்களும், பெற்றோரும் என்றும் பக்கபலமாக இருப்பர். நூற்றாண்டு விழா சிறப்புறவும் "கணேச தீபம்" ஒளிவிட்டுப் பிரகாசிக்கவும் எல்லா நலன்களும் இவ்வித்தியாலயத்திற்குக் கிட்டவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**- சி. இரத்தினசபாபதி**
*ஓய்வுபெற்ற அதிபர்*
*புங்குடுதீவு 12.*




# வாழ்த்துகிறேன்

பொன்பதியாம் புங்குடுதீவின் கலைக் கூடம் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் இன்று நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதையிட்டு அளவிலா ஆனந்தம் அடைகிறேன். உலகம் புகழும் கல்விமான்களையும் புகழ்பூத்த வர்த்தகர்களையும் ஒப்பற்ற கலைஞர்களையும் தோற்றுவித்தது இந்த வித்தியாலயம். பெரியார் பசுபதிப்பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை யை சின்னத்துரை விதானையார் உட்பட பல பெரியோர்கள் வளர்த்தனர்

இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவர்கள் இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். எங்கள் கிராம சமுதாயம் உயர்வுபெற வித்திட்ட இக்கல்லூரி ஒரு நூற்றாண்டு அல்ல ஓராயிரம் நூற்றாண்டு நிலைத்து வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**- இ. வைத்திலிங்கம்**
*ஓய்வுபெற்ற கிராம சேவகர் - புங்குடுதீவு*



# வாழ்த்துரை

என் அன்னை பூமியின் அணையா விளக்குத்தான் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் ஆகும்.

அந்தக் கலைக் கோவிலில் நாங்கள் எத்தனையோ பேர் கல்விகற்றோம். அந்த அன்புக் கோயில் இன்று நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதையிட்டு அளவிலா ஆனந்தம் அடைகிறேன். எத்தனை அதிபர்கள், எத்தனை ஆசிரியர்கள், எத்தனை மாணவர்கள் என்றுஎத்தனையோ பேரை அந்தக் கலாசாலை கண்டுவிட்டது. 1910 ஆம் ஆண்டு பிறந்த அந்தப் பாடசாலை இன்று 2010 ஆம் ஆண்டு நூறு வயது கண்டுவிட்டது. அது ஒரு நூறு ஆண்டு அல்ல ஒரு நூறு ஆயிரம் ஆண்டு நீடுழி வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**- சின்னத்துரை கருணாமூர்த்தி**
*சுவிற்சர்லாந்து புங்குடுதீவு மக்கள் ஒன்றிய அங்கத்தவர்*

# வாழ்த்துச் செய்தி



அழகுதமிழும் இனிய மொழியும் பண்பாக பழகுமுறையும் பேணும் சிவபூமியாம் புங்குடுதீவில், பல்துறைசார் அறிஞர்களையும் விரிவுரையாளர்களையும், ஆசிரியர்களையும், வங்கியாளர்களையும், வர்த்தகப் பெருமக்களையும், செல்வந்தர்களையும், விவசாயப் பெருமக்களையும், தேவைநாடி சேவை செய்யும் தொண்டர்களையும் உருவாக்கிய சிறந்த கல்விக் கூடமாய் நூற்றாண்டு விழாக் காணும் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தை வாழ்த்தி வணங்குகிறேன்.

எமது தகப்பனார் ஆசிரியர் சி. சின்னத்துரை, எமது தாயார் மங்கையர்க்கரசியார், எனது மனைவி நாகலட்சுமி, பேரனார் திரு. கண்ணையாபிள்ளை, திரு. சின்னத்தம்பி போன்றோரும் கல்விகற்று, தேறிய இக் கல்விக்கூடம் இனிது மேன்மையடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். உலகின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும், சோர்வின்றி உழைத்து சமூக பொருளாதார பண்பாடு வளர்த்து வாரி வழங்கி, விருந்துகள் அழைத்து மகிழ்வித்தும், மகிழ்ந்தும் வாழ்கின்ற உத்தம சீலர்களை உருவாக்கிய இதுபோன்ற கல்விக் கூடங்களை காக்க ஒன்றுபட்டு உழைப்போமாக.

**"எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க"**

**சின்னத்துரை சிவராஜா**
*ஓய்வுபெற்ற வலய முகாமையாளர் - வடக்கு, கிழக்கு*
*தேசிய சேமிப்பு வங்கி - கொழும்பு.*

# வாழ்த்துகிறேன்

புங்குடுதீவுக்குப் பெருமை சேர்த்த கல்விக் கூடமாக, முதற் சைவப் பாடசாலையாக உருவானது ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம். அதன் கடந்த காலச் சாதனைகள் அளப்பரியன. பல்துறை கல்விமான்களையும் கலைஞர்களையும், மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும், கணக்காளர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியது. அதன் நூற்றாண்டுவிழா சிறப்புற நிகழ்வது குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன். எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- த.தவராசா**
*உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு) - புங்குடுதீவு.*



# வாழ்த்துச் செய்தி

**வாழ்கவென்று வாழ்த்துகிறேன்!**

**வணங்கிச்சென்னி தாழ்த்துகிறேன்!**


இயற்கை வளங்கொழிக்கும் புங்குடுதீவின் மத்தியில் - நெடுஞ்சாலை வீதியோரத்தில் - நாற்புறமும் ஆலயங்களின் மணியோசை கேட்க அமைதியாக அமர்ந்திருந்து ஈடுஇணையில்லாத கல்விப்பணியாற்றும் நீ உனது நூறாவது அகவையைக் கொண்டாடும் இந்நாளில் உன்னை வாழ்கவென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

உந்தன் குழந்தைகளுக்கு அகரத்தைத் தொடங்கி அழகுத்தமிழைப் புகுத்தி இருகண்களான எண்ணையும் எழுத்தையும் கற்பித்ததோடு சமய மரபையும் ஊட்டிப் பண்புள்ள உள்ளங்களாக நீ வெளிக்கொணர்ந்த மேதைகள், தொழிலதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சேவையாளர்கள் எத்தனை! எத்தனை! எண்ணிலடங்காது! புலம்பெயர் நாடுகளிலும் உன் புகழ் பரப்பும் மாணவச்செல்வங்களைக் கண்டு இன்புறுகிறோம். இறைவணக்கத்திற்காக வெள்ளிதோறும் முருகமூர்த்திக் கோவிலுக்குச் செல்லும் போது நீ சொல்லித்தந்த சிவபுராணம் எங்கள் பால்ய வயதிலேயே பதிந்ததை இன்றும் நினைந்து பரவசமடைகிறோம்.

உனது பள்ளிக்கூடத்தில் புனிதமான சேவை புரியும் எத்தனையோ ஆசிரிய மணிகள் உன்னுடன் தோழமை கொண்டு தூய சேவை செய்தார்கள்-செய்கிறார்கள். அவர்கள் அனைவரும் கௌரவித்துப் போற்றப்படவேண்டியவர்கள். எனது சிறு பராயத்தின் நினைவினிலே தூய வெண்ணிற ஆடை, நெற்றியிலே விபூதி, கையிலே பிரம்புடன் தோற்றம் கொண்ட தலைமையாசிரியர் செல்லத்துரை அவர்களையும் அவரோடு இணைந்து ஈடுஇணையற்ற சேவை புரிந்த ஆசிரியகுழாங்களையும் என்னால் மறக்க முடியாது. நீ எஸ்.எஸ்.சி.வரை தரமுயர்ந்த போது முதல் மாணவனாகச் சித்தியெய்தி உனக்குப்பெருமை தேடித்தந்த உன் புதல்வன் கார்த்திகேசு வாத்தியாருக்குத் தலைமைப்பதவி கொடுத்தது மட்டுமல்லாமல் உன்மடியிலேயே ஓய்வும் கொடுத்தாய்!

உந்தன் வளர்ச்சியில் முன்னின்று பங்காற்றியதற்கு மேலாக நிமிர்ந்து நிற்கும் இருமாடிக்கட்டிடமும் விளையாட்டுத்திடலும் அமரர் நாகனாதி கார்த்திகேசு (இளைப்பாறிய அதிபர்) அவர்களை நினைவு கூர்கிறது. அன்னாரின் குடும்பத்தினர் தம் பெற்றோரின் நினைவாக நூல்நிலையத்தை மீள நவீனமயப்படுத்தி இந்நன்னாளில் கையளித்து களிப்படைகிறார்கள்.

**- திருமதி. பிரேமலதா சுந்தரலிங்கம்**
*சிட்னி அவுஸ்திரேலியா*




# கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

எம் தாயக மண்ணில் வெள்ளிவிழா, பவளவிழா ஆகிய விழாக்களை எல்லாம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடி இன்று நூற்றாண்டு விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாட இருக்கும் கலைக் கோயிலாம் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்திற்கும் நூற்றாண்டு மலருக்கும் எம் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் கனடா வாழ் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் பெரு மகிழ்ச்சி அடைகின்றது. இவ்வித்தியாலயமானது கடந்த நூறாண்டுகளில் அம்மக்களின் கல்வி உயர்விற்காக ஆற்றிய சேவை அளப்பரியது. சிறந்த கல்விமான்களையும், அறிஞர்களையும், கவிஞர்களையும், சிறந்த வைத்தியர்களையும், அதியுயர்ந்த பொறியியலாளர்களையும் உருவாக்கிய கல்விக்கூடம் இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருப்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தீவகத்தில் முதன் முதலாக இவ்வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் இவ்வித்தியாலயம் துரித வளர்ச்சி பெற்றுள்ளமை பாரட்டிற்குரியது. இங்கு கல்வி கற்று விலகிய பழைய மாணவர்கள் புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து வருகின்ற பொழுதும் தாம் கற்ற பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றதும் ஏனைய பாடசாலைகளிற்கு எடுத்துக்காட்டாகும். எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் இவ்வித்தியாலய பழைய மாணவர்கள் நூற்றாண்டு விழாவினை மிகவும் சிறப்பாகக் கொண்டாடும் முயற்சிக்கு கனடா பழைய மாணவர் சங்கத்தினர் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் விழா சிறப்புற நடைபெறவும், விழா மலர் சிறப்புற மலர்ந்து மணம் கமழவும் கனடர் பழைய மாணவர் சங்கம் சார்பாக மனமுவந்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**- சிவசாமி திருவருட்செல்வன்**
*தலைவர*




# சாதனை பல படைத்திட்டது எங்கள் வித்தியாலயம்

யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் சரித்திர சாதனைகள் பல படைத்திட்ட பெருமைக்குரியது. அதன் ஒப்பற்ற சாதனைகளை, பெருமைகளை நினைக்குந் தோறும் என் உள்ளம் பூரிக்கின்றது. எனது இன்றைய நிலைக்கு அடித்தளமிட்ட இவ் வித்தியாலயத்தை என் வாழ்வில் என்றுமே மறந்திட முடியாது.

நல்ல பல ஒழுக்க சீலர்களையும், உயர் கல்வியாளர்களையும் உருவாக்கிய இவ்வித்தியாலயம் நூற்றாண்டு விழாவைக் காண்பது குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன். அதன் வளர்ச்சிக்கு என்றும் உறுதணையாக விளங்குவோம். "கணேச தீபம்" ஒளிவீசிட என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி


**- ஆ.திருவள்ளுவர்**
B.Sc Eng, C.Eng, MIE(SL)
MBA(SRIJ)



# நினைவுச் சுவடுகள்




புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின்
முதற் தலைமையாசிரியர்



## உயர் திரு . கா. நமசிவாயம்பிள்ளை
### (நாகலிங்கம்)

நெற்றி நிறைந்த நீறுடையான்
நெஞ்சில் தவமும் வடமுடையான்
முற்றும் மூவாத் திருமுறைகள்
முதிரும் பண்ணும் பயில் நாவான்
சற்றும் நீங்கா அன்புடையான்
சைவ நெறியில் ஒழுகிடுவான்
கற்ற ஆசான் நமசிவாயம்
காணும் தெய்வம் இவனன் றோ.

# முகாமையாளர்கள்




திரு .க .மு . சின்னத்துரை
(1955-1957)




திருமதி. தையல் நாயகி கதிரவேலு
(1957-1962)

# முன்னாள் அதிபர்கள்




பேராசிரியர் சி.இ. சதாசிவம்பிள்ளை
முன்னாள் தலைமை ஆசிரியர்



உயர் திரு.க. செல்லத்துரை
முன்னாள் தலைமை ஆசிரியர்

# முன்னாள் அதிபர்கள்




உயர் திரு.வை. கந்தையா
முன்னாள் அதிபர்



திரு. நா. கார்திகேசு
முன்னாள் அதிபர்




திரு. சோ.சேனாதிராசா.
(முன்னாள் அதிபர்)



திரு . த . துரைசிங்கம்.
(முன்னாள் அதிபர்)


# முன்னாள் அதிபர்கள்



திரு . கே . ரி . தர்மலிங்கம்.
(முன்னாள் அதிபர்)



திரு . செ .ஈஸ்வர மூர்த்தி.
(முன்னாள் அதிபர்)



திரு . ச . சதாசிவம்.
முன்னாள் அதிபர்



திரு . எஸ் . அமிர்தலிங்கம்.
முன்னாள் அதிபர்

# யா / புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் ஒரு வரலாற்று நோக்கு

- சீ. அருன்

செந்தமிழும் சிவசெறியும் தழைத்தோங்கும் நோக்குடன் புங்குடுதீவில் முதன் முதலாக அமைக்கப்பட்ட சைவப்பாடசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயமாகும். 03.03.1910இல் தோன்றிய இவ்வித்தியாலயம் தான் தோன்றிய தினத்திலேயே இன்று தன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. புங்குடுதீவில் உள்ள சைவப்பெருமக்களின் உதவியுடன் இவ் வித்தியாலயத்தைப் பேணிக்காத்தவர் அமரர் வ.பசுபதிப்பிள்ளை ஆவார்.

1910இல் தோன்றிய இப்பாடசாலை 1914 வரை அரசினரின் நன்கொடைப் பண உதவி எதுவுமின்றி முகாமையாளரினதும் பொதுமக்களினதும் உதவியுடன் இயங்கியது. 10.08.1914இல் அரசினர் நன்கொடை உதவிபெறும் பாடசாலையாகப் பதிவு பெற்றது. 1923ஆம் ஆண்டில் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட மத்திய பாடசாலையாக உயர்வு பெற்றது. 1936ஆம் ஆண்டில் இவ்வித்தியாலயம் சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1940ஆம் ஆண்டு இவ்வித்தியாலயப் பழைய மாணவர் சங்க விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள வருகைதந்த வித்தியாதிபதி திரு.எல்.எம்.டி. றொபின்சன் அவர்களிடம் புங்குடுதீவிற்கு ஒரு ஆங்கிலப் பாடசாலை வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதன்பேறாக அந்நாட் கல்விஅமைச்சர் சி.டபிள்யூ.கன்னங்கரா, சபாநாயகர் சேர்.வை.துரைசுவாமி ஆகியோரின் விதப்புரையின் பேரில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் இப்பாடசாலை வளாகத்திலே 16.01.1946இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பல சாதனைகளை நிலைநாட்டிய ஸ்ரீ கணேச வித்தியாலயம் 05.02.1980இல் கல்வியமைச்சினால் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டதுடன் க.பொ.த உயர்தர கலை வகுப்புகளை நடத்தும் அங்கீகாரத்தையும் பெற்றது. கடந்த நூறு ஆண்டுகளில் 12 அதிபர்கள் இங்கு பணியாற்றியுள்ளனர். அவர்களாற்றிய சேவைகள் காலத்தால் மறக்கவொண்ணாதவையாகும். இவ்வித்தியாலயத்தின் முதற் தலைமையாசிரியர் வேலணையூரவரான பெரியார் திரு.கா.நமசிவாயம்பிள்ளையாவார். இவரே பண்ணோடு திருமுறைகளை ஓதும் பழக்கத்தை இங்கு ஏற்படுத்தியவர் எனலாம். இவரின் பின் பேராசிரியர் சி.இ.சதாசிவம்பிள்ளை, க.செல்லத்துரை, வை.கந்தையா, நா.கார்த்திகேசு, சோ.சேனாதிராசா, த.துரைசிங்கம், கே.ரி. தர்மலிங்கம், எஸ்.அமிர்தலிங்கம், செ.ஈஸ்வரமூர்த்தி, ச.சதாசிவம் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். தற்போது திரு எஸ். கே.சண்முகலிங்கம் அதிபராக உள்ளார்.

புங்குடுதீவின் கலைக்கூடமெனப் போற்றப்பெறும் இவ்வித்தியாலயத்தின் முகாமையாளராக அமரர்.வ.பசுபதிப்பிள்ளை 1910 முதல் 1954 வரை பணியாற்றினார். இவரின் பின் விதானையார் திரு.க.மு சின்னத்துரை 1955-1957 வரை கடமையாற்றினார். இவரின் மறைவையடுத்து திருமதி.தையல்நாயகி கதிரவேலு 1957 முதல் 30.04.1962 வரை முகாமையாளராகச் செயலாற்றினார். அதன் பின்னர் இவ்வித்தியாலயத்தை அரசு தனதுடைமை ஆக்கிக் கொண்டது. ஸ்தாபகரான அமரர்.பசுபதிப்பிள்ளையும், முகாமையாளர்களும் இவ்வித்தியாலயத்தைப் பேணி வளர்ப்பதில் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றினர் என்றாலது மிகையல்ல.

கணேச தீபம் ~~~



# திரும்பிப் பார்க்கிறேன்!

- செ. தில்லைநாதன் (ஜே.பி)

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்ற வானினும் நனி சிறந்தனவே"

என்று பாடினார் பாரதியார். பெற்ற தாயினும் யான் பெரிதும் போற்றிடும் வித்தியாலயம் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயமாகும். இதற்குப் பல காரணங்களுண்டு. யான் ஏடு தொடக்கிக் கல்வி பயின்ற வித்தியாலயம் இதுவாகும். சைவத்தையும் தமிழையும் சைவச் சூழலில் நமது பிள்ளைகள் கற்றிட வேண்டும் கற்றபடி ஒழுகிட வேண்டும் என்னும் நன்னோக்குடன் அமரர் வ. பசுபதிப்பிள்ளை இங்குள்ளார் பலருடைய ஒத்துழைப்புடன் இவ்வித்தியாலயத்தை தாபித்தார். அவரது இலட்சியம் இன்றுவரை மக்கள் மனதை விட்டகலவில்லை. எத்தனையோ இடர்பாடுகள் ஏற்பட்ட போதிலும் இவ்வித்தியாலயம் தனது குறிக்கோளுடன் தொடர்ந்து இயங்கிவருவதே இதற்குச் சான்றாகும்.

நான் இங்கு கல்வி கற்ற காலத்தை ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறேன். என்னுடன் கற்றவர்களில் பலர் இறையடி எய்திவிட்டனர். மற்றும் சிலர் புலம்பெயர்ந்து சென்று விட்டனர். ஆனால் இறைவனருளால் வாழ்ந்து கொண்டிருக்கும் யான் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கிறேன். புங்குடுதீவின் கலைக் கூடமாக விளங்கிய இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவனாக மட்டுமன்றிப் பெற்றார், ஆசிரியர் சங்கப் பொருளாளனாகவும் பல ஆண்டுகள் கடமையாற்றியுள்ளேன். இங்கு நிகழும் சகல நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டுள்ளேன். ஒரு பாடசாலையினைக் கொண்டு நடத்துவது எவ்வளவு சிக்கலானது என்பதை இதன் மூலம் யான் உணர்ந்துகொள்ளவும் முடிந்தது. இவ்வித்தியாலயம் பல்வேறு காலகட்டங்களில் பெற்றுள்ள வளர்ச்சியினையும் இதற்காகப் போற்றுதல்களையும் தூற்றுதல்களையும் பொருட்படுத்தாது அயராது உழைத்த அதிபர்களையும் இவ்வேளையில் யான் நினைத்துப் பார்க்கிறேன். யான் மட்டுமல்ல எனது பிள்ளைகளும் இங்கு கல்வி பயின்று உயர் நிலையடைந்தமையையும் நன்றியுடன் நினைவு கூருகிறேன். இப்பாடசாலையின் கட்டட நிதிக்காக நாட்டின் பல பாகங்களிலும் அன்று வர்த்தகதுறையில் வளம்பல பெற்று விளங்கிய நம்மவர்களிடம் பணம் திரட்டச் சென்று பெற்ற அனுபவங்களும், அதற்காகத் "தண்ணீர்ப் பந்தல்" என்னும் நாடகத்தில் நான் பாத்திரமேற்று நடித்த நிகழ்வும் என் மனத்திரையில் இன்றும் மறக்க முடியாது ஓடிக்கொண்டிருக்கின்றது.

பண்டிதர் வீ. வ. நல்லதம்பி, திரு. க. அம்பலவாணர் ஆசிரியர், திரு. க. நாகலிங்கம் (குணமாலை) ஆசிரியர், அதிபர் க. செல்லத்துரை போன்றோரின் அர்ப்பணிப்பான உழைப்பு இவ்வித்தியாலயத்தின் உயர்ச்சிக்கு வழிகோலியது. பின்னாளில் அதிபர், நா. கார்த்திகேசு, அதிபர் த. துரைசிங்கம் ஆகியோருடன் இவ்வித்தியாலய வளர்ச்சிக்கான பணிகளில் சேர்ந்து உழைக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியமை குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன். இக்காலகட்டத்திற்றான் இவ்வித்தியாலயத்திற்கென மாடிக் கட்டடம் உருவானது. மாணவர் தொகையும் அதிகரித்தது. இது ஒரு பொற்காலமென்றே கூறலாம். பாடசாலைக்கென அயலில் உள்ள நிலம் வாங்கப்பட்டமை மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டமை என்பன மறக்க முடியாத சாதனைகளாகும். இங்கு பணியாற்றிய ஆசிரியர்கள், அதிபர்கள் யாவரும் பின்னாளில் உயர்நிலை அடைந்தமையை யான் அனுபவ பூர்வமாக உணர்ந்துள்ளேன். இவ்வித்தியலயத்தில் உள்ள வெள்ளிப் பிள்ளையாரின் திருவருளே இதற்குக் காரணமென உணர்கிறேன். கடந்த நூறு ஆண்டுகளாக இவ்வித்தியாலயம் ஆற்றியுள்ள பணிகளைத் திரும்பிப் பார்க்கின்ற போது நாமனைவரும் பெருமைப்படும் வகையிலேயே இதன் பணிகள் அமைந்துள்ளன எனலாம். எதிர்காலத்தில் பீடுநடை போட்டிட இவ்வித்தியாலயத்தை வழிநடத்திடும் பாரிய பொறப்பு இன்றைய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் சார்ந்துள்ளதென்பதை நினைவூட்ட விரும்புகிறேன். நூற்றாண்டு விழாக் காணும் இவ்வித்தியாலயம் தொடர்ந்து பல நூற்றாண்டுகள் தொண்டாற்றும் என்பதில் ஐயமில்லை. அதனை வாழ்த்தி வணங்குகிறேன்.

# வித்தியாலய அதிபர் சேவையில் மறக்க முடியாத நிகழ்வு

# (24.03.1997 இல் இருந்து இன்று வரை)

**எஸ். கே. சண்முகலிங்கம் (ஜே.பி)**
*வித்தியாலய அதிபர்*

புங்குடுதீவு கிராமத்தில் சைவமும் தமிழும் வளரவேண்டும் என்ற அர்ப்பணிப்புடன் எமது கிராமத்து சேவையாளர்கள் ஒன்றிணைந்து அமரர் வ. பசுபதிப்பிள்ளை அவர்களை முகாமையாளராகக் கொண்டு 03.03.1910ஆம் ஆண்டு இவ்வித்தியாலயத்தை ஆரம்பித்தனர். அதன் முதல் தலைமை ஆசிரியராக சைவமும் தமிழும் நிறைந்த வேலணையூர் அமரர் சைவப்பெரியார் கா. நமசிவாயம்பிள்ளை கடமையாற்றினார். அதனைத் தொடரந்து 12 அதிபர்கள் கடமையாற்றினார்கள். ஒவ்வொரு அதிபரின் காலமும் வித்தியாலயத்துக்கு பெருமை சேர்த்துக்கொடுத்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1991 ஆம் ஆண்டு நவராத்திரி பூசை தினத்தன்று புங்குடுதீவு மக்கள் அனைவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் பாடசாலை இயங்கியது. புங்குடுதீவின் சூழல்நிலை ஓரளவுக்கு சாதாரண நிலையடைந்து மீளவும் மக்கள் குடியமர ஆரம்பித்தனர். அந்தவேளை முன்னாள் பிரதி அதிபர் திரு. ச. சதாசிவம் அவர்கள் மீண்டும் இப்பாடசாலையை சொந்த இடத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்ற விருப்புடன் யாழ்ப்பாணம் வருகை தந்து இளைப்பாறிய கிராமசேவையாளர் திரு. வடிவேலு, முன்னாள் அதிபர் திரு. நா. கார்த்திகேசு, சி. இரத்தினசபாபதி போன்றவர்களின் அனுசரணையுடன் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அமரர் சு. இரத்தினராசா அவர்களிடம் திரு. ச. சதாசிவமும் முன்னாள் வேலணை மத்திய கல்லூரி அதிபர் திரு. கணேசலிங்கம் அவர்களும் சேர்ந்து அணுகிய போது நிச்சயம் இவ்வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கான பூரண ஒத்துழைப்பு தருவதாக கூறி உடனடியாக வைத்தீஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றிய என்னை இப்பாசாடலைக்கு கடமை நிறைவேற்று அதிபராக நியமனம் செய்தார். அதன் அடிப்படையில் மீளவும் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு 24.03.1992 இல் சகல ஏற்பாட்டையும் திரு. ச. சதாசிவம் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

அதன் அடிப்படையில் 24.03.1997 அன்று நானும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசாவும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் திரு. தவராசா அவர்களும் முச்சக்கர வண்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தோம். அப்போது மண்டைதீவு சந்தியில் இராணுவம் எம்மைத் தடுத்தனர். புங்குடுதீவில் பிரச்சினை. நீங்கள் செல்ல முடியாது எனக் கூறினர். அவற்றையும் முறியடித்து அல்லைப்பிட்டிக்கு வந்தோம். அங்கும் இராணுவத்தினர் நீங்கள் புங்குடுதீவுக்கு செல்லமுடியாது எனத் தடுத்தனர். அப்போது புங்குடுதீவில் இருந்து வந்த

வாகனத்தில் அங்கு ஏதாவது பிரச்சினையா, எனக் கேட்டபோது எதுவும் இல்லை எனக் கூறினர். உடனே ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரியில் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் மோட்டார் சைக்கிளில் வருகை தந்தார். அவரை அணுகி என்னையும் அவருடன் சேர்த்து புங்குடுதீவுக்கு அனுப்பி விட்டு உன்னால் எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும் என்னால் எடுக்கப்பட்ட முடிவாக கருதுவேன். அது பற்றி நாளை அறிவிக்கும்படி உத்தரவிட்டார் அத்துடன் அவர்கள் இருவரும் அல்லைப்பிட்டியிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிவிட்டனர். நான் புங்குடுதீவு சென்ற போது பாடசாலை மீளவும் திறப்பதற்கான சகல ஏற்பாடும் செய்யப்பட்டு இருந்தது. ஆனால் அன்று கடமையில் உள்ள இராணுவத் தளபதி திரு. மெண்டிஸ் அவர்களுக்கு அழைப்பு கொடுக்காதபடியால் எம்மை திருப்பியதாக கூறினார் அந்தவேளையில் எனது மனத்துணிவுடன் நடப்பது நடக்கட்டும் பாடசாலையை உரிய முறையில் கிராமசேவையாளர்கள் திரு. வடிவேல், திரு. ப. விநாயகமூர்த்தி ஆகியோர் மங்கள விளக்கேற்ற அமரர் நா. கார்த்திகேசு அவர்கள் நாடா வெட்டி பாடசாலையை ஆரம்பித்தனர். மீண்டும் இரண்டு கிழமைக்குப் பின்னர் இராணுவ திகாரி மென்டிஸ்சை சந்தித்த போது பாடசாலை என்றபடியால் எந்தவிதமான தடையும்தான் செய்யவில்லை எனக் கூறினார். அன்றிலிருந்து இன்று வரை 13 வருடங்கள் நிறைவேறிவிட்டது. எந்தவிதமான தலையீடுகள் இன்றி மிகவும் சிறப்பாக வெள்ளிப்பிள்ளையாரின் துணையுடன் நடைபெற்று வருகின்றது. ஆரம்பத்தில் 1997 இல் 20 மாணவர்களுடன் இயங்கிய வித்தியாலயம் இன்று 210 மாணவர்களையும் 16 ஆசிரியர்களையும் கொண்டு இயங்குவதை கண்ணூடாக பார்க்கலாம். இக்காலத்தில் தரம் 5 புலமைப் பரீட்சையில் செல்வி நா. சிந்துஜா சித்தியடைந்தமையைக் கூறுவதுடன் அவருக்கு பழைய மாணவர்களால் வெகுமதியாக ரூ. 5000 வழங்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இல்ல விளையாட்டுப் போட்டி பழைய மாணவரின் கொழும்பு நிதி மூலம் வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் கலைவிழா, வாணி விழா என்பன ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடைபெற்றதை பத்திரிகை விளம்பரம் மூலம், செய்தி, புகைப்படம் மூலம் நிரூபிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கோட்டமட்ட, வலய மட்ட, மாகாண மட்ட போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

மேலும் இன்று நூற்றாண்டு விழாவை எமது வித்தியாலயத்தில் பழைய மாணவர்களும் முன்னாள் ஆசிரியர்களும் முன்னாள் அதிபர்களும் சேர்ந்து வெகுசிறப்பாக எனது நிர்வாக காலத்தில் கொண்டாடுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை தருகின்றது. இவ்விழாவுக்கு என்றும் உறுதுணையாக இருக்கின்ற தொழிலதிபர் திரு. சி. முருகானந்தவேல், முன்னாள் அதிபர் திரு. த. துரைசிங்கம், திரு. செ. தில்லைநாதன் ஜே.பி. கிராமசேவையாளர் திரு. இ. வைத்திலிங்கம், ஆசிரியர் தம்பிஜயா தேவதாஸ் ஆகியோரையும் இவ்வேளையில் என்னால் பாராட்ட வேண்டியுள்ளது. அத்துடன் இவ்விழா சிறக்க நிதியுதவி செய்யும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

எமது பாடசாலைக்கு சுவிஸ் நாட்டில் வாழும் பாடசாலை பழைய மாணவர்கள் ஒன்றியம் ரூ. 100000 நிதியுதவி செய்தது. இப் பணத்தின் மூலம் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகம், கற்றல் உபகரணம் என்பன வழங்கப்பட்டன. அதேபோன்று கனடா பழைய மாணவர்கள் ரூ. 100000 நிதியுதவியை வழங்கி அதன் மூலம் வித்தியாலயத்திற்கு மின் இணைப்புச் செய்யப்பட்டது. அத்துடன் மதிய போசனத்திற்கு சிறிதளவு நிதியுதவியையும் வழங்கினர். இதனைவிட திரு. தம்பிமுத்து என்பவர் 5 கணனிகளை எமக்கு அன்பளிப்புச் செய்தார். இவர் எமது கிராமத்தைச் சேர்ந்தவர் அல்ல. எமது ஆசிரியரின் ஒத்துழைப்பு மூலம் இக் கணனிகள் கிடைக்கப் பெற்றன. இதனைவிட எந்த நிதியும் யாரிடமும் நாம் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் விரும்பி அன்பர்கள் சில பொருட்களை எமது பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தனர். அவர்களுக்கும் இவ்வேளையில் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

# மகுட வாசகம்

# "கல்வி அழகே அழகு"

MOTTO
The Real Beauty is Education
Education Makes Beauty

தூரநோக்கு
தரமான கல்வியினூடாக சூழலுக்குப் பொருத்தமான
நற்பிரஜையை உருவாக்குவோம்

VISION
Produce Good Citizen Through
Standard Education

பணிக் கூற்று
உடல் உறுதி, ஆளுமை விருத்தி என்பவற்றினூடாக
கற்றலை மகிழ்வான அனுபவமாக்கல்

MISSION STATEMENT
Through Physical Strenth and
Personality Development Makes
Learning Pleasant Experience

# பாடசாலையின் தகவல் சுருக்கம்

| | |
|---|---|
| பெயர் | : யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் |
| ஸ்தாபித்த ஆண்டு | : 03.03.1910 |
| ஸ்தாபகர் | : அமரர் வ. பசுபதிப்பிள்ளை |
| முகவரி | : 12ம் வட்டாரம், புங்குடுதீவு |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : வடக்கு |
| பிரதேச செயலகம் | : தீவுப்பகுதி தெற்கு (வேலணை) |
| பிரதேச சபை | : வேலணை, உப அலுவலகம் புங்குடுதீவு |
| கிராமம் | : புங்குடுதீவு |
| கிராம அலுவலர் பிரிவு | : புங்குடுதீவு தெற்கு து/26 |
| கல்விக் கோட்டம் | : வேலணை |
| கல்வி வலயம் | : தீவகம் |
| குறியீட்டு எண் | : 1014003 |
| பரீட்சை எண் | : 11288 |
| தொகை மதிப்பு எண் | : 09004 |
| பாடசாலைத் தரம் | : TYPE - II |
| பாடசாலை வகை | : கலவன் |
| இதுவரை அதிபர்கள் | : 12 |
| தற்போது மாணவர் தொகை | : 210 |
| ஆசிரியர் தொகை | : 16 |
| தற்போதைய அதிபர் | : திரு. எஸ்.கே. சண்முகலிங்கம் S.L.P.S. 2I |

**இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர்கள்**

1. முதல் தலைமை ஆசிரியர் - வேலணையூர் சைவப் பெரியார் அமரர் கா. நமசிவாயம்பிள்ளை (நாகலிங்கம்)
2. பேராசிரியர் அமரர் சி. இ. சதாசிவம்பிள்ளை (இளையப்பா உபாத்தியாயர்)
3. அமரர் க. செல்லத்துரை
4. அமரர் வை. கந்தையா
5. அமரர் நா. கார்த்திகேசு (1971 ஜனவரி முதல் 1981.10.20 வரை)
6. திரு. சோ. சேனாதிராஜா (1981.10.21 முதல் 31.08.1982 வரை)
7. திரு. த. துரைசிங்கம் (இலங்கை கல்வி நிர்வாக சேவையை சேர்ந்தவர் 01.09.1982 முதல் 31.01.88 வரை)
8. அமரர் கே. ரி. தருமலிங்கம்
9. திரு. செ. ஈஸ்வரமூர்த்தி
10. திரு. ச. சதாசிவம்
11. திரு. எஸ். அமிர்தலிங்கம்
12. திரு. எஸ்.கே. சண்முகலிங்கம் (24.03.1997 முதல் இன்று வரையும்)

**இவ்வித்தியாலய முகாமையாளர்கள்**

1910 - 1954ம் ஆண்டு வரையும்
புங்குடுதீவு புகழ்பூத்த பெரியார் அமரர் வ. பசுபதிப்பிள்ளை
1955 - 1957ம் ஆண்டு வரையும்
திரு. க.மு. சின்னத்துரை (விதானையார்)
1958 - 1962ம் ஆண்டு வரையும்
திருமதி தையல்நாயகி கதிரவேலு
01.05.1962ம் ஆண்டிற்குப் பின்னர் அரசு கையேற்றது.

**இவ்வித்தியாலயத்தில் உள்ள மன்றங்கள்**

1. கணித மன்றம்
2. கவின் கலை மன்றம்
3. இந்து மா மன்றம்
4. சமூகக் கல்வி மன்றம்
5. தமிழ் மன்றம்
6. விளையாட்டுக் கழகம்

## பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் 2009/2010

தலைவர் : திரு. S.K. சண்முகலிங்கள்
செயலாளர்: திருமதி. கு. மஞ்சுளா
பொருளாளர்: திருமதி. பி.பிரியதர்சினி
உப தலைவர் : திரு. வி. றோசஸ்றோ

**நிர்வாகக் குழு உறுப்பினர்கள்**

1. திரு. க. பரமலிங்கம்
2. திரு. வி. பீரிஸ்
3. திரு. க. சந்திரராஜா
4. செல்வி. ம: ஜக்குளின்
5. திருமதி. சா. நடராசா
6. திருமதி. க. இராஜேஸ்வரி
7. திருமதி. ச. சண்முகராசா
8. திரு. ஜெ. நிஷாகர்
9. திருமதி. பெ. ஹெயின்சாள்ஸ்
10. திருமதி. வி. புஸ்பநேசா
11. எண் பார்வையாளர் - திரு. நா.நாகராஜா

# பாடசாலை அதிபர், ஆசிரியர் குழாம்



**முன்வரிசையில் இருப்போர் :-**

திருமதி. நிதியரசன் , திருமதி. வி. புஸ்பநேசா, திரு. எஸ். கே. சண்முகலிங்கம் (அதிபர்), திருமதி. பெ. கெயின்சாள்ஸ், திரு. ஜெ. நிஷாகர்

**பின்வரிசையில் நிற்போர் :**

திரு. ந. சசிகுமார். செல்வி சி. அஞ்சலா , திருமதி. ஜெ. ஆன்றுமினா , திருமதி. ஏ. ராதிகா, திருமதி. ச. தர்மலோஜினி செல்வி. வி. பேரின்பநாயகி, செல்வி. ப. இரேணுகா, திரு. சு. சுஜீபன், திரு. ஞா. அன்ரன் செல்வராஜ்

**சமூகமளிக்காதோர் :**

செல்வி . தி. அமிழ்தினி, செல்வி. சு. சுபதீபினி . திருமதி. பி. பிரியதர்ஷினி

# சமூகக்கல்வி மன்றம்



**இருப்போர் :-**


திருமதி. ஜெ. ஆன்லுமினா (பொறுப்பாசிரியர்)

திரு. S.K. சண்முகலிங்கம் (அதிபர்) செல்வி. சி. அஞ்சலா (பொறுப்பாசிரியர்)

**நிற்பவர்கள்**

பீ. றொபின்சன், செ. மேரிகிறேஸ், ஜெ. பிரியா, அனுசியா, ஜெ. டார்ஜன்


# கவின்கலை மன்றம்



திருமதி. நிதியரசன் (சங்கீதம்), S.K. சண்முகலிங்கம் (அதிபர்)
திருமதி. P.H. சார்ள்ஸ் (நடனம்)

செல்வி . இ. துசாந்தினி , வி. கிருசாந்தினி, ப. ரிசாந்தி,
அ. ஜெபநேசன், வே. கயலக்சி, செ. சோதியா. அ. கிறோஜினி

# தமிழ் மன்றம்



திரு. ந. சசிகுமார், திரு. S.K. சண்முகலிங்கம் (அதிபர்)
திருமதி. பு. விஸ்வநாதன்,

செல்வி ச. தாரணி , செல்வி வே. சர்மிலி,
செல்வன். உ. கயேந்திரன், செல்வன். கி. சிந்துஜன், செல்வன். இ. கரிகாலன்

# இந்து மா மன்றம்



S.K. சண்முகலிங்கம் (அதிபார்)

செல்வி. ப. சிரேணுகா இ திரு. சு. சுஜீபன்

செல்வி. த. தட்சாகினி, செல்வன். அ. திபாகரன்,
செல்வன். ப. பௌசிகன், செல்வன் . ஆ. கிருஷ்ணகாந்தன் , செல்வி. இ. ரிபோஜினி

# கணித விஞ்ஞான மன்றம்



செல்வி. வி. பேரின்பநாயகி (கணிதம்), S.K. சண்முகலிங்கம் (அதிபர்)

திருமதி. பு. விஸ்வநாதன் (விஞ்ஞானம் )

செல்வி . ச. தாரணி, செல்வன். வெ. டினேஸ்ராஜ்,
செல்வன். ப. பௌசிகன், த. சுசிந்தன், வே. சர்மிலா

## உதைபந்தாட்டக் குழு



இடமிருந்து :- செல்வன் அ. விதுசன், றொபின்சன், லக்சானந்தன், ஜெபநேசன், பிரசாந், பௌசிகன், சுசிந்தன், ஜெபகோபன், சிந்துஜன், மோகன்தாஸ்
கீழ்இருப்போர்:- செல்வன். இ. கரிகாலன், கிருஷ்ணகாந்தன் , டினோசன், டார்ஜன், தியாகரன்

திரு. S.K. சண்முகலிங்கம் (அதிபர்)
பொறுப்பாசிரியர்கள் :- திரு. சு. சுஜீபன் , திரு. ஜெ. நிஷாகர்


## விளையாட்டுக்கழகம்





திருமதி. ச. தர்மகுலாஜினி, திருமதி. வி. புஸ்பநேசா,
திரு. S.K. சண்முகலிங்கம் (அதிபர்), திரு. சு. சுஜீபன்
செல்வி. வெ. சோதியா, செல்வன். ச. லக்சானந்தன்,
செல்வன். ஜெ. பிரசாந், செல்வன். அ. டினோசன்,
செல்வன். கு. கிருசாந், செல்வன். இ. கலைச்செல்வன். செல்வி. ப. ஜீவிதா.










**வித்தியாலயத்தின் எழில்மிகு தோற்றம்**



# என்னை ஆளாக்கிய தெய்வத் திருக்கோயில்

**- சி. முருகானந்தவேல்**
*ஸ்ரீ கணேச மகாவித்தியாலய நூற்றாண்டு விழாக் குழு பொருளாளர்.*

"நெஞ்சத்து நல்லம்யா மென்று நடுநிலைமையாற் கல்வியழகே யழகு" எனும் நாலடியார் வாசகத்திற்கு ஒப்ப கல்வியால் ஒருவரை அழகுபடுத்தும் ஸ்தாபனமாகிய ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் இன்று தனது நூறாவது ஆண்டைப் பூர்த்தி செய்து வெற்றிவாகை சூடியுள்ளமைக்கு எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் கூறும் இவ்வேளையில் என்னை ஆளாக்கிய எனது பாடசாலைக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எனது எண்ணத்தினை எழுத்தோலியமாக்க விரும்புகின்றேன்.

கல்விப் பலத்தை செழுமையடையச் செய்யும் பாத்திர இருப்பாக விளங்கும் பாடசாலையும் அதன் ஆசிரியர்களும் "உலகம் உயர்ந்தோர்மாட்டே" எனும் பழந்தமிழ் இலக்கியப் புகழையும் தமதாக்கி கொண்டவர்கள். கல்வி எல்லையற்றது. அதில் தான்பெற்றுக் கொண்டதற்கிணங்க அதை பெருக்கி காலத்தின் தேவைக்கேற்ப மாணவருக்கு வழங்கி நல் சமுதாயத்தை உருவாக்கி நின்ற எனது பாடசாலையின் இளமைக்கால நினைவுகள் என்றும் பசுமையானவை,

**"சுண்ணாம்புக் கட்டியை நறுக்காதே - நல்ல**
**சுவரிலும் கதவிலும் கிறுக்காதே**
**கண்ணாடி எடுத்தால் மெதுவாய் வை - அது**
**கைதவறி விட்டால் உடைவது மெய்**
**பண்ணோடு பாட நீ கூசாதே - உன்**
**பள்ளியில் எவரையும் ஏசாதே**
**மண், பூடு, ஆணி, துணி கடிக்காதே - கேள்**
**மற்றவர் பொருளை நீ எடுக்காதே**

என்ற பாரதிதாசன் பாடலை எனது பாடசாலையில் பட்டியல் பாட்டாக இனித்த காலம் இனிமையானது. மாணவப் பருவம் நல்ல மாண்புடைப்பருவம். பாடசாலைக் கல்வியுடன் நல்ல ஒழுக்கத்தை புகட்டவேண்டும். இத்தகைய அருமையான மாணவப் பருவம் நல்லது கெட்டது

பொய்மை, கரவு களவு, அறியாப் பருவம், இப்பருவத்தில் உயிரினும் ஓம்பப்படும் நல்லொழுக்கத்தையும். நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் ஊட்டி வளர்க்கவேண்டும் என்று கூறிய வார்த்தைகள் இன்றும் எனது காதில் ஒலிப்பவை.

**'உள்ளும் புறமும் ஒன்றாக**
**உணர்வில் அன்பு நிறைவாக**
**வெள்ளை மனம் உள்ளவரை**
**முகத்தில் இனிமை வழிந்தோட**
**முறுவல் காட்டி நின்றவரை**
**ஜகத்தில் வாய்மை வழி நின்று**
**தணியா அன்பின் துணைகொண்டு**
**அறிவொளி தந்து நின்றவரை**
**எண்ணத்தில் எண்ணிப்பார்க்கிறேன்.**
**என்னருமைத் தாயாரும் தந்தையாரும் என்கண்முன் தோன்றுவர்**
**துள்ளித் திரிகின்ற காலத்தில் என் துடுக்கடக்கி**
**பள்ளிக்கு அனுப்பிவைத்தவர் என் தந்தை**

பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் விளங்கியவர் என்தாய், சிறந்த மனிதநேயம், பரந்தமனப்பான்மை, தளராத ஆர்வம் நெகிழ்ச்சியுடையதாய் தேவைக்கேற்ப பொருந்தப்பேசும் தன்மை என்பவற்றை என்தாயிடத்தில் கண்டுகொண்டவன் மட்டுமன்றி கற்றுக்கொண்டவன். இவர்களின் அன்பும், பரிவும், ஒத்துழைப்பும் கொள்கையுறுதிப் பாடும் எனது இளமைக்கால கல்விக்கு வலுச்சேர்த்தவை.

மகாபாரதப் போர் மத்தியில் அஞ்சாது நின்று சிங்கம் போல முழங்கி கீதைதந்து அருச்சுனன் சோர்வுநீக்கி ஆர்வமூட்டி வீரம், ஆண்மை, வேகம், தியானம், ஞானம், உண்மை ஊட்டிய கண்ணன் போன்ற ஆசிரிய வழித்தோன்றல்களை எண்ணிப் பார்க்கிறேன். நாடெங்கும் நடைபயில நாடு நம்மைப் போற்ற ஏற்ற ஒழுக்கம் - மனவலிமை - அறிவு - தன்னம்பிக்கை ஆண்மை என்பவற்றை வழங்கி "எழுந்திரு விழித்திரு கற்றிடு" என்று என்னையும் என் சக மாணவர்களையும் தூக்கி நிறுத்தியவர்கள். ஆசிரியத்துவம் என்பது தியாகம் தன்னல மறுப்பு என்பன பொதிந்து பணம் - பொருள் - புகழ் என்பவற்றுக்காக கடமையாற்றாது, தானங்களுள் சிறந்த கல்வித் தானத்தை வழங்கும் போதுதான் ஆன்மீக உணர்வினைக் கல்வியில் அளிக்க முடியும் என பணிவும் விவசாசமும் வினயமும் கொண்டவர் அதிபர் நா. கார்த்திகேசு. அவர்களையும் என் எண்ணங்களில் பதிக்கின்றேன்.

கற்பிக்கும் கல்வி நன்றாக ஜீரணமாகிப் பயனளிக்க வேண்டும். உயிரூட்ட வேண்டும். ஊக்கம் அளிக்க வேண்டும். மனிதநேயத்தை வளர்க்க வேண்டும் என்று எனக்கு இளமையில் போதித்தவர்களே. அவர்கள் தம் போதனையின் வழிநின்று இன்று வாழ்வதற்கு முடிகின்றதென்றால் அவர்களை நான் எங்கு வைப்பது. பிள்ளைப் பருவத்தில் எனது பிஞ்சு உள்ளத்தை தன்பால் ஈர்த்தவர் உள்ளம் நெகிழும் மென்மையான இனிமையான உரை பாடியும் ஆடியும் கற்பித்தவர்கள் கடமைகளை ஒழுங்காகவும் கிரமமாகவும் சிறப்பாகவும் பொறுப்பாகவும் செய்தல் வேண்டும் என ஊக்கம் தந்தவரகள் எனது விளையாட்டுத் திறனை இனங்கண்டு கொண்டவர்கள் எனக்காக மட்டும் வலய விளையாட்டுப் போட்டியில் பங்கு பெறச் செய்தவர்கள் இவர்கள் யாவரும் என்றும் என் நெஞ்சில் நிலைப்பவர்கள். இவர்கள் போன்று இன்னும் பலர் என்னருமை ஆசான்கள் எல்லோரும் என்போற்றுதலுக்கும் என் வணகக்த்துக்குமுரியவர்கள். இவற்றை எல்லாம் எனக்கு இருப்பாக தந்து நின்ற எனது பாடசாலை இன்று பெருமரமாக வளர்ந்து நிற்கிறது. அதன் வளர்ச்சியைப் பாரக்கும் போது எனது உள்ளம் பெருமை கொள்கிறது.

பாடசாலை கல்வி வளர்ச்சியை வெளியில் நின்று பார்க்கிறேன் பாடசாலையின் வளர்ச்சிக்காக பாடுபடுபவன் என்ற வகையில் ஒரு குழந்தை பிறந்தவுடன் தாயானவள் அக்குழந்தைக்கு பாலூட்டலும் அதைத் தொடர்ந்து படிப்படியாக ஊட்டச்சத்துள்ள உணவுகளை ஊட்டி வளர்த்தும் பூரணமனிதனாக ஆக்குகின்றாள் அப்படியான ஒரு தாய்க்கு இப்பாடசாலையை ஒப்பிட முடிகிறது. இப்பாடசாலையில் ஆரம்ப வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட எமக்கு ஆரம்ப கல்வியை நல்லதொரு அடித்தளத்துடன் ஏற்படுத்தி தந்த பெருமை இப்பாடசாலையையே சாரும். அதாவது எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாகும் உயிர்க்கு என்று அருமையான அர்த்தத்துடன் வள்ளுவன் வகுத்த மொழி வளமோடு ஒலிக்கும் இடமாக இப்பாடசாலை காணப்படுகிறது.

இன்று இத்துணை வளர்ச்சிபெற்றுள்ள பாடசாலை அனைத்து துறைகளிலும் வளர்ந்து நிற்கின்றது. கல்வித் துறை, கலை இலக்கியத் துறையிலும் சிறப்புற்று விளங்குகின்றது. இயற்கையாக காணப்படும் உணர்வை இளைய தலைமுறையின் எதிர்கால கலாசாரம் பண்பாடு என்பவற்றுடன் திகழ்வதற்கேற்ற வகையில் எமது பாரம்பரிய பண்பாட்டினை காலத்திற்கு ஏற்றவாறு கலைகளின் ஊடாக வெளிக்கொணர்வதும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

**வாழ்க வளமுடன்**

# சைவப் பெருந்தொண்டர் பசுபதிப்பிள்ளை

**- பண்டிதர் மு. ஆறுமுகம்**

பூரணை நிலா பால்சொரிந்து பரந்து வெளுத்திருந்தது. மந்த மாருதம் செந்தமிழ் கலந்து வீசியது. நீலக்கடல் அலைகள் ஆணும் பெண்ணுமாக மாறி மாறி மணலில் புரண்டு, உருண்டு விளையாடிக் கொண்டு இருந்தன. புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவில் தென்கரை ஒரு நாள் இவ்வாறிருந்தது. அன்று சிலப்பதிகார விழா. ஞானசம்பந்தன், சிவஞானகிராமணியார் - முத்துசிவன் - இந்திரா, ஜகந்நாதன் இவர்கள் தாய்நாட்டிலிருந்து வந்திருந்தார்கள், சனசமுத்திரம் திரண்டிருந்து. தொண்டர்படைத் தலைவர்கள் கைவிரித்து நெஞ்சு கொடுத்துப் பொறுத்து நின்றனர். சில விநாடிகளில் இவர்களது பொறுப்பும் பறந்து போகும் நிலையிலிருந்தது. அந்த நேரம் பார்த்து ஒரு பெரிய வீராதிவீரர் நெருப்படி அடித்துக் கொண்டு முன்னேறி வந்தார். இரு இரு "பரமசிவம்", இரு இரு, யாவரும் பூச்சொரிந்தாற் போல் இருந்தனர். பொறுப்பாளராயிருந்தவர்களுக்கும் நல்ல அடி. ஓடி விட்டார்கள். பலருக்குக் காயம் - வேப்பிலைக்காயம். ஓர் ஆரவாரமுமில்லை. தொண்டர் படையும் ஒதுங்கிவிட்டது. அந்தப் பெரிய வீரர் மட்டுமே சுற்றி நடந்து திரிந்தார். இடையிடையே பரமசிவம் என்ற மந்திரம் கேட்கும். அந்த வீரர் கையில் தாங்கியிருந்த ஆயுதம் வேறெதுவுமில்லை. வேப்பிலைதான். பெரிய மகாநாடுகள் நடந்தாலென்ன, திருக்கோவில்களில் பெரும் பெரும் திருவிழாக்கள் நடந்தால் என்ன, சனசமுத்திரத்தைப் பண்பாக அமர்த்தும் மந்திரக்கோல் வேப்பந்தளிராகத்தான் அந்தச் சித்தர் கையில் இருந்தது. சைவத் தமிழ்த் தொண்டே உருவான அந்தப் பரமசிவத்துடன் ஏதோ ஒரு தெய்வ சக்தி கூடத்திரிந்தது. அவர் தொண்ணூறு இறாத்தல் நிறை கூட இருக்கமாட்டார். கதருடை, விபூதி முக்குறிப்பூச்சு, மெல்லிய உடல், சமமான உயரமுடையவர். அவருக்கு அத்தனை பேருமடக்கம். ஏன் அவர் ஒரு தொண்டர். அத்தனை பேருக்கும் தொண்டர். தன்நாடு, தன்மக்கள், தன்மொழி, சமயம், நல்ல நெறி வாழவேண்டும் எனத் தமது உடம்பை வளர்க்காது தொண்டு செய்து தேய்ந்தவர், சந்தனக் கட்டைபோல

சேர். பொன் இராமநாதன் துரையவர்கள் சமயத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்யத் தொடங்கிய காலத்தில் இவரும் சேர்ந்து உழைத்தவர். இவரையறியாத ஈழத்துப் பெருமக்கள் எவருமில்லை. போதிய தமிழறிவும், வேதாகம அறிவும் கைவந்தவர். ஆங்கிலத்தில் நிரம்பிய அறிவு படைத்தவர். ஒரு நேர உணவருந்திச் சித்தத்தைச் சிவன்பால் வைத்து வாழ்ந்த ஓர் ஒப்பற்ற உத்தமர். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தாருடன் சேர்ந்து நாட்டின் பல கோணங்களிலும் பல கல்வி நிலையங்கள் தோன்றக் காரணராயிருந்தார். அன்றியும் ஸ்ரீ கணேச வித்தியாசாலை, பராசக்தி வித்தியாசாலை இவற்றைத் தமது முயற்சியாலமைத்துத் திறம்பட நடத்தினார். புங்குடுதீவு அரசினர் ஆங்கிலக் கல்லூரியும் இவரது பெருமுயற்சியினாலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ கணேச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கப் போஷகராயிருந்து பல ஆண்டுகள் நாடு முழுவதிலும் உள்ள மாணவர்கள் தேவாரம், சமய பாடம், உடல் நலப் பயிற்சி இவற்றில் உயர்வு பெறப் பரீட்சைகள் நடத்தி உயரப் புலம் முற்றவெளி மைதானத்தில் போட்டிகள் நடத்தி நாடு நலமுறப் பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தார். இருபது ஆண்டுகளுக்கு மேல் கிராமச்சங்க அக்கிராசனராயும், ஆரம்ப காலத்தில் கிராமக்கோட்டு நீதிபதியாயுமிருந்து தொண்டாற்றினார். இவரது செயற்கருந்தொண்டுகளை நன்குணர்ந்த நாட்டுச் செல்வர்கள் மனமுவந்து மதித்து விழாவெடுத்து மகிழ்ந்தனர். நாடு உயர நாம் உயரலாம். என்பதும் பரமசிவத்தின் மந்திரம். கால்தேய நடந்து, நடந்து பொருள் சேர்த்துத் தருமத்தாபனங்களாக்கி இன்றைய உயர் நிலைக்குப் புங்குடுதீவைப் பொன்கொடு தீபமாக்கினார். ஒருநாள் பரமசிவம் என்ற தொனியுடன், பரமபதியுடன் ஒன்றுபட்டுத் தன் பூதவுடலை நீத்தாலும் புகழுடம்பு என்றும் நின்று நிலவ வாழ்ந்த அவரது ஆத்மா இன்றும் தொண்டு செய்யும் இளைஞர்களை அதிட்டித்து நின்று இயங்குகிறது. இல்லை இயக்குகிறது.




# ஒழுக்கமும் கட்டுப்பாடும் ஒருங்கமைந்த கலைக்கூடம்

- திருமதி நல்லம்மா சிவசாமி
ஓய்வுபெற்ற ஆசிரியை

**"பெற்றதாயும் பிறந்த பொன்நாடும்**
**நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"**

என்பது ஆன்றோர் வாக்கு. ஒவ்வொருவருக்கும் தாயும் தந்தையும் தன் நாடும் எவ்வளவு முதலிடம் வகிக்கின்றதோ அவற்றிற்கு அடுத்ததாக தான் ஏடு எடுத்துப் படித்த பாடசாலையும் முதன்மையானது. மனிதனுக்கு கல்வியறிவு அவசியமானது. கல்வியறிவுடையவனே எல்லோராலும் மதிக்கப்படுவான். மனிதன் பிறந்து வளர்ந்து அறிவைப் பெற நாடவேண்டிய இடம் பாடசாலை. குழந்தைக்கு ஐந்து வயதாகியதும் பெற்றோர் குழந்தையைச் சிறந்த ஓர் ஆசானிடம் கொண்டு சென்று ஏடு தொடக்கி அவனது கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரமிடுகிறார்கள். புங்குடுதீவு கிழக்கில் உள்ள இவ்வித்தியாலயம் எத்தனையோ சேவைகளைச் செய்துள்ளது. எவ்வளவோ கல்விமான்களைத் தோற்றுவித்த பெருமைமிகு ஓர் அரிய கலைக்கூடமாகும். இங்கு கல்விகற்ற மாணவர்கள் இன்று உலகினதும், நாட்டினதும் பல பாகங்களிலும் சென்று டாக்டர்களாய், எஞ்சினியர்களாய், வழக்கறிஞர்களாய், ஆராய்ச்சியாளர்களாய் இன்னும் பல பல சேவைகளுடன் கல்வியறிவுடைய செல்வந்தர்களாகவும் மிளிர்கிறார்கள்.

நான் கல்விகற்ற காலத்தில் அதிபராக இருந்த அமரர் க. செல்லத்துரை அவர்கள் இந்தப் பாடசாலையைத் தன் அருமைக் குழந்தை போலவே பேணிப்பாதுகாத்தார். தன் உடல் பொருள் ஆவி யாவற்றையும் இப்பாடசாலைக்கென்றே அர்ப்பணித்த ஒரு பெரிய மகான். அவரது காலத்தில் இப்பாடசாலை அடைந்த முன்னேற்றங்கள் பல. காலையில் உரிய நேரத்தில் பாடசாலைக்கு வருகை தந்து அங்கு கடமை புரியும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவித்து பாடசாலையில் எந்தக் குறையுமின்றி கண் போலக் காத்த ஓர் பெருந்தகை. அவரது அன்பினால் ஊக்குவிக்கப்பட்ட ஆசிரியர்களும் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். சைவசமயத்தைப் பாடசாலையில் வளர்த்தவர். வெள்ளிக்கிழமை தோறும் அயலிலுள்ள முருகன் கோவிலுக்கு சிவபுராணத்தைப் பக்தி சிரத்தையுடன் ஓதிக்கொண்டே சென்ற மாணவர்கள் அனைவரும் அங்கே வணக்கம் முடிந்து திரும்பி ஒழுக்க சீலர்களாய்ப் பாடசாலை திரும்பி வரும் அழகே அழகு. கல்வியறிவு, ஒழுக்கம், பண்பு, கடமை, கட்டுப்பாடு எல்லாவற்றையும் ஒருங்கே மாணவர்கள் பெற்றார்கள் என்றே கூறவேண்டும். சிறிய கட்டடங்களுடன் இருந்த இப்பாடசாலை தற்போது மாடிக் கட்டடங்களையும் பெற்று மிளிர்கிறது. அப்பகுதி மக்களும் அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுச் சேவை செய்கிறார்கள் என்றே சொல்லலாம் 'அ' என்ற எழுத்தை முதலில் உச்சரித்த இப்பாடசாலையில் கல்வியறிவு பெற்ற நான் அங்கிருந்தே ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவானேன். பல பாடசாலைகளில் கல்விச் சேவை செய்த நான் இறுதியில் 12 வருடங்களாக இப்பாடசாலையில் சேவை செய்து ஓய்வு பெற்றமை நான் செய்த தவப்பயனே ஆகும். எனக்குக் கல்வியறிவினை ஊட்டிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கு சிரம்தாழ்த்திக் கரம் கூப்பி வணங்கும் நான் இவ்வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை உளமார வாழ்த்தி வணங்குகின்றேன்.



# கணேச மகா வித்தியாலயத்தின் கல்விப்பணி

- வைத்திய கலாநிதி. ஆ. பேரின்பநாதன்
*பழைய மாணவர்*

பாடசாலை ஒன்று திறக்கப்படும்போது சிறைக்கூடம் ஒன்று மூடப்படுகிறது. இந்த வகையிலேயே எமது முன்னோரின் கல்விச் சிந்தனை இருந்தது. முடியுடை மூவேந்தரும் ஒற்றுமையுடன் புரிந்த ஒரே போரான பறம்புமலைப் போரில் பாரிமன்னன் இறக்கிறான். அவன் பிள்ளைகளான அங்கவை, சங்கவை ஔவையின் பாதுகாப்பில் சாதாரண குடிமக்களாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். அன்று ஒரு நிலாக்காலம். தந்தையின் துயரை சகோதரிகள் ஔவையிடம் நினைவு கூருகின்றனர். "அற்றைத் திங்கள் அவ்வெண்நிலவில் எந்தையும் உடையோம் எம் குன்றும் பிறர் கொளார். இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில் எந்தையும் இலமே, எம்குன்றும் கொண்டார்" இந்தச் சோகவரிகளில் இழையோடிக் கிடப்பது அன்றைய சாதாரண குடிமக்களின் ஒன்றுகூடல்கள் நிலா முற்றத்தில் நிகழ்ந்ததென்பதாகும். பண்டைய கல்வி முறையில் சாதாரண குடிமக்கள் நிலாப்பள்ளிகள் ஊடாக கேள்வியறிவுடாக அறிவை, அறவாழ்வை, பாரதம், இராமாயணம், நீதிநூல்கள், என்பவற்றின் கதாபாத்திர வாழ்வியல் நோக்கங்கள் அவை உணர்த்தும் தத்துவங்கள் மூலம் போதனாகிரியா கதை கூற அதைச் செவிப்புலனாக்கி அறிவு பெற்றனர். இது அக்கால கல்விமுறையில் அடிமட்ட மக்களின் நிலை. அடுத்து பிரபுத்துவ வழி நிலச் சுவாந்தார்கள் தமது பிள்ளைகளுக்கு உபாத்தியாயர்களை அமர்த்தி திண்ணைப் பள்ளிக்கூடங்களை அமைத்து கல்வி கற்பித்தனர். இதில் சாதாரண குடிமக்களின் குழந்தைகள் சேர்க்கப்படுவதில்லை. நிலப்பிரபுக்கள் உபாத்தியாயர்களுக்கு நெல்லினையே மாதாமாதம் இவ்வளவென ஊதியமாக வழங்கினர். இது இரண்டாவது வகை கல்வி முறை. குருகுலக் கல்விமுறை இது பிராமண, சத்திரியர்க்குரியதான கல்விமுறை. இது அந்ததந்த வர்ணத்தைச் சேர்ந்த பிள்ளைகள் மட்டும் 12 வயது வரை குருவுடன் தங்கியிருந்து கல்வி பெறும். மூன்றாம் முறை இரும்பு, பொன், செம்பு, மரம், கல், மண் போன்றவற்றிலும் கட்டிடக்கலை போன்றவற்றிலும், தொழிற்பயிற்சி அளிக்கப்படும் இக்கல்விமுறை; பட்டடைக்கல்வி முறை எனப்பட்டது. இதன் தலைவர் "மூப்பர்" எனப்பட்டார். இப்பயிற்சி பெற்றவர்கள் தச்சுவேலை, கொல்வேலை, கருமான் வேலை, பொன்வேலை, சிற்பவேலை, கட்டிடவேலை எனப் பயின்று தொழில்புரிந்தனர். இது நான்காவது கல்விமுறை,

**பாடசாலையின் ஆரம்பம்:**

வடபுலக் கல்விமுறையில் எழுத்தறிவு கல்விக்கு 1816இல் இருந்து உதவியவர்கள் அமெரிக்க மிசனரிமார்கள். புங்குடுதீவை பொறுத்தவரை 1887 களின் பின்பே மடத்துவெளி, பெருங்காடு, இறுபிட்டி ஆகிய மூன்று இடங்களில் அமெரிக்கன் மிசனரிமார் 5ம் வகுப்பு வரையான ஆரம்ப பாடசாலைகளை அமைத்து அறிவூட்டி வந்தனர். புங்குடுதீவு கிழக்கில் அப்படியான கல்வி வசதியின்மையினை அவதானித்த மேட்டுக்குடி மக்கள், நிலமானியப் பிரபுத்துவக் கல்விமுறையைத் தழுவிய திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றை அவர்கள் வாழ்ந்த சூழலில் 12ம் வட்டாரத்தில் கணேச வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பித்தனர். திண்ணைப் பாடசாலை அரசில் பதிவு செய்து நன்கொடை பெறும் பொருட்டு அக்காலத்தில் பெருங்காட்டில் குருகுலக்கல்வியாக வேதாகமப் பாடசாலை ஒன்றை நடத்திவந்தவரும், புங்குடுதீவு மேற்கு விதானையாரும் ஆங்கில அறிவாளருமாக இருந்த உயர்திரு. வ.பசுபதிப்பிள்ளை என்பவரின் உதவியினை பெரியநாகநாதர் வேலுப்பிள்ளையும், தம்பியார் சிதம்பரநாதர், இராமநாதர் போன்றோரும் நாடினர். அரச விதிமுறைகளின் படி அரசடிப்பாடசாலை கட்டிடவசதி காணாமையால் பசுபதிபிள்ளை அவர்களின் ஆலோசனைப் படி கணேச வித்தியாசாலை 1914ம் ஆண்டளவில் கனகசபையார் இராமநாதரின் மகன் அப்பச்சியரின் (திருமதி சுப்பிரமணியம் சிவக்கொழுந்துவின் தந்தை) காணியை அன்பளிப்பாகப் பெற்று பொதுமக்களின் உதவியுடன் அரசின் நியமங்களுக்கு அமைய தற்போதைய பாடசாலை அமைக்கப்பட்டது. பாடசாலையின் முகாமையாளராக உயர்திரு.வ.பசுபதிப்பிள்ளை விதானையார் பதியப்பட்டார். அவரது முயற்சியால் இப்பாடசாலை உயர்தர பாடசாலையாக உயர்வு பெற்றது. இன்று தனது நூற்றாண்டைக் கொண்டாடுகிறது. இதன் கல்விப்பணிகள் அளப்பரியன. அனைரும் அறிந்ததே. அதனை வாழ்த்தவதில் உளம் மகிழ்கிறேன்.



# இளவயதில் எனது இனிய பாடசாலையில்

- தம்பிஐயா தேவதாஸ்
B.A (Cey) B.E.D. (Cey)
M.A. (Journalism)

'கிராமத்தைப் படைத்தான் இறைவன். நகரத்தைப் படைத்தான் மனிதன். இறைவனின் அனுக்கிரகத்துடன் பாடசாலையைப் படைத்தான் மனிதன்' என்று கூறினான் ஒரு அறிஞன்.

நாம் எத்தனை பாடசாலைகளில் படித்தாலும் பல்கலைக்கழகங்களில் படித்தாலும் நாம் படித்த ஆரம்பப் பாடசலையை எம்மால் இலகுவில் மறந்துவிடமுடியாது. அந்தப் பாடசாலையின் அமைவிடம் அங்கு படிப்பித்த ஆசிரியர்கள், எங்களுடன் சேர்ந்து படித்த மாணவர்கள், அங்கு நடந்த சம்பவங்கள் என்று எதையும் இலகுவில் மறக்க முடியாது. அந்த நினைவுகளை எப்போதாவது எழுதிவிட வேண்டும் என்று எண்ணியதுண்டு. அப்படி எழுத வேண்டிய சந்தர்ப்பம் இன்று வந்துவிட்டது. என் இனிய பாடசலையின் நூறாவது ஆண்டு நிறைவு விழாவில் அதை எழுதவேண்டி வந்துவிட்டது.

நான் 1951 ஆம் ஆண்டு புங்குடுதீவில் பிறந்தேன். நான் பிறப்பதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே அந்தப் பாடசாலை பிறந்துவிட்டது. அந்த இனிய பாடசாலைக்கு அப்பொழுது பெயர் புங்குடுதீவு கணேச வித்தியாசாலை. என் தந்தையும் தாயாரும் அதே பாடசாலையில்தான் படித்தார்களாம். 1956ம் ஆண்டு எனக்கு ஐந்து வயது. அந்த வயதில்தான் அந்தப் பாடசாலைக்குப் போகத் தொடங்கினேன். முதலில் எனக்கு ஏடு தொடக்கினார்கள். விஜயதசமி அன்று என்னைப் போலவே பலருக்கும் ஏடு தொடக்கப்பட்டது. கோபாலபிள்ளை ஆசிரியரே எனக்கு ஏடு தொடக்கினார். பனை ஓலையில் எழுத்தாணியால் 'அ' 'ஆ'; என்று எழுதப்பட்ட ஏடுகள் எங்களுக்கு வழங்கப்பட்டன.

அந்தக் காலத்தில் முன்பள்ளி பின்பள்ளி என்றெல்லாம் ஒன்றுமில்லை. எல்லோரையும் பாலர் வகுப்பில்தான் சேர்த்துவிடுவார்கள். யூனிபோம் என்று ஒன்றும் இல்லை. மாணவர்கள் அரைக் காற்சாட்டையும் சேட்டும் அணிவார்கள். பெண்கள் பாவடை சட்டை அணிவார்கள். அப்பொழுது இப்பொழுதுபோல் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவதில்லை. ஆறுமுகநாவலர் எழுதிய பாலபாடம் தான் முதல் நூல்.

சிலர் உமாவாசகம் என்னும் நூலையும் வைத்திருப்பர். ஆரம்பத்தில் கொப்பியில் எழுதுவதில்லை. சிலேற்றில்தான் எழுதுவோம். அவைகூட நம் நாட்டில் தயாரிக்கப்படுவதில்லை. எம்மை ஒரு காலத்தில் ஆண்ட ஒல்லாந்தரின் நாட்டில் இருந்துதான் வந்தன. சிலேற்றில் பென்சிலால் எழுதிவிட்டு அளித்துவிடலாம். மீண்டும் எழுதி எழுதி அழிக்கலாம். கொப்பி, பென்சில், பேனை போன்றவற்றை மேல் வகுப்பு மாணவர்களே பாவிப்பர். போல்பெயின்ற் பேனாவோ ஊற்றுப் பேனாவோ அப்பொழுது இருக்கவில்லை. மையை தொட்டுத் தொட்டு எழுதும் பேனாவே பாவனையில் இருந்தது. அதன் பின்பே ஊற்றுப் பேனா பாவனைக்கு வந்தது.

கணேசா வித்தியாசாலையின் தெற்குப்புற மண்டபத்தில் இரண்டு பெரிய வகுப்புகள் இருந்தன. வலப்பக்கம் இருப்பது மாணவர்களுக்கான பாலர் வகுப்பு அதற்குப் பொறுப்பாக விசாலாட்சி அக்கா இருந்தார். அப்பொழுது ஆசிரியையை 'ரீச்சர்' என்று அழைப்பதில்லை. அக்கா என்றே அழைப்போம். ஆசிரியரை வாத்தியார் என்றே அழைப்போம். ஆரம்ப வகுப்பில் மாணவர்களுக்கு அன்பு சொரியவேண்டும் என்பதற்காக விசாலாட்சி அக்காவை நியமித்தார்கள் போலும். நான் அந்த வகுப்பில் இருந்த போது ஆசிரியை என்னை அன்புடன் நடத்துவார், அழகாக பாடங்களைச் சொல்லித்தருவார். சிரித்த முகம், சிவந்த மேனி, மெல்லிய உயர்ந்த உருவம். அன்பே உருவான அவர் எங்களுக்கு ஆதரவுடன் பாடம் சொல்லித்தருவார்.

அந்தப் பாடசாலையில் பாலர் வகுப்பில் என்னுடன் ஒன்றாகப் படித்த மாணவர்களை நினைவில் கொண்டு வரமுடியவில்லை. இருபது அல்லது இருபத்தைந்து மாணவர்கள் படித்திருக்கலாம். அவர்களில் ஓரிருவரைத் தான் ஞாபகப்படுத்த முடிகிறது. வள்ளுவன், கிட்டு என்ற இரண்டு மாணவர்களை எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஏனென்றால் வள்ளுவன் விசாலாட்சி அக்காவின் மகன். கிட்டு விசாலாட்சி அக்காவின் அக்காவின் மகன்.

எங்கள் வீட்டில் கதிரைகள் மேசைகள் இருக்கவில்லை. ஆனால் பாடசாலையில் சிறிய கதிரைகளும் மேசைகளும் இருந்தன. அவற்றில் அமர்ந்திருந்து படிக்க ஆசையா இருக்கும். நான் பாலர் வகுப்பில் படித்த காலததில்தான் முதன் முதலில் பணிஸ் வழங்கினார்கள். அதற்கு முன் காலத்தில் சோறு வழங்கினார்களாம். பாலர் வகுப்பு மாணவர்களுக்கு விசாலாட்சி அக்கா பொறுப்பா இருந்தது போல் மாணவிகளின் வகுப்புக்கு சற்குணம் அக்கா பொறுப்பாக இருந்தார். அவரும் விசாலாட்சி அக்காபோலவே அன்பான குணமுள்ளவர். 1957ஆம் ஆண்டு நான் இரண்டாம் வகுப்பிற்கு சித்தி பெற்றேன். இந்த வகுப்பு, பாடசாலைக்கட்டடத்தின் தென்கிழக்கு மூலையில் இருந்தது. மாணவர்களின் வகுப்புக்கு பொறுப்பாக திருமேனி அக்காவும். மாணவிகளின் வகுப்புக்கு பொறுப்பாக புகனம் அக்காவும் இருந்தனர்.

திருமேனி அக்காவின் பெயரை புங்குடுதீவிலுள்ள அனைவரும் அறிவர். புங்குடுதீவில்

அவருக்கு மட்டுமே திருமேனி என்ற பெயர் இருந்தது. இவரும் மாணவர்களுக்கு அன்புடன் பாடம் சொல்லித்தருவார். நகைச்சுவையுடன் கதைகள் சொல்லுவார். நான் ஓரளவு கெட்டிக்காரன் என்பதால் என்மீது அன்பு வைத்திருந்தார். கண்டிப்பு மிக்கவர். தவறு செய்யும் பொழுது மாணவர்களின் கைவிரல்களில் அடிமடடத்தால் மெதுவாக அடிப்பார். பாடசாலைக்கு அருகிலேயே அவரது வீடு அமைந்திருந்தது. பாடசாலைக்கு நேரத்துடனேயே வந்துவிடுவார். பூடசாலையில் பொறுப்புகள் அவரிடமே கொடுக்கப்படும்.

அந்த வகுப்பில் என்னுடன் படித்த மாணவர்களை என்னால் ஞாபகத்தில் கொண்டு வரமுடியவில்லை. ஆனால் இரண்டு மாணவர்களை மட்டும் ஞாபகப்படுத்த முடிகிறது. நான் பாடசாகைக்கு போகும் பொழுதும் வரும் பொழுதும் என்னுடன் வரும் அயல்வீட்டு மாணவன் சரவணமுத்து கணேசமூர்த்தி ஒருவன் குடுமி வைத்துக்கொண்டு வந்துபோகும் சண்முகம் சதாசிவம் மற்ற மாணவன் 1958 ஆம்ஆண்டு அந்தப் பாடசாலையின் மூன்றாம் வகுப்பில் வந்து சேர்ந்தேன்.

பாடசாலையின் வடமேற்குப் புறத்தில் இருந்த அறையே கோவிலாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கு முன்னுள்ள பகுதியிலேயே மூன்றாம் வகுப்பு இருந்தது. இடது புறத்தில் மாணவர்களின் வகுப்பும் வலது புறத்தில் மாணவிகளின் வகுப்பும் இருந்தது. மாணவர்களின் வகுப்புக்கு கோபாலபிள்ளை ஆசிரியர் பொறுப்பாக இருந்தார். இவர் மாணவர்களை அன்பாக நடத்துவார். விருப்பமான மாணவர்களின் கையைக் கிள்ளுவார். அழகான சித்திரங்களை வரைவார். அவர் வரைந்த சித்திரங்கள் தான் கல்வி அதிகாரி வரும்பொழுது வகுப்பறைகளை அலங்கரிக்கும். மாணவர்களுக்கு நாடகம் நடனம் பழக்குவார். அவர் பழக்கித்தந்த விசிறி நடனம் இன்னும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அவரது மகள் கற்பகம்; எழுதிய நாடகம் ஒன்றை எங்களுக்குப் பழக்கினார். அந்த நாடகத்தில் வேலைக்கார முனியனாக நான் நடித்தது ஞாபகத்திலிருக்கிறது. எனக்கு வைக்கப்பட்ட பெரிய மீசையும் ஞாபகத்தில் இருக்கிறது. அந்த வகுப்பில் என்னுடன் கிட்டத்தட்ட இருபது மாணவர்கள் படித்தனர. அதேஅளவு மாணவிகளும் படித்தனர். மாணவர்களில் சிலர் எனது ஞாபகத்தில் இருக்கின்றனர்.

ஆ.திருவள்ளுவன், தா. இராதாகிருஷ்ணன், செ. மகேந்திரன், சுபாஷ்சந்திரன். ந. இராசக்கோன், வி. வைத்தீஸ்வரன், ச. சதாசிவம், சி. இளங்கோ, வீ. திருநாக்கரசு, சு. சாந்தலிங்கம், சோ. யோகராஜா, ச. சண்முகரெத்தினம், ச. கணேசமூர்த்தி, சி. சிவபாதசுந்தரம், எஸ். தேவராஜா, எஸ். முத்துலிங்கம், எஸ். துரைராஜா, அ. ஜோகராஜா, நா. புத்மநாதன், கா. பரமேஸ்வரன், சி. அப்புத்துரை, மு. கதிர்காமன் போன்ற மாணவர்களின் பெயர்கள் ஞாபகத்தில் இருக்கின்றன.பெண்பிள்ளைகளில் ஒருசிலரின் பெயர்கள்தான் நினைவில் இருக்கின்றன. நிர்மலாதேவி, சீதாலெட்சுமி, லிங்காதேவி, பார்வதி, திலகவதி, ராஜேஸ்வரி, பங்கையற்செல்வி, தனலெட்சுமி போன்றோரின் பெயர்கள் நினைவில் இருக்கின்றன.

கணேச தீபம் ~~~

மூன்றாம் வகுப்பில் எல்லாப் பாடங்களையும் கோபாலபிள்ளை ஆசியரே படிப்பிப்பார். ஆழகான கையெழுத்தில் எழுதுவார். ஆழகான சித்திரங்களை வரைந்து காட்டுவார். பாடல்களை பாடியும் ஆடியும் காட்டுவார். பாடசாலை விழாக்களில் கோபாலபிள்ளை ஆசிரியரின் ஆடல் அல்லது பாடல் நிகழ்ச்சி இல்லாமல் அமையாது. எந்த வகுப்பிலோ தெரியவில்லை. கோபாலபிள்ளை ஆசிரியர் மேடையேற்றிய நாடகத்தில் நடித்திருக்கிறேன். அந்த நாடகத்தில் நான் வேலைக்கார முனியனாக தோன்றினேன். அந்நாடகத்தில் நான் பேசிய வசனம் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. "இந்த கண்ணகை அம்மன் சத்தியமா அந்த மோதிரத்தை நான் எடுக்கவில்லை". என்பதுதான் அந்த வசனம். அந்த வசனத்தைப் பேசியபோது நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் எழுப்பிய சிரிப்பொலியை என்னால் மறக்க முடியவில்லை. அடுத்தடுத்த நாட்களில் அயலவர்கள் என்னை முனியன், முனியன்; என்று அழைத்ததையும் என்னால் மறக்க முடியாமலிருக்கிறது. பிற்காலத்தில் நான் பல மேடை நாடகங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்துவிட்டேன். ஆனால் நான் முதன் முதலில் நடித்த நாடகம் என்ற வகையில் அந்த மூன்றாம் வகுப்பு நாடத்தை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. பிற்காலத்தில் நானும் நடிகனாகவர வேண்டும் என்ற ஆசையை அந்த நாடகம்தான் எனக்குள் ஏற்படுத்தியது.

அந்தப் பாடசாலைக் கட்டடத்தின் வடகிழக்கு பகுதியில் நான்காம் வகுப்பறை அமைந்திருந்தது. வருடத்தின் ஆரம்பத்தில் அம்பலவாணர் ஆசிரியரும் பின்பு விசாலாட்சி ஆசிரியையும் பொறுப்பாக இருந்தனர். அந்த வகுப்பில் இருபத்தைந்து மாணவர்கள் இருந்திருக்கலாம். மற்ற மாணவர்களைவிட பிள்ளையான் என்ற ஹரிஜன மாணவனை எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. மற்ற மாணவர்கள் எல்லோரும் அரைக்காற்சட்டையும் சேட்டும் அணிந்திருப்பார்கள் ஆனால் பிள்ளையான் மட்டும் நாலு முழவேட்டி கட்டியிருப்பான். சேட் அணியமாட்டான். எல்லா மாணவர்களும் கதிரையில் அமர்ந்திருப்பார்கள். அவர்களுக்கென தனியான மேசைகளும் கதிரைகளும் இருக்கின்றன. பிள்ளையானுக்கு மேசையும் இல்லை. கதிரையும் இல்லை. நிலத்திலேயே அமர்ந்திருப்பான். இன்னுமொரு ஹரிஜன மாணவனும் என்னுடன் படிததான் அவனது பெயர் ஞாபகமில்லை. அவன் கோவணம் கட்டிக்கொண்டு வந்தது மட்டும் ஞாபகத்திலிருக்கிறது. அந்தக் காலத்தில் எனது கைகளில் சிரங்கு நோய் வந்துவிட்டது. இது ஒரு தொற்று நோய் என்று மாணவர்கள் கூறினார்கள். அதனால் என்னையும் சில தினங்கள் பிள்ளையானுடன் நிலத்தில் இருத்திவைத்துவிட்டார்கள்.

பிள்ளையான் வகுப்பின் ஒரு பக்கத்தில் நிலத்தில் அமர்ந்திருந்தாலும் பெரும்புரளிக்காரன். நான் எனது கொப்பியில் அழகான படங்கள் ஒட்டி வைத்திருப்பேன். பிள்ளையான் அவற்றை யாருக்கும் தெரியாமல் கழற்றி எடுத்துவிடுவான். அவனது தொல்லையை என்னால்தாங்க முடியவில்லை. அவன் பெரிய உருவுடையவன் அதனால் அவனுக்கு என்னால் அடிக்க முடியாது. எனவே எனது மாமா சிவனாமத்திடம் முறையிட்டேன். அக்காலத்தில் ஹரிஜன மாணவருக்கு உயர் குலத்தவர் அடித்தால் யாரும் கேட்கமாட்டார்கள்.

எனது மாமா பெரிய பிரம்புடன் பாடசாலைக்கு முன் பாதுங்கி நின்றார். இதை எப்படியோ அறிந்துகொண்ட பிள்ளையான் பாடசாலையின் பின்புறவேலியால் பாய்ந்து ஓடிவிட்டான். நான் ஐந்தாம் வகுப்பில் அம்பலவாணர் ஆசிரியரிடம் படித்தேன். உயர்ந்த உருவம். மேலிந்த தோற்றம். சுருண்ட கேசம். தேசிய உடையே அணிவார். இனிமையான குரல்வளம் உடையவர். தேவார, திருவாசகங்களை மனமுருகப்பாடுவார். படிப்பிக்கும் பொழுது மிகவும் கண்டிப்பாக நடந்துகொள்வார். கோபம் வந்துவிட்டால் அடித்து நொருக்கித் தள்ளிவிடுவார்.

நகைச்சுவைக் கதைகள் சொல்வதில் வல்லவர். அவர் சொன்ன கதைகளை நானும் எனது வகுப்புகளில் எடுத்துவிட்டிருக்கிறேன். அவர் பேய்க் கதைகள் சொல்வதில் கெட்டிக்காரர். 'அம்பலவா என்ர பொல்லைத்தாடா' என்ற கதை இப்பொழுதும் எனது ஞாபகத்தில் இருக்கிறது. கதை எழுத வேண்டும் என்ற எனது ஆர்வத்தை அன்றே கிளறிவிட்டவர் இந்த அம்பலவாணர் ஆசிரியர்தான். சும்மா இருக்கும் பொழுது பகிடிக்காகவும் அடிப்பார். கோபம் வந்தபோது உண்மையாகவும் அடிப்பார். சு. சாந்தலிங்கமும் கு. சந்திரனும் ஆசிரியரிடம் அடிக்கடி அடிவாங்குவர்.

எனக்குப் பக்கத்தில் ஜெயராஜா இருப்பான். மறுபக்கத்தில் ந. பத்மநாதனும் இருப்பான் . அந்தக்காலத்தில் எமக்கு ஆசிரியர்களுக்கு உதவி செய்வதில் அதிக விருப்பம். குறிகாட்டுவானில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ் வண்டிகள் எமது பாடசாலைக்கு முன்பாகவே செல்லும். பகல் ஒரு மணியளவில் அவ்வாறு செல்லும் பஸ்ஸை நிறுத்துவதற்காக சில மாணவர்கள் பாடசாலைக்கு முன்பு வந்து நிற்போம். காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஆசிரியர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் போவதற்காகவே அவ்வாறு பஸ்களை நிறுத்துவதற்காக காத்து நிற்போம். இவ்வாறு ஆசிரியர்களுக்கு உதவி செய்வதற்கு எமக்கு அதிக விருப்பம். புங்குடுதீவைச் சேர்ந்த சில ஆசிரியர்கள் எமது பாடசாலைக்கு யாழ்ப்பாணத்திலிருந்தே வருவார்கள். அவர்களுக்கு புங்குடுதீவில் வீடு காணி இருந்த போதிலும் யாழ்ப்பாணத்திலிருந்துவந்து பாடசாலையில் படிப்பித்துவிட்டு மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு பஸ் எறி விடுவார்கள்.

பாடசாலைக் கட்டடத்தின் மேற்குப் புறம். 6ஆம் வகுப்பு இருந்தது. எங்கள் வகுப்பின் சுவரிலேயெ பெரிய மணிக்கூடு இருந்தது. இந்த வகுப்புக்கு நாகலிங்கம் வாத்தியார் பொறுப்பாக இருந்தார். அவர் பாடசாலைக்கு வந்ததும் முதல் வேலையாக அந்த மணிக்கூட்டுக்கு சாவி கொடுப்பார். வாட்டசாட்டமான உடம்பு. கவிதை எழுதுவதில் வல்லவர். ஜோதிடத்தில் அறிவுள்ளவர். இவற்றையெல்லாம் அவர் பாடசாலையில் காட்டுவதில்லை.

கணிதம் படிப்பிக்கும் பொழுது மாணவர்களுக்கு முதுகிலேயே தட்டித்தட்டிப் படிப்பிப்பார். மாணவர்களில் கு. பாலசுப்பிரமணியத்தை மட்டும் நன்றாக ஞாபகமிருக்கிறது. அவன் சென்ற

வருடமும் இந்த வகுப்பில் இருந்தவன். இந்த வருடமும் இந்த வகுப்பில் படிக்கிறான். மாணவர் தவறுவிட்டால் மூக்கைப்பிடித்து ஆட்டுவார். அப்படி ஒருநாள் என் மூக்கை பிடித்து ஆட்டியபோது ஏற்பட்ட வலி இப்பொழுதும் எனக்கு தெரிகிறது அதே வகுப்பில் செல்வரெத்தின வாத்தியார் ஆங்கில பாடத்திற்காகு வருவார். சங்கீத பாடத்துக்கும் அவர் பொறுப்பாக இருந்தார். ஒருமுறை எல்லோரையும் பாடவிட்டுவிட்டு நல்லகுரல் உடைய மாணவர்களை தெரிந்தெடுத்தார். அப்படி என்னையும் தேர்ந்தெடுத்தார். எனக்கும் ஓரளவு குரல் வனம் இருக்கிறது என்று கண்டுபிடித்த ஆசிரியர் செல்வரத்தினம்தான். அவர் சொல்லித்தந்த பாடல் இப்பொழுதும் ஞாபகத்தில் இருக்கிறது.

'ஆடிக்கொண்டார் இந்த வேடிக்கை
காணக்கண் ஆயிரம் வேண்டாமோ
நாடிதுடிப்பவர் பங்கில் உறைபவர்
நம்மதிருச் செம்பொன் அம்பலவாணனை'

என்றுதான் அந்தப் பாடல் அமையும். நான் ஒரு சிறந்த பாடகன். என்னாலும் பாட முடியும் என்று என்னை கண்டு பிடித்தவர் செல்வரெத்தினம் ஆசிரியர்தான். நான் அந்த பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரைத்தான் படித்தேன் ஆனாலும் அந்த வகுப்பு எனக்கு நன்றாக ஞாபத்தில் இருக்கிறது. ஓரளவு முதிர்ச்சியடைந்துவிட்ட மாணவன் என்பதால் அவை நன்றாகவே ஞாபகத்தில் வருகின்றன. ஆரம்பத்தில் அவ்வகுப்புக்கு குணமாலை ஆசிரியர் பொறுப்பாக இருந்தார். அதன்பின்பு ஆ. புவனேஸ்வரி ஆசிரியை பொறுப்பாக வந்தார். ஆரம்ப வகுப்பு முதலே என்னுடன் படித்துவந்த மாணவர்கள் பலர் இருந்தார்கள்.

வைரமுத்து திருநாவுக்கரசு, வைரமுத்து வைத்தீஸ்வரன், சுந்தரம்பிள்ளை சாந்தலிங்கம், நல்லதம்பி ராசக்கோன், இளங்கோவன், போன்ற மாணவர்கள் தொடர்ந்து படித்தனர். ராஜேஸ்வரி வித்தியாலயத்திலிருந்து வந்து சேர்ந்த சுப்பையா கனகலிங்கம், குமரேசு சந்திரன் ஆகியோரும் கமலாம்பிகை வித்தியாலயத்திலிருந்து வந்த சிவபாலன், நாகநாதி ஆகிய மாணவர்களும் படித்தனர். வகுப்பின் முன்வாங்கில்களில் பெண்களும் பின் வாங்குகளில் ஆண்களும் அமர்ந்திருந்தனர். அந்த வகுப்பில் படித்த மாணவிகள் சிலரும் ஞாபகத்துக்கு வருகிறார்கள். எனது மருமகள் முறையான ராஜேஸ்வரி, மச்சாள் முறையான பங்கையர்ச்செல்வி, மற்றும் தனலெட்சுமி, குணமணிதேவி, திலகவதி போன்றோரும் நினைவில் வருகிறார்கள்.

ஆசிரியர்கள் வகுப்பில் இல்லாத போது நாம் நன்றாக பாடி மகிழ்வோம். சிவபாலன் நன்றாக சினிமாப்பாடல்கள் பாடுவான். இளங்கோவனும் ஓரளவு பாடுவான். திருநாவுக்கரசு நன்றாக மேளம் அடிப்பான் ராசக்கோனும் ஓரளவு மேளம் அடிப்பான். மேசைகள் தான் இவர்களது மேளங்கள்.

நானும் ஓரளவு பாடுவேன். சிவபாலன் ரி.எம். சௌந்தரராஜனைப் போல் பாடுவான். நான் பி.பி. சிறினிவாஸ் போல் பாடுவேன்.இவை எல்லாம் வகுப்புக்குள் மட்டும்தான். நாம் எவருமே மேடையில் பாடியதில்லை.

பாடசாலை மாணவர்களுக்கு பணிஸ் பகிர்ந்தளிக்கும் அறை எனது வகுப்புக்குப் பக்கத்தில்தான் இருந்தது. இடைவேளை மணி அடித்ததும் என் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பலர் அந்த அறையை நோக்கி ஓடுவார்கள். முதலில் ஓடிச் செல்லும் இரண்டுபேர் பணிஸ் இருக்கும் பெட்டியைத் தூக்கிக்கொள்வார்கள். அவர்கள்தான் அந்தப் பாடசாலையில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் ஒவ்வொரு பணிசாக பகிந்து கொடுக்கவேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு பணிஸை வழங்கப்பட வேண்டும் என்பது சட்டம். ஆனால் பணிஸ் பெட்டியை தூக்கிக் கொண்டு செல்லும் இருவரும் முதன் முதலில் தமது கற்சட்டை பைகளில் இரண்டு இரண்டு பணிஸ்களை புகுத்தி விட்டுத்தான் தமது சேவையை ஆரம்பிப்பார்கள்.

வகுப்பு மொனிட்டரை தெரிவு செய்யும் பொழுது நானும் சாந்தலிங்கமும் போட்டிபோடுவோம். நான் அமைதியானவன். சாந்தலிங்கம் கலகலப்பானவன். எனவே சாந்தலிங்கம் வெற்றிபெற்றான். எனது மருமகளும் மச்சாளும் இன்னுமொரு பெண்ணும் எனக்கு வாக்களித்தனர்.

பிற்பகாலத்தில் எங்களுக்கு படிப்பித்த ஆ. புவனேஸ்வர் ஆசிரியை மிகவும் சுறுசுறுப்பானவர். சிரித்த முகத்துடன் காணப்படுவார். அவருக்கு நான் மருமகன் முறை என்பதால் என்னுடன் அன்புடன் நடந்து கொள்வார். எனக்கு கற்பித்த அனைத்து ஆசிரியர்களைப் பற்றியும் நான் நன்றாக நினைவில் வைத்திருந்தேன். அதைப்போல் எனது பாடசாலையின் தலைமை ஆசிரியரைப் பற்றியும் நான்றாக நினைவில் இருக்கிறது. அவரது பெயர்தான் க. செல்லத்துரை.

வெண்மையான தேசிய உடையில் எந்நேரமும் காணப்படுவார். சால்வையை களுத்தைச் சுற்றி போட்டிருப்பார். அருமையாக ஆங்கிலம் படிப்பிப்பார். அப்பொழுது பாடசாலையில் காரியாலய அறை இருக்கவில்லை. மேடையில்தான் காரியாலய வேலைகள் நடைபெறும். பாடசாலையின் நடுப்பகுதியில் அந்த மேடை அமைந்திருந்தது. மேடை மீது பெரிய மேசை. மேசைக்கு அருகே தலைமை ஆசிரியரின் கதிரை இருந்தது. அதிலேயே தலைமை ஆசிரியர் அமர்ந்திருப்பார். அவருக்கு எதிரே இரண்டு கதிரைகள் இருந்தன. அந்தக் கதிரையில் ஆசிரியர்கள் அல்லது பாடசாலைக்கு வரும் பெற்றோர்கள் வந்து அமர்ந்து உரையாடுவார்கள்.

தலைமையாசிரியர் க. செல்லத்துரை அவர்கள் எமது பாடசாலையில் மட்டும் அறிமுகமானவர் அல்ல. எமது கிராமம் முழுவதற்கும் அறிமுகமானவர். எனது தாயார் படித்த காலம்முதல் நான் படித்த காலம்வரை அவரே தலைமை ஆசிரியராக கடமையாற்றினார்.

அவர் மேடையில் இருந்தவாறே வகுப்புகள் அனைத்தையும் நோட்டமிடுவார். குழப்பம் செய்யும் மாணவர்களை நன்றாகவே தண்டிப்பார். அந்த தண்டனைக்காகவே அவரது மேசையில் பல பிரம்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஹரிஜன மாணவர்களுடன் மிகவும் கடுமையாக நடந்துகொள்வார். ஹரிஜன மாணவர்கள் யாராவது முறைப்பாடு செய்யப் போனால், முறைப்பாடு செய்யச் சென்ற மாணவனே முறையாக வாங்கிக் கட்டுவான்.

எனது பாடசாலைக் காலத்தில் எனக்கும் படிப்பிக்காத ஆசிரியர்களும் அங்கிருந்தனர். திருப்பூங்குடி க. ஆறுமுகம் ஆசிரியரிடம் நான் படித்ததில்லை. ஆனால் அவர் கோவில்களில் பிரசங்கம் செய்வதை கேட்டிருக்கிறேன். இனிமையான குரலில் பாடிப்பாடியே கதை சொல்வார். கண்ணையா ஆசிரியரும் எனது காலத்தில் படிப்பித்தார். அவர் பொது விடயங்களில் அதிகமாக ஈடுபடுவார். மகாதேவா ஆசிரியரும் சில காலம் ஆங்கிலம் படிப்பித்தார். சின்னக்குட்டி என்ற ஆசிரியையும் எனது காலத்தில் படிப்பித்தார். சிவயோகம் ஆசிரியையும் எனது காலத்திலேயே வந்து சேர்ந்தார் வெளியூர் ஆசிரியர்கள் பலரும் அங்கு படிப்பித்தனர். அவர்களில் சிலரின் பெயர்தான் ஞாபகத்தில் இருக்கின்றன.

அந்தக் காலத்தில் எனது பாடசாலையில் வழமையாக நடைபெறும் நிகழ்ச்சிகள் எல்லாம் என் நினைவில் வருகின்றன.பாடசாலை ஆரம்பமாகும் பொழுது மாணவிகள் தேவாரம் படிப்பார்கள் மேடையில் நின்று கொண்டு மாணவிகள் மூவர் பாடுவர். தேவாரத்தின்பின் பாடசாலை கீதம் பாடுவார்கள். தெய்வக் கலை வளர் கணேச வித்தியாலயம் திருவருள் உறவாழ்க, என்று பாடசாலை கீதம் தொடங்கும். மேடையில் நின்று மாணவிகள் பாடும் பாடல்களை பாடசாலையின் அனைத்து மாணவ மாணவிகளும் திருப்பிப் பாடுவார்கள். அவர்களின் குரல் ஒலி அந்தப் பகுதி எங்கும் எதிரொலிக்கும்.

வெளிக்கிழமைகளில் காலையில் மாணவர்கள் அனைவரும் அருகில் உள்ள தல்லையபற்று முருகன் ஆலயத்துக்குச் சென்று வணங்கிவிட்டு வருவார்கள். சரஸ்வதி பூஜைக் காலத்தில் எமது பாடசாலை விழாக்கோலம் பூண்டுவிடும்.

உடற்பயிற்சி செய்வதற்கு பாடசாலையினுள் பெரிய மைதானம் இல்லை. ஆதனால் மாணவர்கள் மாமண்டைஎன்ற பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அங்கு விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவோம்.

முதலாந்தவணையில் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகிவிடும். விளையாட்டு விழா குறிச்சிக்காட்டு மைதானத்தில் இடம்பெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்பொழுது களதீவில் உள்ள தாளங்காய்களும், ஈச்சங்காய்களும் பாடசாலையின் இல்லங்களை

அழகுசெய்யும். மாரிகாலத்தில் குளம்போல் காட்சியளிக்கும் குறிச்சிகாட்டுப் பகுதி இப்பொழுது புழுதி பறக்கும் விளையாட்டு மைதானமாக மாறிவிடும் அப்பொழுது மூன்று இல்லங்கள் இருந்தன. அவற்றின் பெயர் பசுபதி இல்லம், நமசிவாயம் இல்லம், துரைசாமி இல்லம் என்பன.


நான் விளையாட்டுப் போட்டிகளில் அதிகமாக கலந்துகொள்வதில்லை. ஆனாலும் பலவந்தமாக என்னையும் ஓட்டப்போட்டியில் சேர்த்துவிடுவார்கள். மைதானத்தைச் சுற்றி ஒருமுறை ஓடிவருவேன். இரண்டாவதுமுறை சுற்றி ஓடிவரும் பொழுது மாணவர்களோ பொதுமக்களோ இல்லாத இடமாக பாரத்து நின்று விடுவேன். மாணவர்கள், முதலாவதாக ஓடிவரும் வீரர்களை பார்த்துக் கைகொட்டுவார்கள். கடைசியாக ஓடிவரும் மாணவர்களைப் பார்த்தும் கைகொட்டுவார்கள். இவ்வாறு மாணவர்கள் கைகொட்டுவார்கள் என்று பயந்தே ஓட்டப்போட்டியில் இடையில் நின்று விடுவேன்.

நான் 8ஆம் வகுப்பு மட்டுமே புங்குடுதீவு கணேச வித்தியாலயத்தில் படித்தேன். அதாவது 1964 ஆம் ஆண்டு வரையே புங்குடுதீவில் வாழ்ந்தேன். அதன்பின்பு கொழும்புவாசியாகிவிட்டேன்.

1964ஆம் ஆண்டுக்குப் பின்பு புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயத்தில் பல அதிபர்கள் கடமையாற்றினார்கள். பல ஆசிரியர்கள் கற்பித்தனர். பல மாணவர்கள் படித்து வெளியேறினர்.

இன்று நூற்றாண்டை நிறைவு செய்யும் இந்தப் பாடசாலையில் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் கடமையாற்றிவிட்டார்கள். பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் படித்துவிட்டார்கள் புங்குடுதீவு கிழக்கு மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறந்துவிட்ட கலைக் கோயில்தான் ஸ்ரீகணேச மகாவித்தியாலயம். அது நூற்றாண்டை மட்டுமல்ல ஆயிரமாம் ஆண்டையும் காணவேண்டும்.

# நிகழ்வுகளின் நிழல்கள்



1940ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கம் நடத்திய மாபெரும் விளையாட்டுப் போட்டியின் போது வருகை தந்த வித்தியாதிபதி எல். எம். டி. றொபின்சன், ஏனைய பிரமுகர்களுடன் வீற்றிருக்கும் காட்சி.



1983 வைகாசித் திங்களில் இடம் பெற்ற நிறுவுநர் தினவிழாவில் கலந்து கொள்ள கல்வியமைச்சிலிருந்து வருகை தந்த திரு. ஷேர்லிங் பெரேரா (கல்விப் பணிப்பாளர்), யாழ் - கல்விப் பணிப்பாளர் திரு.ம. சிமியாம்பிள்ளை, அதிபர் திரு.த. துரைசிங்கம், முன்னை நாள் அதிபர்களான திரு. நா. கார்த்திகேசு, திரு.சோ. சேனாதிராசா ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வரப்படும் காட்சி.

# நிகழ்வுகளின் நிழல்கள்



பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் - பல்கலைக்கழகக் கல்வித்துறைத்தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் வித்தியாலய அதிபர் சகிதம் அழைத்து வரப்படுகிறார்.



1983இல் வித்தியாலயத்தில் பணியாற்றிய ஆசிரிய குழுவினர்.

# நிகழ்வுகளின் நிழல்கள்



பரீட்சைகளில் அதிகூடிய பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டும் விழாவில்
முன்னைநாள் அதிபர் திரு. நா. கார்த்திகேசு உரையாற்றுகிறார்.



1987இல் நிகழ்ந்த வருடாந்த பரிசளிப்பு விழாவில்
ஆசிரிய மணி சி.க. நாகலிங்கம் மங்கல விளக்கேற்றுகிறார்.


# நிகழ்வுகளின் நிழல்கள்



நிறுவுநர் தினவிழாவில் திரு. ஷேர்லிங் பெரேரா உரையாற்றுவதையும் அவரது உரையைப் புங்குடுதீவு கொத்தணி அதிபர் திரு.சி. இராஜநாயகம் மொழி பெயர்த்துக் கூறுவதையும் படத்திற்காண்க.



1994ஆம் ஆண்டிற்கான ஆங்கில தினவிழாவில் ஆங்கிலக் கல்வியதிகாரி செல்வி. ஆர். நவரத்தினசிங்கம் உரையாற்றுகிறார்.



பழைய மாணவர் சங்க வெள்ளிவிழாக் குழுவினர்.



# பாடசாலை கதவுகளை திறப்போம்.

- சின்னத்துரை பார்வதி கிருபானந்தவேல் ACMA
European Fancily Account
Energy Development (Uk)

பிறந்த ஒவ்வொரு மனிதனும் கற்றிட வேண்டும். கல்வி மனிதனை மேம்படுத்துகின்றது. ஒரு பிறப்பில் ஒருவர் பெறும் கல்வியானது அவனுடைய எழு பிறப்பிற்கும் பயன் தரும் என்ற கருத்தில்

**"ஒருமைக்கண்தான் கற்ற கல்வியொருவர்க்கு**

**எழுமையும் ஏமாப் புடைத்து".**

எனும் திருக்குறள் ஊடாக கல்விக்கு நீண்ட மதிப்பளித்து திருவள்ளுவர் குறள் கூறியுள்ளார். மனிதன் ஆயுள் முழுவதும் கற்கவேண்டும், கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான் என்ற தத்துவ கோட்பாடும் பாடசாலை கதவினை திறப்பவன் சிறைச்சாலை கதவுகளை மூடுகின்றான் எனும் அறிஞர் ஒருவரது கருத்தும் உலகில் நிலைத்து நிற்கும் கல்விக் கருத்துக்களாகும்.

கல்வி தான் உலக சமூகத்தின் உன்னத சொத்தாகும். ஆம் "என் சின்ன கரங்களால் நான் முதன்முதலில் திறந்த எனது புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையின் கதவுகளை எண்ணிப் பார்க்கின்றேன். ஆயிரம், ஆயிரம் கல்வி மான்களை உருவாக்கி தாயகத்தில் மாத்திரம் அன்றி உலகில் எல்லா நாடுகளிலும் கல்வியாளர்களாக உயர்ந்தும் பரந்தும் நிற்கும் அந்தப் பாடசாலையின் வயது 100 என்கின்ற போது நான் அடையும் ஆனந்தத்தினையும் பெரும் மகிழ்ச்சியையும் வார்த்தைகளால் எழுத தமிழில் வரி வடிங்களில் தேடி தோற்றுப் போய் நிற்கின்றோம். 1910 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 3ம் நாளில் அமரர் வ. பசுபதிப்பிள்ளை அவர்கள் சைவப் பெருமக்கள் பலரது ஒத்துழைப்புடன் பெரியார் நீ. அம்பலவாணர் (மூத்த தம்பி) அவர்களது வளவில் இப்பாடசாலையை உருவாக்கியுள்ளார் என்று காலச்சான்று பதிவாகியுள்ளது.

அரசின் உதவியுடனும் புங்குடுதீவு வாழ் தன வந்தர்களின் உதவியுடனும் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" எனும் கல்வியில் அதி மேலான பழந் தமிழ் பாவடிக்கு மதிப்பளித்த கல்விமான்களின் தொடர் முயற்சியினாலும் விடா முயற்சியினாலும் வெள்ளி விழா, பொன்விழா, வைரவிழா கண்டு இன்று நூற்றாண்டு விழா காணும் எனது பாடசாலையின் வரலாற்றை கேட்டறிந்தும், பல புத்தகங்களில் படித்தறிந்தும் நான் மகழ்வாகி நானும் ஒரு பழைய மாணவன் எனும் உரிமையும் உணர்வும் என்றும் உயிர்த்துடிப்பாய் ஒடிக் கொண்டிருக்க என் பேனா பிடித்து அந்த ஆலமரத்தை ஒரு சிறு அறுகம் புல்லாக இருந்து வாழ்த்துகின்றேன். ஈழத்தின் போர்ச்சூழலும் இடப்பெயர்வும் புலம் பெயர்வும் என மக்கள் அனுபவித்த துன்பம் நாம் அறிந்ததே அந்த கால கட்டங்களிலும் எமது பாடசாலையினை அழிய விடாது பேணிக் காத்த பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், சமூகசேவையாளர்கள் இன்னும் புலம் பெயர்ந்த பழைய மாணவர்கள் அனைவருக்கும் இந்த மடலினுடாக எனது நன்றி பெருக்குடனான தலை தாழ்த்திய வணக்கங்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**வாழிய வாழிய எனது கணேச மகா வித்தியாலயம். நன்றி.**

# நினைவுகளில்.....

**திருமதி வி. சண்முகலிங்கம்.**
*பழைய மாணவி*

உதயசூரியன் கிழக்கே உதிப்பது போல புங்குடுதீவு என்னும் அழகிய தீவின் கிழக்கூரில் உதித்ததுதான் எங்கள் ஸ்ரீகணேச வித்தியாசாலை. இப்போது எமது ஸ்ரீ கணேச வித்தியாசாலை வளர்ந்து ஸ்ரீ கணேச மகாவித்தியாலயமாக உயர்ந்துவிட்டது. இந்த நூறு ஆண்டு நினைவு விழாவில் நமக்கு அறிவூட்டிய எமது ஆசிரியர்களை அன்புடன் நினைவுக்கு கொண்டுவருவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஆரம்ப பாலர் வகுப்பில் அ, ஆ அறிவூட்டிய அன்பு உள்ளத்துடனும் புன்சிரிப்புடனும் விளங்கும் கோபாலபிள்ளை வாத்தியார், ஆடி ஓடி பாடீ மகிழ்வோமென்ற பாலபோதினி; யில் பாட்டு படிப்பித்த சற்குணமக்கா, இதயத்திருப்பதற்காக மனப்பாடமாக்கிய வாய்ப்பாட்டை தப்பாக ஒப்புவித்ததால் அடிமட்டத்தால் அடிக்கும் புவனமக்கா, பார்வதி அக்கா, கணக்கு சொல்லித் தந்த குணமாலை வாத்தியார், குட்டி முந்தவைக்கும் நாகலிங்கம் வாத்தியார், தனக்கேயுரிய பாணியில் தமிழ் கற்பிக்கும் விசாலாட்சி அக்கா, காரைநகரிலிருந்து கடல் கடந்து வந்து எங்கள் கணேச வித்தியாசாலை மாணவருக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுத்த செல்லத்துரை மாஸ்ரர், கணக்கு பாடம் சொல்லித்தந்த திருநாவுக்கரசு வாத்தியார்

**தென்னாடுடைய சிவனெ போற்றி**
**என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

என்று சமய பாடம் படிப்பித்த அம்பலவாண வாத்தியார், எல்லாவற்றிற்கும் மேலாக வெள்ளை வெளேரென தூயவேட்டியில் மடிப்புகலையாத சால்வையுடன், பார்க்கும் போதெல்லாம் கையெடுத்து கும்பிடத் தோன்றும் எமது தலைமையாசிரியர் திரு. செல்லத்துரை

**'கற்க கசடற கற்றவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

என்பதை என் ஆரம்பப் பாடசாலையில் படிப்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது நன்றியை இந்நன்னாளில் சொல்வதன் மூலம் இதை, படிப்போர் அனைவரின் மனதிலும் தங்களின் ஆசிரியர்களின் நினைவுகளையும், நன்றியையும் தங்களது மனக்கண்ணில் தட்டிப்பார்க்க வைப்தே என் எண்ணமாகும் எங்கள் ஆசிரியர்கள் ஆற்றிய தொண்டுகள் ஆயிரம், ஆயிரம் இவற்றையெல்லாம் என் நினைவிற்கு கொண்டுவர சந்தர்ப்பமளித்த ஸ்ரீ கணேச மகாவித்தியாலய நூற்றாண்டு விழா உறுப்பினர்களுக்கு எனது அன்பார்ந்த நன்றியைக் கூறுவதுடன் அவர்களை வாழ்க வளமுடன் என்று வாழ்த்து கூறி விடைபெறுகின்றேன்.

# நெஞ்சிருக்கும் வரை நினைவில் இருக்கும்

**டாக்டர் ஆ. தவமோகன் காந்தி**
*லண்டன்*

100 வது ஆண்டு விழாக் காணும் ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் பழைய மாணவனாகிய நான் இவ்விழாவை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தி வரும் விழாக் குழு அங்கத்தினர் அனைவருக்கும் முதற்கண் எனது பாரட்டுக்களையும் நன்றியையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

"எழுத்தறித்தவன் இறைவன் ஆவன்" என்பதற்கிணங்க எங்கள் எல்லோருக்கும் ஆரம்ப கல்வியை தந்த கல்லூரியையும் அங்கு கல்வி கற்பித்த உபாத்தியாயர்களையம் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

ஏறக்குறைய 56 ஆண்டுகளுக்கு முன் எனது ஆரம்ப கல்வியை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் தொடங்கினேன். எனது நினைவுக்கு எட்டிய வரை திருமதி. ஆச்சிக்குட்டி, திருமதி. திருமேனி, திருமதி. சற்குணம், திரு. கோபாலபிள்ளை, திரு. அம்பலவாணர், திரு. நாகலிங்கம் ஆகியோரிடம் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் மாணவர்கள் மேல் காட்டிய அன்பும், கருணையும் என்றும் மனதை விட்டு அகலாது.

ஸ்ரீ கணேச வித்தியாசாலை மறைந்த மாமேதை திரு. பசுபதிப்பிள்ளை அவர்களின் சிந்தையில் பிறந்து பற்பல வணிகப் பெரியோர்களின் உதவியுடன் வளர்ந்து தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.

அத்திவாரம் நன்றாக இருந்தால் தான் எவ்வளவு பெரிய கட்டிடமானாலும் உறுதியாக நிலைத்து நிற்கும். இன்று பழைய மாணவர் பலர் உலகெங்கிலும் பற்பல துறைகளில் வல்லுனர்களாக வளர்ந்து வாழ்ந்து வருவதற்கு அடிப்படைக் காரணம் ஸ்ரீ கணேச வித்தியாசாலை அளித்த உறுதியான அத்திவாரம் தான்.

ஸ்ரீ கணேச வித்தியாசாலை அன்று சாதி மத பேதமின்றி அனைவருக்கும் கல்வி வாய்ப்பை அளித்தது அத்துடன் மனித உரிமைகளை மதிக்கவும், சமத்துவத்தை பேணவும் வழி காட்டியது. ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் பெற்ற இனிய அனுபவங்கள் நெஞ்சிருக்கும் வரை நினைவில் நிறைந்து நிற்கும்.

# நூற்றாண்டுவிழாக்காணும் எம் அன்னையின் திருவடிகளை வணங்குகின்றோம்.

**- கனடாவாழ் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள்**

சப்ததீவுகளின் நடுநாயகமாக விளங்கும் புங்குடுதீவின் கலைக்கோவிலாக மிளிர்வது ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம். கடந்த நூறு ஆண்டுகளாக கல்வியெனும் அரும்பயிரைத் தெய்வ அருளென்னும் விளைநிலத்தில் அன்பெனும் நீரிட்டு அழியாது வளர்த்து வரும் இவ்வித்தியாலயம் இன்று தனது நூற்றாண்டைக் கொண்டாடுவது குறித்து மட்டற்ற மகிழ்வுறுகின்றோம். அமரர் வ. பசுபதிப்பிள்ளை அவர்கள் தலைசிறந்த ஒரு கல்விமான். சமூகத் தொண்டன். எமக்காக வாழ்ந்து அமரரானவர். அவரது தனக்கென வாழாச் சிந்தனையின் வெளிப்பாடுதான் அவரது தனிமனித முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்.அவரது தூயஉள்ளம் போன்றே இன்று எம்வித்தியாலயம் வளர்ந்துள்ளது. அதன் மூலம் பயனடைந்தவர்கள், பயனடைபவர்கள், பயனடைய இருப்பவர்கள் பற்பலர். பயன்பெற்ற நாம் நன்றி மறவாதவர்களாய் கல்வித்தாயின் உயர்ச்சிக்கும் எம் வருங்காலச் சமுதாயத்தைக் அலங்கரிக்கப் போகும் சிறார்களின் மேம்பாட்டிற்கும் கைகொடுப்போம்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்துள்ள இப்பாடசாலை இத்தீவின் சைவசமய வளர்ச்சி கலாச்சார அபிவிருத்தி, சமூகமுன்னேற்றம் ஆகிய துறைகளில் பெரும்பங்காற்றியுள்ளது. இத்தகைய சிறப்புகட்கு முன்னைநாள் முகாமையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்அனைவரதும் கூட்டுமுயற்சியே காரணம் என்றால் மிகையாகாது. இவ்வித்தியாலயத்தின் பெயரை மட்டுமன்றி எம்தீவகத்தின் பெயரையே எங்கும் நிலைபெறச் செய்த பெருமை இவ் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்திற்கு உண்டு. 1925 தைத்திங்கள் அப்போதைய தலைமையாசிரியர் பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை அவர்களால் அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட சங்கமானது இன்றுவரை வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் அளப்பில. எம் அன்னையின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் தற்போதைய அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் அனைவரையும் நாம் மனதார பாராட்டுகின்றோம். புங்கையம்பதி கண்ணகையம்மன் ஆலயமுன்றலில்1954 ஆம் ஆண்டு சிலப்பதிகாரவிழா நடைபெற்றது. அவ்விழாவில் தமிழக அறிஞர்களான கி. வா.ஜகநாதன், 'சிலம்புச்செல்வர்' ம. பொ.சிவஞான கிராமணியார், பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், பேராசிரியர் ஆ. முத்துசிவன் முதலான பேரறிஞர்களும் ஈழத்து அறிஞர்கள் பலரும் கலந்துகொண்டு கொண்டு எம் மண்ணிற்குப் பெருமை சேர்த்தனர். அதேபோன்று எம் அன்னையின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்க தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர், பேச்சாளர், சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவது மேலும் எமது மண்ணிற்கும் வித்தியாலயத்திற்கும் பெருமை சேர்ப்பதாகும். இப்பெருமை எங்கள் பழையமாணவர் சங்கத்திற்கே உரியது. அவர்களுக்கு எம் பாராட்டுகள் உரியதாக. கடல் கடந்து கண்ணுக்கெட்டாத் தூரதேசத்தில் நாம் வசித்த போதும் உள்ளத்தாலும் உணர்வாலும் ஒன்றுபட்டு இவ்விழாவில் கலந்து சிறப்பிப்போம். இவ்விழாஎல்லாம் வல்ல வெள்ளிப்பிள்ளையாரின் திருவருளினால் இனிதே சிறப்புற நிறைவுபெறவும், நூற்றாண்டு விழாமலர் இனிதே மலர்ந்து மணம் வீசவும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணேச தீபம் ~~~

அங்கு வருகை தந்தார். விபூதிப் பூச்சும் கதருடையும் அணிந்த புனிதமான தோற்றத்தில் வந்த அவர், என்னால் என்றுமே மறக்க முடியாத, எனது பக்திக்குரிய சு.வில்லரத்தினம் ஆசிரியர் ஆவார். நான் நான்காம் வகுப்பு படிக்கும் வேளையில் A, B, C என்ற அரிச்சுவடியை அவரிடமிருந்துதான் என்வாழ் நாளில் முதன்முறையாக கற்றேன்.

அரசாங்கம் கனிஷ்ட பாடசாலைகளையும் சிரேஷ்ட பாடசாலைகளையும் மத்திய பாடசாலைகளையும் நாடுபூராகவும் அறிமுகம் செய்த வேளை (1946ஆம் ஆண்டளவில்) புங்குடுதீவுக்குரிய அரசினர் கனிஷ்ட வித்தியாலயம் ஸ்ரீ கணேச வித்தியாசாலையிலேயே ஆரம்பிக்கப்பட்டது. கணேச வித்தியாசாலையின் ஆறு முதல் ஒன்பதாம் வகுப்புக்கள் அரசினர் கனிஷ்ட வித்தியாலயமாக ஆக்கப்பட்டு அதற்கெனத் தனியான தலைமையாசிரியரும் உதவியாசிரியர்களும் நியமிக்கப்பட்டு ஒரே கூரையின் கீழ் இரு நிர்வாகங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஓரிரு ஆண்டுகளில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு அரசினர் கனிஷ்ட வித்தியாலயம் அங்கு கொண்டு செல்லப்பட்டது. ஏறத்தாழ 1946ஆம் ஆண்டு ஐந்தாம் வகுப்பில் சித்தியெய்திய பின்னர் நானும் 1947ஆம் ஆண்டளவில் அரசினர் கனிஷ்ட பாடசாலையில் சேர்ந்தேன். அதன் அதிபராகவிருந்த மேற்குறித்த பேராசான் அமரர் சு.வில்வரத்தினம் அவர்களிடம் நான் கற்ற ஆங்கில இலக்கண அறிவும் காலஞ்சென்ற பண்டிதர் நீ.மு.ஆறுமுகம், காலஞ்சென்ற ஞானபூரணி சிவராமலிங்கம் ஆகியோரிடம் பெற்ற தமிழறிவும், பின்னர் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் கற்கும் போதும் பிற்காலத்தில் மும்மொழித் தேர்ச்சி பெறுவதிலும் எனக்கு பேருதவியாய் இருந்தன.

ஸ்ரீ கணேச வித்தியாசாலையிலும் தொடர்ந்து கணேச மகாவித்தியாலயத்திலும் அமைந்திருந்த வெள்ளிப்பிள்ளையாரும் ஆலிலையில் பள்ளி கொண்ட கண்ணனின் படமும் இன்னும் என் கண்முன் நிற்கின்றன. எனது மனைவியின் தாயாரின் தந்தையார் (உண்மையில் அவர்தான் எனக்கு முறைமாமனார்) தில்லையம்பலம் அம்பலவாணர் என்பவர் மலாயா தேசத்தில் வர்த்தகம் செய்த காலத்தில் அங்கு உண்டியலில் இட்டு வந்த பணத்தைக் கொண்டு தனிவெள்ளியில் வடித்த வெள்ளிப்பிள்ளையாரை அன்றைய தலைமை உபாத்தியாயர் க.செல்லத்துரை அவர்கள் மூலம் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பற்பல அறிஞர்களினதும் கல்விமான்களினதும் ஆரம்பகால பாடசாலையாயிருந்து அத்திவாரமிட்ட இக்கல்விக்கூடம் தற்போது தனது நூறாண்டை பூர்த்திசெய்துள்ளதை சிறப்பாகக் கொண்டாடும் அதன் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் பாடசாலையின் தற்போதைய அதிபர், மாணாக்கர்களுக்கும் ஏனைய நலன்விரும்பிகளுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு பாடசாலை மென்மேலும் அபிவிருத்தியடைய வேண்டியும் நூற்றாண்டு விழா வெற்றிவிழாவாக அமையவேண்டியும் பிரார்த்திக்கின்றேன்.

# அன்னையின் செல்லப்பிள்ளை

திருமதி. நிர்மலா தனசிங்கநாதன்

நூறாண்டுகளில் அன்னையவள் வளர்த்துவிட்ட குழந்தைகள் பல்லாயிரம். அக்குழந்தைகளிற் பலர் அன்னையை அரவணைத்து அவளது அழகிலும் வளர்ச்சியிலும் மகிழ்வுறுவர். சிலர் கண்ணுக்கெட்டாத் தேசங்களில் வாழ்ந்தபோதும் அன்னையின் அரவணைப்பையும் அவள் தங்களை இந்நிலைக்கு வளர்த்து விட்டதையும் நினைந்து பெருமையடைவர். இன்னும் சிலர் என்தாய்க்கு நான் செய்யவேண்டிய கடமையைச் செய்ய முடியாமற் போய்விட்டதே எனநினைந்து ஏங்குவர். மிகச்சிலர் அன்னையின் அரவணைப்புடன் அவள்மடிமீதிருந்தே அவளது பணிவிடையைச் செய்து மகிழ்வடைவர். அந்தவகையில் தனது இறுதி மூச்சுவரை அன்னையை அரவணைத்து கண்ணும்கருத்துமாகப் பாதுகாத்து அதன்மூலம் ஆத்மதிருப்தி கண்டவர் தான்அன்னையின் செல்லப்பிள்ளை.

இந்த இடம் அவருக்கு மட்டும் தான் உரியது. அதையாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.ஆம் சின்னக் குழந்தைகள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஏன் வித்தியாலய அதிபர்வரை அனைவராலும் செல்லமாக அழைக்கப்படும் அக்கா தான் அவர்.மூத்தவர் இளையவர் என்ற வேறுபாடின்றி அனைவராலும் "திருமேனியக்கா" என்றே அழைக்கப்படுவார். அவரைப் பாடசாலையில் ஆசிரியர் என்றோ இல்லை"ரீச்சர்" என்றோ யாரும் அழைப்பதில்லை. அன்னையின் செல்லப்பிள்ளையாகவும் அத்தனைபேருக்கும் அக்கா என்னும் உரிமையுடனும் விளங்கியவர் தான் திருமதி இரத்தினசபாபதி திருமேனிப்பிள்ளை. அவர் இன்று எம் மத்தியில் இல்லையே என்று எண்ணும் பொழுது அதை எம்மால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அன்னையின் மடியிலேயே இருந்து கல்வி பயின்றதுடன் தனது கல்விச் சேவையினையும் எம் அன்னையின் பதியிலேயே ஆரம்பித்தார். அவரது கல்விச்சேவை முடியும் வரை எந்த இடமாற்றமும் இன்றி தொடர்ந்து சேவையாற்றிய பெருமையும் அவரைச்சாரும். அன்பு, அறிவு, அடக்கம் அனுபவமுதிர்ச்சி அரவணைப்பு யாவற்றிலும் அவருக்கு நிகர் அவரே தான்.தனது வீட்டையும் வித்தியாலயத்தையும் வேறுபடுத்திப் பார்க்கும் மனோநிலை அவரிடம் துளிதானும் கிடையாது.அவரது சேவைக்காலம் முழுவதும் எத்தனை அதிபர்கள் கடமையேற்றாலும் அன்னையின் திறப்புக்கோர்வை அவரிடம்தான். அவரது கணவர் வேறுபாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய போதும் சிலசமயங்களில் அவரையும் அன்னையின் வேலைத்திட்டங்களில் பங்கு கொள்ளச் செய்வார்.

அத்துடன் தனது கண்ணின் மணியெனக் கருதி வளர்த்த ஒரேயொரு செல்லப்பிள்ளை வசந்தியையும் அன்னையின் சேவைக்கு ஆரம்பத்தில் தொண்டர் ஆசிரியராகச் சேர்த்தமையையும் மறக்கமுடியாது.அவர் ஆசிரிய நியமனம் பெற்ற பின்னரும் எமதுபாடசாலையிலேயே தொடர்ந்து சேவையாற்றினார். மொத்தத்தில் முழுக்குடும்பமுமே அன்னையின் சேவைக்கென அமர்த்தப்பட்டவர்கள் போல் எம் சமுதாயத்திற்குச் செய்த சேவை அளப்பரியது.

இறுதியில் அவர் ஆசிரியசேவையினின்றும் இளைப்பாறிய பொழுது வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து பெருவிழா எடுத்துக் கொண்டாடக் கேட்டபொழுது அவர் கூறிய வார்த்தைகள் என்றென்றும் எம் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கும். "எனக்குப் பிரியாவிடை என்றுசொல்லி விழாவெடுத்து தயவு செய்துஎன்னை என்அன்னையிடம் இருந்து பிரித்து விடாதீர்கள். என் இறுதி மூச்சுவரை என்அன்னைக்குச் சேவைசெய்வேன்" எனக்கண்ணீர் மல்க மறுத்து விட்டார்.

பாடசாலை மூடிக்கிடந்த காலத்திலும் கூட வித்தியாலயத்தின் அயலிலேயுள்ள தனது பழையமாணவர்களையும் சேர்த்து வித்தியாலயத்தினைக்கூட்டிச் சுத்தம் செய்திருக்கின்றார் என்றால் அவரின் மனநிலை பற்றிக் கூறவும் வேண்டுமா? அவர்கூறியது போன்றே செயற்பட்டார். இறுதியாக 1997 ல் வித்தியாலயத்தை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோது அனைத்துவகைகளிலும் முன்னின்று உதவிபுரிந்தார். கடைசிநாளில் திறப்புவிழாவன்றுகூட மதிய உணவு தயாரித்துப் பரிமாறினார். அன்றுதான் தனதுமனம் அமைதிஅடைந்ததாகக் கூறி அவர் அன்றுஅடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவரைப் பற்றிக் கூறுவதாக இருந்தால் கூறிக்கொண்டேபோகலாம். பால்போன்ற வெள்ளை உள்ளம் படைத்த இவர் தனது இறுதி மூச்சுக்கூட தனது மண்ணில் போகவேண்டும் எனக்கருதினார் போலும். யாழில்வசித்த அவர் இறுதி நேரத்தில் தனது மண்ணிற்குச் சென்றுதனது அன்னையையும் பார்த்துவிட்டு தான் உயிராக நேசித்த தல்லையபற்று முருகனையும் சென்று தரிசித்துவிட்டு தனது பதியில் நித்திரைக்குச் சென்றார். இல்லை அவர் அழகன் முருகனின் பாதாரவிந்தங்களின் கீழ் மிளாத்துயில் கொண்டார் என்றே கூறவேண்டும். இத்தகையதோர் அற்புதப் பிறவியின் அவாவினால் அன்னையவள் என்றும் பதினாறாய் பல்துறை விற்பன்னர்கள் பலரையும் உருவாக்கி பார்புகழ விளங்கிடுவாள் என்பது திண்ணம்.

# நூற்றாண்டில் துயர் நிறைந்த ஏழாண்டு காலப்பகுதி.

**- ச.சதாசிவம்**

எம் கலைக்கோவிலாம் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் எங்கள் தாய்மண்ணில் முதன் முதலாக நூற்றாண்டு விழாக்காணும் பாடசாலையென்ற பெருமையினைப் பெற்று எத்தனையோ இடைஞ்சல்களையும் தாண்டி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவது கண்டு உளம்நெகிழ எல்லாம் வல்ல வெள்ளிப்பிள்ளையாரின் பாதாரவிந்தங்களை வணங்குகின்றேன்.

எம் வித்தியாலயத்தின் தந்தை (ஸ்தாபகர்) அமரர் வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் உயர்ந்த நோக்கத்திற்கேற்ப அவருடன் சேர்ந்து அனைத்து மக்களாலும் காலங்காலமாக அரவணைத்து கட்டிக்காத்து வளர்க்கப்பட்ட அன்னையின் துரித வளர்ச்சிகண்டு அனைவரும் மகிழ்ந்திருந்தோம். இப் பாரியவளர்ச்சிக்கு அன்னையவளின் மடியில் வளர்ந்த குழந்தைகளின் அரவணைப்பே காரணமாகும். காலந்தோறும் அன்னையின் வளர்ச்சியில் அவளது குழந்தைகள் ஆற்றிய பங்கும், அங்கு கற்பித்த அதிபர்கள் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புகளையும் இம் மலரில் இடம் பெறும் கட்டுரைகள் வாயிலாகக் காணலாம்.

நிறைமதியென விளங்கிய எம் தாயின் வரலாற்றில் ஏன் எம் வரலாற்றில் இப்படியொரு தேய்பிறைக்காலம் ஏற்படும் என கனவிற்கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. வரிகளில வடிக்க முடியாத சோகம். அச் சோகக் கடலில் ஏற்பட்ட சுனாமியில் எம் மண்ணே அமிழ்ந்து போயிற்று. என் செய்வோம். காலத்தின் கட்டளை. அதற்கு யாரும் விதிவிலக்கல்லவே. காலச் சக்கரம் சுழலும் போது நமக்கும் ஒரு பொற்காலம் வரும். அதைநினைத்து சற்றே தேறுதலடைந்து எம் தாயின் வரலாற்றிற்கு மீள்வோம்.

கடந்த நூறாண்டு காலப்பகுதியில் 1910ல் இருந்து 1990 வரையான எண்பது வருட காலங்களில் அபரிமித வளர்ச்சி கண்டது எங்கள் வித்தியாலயம். அவ்வக் காலங்களில் ஏற்பட்ட சம்பவங்கள் அனைத்தும் எம் வித்தியாலய சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டு வரலாறாகக் காணக் கூடியதாயுள்ளது. ஆனால் 1991ல் இருந்து 1997 வரையான கிட்டதட்ட ஏழாண்டு காலப்பகுதி எம் தாயின் வரலாறு எதுவுமேயற்றதோர் இருண்ட காலப்பகுதியென்றே கூற வேண்டும். அவ்வப் போது பாவித்த சம்பவத்திரட்டுப் புத்தகத்தங்களைத் தானும் கடைசிவரைப் பாதுகாத்து வைக்கமுடியாத நிலையில் ஆங்காங்கே கைவிட்டே செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையாயிற்று. எனவே இவ் ஏழாண்டு காலப்பகுதியில நிகழ்ந்த நிகழ்வுகளை வித்தியாலய வரலாறாகத் தொகுப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கணேச தீபம் ~~~

நயினாதீவைச் சேர்ந்த திரு K.T தர்மலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றி வந்தார். அவரது சேவைக்காலம் யூன் 1992ல் முடிவடைய திரு. செல்லையா ஈஸ்வரமூர்த்தி அவர்கள் 9-6-1992ல் அதிபராகக் கடமை ஏற்றார். படிப்படியாக பாடசாலையில் மாணவர்களின் வரவு அதிகரிக்கவே இடப்பற்றாக்குறை ஏற்பட்டது.

இந்நிலையில் எம்முடன் சேர்ந்து இயங்கிவந்த யாழ் புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலய அதிபர் அமரத்துவமடைந்த திரு.சு. சண்முகவடிவேல் அவர்கள் கிளாலியிலுள்ள யாழ் கெற்பலிப்பாடசாலைக்கு அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டார். அதனால் அவ்வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் எம் வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டனர். இதனால் மேலும் இடப்பற்றாக்குறை ஏற்படவே வேறோர் நிரந்தரமான இடத்திற்குஇடம் மாற வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகாமையிலமைந்திருந்த கைவிடப்பட்ட முஸ்லிம் கதீஜா வித்தியாலயத்திற்கு எமது வித்தியாலயம் சித்திரை 28.1993ல் இடமாற்றம் செய்யப்பட்டது. இப்பாடசாலை இரண்டுமாடிக் கட்டிடங்களைக் கொண்டு விளங்கியபோதும் ஷெல் அடிகளினால் ஓடுகள் உடைந்தும் சிதைந்தும் காணப்பட்டன. பக்கத்தே இருந்த 60 அடி நீளமான கட்டிடம் கூரைஎதுவும் இன்றி சுவர்களும் தூண்களுமே எஞ்சிநின்றன. இந்நிலையில் உடைந்திருந்த ஓடுகளை மாற்றி கட்டிடத்தைக் கழுவிச் சுத்தம் செய்து கல்விப்பணிமனையினர் வழங்கிய 30 மேசை கதிரைகளுடன் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. ஏனைய மாணவர்கள் சீமெந்துத் தரையிலேயே இருந்து கல்விபயின்றனர். அதிபரின் துணிச்சலான இம்முயற்சி பிற்கால வளர்ச்சிக்கு உறுதுணையாயிற்று. இதன் மத்தியில் 30.5.1993ல் அதிபரவர்கள் வவுனியா மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல உபஅதிபராக இருந்தயான் அதிபர் பொறுப்பையேற்று கடமையாற்ற வேண்டியதாயிற்று.

இக்காலகட்டத்தில் வித்தியாலயத்தை பார்வையிடவந்த வட்டாரக்கல்வியதிகாரி அவர்கள் வித்தியாலயத்தையும் மாணவர்களின் சிரமத்தையும் பார்வையிட்டு அதிருப்தி தெரிவித்ததுடன் வித்தியாலயத்தை வேறுபாடசாலையுடன் இணைத்து நடத்தவும் ஆலோசனை கூறினார். நான் அப்போதைய நிலையை எடுத்து விளக்கியதுடன் ஒருசில மாதங்கள் கழித்து திரும்பவும் வந்து பார்வையிடுமாறு வேண்டினேன். இக்காலகட்டம் இடம்பெர்ந்த மக்கள் வாழ்க்கையில் மட்டுமல்லாது யாழ் குடாநாட்டு மக்களனைவரையுமே பெரும் சோதனைக்குள்ளாக்கிய காலம் என்றால் மிகையாகாது. நான்கு பக்கங்களில் இருந்தும் ஷெல்வீச்சுகள் விமானக்குண்டு வீச்சுகள் போன்றவற்றினால் நிம்மதி இழந்திருந்ததோடு பொருளாதாரத் தடையினாலும் எரிபொருள் தட்டுப்பாடு

கணேச தீபம் ~~~

காலம் உருண்டோட வேலணை கல்விக்கோட்டத்தில் கணிதபாட ஆலோசகராகக் கடமையாற்றிய துடிப்புமிக்க இளைஞரான திரு சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களை அணுகினோம். அவரும் மனநிறைவுடன் சித்திரை 1994ல்வித்தியாலய அதிபராகக் கடமையேற்றார். அவரது வருகை எங்கள் வித்தியாலயத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்றால் மிகையாகாது. ஆசிரியர் குழாத்தோடு நண்பனாக சகோதரனாக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பல விதங்களிலும் பாடுபட்டார். பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் மேலதிக கணிதபாட வகுப்புகளை நடத்தினார். இக்காலத்தில் வித்தியாலய பழையமாணவர்களும் எம்முடன் சேர்ந்து பல விதங்களிலும் உதவிபுரிந்தனர். பல்கலைக்கழகத்தில் இருந்து வந்து மாலை நேரவகுப்புகள் நடத்தினர். அவர்களுள்ளே நல்லதம்பி ஸ்ரீதரன், சிவசாமி பிறேம்குமார் ஆங்கில ஆசிரியராக இருந்து அமரத்துவம் அடைந்த செல்வத்துரை தயாபரன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். எல்லோரதும் கூட்டுமுயற்சியினால் இவ்வருடத்தில் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் அநேகமாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்று க. பொ.த(உயர்தர) வகுப்பில் கல்வி கற்க தகுதி பெற்றனர்.அதேபோன்று தரம் ஐந்தில் இருந்தும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றனர். இக்கால கட்டத்தில் மாணவர்களது திறமையை வெளிக்கொண்டு வருமுகமாக மிகச்சிறந்த கல்விக் கண்காட்சி ஒன்றும் வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. இக்கல்விக் கண்காட்சி அவ்வப்பாட ஆசிரிய ஆலோசகர்களது ஆலோசனையும் பெறப்பட்டு திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைக்கப்பட்டமையினால் எல்லோரதும் பாராட்டைப் பெற்றது. மற்றும் மாவட்டந்தோறும் நடைபெறும் தமிழ்த்திறன் போட்டி, பண் இசைப்போட்டி, வர்த்தகப்போட்டி, உடற் பயிற்சிப்போட்டி ஆகிய போட்டிகளில் எம்மாணவர்கள் மாவட்டமட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப்பெற் வித்தியாலயத்திற்குப் பெருமை சேர்த்தனர். இம்மாணவர்கள் எல்லோரையும் கௌரவிக்கும் முகமாகவும் ஞாபகார்த்த நினைவுப்பரிசில்கள் வழங்கும் முகமாகவும் 1995ல் பரிசளிப்பு விழாவொன்றினை நடத்துவதற்கு ஆசிரியர்சங்க கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இப்பரிசளிப்பு விழாவிற்கு பிரதமவிருந்தினராக யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அவர்களை அழைப்பதற்காக அதிபரும் நானும் சென்றிருந்தோம். அப்பொழுது அவர்பதவியேற்று சில வாரங்களே கழிந்திருந்தன. எனவே அவர் தான் பதவியேற்று இன்னும் ஒரு பாடசாலையையும் தரிசிக்க வில்லை எனவும் தனக்கு வேலைகள் அதிகம் இருப்பதாகவும் கூறிவருகைதர மறுத்தார். அதனால் நாம் எங்கள் பழைய மாணவர்சங்க காப்பாளராக விளங்கிய யாழ் கோட்டக்கல்வியதிகாரி திரு சி. புலேந்திரன் அவர்களிடம் எங்கள் நிலையைக் கூறினோம். உடனே அவர் கல்விப்

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

அதிபர் ஆசிரியர்கள் ஏற்கனவே இயங்கிவந்த தங்கள் வித்தியாலத்திற் கடமையை மேற்கொண்டனர். இத்தருணத்தில் யான் ஆசிரிய சேவையிலிருந்தும் ஓய்வுபெற்று. வவுனியாவில் வசித்து வந்த பொழுதும் எமது வித்தியாலயம் மீளவும் திறக்கப்படாமல் மூடிக்கிடக்கும் நிலை என்னைத் துன்புறுத்தியது. இதே நேரம் முன்னாள் அதிபர் திரு நாகனாதி கார்த்திகேசு அவர்கள் புங்குடுதீவில் வசித்துவந்தார். அவரும் தமது கவலையை வெளிப்படுத்தி வித்தியாலயத்தை மீளவும் திறக்க ஆவன செய்யுமாறு கேட்டு எழுதி இருந்தார்.

எல்லாம் சேர்ந்து எம்மை உந்தித்தள்ள வித்தியாலயத்தினை மீளதிறக்கும் எண்ணத்துடன் பல கஷ்டத்தின் மத்தியில் பொலிசாரின் அனுமதி பெற்று கொழும்பு சென்றேன். அங்கிருந்து புங்குடுதீவைச் சென்றடைந்தேன். அப்பொழுது அம்மண்ணில் வசித்துவந்த முன்னாள் ஆசிரியை திருமதி இ.திருமேனிப்பிள்ளை அவர்கள் அயலவயர்களின் உதவியுடன் வித்தியாலய முன்முன்றலை மட்டும் சுத்தம் செய்திருந்தார்.இருந்த பொழுதும் எமது கலைத்தாயின் கதவைத் திறந்து பார்த்தபொழுது எம்மையும் அறியாமல் எனது கண்கள் குளமாயின. வர்ர்த்தையில் வடிக்க முடியாதசோகம் பாடசாலைத் தளபாடங்கள் அடித்து உடைக்கப்பட்டிருந்தன. நூலகத் தளபாடங்கள் அகற்றப்பட்டு நூல்கள் அனைத்தும் சிதைந்தும் செல்லரித்தும் காணப்பட்டன.

முன்னாள் அதிபர்களின் படங்கள் அனைத்துமே பழுதடைந்து போயிருந்தன. மாட்டுச்சாணங்களின் கும்பலும் பறவைகளின் எச்சமும் சருகுக் குவியலுமாகச் சேர்ந்து ஒருவித துர்நாற்றம் வயிற்றைக்குமட்டியது. வித்தியாலயத்தின் அயலில் வசித்துவந்த அனைவரும் எமது வரவைஅறிந்து அங்குகூடி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.அவர்களுடன் கலந்துபேசி மேற்கொண்டு செய்யவேண்டியவற்றைக் கவனிக்கத்தொடங்கினோம் மறுநாட் காலையிலேயே சுத்தம் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தளபாடங்களுடனும் அயலவர்கள் அனைவரும் வருகை தந்து துப்பரவு செய்யத்தொடங்கினோம்.எமது வித்தியாலய பழையமாணவர்கள் நீர்இறைக்கும் யந்திரத்தைக் கொண்டுவந்து தண்ணீரை இறைத்து பலமுறை மண்டபங்களைக் கழுவிச் சுத்தம் செய்தனர். எமது கலைத்தாயின் அருகிலேயே வசித்து வந்த திருமதி ஆ. யோகீஸ்வரி (யோகி) அவர்கள் அவ்வப்போது தேநீரும் சிற்றுண்டிகளும் கொண்டுவந்துதவினார். அப்பொழுதே வித்தியாலயம் திறப்பதற்கான அனுமதியைப் பெறவும் அதிபர் ஒருவரை நியமிக்கவும் அலைந்து திரிய வேண்டிதாயிற்று.

முதன் முதலில் எங்கள் வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரியிடம் சென்று பாடசாலை திறப்பதற்கான அனுமதியைக் கோரினேன். அப்பொழுது அவர் ஏற்கனவே புங்குடுதீவில் இயங்கிவரும் பாடசாலைகட்கே கல்வி கற்பிப்பதற்குப் போதிய மாணவர்கள் இல்லை. அத்துடன் ஆசிரியர் பற்றாக்குறை என்பவற்றைக் கூறி இந்நிலையில் தம்மால் மேலதிகமாக ஒருபாடசாலையைத் திறக்க அனுமதிக்க முடியாதெனக் கூறினார். இதனால் மனம் தளர்ந்த நிலையில் அப்பொழுது யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளராக இருந்த அமரத்துவமடைந்த திரு சு. இரத்தினராசா அவர்களைப் போய்ச் சந்தித்தேன். எமது பாடசாலையின் வரலாற்றை ஏற்கனவே அறிந்து வைத்திருந்த அவர் யான் கூறியவற்றைக் கவனமாகச் செவிமடுத்ததுடன் எதுவித மறுப்புமின்றி பாடசாலை திறப்பதற்கான அனுமதியை வழங்கினார். அனுமதி பெற்றதன் பின்னர் வித்தியாலயத்திற்கு அதிபர் ஒருவரைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் நிமித்தம் தற்பொழுது அதிபராகக் கடமையாற்றும் திரு சு.கு. சண்முகலிங்கம் அவர்களை நாடினேன். அவர் அப்பொழுது யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார். குடும்பமாக யாழிலேயே வசித்து வந்தார். எனவே போக்குவரத்து போன்ற பல காரணங்களைக் கருத்திற் கொண்டுசிறிது தயக்கம் தெரிவித்தார். இருந்த பொழுதும் எமது வேண்டுகோளுடன் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைக்கிணங்கவும் வருகைதரச் சம்மதம் தெரிவித்தார். இறுதியில் 23 பங்குனித்திங்கள் 1997அன்று வித்தியாலய திறப்புவிழா திகதியையும் நிர்ணயம் செய்து அன்றையதினம் யாழ் கல்விப் பணிபாளர் அவர்களே வந்து திறந்து வைப்பதாகவும் முடிவு செய்யப்பட்டது.

திறப்புவிழா அன்றைய தினம் வித்தியாலயம் மகர தோரணங்களினாலும் மாவிலைகளினாலும் அலங்கரிக்கப்பட்டு பூரணகும்பம் வைக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. அதிபர் அவர்களே கல்விப்பணிபாளர் அவர்களை அழைத்து வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அன்றையதினம் எமது வித்தியாலய வழக்கப்படி மதியபோசனம் வழங்கிகௌரவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. .எல்லாவேலைகளையும் இயன்றவரை முடித்து மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் அதிபரதும் கல்விப் பணிபாளரதும் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தோம். இச்சம்பவ காலத்தில் தீவுப்பகுதி முழுவதுமே முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. திறப்புவிழா பற்றிய செய்தி யாழில் இருந்து வெளியாகும் உதயன் பத்திரிகையில் அன்றையதினம் வெளிவந்திருந்தது. என்ன காரணமோ யாழில் இருந்தும் வருகை தந்த கல்விப்பணிப்பாளர் அவர்களை அல்லைப்பிட்டிச்சந்தியில் வைத்தே இராணுவத்தினர் வழிமறித்து திரும்பவும் யாழிற்கே அனுப்பிவிட்டனர்.அதிபர் அவர்களை மட்டும் பாடசாலைவர அனுமதித்தனர். சுமார்

கணேச தீபம் ~~~



# அந்த நாள் ஞாபகம்

- திருமதி. இரத்தினசோதி சீவரத்தினம்
*பழைய மாணவி*

நமது வாழ்வில் குறிப்பிடத்தக்க நிகழ்வுள் நிகழும் போது அவை நம்மை அறியாமலே இதயத்தில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. எனது வாழ்வில் ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் யான் கல்வி பயின்ற பத்தாண்டுகளும் (1946-1956) மறக்க முடியாத காலமாக உள்ளது. அந்த நாள் ஞாபகம் அலை அலையாக என்னுள்ளத்தில் எழுந்த வண்ணமுள்ளன. பாலர் வகுப்பு முதல் எஸ். எஸ்.சி. வகுப்பு வரை எம்மைக் கற்பித்த ஆசிரியர்களையும். எம்மை வழி நடத்திய அதிபர் செல்லத்துரை அவர்களையும் ஒருபோதும் மறக்க முடியாது. அவர்களது வழிப்படுத்தல்களாலேயே தான் நாங்கள் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தி பெற்று உயர்தர வகுப்பில் சேர முடிந்தது. அதுமட்டுமன்றிப் பல்வேறு போட்டிகளில் பங்கு பெறவும் எங்கள் திறமைகளை வெளிக்காட்டவும் வாய்ப்புக் கிடைத்தது.

கணேச வித்தியாசாலையிலிருந்து புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்குச் சென்று க.பொ.த. உயர்தர வகுப்பில் சேர்ந்த போது அங்கு நடைபெற்ற பேச்சு போட்டி ஒன்றில் பங்கு பற்றி தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றேன். கணேச வித்தியாலயம் வழங்கிய பயிற்சியே தான் நான் பரிசு பெறக் காரணமாயிருந்தது. இது என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வாகும். இதைவிட வேறு பல போட்டிகளிலும் பங்கு கொண்டு பரிசில்கள் பெறும் வாய்ப்பினை இவ்வித்தியாலயமே எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

எனக்குக் கல்வியறிவூட்டிய வித்தியாலத்தின் நூற்றாண்டு விழாவைக் காணவும் அதிற் பங்கு கொள்ளவும் கிடைத்த பெரும்பேறு குறித்துப் பெருமகிழ்வுறுகிறேன். அந்த நாள் ஞாபகங்கள் இன்றும் தொடரக் "கணேச சங்கமம்" வழிசமைத்துக் கொடுத்துள்ளது. நூற்றாண்டு விழாக்காணும் வித்தியாலயம் பல்லாயிரம் ஆண்டுகள் கல்விப்பயிர் வளத்திடவும் "கணேச சங்கமம்" புதியதோர் உந்துதலை அளித்திடவும் உளமார வாழ்த்துகிறேன்.

வாழ்க! வளமுடன்

# பல நூற்றாண்டுகள் வாழ்த்துதல் நம் கடன்

**- திருமதி. லோ. அருளலிங்கம்**
*மாணவி, ஆசிரியை*

**"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானிலும் நனிசிறந்தனவே"**

என்பதற்கேற்ப என் கல்வி அன்னையின் இருப்பிடமோ கண்ணகி வாழ்பதியான பொன்கொடு தீவின் மத்தி. அன்னைக்கோ ஆண்டு நூறு, வாழ்த்துவது என் தகுதிக்கு அப்பாற்பட்டது. எனவே அன்னைக்கு அஞ்சலி செய்ய விண், மண் ஆளும் சரஸ்வதி துணை நிற்க. மூலாதாரக் கணபதியின் பெயரோடு அன்னையின் சிறீயைச் சேர்த்து ஸ்ரீகணேச வித்தியாசாலையாகத் தொடங்கி ஸ்ரீகணேச மகா வித்தியாலயமாகத் திகழ்கிறாள். "யாதாயினும் நாடாமல் ஊராமல் என்னொருவன் - சாந்துணையுங் கல்லாதவாறு" என்ற தமிழ் மறையின் வாக்குக்கு அமைய தன்னையும் சிறப்பித்தும், தான் வாழும் நாட்டையும் சிறப்பித்து, தான் வாழும் அன்னையின் சந்ததியினரின் (குழந்தைகள், பேரக்குழந்தைகள், பூட்டக்குழந்தைகள்) சிறப்பு "சங்கமம்" நூற்றாண்டு விழாவுடே கண்கூடு, ஒரு நூற்றாண்டல்ல பல நூற்றாண்டுகள் வாழ்ந்து மிளிர வாழ்த்துவது நம் தலையாய கடனே.

சமூக முன்னேற்றத்தில் கல்வியே அடித்தளம், ஒருவனுக்கு தன் இரண்டாவது அன்னை கல்வி கற்கும் பாடசாலை. அங்கு தான் அறிவுக்கும் திறமைக்கும் ஆளுமைக்கும் விதை போடப்படுகிறது.

நாம் உறுதியான நல்ல இலட்சியங்களையுடையவர்களாக விளங்கி உயர் நோக்கங்களுக்காக எம்மைத் தயார்ப்படுத்தி எதிர்காலத்தில் செயலாற்றக் கூடியவர்களாக வடிவமைத்தவர்கள், பாடசாலையில் ஆசிரியப் பெருந்தகைகளாக வலம் வந்த குருமார்களே. கற்றலும், கற்பித்தலும், ஒழுகுதலும் சீராக அமைவதே பாடசாடலைக்கு மெருகு. மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதற்கேற்ப என் ஆளுமைக்கு உரமிட்டு, அடிக்கல் நாட்டி, அத்திவாரம் இட்ட பெருமை என் அன்னையின் சேவையில் பொலிவுகண்டு சிறந்து விளங்கிய ஆசான்களுக்கும், பெற்றோர்களுக்குமே. ஸ்ரீகணேச வித்தியாசாலையிலேயே என் வித்தியாரம்பம் A,B,C கற்றது இன்னும் என் மனத்திரையில் இனிமையாக ஓடிக்கொண்டிருக்கிறது.

தலைமைக்குரிய பண்புகளுடனும் கூடவே தடியுடனும் வலம் வந்த தலைமை வாத்தியார் செல்லத்துரை அவரது சீடர்கள் போல் வந்த அன்பு நிறைந்த ஆசான்கள் (மாணவியாக ஐம்பதுகளில்) "அந்த நாள் ஞாபகம் வந்ததே"

ஏறுநடையுடனும், குடையுடனும் அருமையான நாகலிங்க வாத்தியார், எந்நேரமும் புன்னகை தவழும் முகத்துடன் அன்பான கோபாலபிள்ளை வாத்தியார், கணிதத்தைக் கன்னத்தினூடே விளக்கவைக்கும் பண்டிதர் குணமாலை(நாகலிங்கம்) வாத்தியார், அம்பலவாணி வாத்தியார், சரவணமுத்து வாத்தியார், அன்புடன் ஆங்கிலத்தையும் ஊட்டிய செல்லத்துரை வாத்தியார், பெண் தெய்வங்களை நினைவுப்படுத்தும் வகையில் வலம் வந்த விசாலாட்சி ஆசிரியை, திருமேனிப்பிள்ளை ஆசிரியை, புவனம் ஆசிரியை அனைவரும் அமரர்கள் ஆகிவிட்டாலும் எம் நினைவிலுள்ளனர். பாடத்துடன் பாட்டும் நடனமும் பழக்கும் சற்குணம் ஆசிரியை, செல்லமாகக் கதை கேட்கும் செல்லமுத்து ஆசிரியை, யாவரும் மனிதத் தெய்வங்களே. (ஆசிரியையாக எழுபதுகளில்) அருள் நிறைந்த பார்வையும் அன்பு கலந்த புன்சிரிப்பும் (வெற்றிலை போட்டுச் சிவந்த வாயில்) தவழ பணிபுரிந்த பெரும் மதிப்புக்குரிய தலைமை ஆசிரியர் கார்த்திகேசு. அவரின் கீழ் ஆசிரியராகப் பணிபுரிய என் அன்னையின் ஆணை கிடைத்ததை என் பாக்கியமாக கருதுகிறேன்.

விழாவை முன்னெடுத்து நடாத்தும் அனைத்து உள்ளங்களுக்கும் இறையருள் கிடைத்து வளமாக வாழ்வாங்கு வாழ வாழ்த்துவதோடு பாடசாலை அன்னைக்கு மனங்கனிந்த நன்றியுணர்வுடன் வணக்கம் செலுத்துவதில் மிகவும் பெருமையடைகின்றேன்.


கல்வித்தானமே மேலான தானம். அதனைச் சிறப்புடன் வழங்கி மனிதம் மாண்புறச் செய்யும் அன்னையின் பணிக்கு ஒல்லும் வகையில் எல்லோரும் உதவுதல் "நம் கடன்" என உறுதிபூண்பது என்றும் அவசியமே.

# நினைவில் நிற்கும் ஆசிரியர்கள் சிலர்


யா/ புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம் கடந்த நூறு ஆண்டுகளில் நல்லாசிரியர் பலரைப் பெற்றிருந்தது. அவர்களது தன்னலமற்ற பணிகளை இவ்வேளையில் நன்றியுடன் நினைவுகூருகிறது. அவர்கள் எல்லோரதும் பெயர்களையும் இங்கு பொறித்திட விரும்பிய போதிலும் பூரணமான தகவல்களைப் பெற முடியவில்லை. இதன் காரணமாக நினைவில் நிற்கும் ஆசிரியர்கள் சிலரது பெயர்களே இதன் கீழ் இடம்பெற்றுள்ளன. ஏனையோர் மன்னிப்பார்களாக

1. திரு. வி. குமாரசுவாமி (தம்பிப்பிள்ளை உபாத்தியாயர், புங்குடுதீவு-12)
2. திரு. க. சின்னத்துரை (புங்குடுதீவு-8)
3. திரு. கு. கதிரவேலு (புங்குடுதீவு-12)
4. வி. ஆச்சிக்குட்டி (புங்குடுதீவு)
5. திரு. நா. கோபாலபிள்ளை (புங்குடுதீவு-5)
6. திரு. க. நாகலிங்கம் (குணமாலை ஆசிரியர், புங்குடுதீவு-12)
7. திரு. எஸ். பொன்னம்பலம் (புங்குடுதீவு-3)
8. திருமதி விசாலாட்சி ஆறுமுகம் (புங்குடுதீவு-12)
9. ஆசிரியமணி சி. க. நாகலிங்கம் (புங்குடுதீவு-10)
10. திரு. க. அம்பலவாணர் (புங்குடுதீவு-12)
11. திரு. நா.சி. சரவணமுத்து (புங்குடுதீவு-10)
12. திரு. சு. வில்வரத்தினம் (புங்குடுதீவு-3)
13. திரு. எஸ். செல்லத்துரை (புங்குடுதீவு-4)
14. திருமதி திருமேனிப்பிள்ளை இரத்தினசபாபதி (புங்குடுதீவு-12)
15. திருமதி புவனேஸ்வரி துரைசிங்கம் (புங்குடுதீவு-12)
16. திருமதி சிவயோகம்மா மகாலிங்கம் (புங்குடுதீவு-11)
17. திருமதி நல்லம்மா சிவசாமி (புங்குடுதீவு-11)
18. திரு. வை. தியாகராசா (புங்குடுதீவு-4)

# நினைவில் நிற்கும் ஆசிரியர் சிலர்




திரு. நா. கோபாலபிள்ளை




திரு. சி.க. நாகலிங்கம்



திரு. நா. சி. சரவணமுத்து



திரு. பொ. சபாரத்தினம்



திரு. து. வசந்தகுமார்



திருமதி. வி. ஆச்சிக்குட்டி



திருமதி. ஆ. வீசாலாட்சி



திருமதி. து. புவனேஸ்வரி



திருமதி. இ. திருமேனிப்பிள்ளை



திருமதி. வ. மேரி திரேஸ்



திருமதி. தி. யோகேஸ்வரி



திருமதி. சி. ஸ்ரீ லதா

19. திருமதி சற்குணம் கந்தையா (புங்குடுதீவு-12)

20. திரு. ச. கனகரத்தினம் (புங்குடுதீவு-1)

21. திரு. க. மகாதேவா (புங்குடுதீவு-1)

22. திரு. ஜே.ஜே. சற்குணராசா (புங்குடுதீவு-1)

23. திரு. து. வசந்தகுமார் (புங்குடுதீவு-3)

24. திரு. பொ. சபாரத்தினம் (புங்குடுதீவு-10)

25. திருமதி பர்வதம் மகேஸ்வரன் (புங்குடுதீவு-12)

26. திரு. க. செல்வரத்தினம் (புங்குடுதீவு-11)

27. திருமதி லோகேஸ்வரி அருள்லிங்கம் (புங்குடுதீவு-11)

28. திருமதி ஸ்ரீலதா சிவஞானசுந்தரம் (புங்குடுதீவு-11)

29. திருமதி வரதலட்சுமி வீரசிங்கம் (புங்குடுதீவு-3)

30. திருமதி கிருஷ்ணம்மா தாமோதரம்பிள்ளை (புங்குடுதீவு-12)

31. திருமதி சிவயோகம்மா பரமலிங்கம் (புங்குடுதீவு-12)

32. திருமதி சகுந்தலாதேவி சங்கரராசா (புங்குடுதீவு-1)

33. திரு. கா. பரமேஸ்வரன் (புங்குடுதீவு-11)

34. திரு. த. திருநாவுக்கரசு (புங்குடுதீவு-12)

35. திருமதி விமலாதேவி சிவபாதம் (புங்குடுதீவு-5)

36. திரு. வே. க. ஏரம்பு (புங்குடுதீவு-1)

37. திருமதி யோகேஸ்வரி தில்லைநாதன் (புங்குடுதீவு-10)

38. திருமதி பங்கையர்ச்செல்வி சதாசிவம் (புங்குடுதீவு-11)

39. திரு. சி. தனபாலசிங்கம் (புங்குடுதீவு-7)

40. செல்வி வசந்தி இரத்தினசபாபதி (புங்குடுதீவு-12)

41. திருமதி. மே. தி. வசந்தகுமார் (புங்குடுதீவு-03)

42. திருமதி. செல்லம்மா இராசரத்தினம் (புங்குடுதீவு -10)

கணேச தீபம் ~~~

அங்குள்ள பழையமாணவர்களிடம் இருந்து மேற்படி வித்தியாலய பழையமாணவர் சங்கத்திற்கானநிரந்தர வைப்புநிதியம் என்றபெயரில் ஞாபகார்த்தப்பரிசில் நிதியாகவும் அன்பளிப்பு நிதியாகவும்பெறப்பட்ட நிதியாகும். மிகுதி (30,000) முப்பதினாயிரம் ரூபாவும் கொழும்புவாழ் பழைய மாணவர்களிடம் இருந்து பெறப்பட்டு கொழும்பு கிளைச்சங்கத்தினால் வைப்புச் செய்யப்பட்ட நிதியாகும். இந்நிதியானது 1993ல் இருந்து வித்தியாலய தேவைக்கென அவ்வப்போது செலவு செய்யப்பட்டபின் மீதமான தொகை என்பது குறிப்பிடத்தக்கது.

1) இந் நிரந்தர வைப்பு நிதியம் யாழ் புங்குடுதீவு ஸ்ரீ கணேசமகாவீத்தியாலய பழையமாணவர் சங்கத்தின் நிரந்தர வைப்புநிதியம் என்ற பெயரில் அழைக்கப்படும்.

2) இந்நிரந்தர வைப்பு நிதியத்தில் உள்ள பணத்தினைஎக்காரணம் கொண்டும் நிர்வாகசபை உறுப்பினர்களால் மீளப் பெற்றுக்கொள்ள முடியாது.

3) இந்நிரந்தர வைப்புநிதிக் கணக்கில் இருந்து வருட முடிவில் வருடந்தோறும் வட்டிப்பணம் முழுவதும் வங்கியினால் யாழ் புங்குடுதீவு ஸ்ரீ கணேசமகா வித்தியாலய தாய்ச்சங்கத்தின் யாழ் தேசிய சேமிப்புவங்கி கணக்கு இலக்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இப்பணம் வித்தியாலய கல்வித்தேவைகட்குப் பயன்படுத்தப்படும்.

4) இக் கணக்கினை நடைமுறைப்படுத்தும் போது பொருளாளருடன் தலைவர் அல்லது செயலாளர் கையொப்பமிடுதல் வேண்டும்.

5) இக்கணக்கின் வரவு செலவு யாவற்றுக்கும் பற்றுச் சீட்டுக்கள் இணைக்கப்பட்டு வருடாந்தக் கணக்கறிக்கை ஒழுங்காகப் பேணப்படுதல் வேண்டும்.இக்கணக்கின் வரவு செலவு அறிக்கை வருடந்தோறும் எண்பார்வையாளரினால் சரிபார்க்கப்பட்டு ஒப்பமிடப்படல் வேண்டும்.

6) யாழ் புங்குடுதீவு ஸ்ரீ கணேசமகா வித்தியாலயபழைய மாணவர் சங்கத்தின் பொதுச்சபையின் ஏகமனதான தீர்மானத்திற் கிணங்க இந் நிதியத் தின் வட்டிப்பணம் மற்றும் புங்குதீவுப்பாட சாலைகளின் கல்வி அபிவிருத்திக்கும் பயன்படுத்தப்படலாம்.

7) வருடந்தோறும் பாடசாலை மட்டத்தில் பரிசளிப்பு விழாக் கொண்டாடப்பட்டு ஞாபகார்த்தப் பரிசில்கள் வழங்கப்படுதல் வேண்டும். ஞாபகார்த்தப்பரிசில்கள் யார்யார்க்கு எதற்காக வழங்கப்படுகிறது என்பன போன்ற விபரங்களை அவர் தம் குடும்ப உறுப்பினர்க்கு இயலுமானவரை கடிதமூலம் அறிவித்தல் வேண்டும்.

ஞாபகார்த்தப்பரிசில் வழங்கல் என்ற அடிப்படையில் எம் வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து அமரத்துவமடைந்த ஆசிரியை திருமதி புவனேஸ்வரி துரைசிங்கம் அவர்கள் நினைவாக அவர்தம் துணைவர் திரு த.துரைசிங்கம் அவர்களால் வருடந்தோறும் பரிசில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அதனைத்தொடர்ந்து எம் வித்தியாலயத்தில் கல்விகற்று பல்கலைக்கழக பட்டம்பெற்று வங்கியில் உயர்பதவி வகித்து அமரத்துவமடைந்த திருமதி நிர்மலா நடேசன் அவர்கள் நினைவாகவும் ஞாபகார்த்தப் பரிசில் வழங்கப்படுகிறது. இப்பரிசிலிற்காக திரு நடேசன் அவர்கள் ரூபா(10,000) பத்தாயிரம் யாழ் தேசிய சேமிப்புவங்கியில் வைப்புச்செய்து வருடந்தோறும் அதன் வட்டிப்பணத்தினை ஞாபகார்த்தப் பரிசிலாக வழங்க ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிரந்தர வைப்புநிதியம் அமைவதற்கு சுவிச்சர்லாந்தில் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து அயராது முன்னின்றுஉழைத்த அனைத்துப் பழைய மாணவர்களுக்கும் கொழும்புவாழ் பழையமாணவர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகள்என்றும் உரியதாக. இந்நிதியம் இத்துடன் முற்றுப்பெறாது மேன்மேலும் பலஇலட்சங்களாக வளர்ந்து எம் இளஞ்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்ட அனைவரும் ஒன்றுபட்டு கைகோர்த்து நிற்போமாக. வருங்கால சமுதாதயத்தை அலங்கரிக்கப்போகும் எம் இளம் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் அனைவரும் பங்குபற்றச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற பெருநோக்கோடு இவ்வித்தியாலய பழையமாணவர் சங்கத்தின் பெயரில் பிறிதொரு வங்கிக் கணக்கும் கொழும்பு பம்பலப்பிட்டி தேசியசேமிப்பு வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கணக்கினை எமது சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க திருசின்னத்துரை முருகானந்தவேல் அவர்கள் தமதுதாயார் பார்வதி சின்னத்துரை அவர்களின் ஞாபகார்த்தப் பரிசில் நிதியாக ரூபா (25,000) இருபத்தையாயிரம் வைப்பிலிட்டு ஆரம்பித்து வைத்துள்ளார். நிரந்தர வைப்பு நிதியத்துடன் நேரடியாக யாரும் வைப்புச்செய்ய முடியாமை கருதியே

இக்கணக்கினை ஆரம்பித்து வைத்துள்ளோம். இந்த நிதிக்கணக்கில் வித்தியாலய பழைய மாணவர்கள், வித்தியாலயத்திற் கற்பித்த அதிபர்கள் ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் ஞாபகார்த்தப் பரிசில்நிதியாகவும்அன்பளிப்பு நிதியாகவும் வைப்புச்செய்யலாம்.ஞாபகார்த்தப் பரிசில் நிதியாக வைப்புச் செய்வோர் இலங்கையில் வசிப்பவர்களாயின் இலங்கைநாணயப்படி (10,000) பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாமலும் வெளிநாடுகளில் வசிப்பவர்களாயின் ரூபா(25,000) இருபத்தையாயிரத்திற்குக் குறையாமலும் வைப்புச் செய்தல் வேண்டும். அன்பளிப்பு நிதியாக ஒருவர் எவ்வளவு நிதியையும் வைப்புச் செய்யலாம். இந்நிதி காலக்கிரமத்தில் நிரந்தர வைப்புநிதியத்துடன் வைப்புச் செய்யப்படும்.

1992ல் இந்நிரந்தர வைப்புநிதியத்திற்கு சுவிச்சர்லாந்தில் ஞாபகார்த்தப் பரிசில் நிதிவழங்கியவர்களின் பெயர் விபரம்.

| அமரத்துவமடைந்தோர் | நினைவுப்பரிசில் வழங்கியோர் | தொகை |
|---|---|---|
| நாகனாதி சண்முகலிங்கம் | சண்முகலிங்கம் சதாசிவம் | SFR. 500.00 |
| சண்முகலிங்கம் பராசக்தி | சண்முகலிங்கம் தேவராசா | SFR. 500.00 |
| சின்னம்மா திருச்செல்வம் | திருச்செல்வம் மதியழகன் | SFR. 500.00 |
| வசந்தமலர் வசந்தகுமார் | திருச்செல்வம் மதியழகன் | SFR. 500.00 |
| கனகசபை செல்வரெத்தினம் | செல்வரேத்தினம்சுரேஃகுமார் | SFR. 500.00 |
| நாகரெத்தினம்வேலுப்பிள்ளை | நாகராசா ஸ்ரீஸ்கந்தராசா | SFR. 500.00 |
| பொன்னாச்சி ஆறுமுகம் | வைத்திலிங்கம் தவசீலன் | SFR. 500.00 |

இவற்றுடன் ஏராளமான பழையமாணவர்கள் சுவிச்சர்லாந்தில் அன்பளிப்பு நிதியாகவும் தாராள மனதுடன் வழங்கினர். அவர்கள் அனைவர்க்கும் மீண்டும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கு இணங்க அனைவரும் ஒன்றுபட்டு எமது தாய்திருநாட்டை அலங்கரிப்போம்.

**"தனி மரம் ஒருபோதும் தோப்பாகாது"**

**" மக்கள் சேவையே மகேசன்சேவை"**

**- ச.சதாசிவம்.**



# கவிதைக் களம்



# புங்குடுதீவு கீதம்

புங்குடுதீவெனும் பொன்னகமே
புங்குடுதீவெனும் பொன்னகமே – அலை
பொங்கும் கடலரண் சூழ்நிலமே!
தெங்கு, பனை வளம் கொள்நிலமே – கமம்
செய்யும் பெருமக்கள் உய்வகமே

செல்வம் கொழிக்கின்ற பெருவணிகர் – கல்வித்
தேனை அளிக்கின்ற நல்லறிஞர்
வெல்லற் கரிதான நெஞ்சுரத்தோர் – சேர்ந்து
வாழும் தனித்துவத் தீவகமே!

தெய்வ அருட்கொடை கொண்டபதி – தொல்லை
தீங்கு அனைத்தையும் வென்றபதி
உய்யவழி காட்டும் நான்மதம் – ஞானத்(து)
உண்மையில் ஒன்றெனக் கண்டபதி

கிழக்கதன் எல்லையே வல்லன் என்றால் – குறி
காட்டுவான் இறுபிட்டி மேற்கெனலாம்
செழிப்பொடு பெருங்காடு நடுவே உண்டு வீரா
மலை தெற்கே வடக்காக ஊரதீவாம்

ஏழ் சிறு தீவுகள் மத்தியிலே – நின்று
இயங்கி ஒளிகாலும் முத்தகமே!
யாழ்நகர் நெற்றியில் இட்டதொரு – விழிப்
பொட்டென நின்றொளிர் தீவகமே

கோயில், குளம், பள்ளி, கலைகளுண்டு – திசை
காட்டும் கலங்கரைத் தீபமுண்டு
வாயில் என நிற்கும் மடத்துவெளி – கற்பை
வழுத்திடும் கண்ணகித் தெய்வமுண்டு

கரைகள் எங்கும் காவல் தெய்வமுண்டு – மணி
பல்லவத் தன்னையும் பக்கம் உண்டு
வரையில் வரலாற்றுப் பெருமையுண்டு – கண்ணன்
வாழுமோர் பிருந்தா வனமிதுவே!

**- மு.பொன்னம்பலம்**

# கணேச சங்கமம் சேர்ந்திடுவோம்

புங்கை நகரின் புகழ் எங்கும் பரவிட – நாம்
புதிய வரலாறு படைத்திடுவோம்
தங்கு தடையின்றிக் கல்வி வளம்பெற – நாம்
தக்கன யாவும் செய்திடுவோம்.

"கல்வி அழகே அழகென்று" கண்டவர் – நம்
கண்ணியம் மிக்க பசுபதியார்
பல்கிப் பல வளம் பெருகிடவே – அவர்
பாதையடி ஒற்றிச் சென்றிடுவோம்.

எண்ணும் எழுத்தும் விஞ்ஞானமும் – நல்ல
ஏற்றம் அளித்திடும் கலை பலவும்
கண்ணும் கருத்துமாய் ஊட்டுவது – எங்கள்
கணேச மகா வித்தியாலயமே.

கற்று உயர்ந்த மாணவர் யாவரும் – இன்றே
கணேச சங்கமம் சேர்ந்திடுவோம்
தக்க பணிகள் பற்பல செய்திடவே –நாமும்
தளராது உறுதி பூண்டிடுவோம்.

கணேச சங்கமம் சிறந்திடவே – நம்
கலைகள் யாவும் வளர்ந்திடவே
கற்றவர் யாவரும் ஒன்று கூடிடுவோம் – நம்
கணேச வித்தியாலயத்தை வாழ்த்திடுவோம்.

- புங்கையூரன்

# தலைவாசல்

என் கல்வி தொடங்கிய சாலை
கணேசா வித்தியாசாலையின் வயது நூறு
இந்நாளில்
மீண்டும் குழந்தையாய் தவழ்ந்த மண்ணையும்
சுவாசித்த காற்றின் சுகந்தத்தையும்
மீள மனதிற்குள் மீட்டிடும் வேளை கிட்ட
வரம் தந்த கடவுளுக்கும் வாய்ப்புத்தந்தோர்க்கும்
வணக்கத்தையும் வாழ்த்தையும் நெஞ்சார செலுத்திக் கொண்டு

எம் ஊர் பொன் கொடுக்கும் புங்குடுதீவு
சுற்றம் என்று உண்மையாய்
உறவு சொல்லி ஊர் கூடும்
அறிந்தவரை முகம்தெரிந்தவர்கள் அனைவரும்
முறை சொல்லும் முகவரியுண்டு
தனவதி மாமி, குழந்தை மாமா, பார்வதி அக்கா என்று
எனது பட்டியல் நீளும்
ஆவடிச் சந்தியும் சுந்தையாப்பா கடையும்
எடை கல்லில் இடிபடும் முறுக்கின் ஓசையும்
இன்னமும் நினைவில் இருக்கிறது

முதல் நாள் என்ற தொடக்க வேளை
அதிபர் அறை
கார்த்திகேசு மாஸ்ரர் தலைமை ஆசிரியர்
வெள்ளை வேட்டி நஷனல்
வெண்ணீறு
கண்டிப்புத் தெறிக்கும் கண்கள்
இருந்தும் கனிவான வார்த்தைகள்
ஆகா! எத்தனை நினைவுகள்
இன்று அத்தனையும் கனவுகளில் தெரிகிறது

முதல் வகுப்பறை
என் முதல் சமூகம்
சிலரை பெயர் சொல்லும் ஞாபகம்
பலரை முகம் மறந்தாலும் இன்னும்
நிறம் மாறா நினைவுகள்

சுகு, சிறி, குகன், திருவருள், அரவிந்தன்
குமுதினி, மலர்விழி, சாந்தினி என வரவுப்பதிவேட்டில் இன்னமும் பலர்


வகுப்பாசிரியர்கள்
செல்வமுத்து ரீச்சர்,விசாலாட்சி ரீச்சர், புவனம் ரீச்சர்
பிரம்போடு நிற்கும் திருநாவுக்கரசு வாத்தியார்
என்மீது என்னை விட நம்பிக்கை வைத்தவர்கள்
மானசீகமாக மனம் வணங்குகிறது
இவர்களோடு பட்டணமிருந்து பல்வேறு சிரமத்திலும்
இப்பகுதிக்கு கல்வி அறிவு தந்திட வந்து போன
உதயகுமார் இரவீந்திரன் ஆசிரியர்கள்
அக்காலத்திலும் சமகல்விக்காய்
சமூகப் பொறுப்போடு இருந்தவர்கள்

துள்ளித் திரிந்த வயது
மழை நிறைந்த குளம் எங்கள்
நீச்சல் தடாகம்
அயலவன் வளவு இளநீர் இனிக்கும்
நித்திரை விழித்த திருவிழாக்காலம்
இவையெல்லாம் எமக்கு கிடைத்த வரம்
இன்று தொலைந்தது பெரும் துயரம்

வளமோடு வாழ்ந்த ஊர்
ஓரிரவில் வரம்பு கடந்து வயல் கடந்து
கடல் கடந்து நகர் ஏறிய நாள்
மீளவும் குடியேற நாள் வந்தும்
குடும்பங்கள் திசையெங்கும்

கடந்த கால நினைவு இலையுதிர்காலமாக
எதிர்காலம் வசந்தகாலமாக கண்களில்
தெரிகிறது
பார் பரந்து கிடக்கிறது பார்வை விரிந்து கிடக்கிறது
இருப்பினும் பழைய நினைவுகள் மட்டும் இனிக்கிறது
இவ்வித்தியாசாலை எதிர்கால நம்பிக்கை
இனி துயர் ஒழிக ! வளம் பெறுக!

**- இ. இளங்கோவன்**
*செயலாளர், கல்வி அமைச்சு*



# ஒரு பறவையின் குளிர்த்திப் பாடல்

பறவை ஒன்றின் பாடலை
மொழிபெயர்க்க முனைகிறேன்
முடியவில்லை
வெளியிடைப் பறவையின் சிறகுகள்
எழுதியதை எனது மொழியில்
எப்படிப் பெயர்ப்பது

விழிக்கிறேன்

அப்பொழுதுதான்
காற்றில் மிதந்து வந்த பறவையின் இறகொன்று
காலைப் பொழுதின்
பசும் புற்களில் மெத்தென அமர்கிறது
மெலிதாய் மூச்சு விட்டன பனித்துளிகள்

இப்பொழது
பனித்துளிகளின்
மொழியினால் எழுதினேன்
அந்தச் சிறகமர்ந்த பாடலை
கேட்கிறதா
பறவையின் பாடல் மூச்சு

# ஓர் எழுதுகோலின் மெய்விழிப்பு

ஒரு இதழியலாளனின் சட்டைப் பையில்
தலைநிமிர்த்தியிருந்த பேனை தெருவோரம் கிடக்கிறது
அதன் தலைமுடி கழன்று
விழிமுனைகளில் இரத்தக் கசிவு

கணேச தீபம் ~~~

உண்மையின் குமுழ் முனை விழிகள் மூடி
இறுகி இளகாமையின் விறைப்பேறிக் கிடந்தது
இறந்து போயிற்று போலும்
என்றந்தப் பேனையை புதைகுழியிலிட்டு
மூடி விட்டு நிமிர்ந்தேன்
திடீரென புதைகுழியை மீறி எழுந்தது ஒரு கை
அதன் குவிந்த விரல் இருக்கில்
மெய்யெழுத்தும் செங்கோலாய் வீற்றிருந்தது பேனா

"உயிர்த்தெழுந்துவிட்டாயா?"

"ஓம் கல்லறையினுள் உள்ளூறாங்கும்
இதழியலாளனின் இதய மெய்த்துடிப்பு
என்னை உறங்க விடவில்லை
முன்னொருகால் ஏந்தி எடுத்த கைவிரல் முனையை
முத்தமிடுகையில் உன்மெய் நாளங்களின்
உயிர் துடிப்பு எனைத் தீண்டிற்று
அதன் புதிய பரிமாணம் தான்
இந்தப் புறப்பாடு என்றது குமுழ் முனை விழிகள் கூரூசிபோல் கூட

"சரி இனியென்ன செய்தியை எமக்குத் தரப்போகிறாய்"
"பதட்டமும் பரபரப்பும் ஈனும் வெறும் செய்தியல்ல நான் தரப்போவது
மெய்தி தருவதே இனி என் மேன்மை எழுத்தாகும்
பொய்தீர் வாழ்வின் ஒளியை
புதிய திசைகளில் எழுதுவேன்
மெய்ம் மொழியே எனது மொழியாகும்
இனி வருவது எனது மெய் எழுச்சிக் காலமே"

- எஸ். வில்வரெத்தினம்

# விரிந்து செல்லும் அதிர்தளங்கள்

விரிந்து செல்லும் கால- சக்திச் சமன்பாட்டின் (E=MC)
முப்பரிமாணவெளி, காலப் பரிமாணங்களைக்
கடந்து ஒளியின் வேகத்தை விஞ்சுகையில்
என் திணிவின் அழிப்பினூடான சக்திமாற்றம்
பல அதிர்தளங்களை
அண்டெமெங்கும் சிருஷ்டிக்கின்றது.

என் தூல இருப்பின் பூரண கரைதல்
சக்தியாய் வியாபிக்கும் சூட்சுமவெளியின்
பூரணம் நாதமாய் மிதக்கையில்
மனமெனும் பரிமாணத்தளத்தில்
ஆனந்தவெளியாய் விரிகிறது.

வெளிநேர விகிதம் - பல
ஒளிவேக மடங்குகளாய் விரிகையில்
வெளிகாலத் தளங்கள்
ஒரு சூனியத்தின் மையச்சுழியமாய்
ஓர் சுழலும் மனோலயத்தின் அக புறவிரிவாய்
மீண்டும்
புதிய அதிர்தளத்தின் சிருஷ்டிப்பு

கோடுகள் விரிகின்றன. அதிர்கின்றன.
மூன்று கோடுகள் அந்தம் பற்றி இணைகின்றன.
அதன் உச்சிகளின் ஊடாக வட்டமொன்றாய்
இருபரிமாண அதிர்தளம் விரிகிறது.
கோடுகளின் விரிவு பல்கோணியாக
கோடுகளின் நீட்சி காலவெளியாய் விரிகையில்
இரு பரிமாண அதிர்தளம்
அதன் மையம் பற்றி பூரணமாய் வெளியெங்கும் விரிகிறது.

விரியும் இரு பரிமாணத்தளம்
அதன் மையத்தினூடான எண்ணிறை அச்சுகள் பற்றி
அதிர்வுகளை நிகழ்த்த
அதிர்வுகளின் வீச்சங்கள் காலவெளியாய் வியாபிக்க
முப்பரிமாணவெளியின் சிருஷ்டிப்பு.

முப்பரிமாணவெளியின் அதிர் அச்சுக்களின் மையமும்
பல்விரி அதிர்வுகளை நிகழ்த்த
அதிர்வுகள் வெளி -கால பரிமாண விரிவாய்
காலப்பரிமாண வெளியின் சிருஷ்டிப்பு

விரியும் தளங்களின் அதிர்வுகளாய்
பேரண்டம் விரிகிறது.
அதிர்வுகளின் நாதமாய்
சக்திவெளி விரிகிறது.

விரிதலும் கரைதலும்
ஓர் செயலாய் வியாபித்து
விரிதலும் கரைதலும்
கரைதலில் விரிதலாகவும்
விரிதலில் கரைதலாகவும்
வியாபிக்கின்றது வெளியெங்கும்.

எண்ணிறைத்தளங்களில்
ஆனந்த தாண்டவம்
நாதலங்களாய் ஆனந்த விரிவுகள்.
இருப்பேயற்ற
இருத்தலின் விரிவுகள்
சூனியமாய்ப் பூரணமும்
பூரணமாய் சூனியமும்
விரிகின்றன அதிர்கின்றன.

விரிவே அதிர்கின்றது
அதிர்வே விரிகின்றது
இதுவே படைப்பாய் விரிகின்றது.

கு. செந்தீபன்

# வெளியாய் விரியும் காலி நீ

வித்தையின் வித்தின் சூனியமையத்தமின்
உயிர்ப்பின் நாதமாய் விரிகாலி நீ
என் சித்துவெளியின் தத்துவமாய்
எனட "சத்" இன் இருப்பு இல் தூலமாய்
விரி சூட்சும வெளியாய் உறை காலி நீ.

என் நினைவழியாப் பொழுதின் சுகந்தம் நீ
என் சிருஷ்டிப்புக்களின் கருவறை நீ
என் உயிர்ப்பின் விந்துநாதம் நீ
என் வெளியின் மையமில்லா காலி நீ

நீ இடகால பரிமாணங்களுக்கு
கட்டுப்படா பெருவெளி
ஆண்டுகள் நூறு
அது உன் காலப்பின்னத்தின்
பூச்சியம் நாடும் அளவு

காலியை வாழ்த்த
பொழுதுகள் கரைந்து
வீணாகும்.
காலியே எம்மை வாழ்த்து
பெருவெளியாய் விரிந்திட

- கு. செந்தீபன்

# கல்விஞானி கணேசா வாழி!

புங்கை நகரின் பொன் நதியே வாழி
புலமைத் தமிழின் தேன் நிதியே வாழி
சங்கப் பலகையின் தலைமை ஒளியே வாழி
சாதனைப் பூக்களின் இளமை மொழியே வாழி

பனைகளின் நிலவின் கவிதையே வாழி
பைந்தமிழ் உறவுகளின் கனவியே வாழி
இனிமை நெஞ்சுகளின் இதயமே வாழி
இல்லாமை இல்லாத மனிதமே வாழி

நூறு மலர்களின் உள்ளமே வாழி
நூறு வயதின் சின்னமே வாழி
அள்ளிக் கொடுக்கும் வள்ளலே வாழி
அமுதம் சுரக்கும் கன்னலே வாழி

கல்வி மலர்களின் காவியமே வாழி
கழனி நிலங்களின் ஓவியமே வாழி
செல்வ மனங்களின் மருத்துவமே வாழி
சிந்தனைத் தேடலின் மகத்துவமே வாழி

புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம் வாழி
புன்னகை கமழும் ஆண்டுகள் வாழி
தீவகத்தின் பல்கலைக் கழகம் வாழி
தேசத்தின் வல்லமை இணையம் வாழி

கல்வி ஞானி கணேசா வாழி
கலையின் வாணி கணேசா வாழி
நல்ல ஆசிரியர்களின் கணேசா வாழி
நமது அறிவியலின் கணேசா வாழி

**- பூ. புலேந்திரராஜா ஜே.பி. (நல்லை அமிழ்தன்)**
*தீவகக் கல்வி வலயத்தின் முன்னாள் - நிர்வாக அலுவலர்*

# தினமும் உம்மை வாழ்த்திடுவோம்

1. அறிவு தந்த அன்னை எங்கள் கணேச வித்தியாலயம்
ஆற்றல் கொண்டு உலகில் என்றும் நிலைத்து வாழ்கவே
நூற்றாண்டு கண்டு இன்று நிமிர்ந்து நின்றிடும்
நூதனசாலை எங்கள் வித்தியாலயம் வாழ்கவே

2. புங்கை மண்ணில் புண்ணியர்கள் செய்த கோயிலாம்
புனித சேவையாற்றி மாந்தர் புகழினை நாட்டி
என்றும் என்றும் ஏணிபெற்ற வாழ்வு கொடுத்திட்ட
ஏற்றம் மிக்க கணேச வித்தியாலயம் வாழ்க வாழ்கவே

3. வல்வமையின் மின்னலவன் வரசித்தி விநாயகன்
வளம் கொடுக்கும் வெள்ளிப்பிள்ளை ஆகி நின்றனன்
அண்ணலவன் பொன்னருளால் கணேச வித்தியாலயம்
அகிலமதில் கதிரவனாய் ஒளியை வீசினான்.

4. அன்னையரின் கைபிடித்து வந்த பாலரை
ஆற்றல் மிக்க இளைஞராக ஆக்கி மகிழ்ந்தவன்
கண்ணிறைந்த கல்வியுடன் கலைகள் மிளிர்ந்திட
கனிவுகொண்டு காலம் வகுத்துப் பாதை காட்டினான்.

5. இன்னவழி நல்லதென்ற அதிபர் வழியிலே
இனியமொழி பேசிநின்ற அருமை ஆசான்கள்
பெரிய உலகில் சிறியர் வாழ வழிவகுத்தனர்
பேணி எம்மை நிழல் கொடுத்து வளர்த் தளித்தனர்.

6. வானில் மின்னும் தாரகைகள் உள்ளவரை
வாசம் வீசி வளர்க என்று பாடுவோம்
தீது நீங்கி நன்மை யாவும் நிறைந்திடத்
தினமும் உம்மை வாழ்கவென்றே வாழ்த்திருவோம்.

- செல்வி நா. கேதீஸ்வரி (ஆசிரியை)

# அளிமலர்த் தாள்தலை அணிவோம்

புங்குடுதீவு கல்விகேள் விசுகளில்
புகழுடன் இவங்கிக்ப் காலைக்
செங்கதிர் எனவே கிழக்கினிற் றோன்றிச்
சிறந்தொளி அறிவினைப் பரப்பி
பொங்குபேர் அறிஞர் குழாத்தினை அளித்துப்
புனிதமெய்ச் சைவநந் நெறியும்
தங்கெழிற் கணேச வித்தியா சாலைத்
தாபகர் நாள்மலர்த் தருவே

சைவமுற் தமிழும் தழைத்திடத் தோன்றி
தருக்குகோ ளரியெனத் தக்கோர்
வையகம் போற்ற வாழ்தநா வலரின்
வழியினிற் பசுபதிப்பிள்ளை
தெய்வ நன் நோக்கம் சிறந்தருள் கூட்டச்
செய்தமா வித்தியா சாலை
உய்வழித் துலகிற் புங்குடுதீவு
ஒளிபெற வைத்தனன் உவந்தே

எழுத்தறிவித்து இறைவனே ஆனோர்
எம்முனோர் அவர்கள் செய் நன்றி
வழுத்துதல் உய்தற் குறுவழி தெரிந்தே
வாழ்த்தலும் போற்றலும் மரபே
பழுத்தமெஞ் ஞானப் பசுப்பதிப் பிள்ளை
பரமனேர் உருவமெய் யாளன்
அழித்த நற் கணேச மாகலைத் தெய்வ
அளிமலர்ர்த் தாள்தலை அணிவாம்

- தில்லைச்சிவன்

# முள்

**வீர்ய நாற்றை**

**விதைத்தால்**

**அறுவடையில்**

**மணிகள் குவியும்**

**சூர்ய ஒளியில்**

**நடந்தால்**

**அலைதலில்**

**ஆறுதல் கிடைக்கும்**

**உள்ளத்தை வழங்கி**

**நல்ல**

**உள்ளத்துடன் வாழ்ந்தால்**

**உயர்வு கிடைக்கும்**

**நல்ல பாதைகளில்**

**நடந்தால்**

**முட்கள்**


**தானாகவே விலகும்.**

**புலேந்தி - திலீப்காந்த்**
*பொறியியலாளர்,*
*திரிப்போலி,*
*லிபியா*



# சிறுகதைகள்





# சுடலையாண்டி

- நாவேந்தன்

விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே எரியும் பெருநெருப்பில் உலகம் வெந்துகொண்டிருக்கும் வேளை, இதனைத்தான் உச்சி மத்தியானம் என்கிறார்களோ! எல்லாப் புறங்களிலும் அனலின் வெம்மை படர்கிறது. என் அகத்தும், புறத்தும் ஒரே கொதிப்பு. மனதில் அலைபாயும் எண்ணங்கள் முட்டி மோதுகின்றன.

அஃது மயானபூமி, பட்டினத்தின் ஒதுக்குப்புறமாக அமைந்திருந்தது. வானளாவிய ஆலமரங்கள், அவற்றின் கிளைகள் பயங்கரமான வேதாளங்கள் நீளக்கால்கள் ஊன்றி நிலைத்து நிற்பன போலத் தோன்றுகின்றன. கொளுத்தும் அந்தக் கொடிய வெயிலுங்கூட அப்பிரதேசத்துள் நுழையக் கூசுகிறது போலும்!

இலைகளின் 'சலசலப்புச்' சத்தத்தில் மனித உடலின் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்கின்றன. ஏறிட்டு நோக்கவே இதயம் பலமாக அடித்துக்கொள்கிறது!

திட்டுத்திட்டான சாம்பர் மேடுகள். சுடலை ஞானம் எனக்குப் பிறக்காவிட்டாலும் உலகவாழ்க்கையையே வெறுக்கத் தூண்டுகின்ற மனோநிலை உயிர்க்கின்றது. ஏன்?

செல்வம், அழகு, ஆசைகள் அத்தனையும் நிராசைகளாகிச் சிதைந்துபோன எலும்புகளாக, கரிந்து விட்ட நிணச்சுதைகளாக, உடலை நடுங்க வைக்கும் 'கோறை'போன மண்டை ஓடுகளாக அங்கே காட்சியளிக்கின்றன.

சமரசம் நிலவும் இடம் அதுதானாமே! உண்மைதான். ஏழை, செல்வன், முதலாளி, தொழிலாளி, ஆண்டான், அடிமை என்ற பேதமெதுவும் அங்கில்லை. எல்லாருமே பிடிசாம்பாராகப் போய் முடிவெய்தியுள்ள மோனநிலை.

'காடுடைய சுடலைப் பொடிபூசி உளங்கவர் கள்வனாகிய' திரிசூலன் திருநடனமிடும் இடமும் இதுவாமோ?'தில்லையம்பலத்தாடுங் கூத்தப்பிரான், எதற்காக இப்பேழ்வாய்ப் பிசாசுகளின் நிரந்தர உறைவிடத்து நிருத்தமிடச் சித்தங் கொண்டான்? அவனோர் பித்தனன்றோ! அவனுக்கு எல்லாம் ஒன்றுதானாமோ!

மனிதப்பிறவி எடுப்பவர்கள் என்றேனும் ஒருபோது, அநித்தப்பிறவியின் அந்தரங்கங்களை அம்பலப்படுத்தும் மயானபூமியை, உயிருடன், உணர்வுடன் தனியாகத் தரிசித்துப் பார்க்கவேண்டும். ஞானநிலை பெற இயலாதாயினும், தீய நெறிப்படர, முனையாத் தூண்டுதலாவது பிறக்காதா?

துவிச்சக்கர வண்டியை, வேலி ஓரத்து மரத்துடன் சாய்த்து வைத்த பின்னர், முட்கம்பிப் போர்வைக்குள் முடங்கிக் கிடக்கும், அந்த மயானத்தில் என் பார்வையை மேயவிட்ட பொழுது.....!

ஆலகாலமுண்டவன் கோவண உடையுடன் மீண்டும், சுடலையாண்டியாக என்போன்ற ஈனப்பிறவிகளுக்கும் தரிசனந் தரச் சித்தங்கொண்டு விட்டான..... என்ற ஐயம், ஆச்சரியம் தோன்றி மறைந்தது. மனதில் ஏனோ நிலைகொள்ளவில்லை!

நேற்றைப்பொழுது இதே நேரம், பாடசாலையில் என் வகுப்பிற் படிப்பித்துக் கொண்டிருந்தேன். கணக்கைக் கொடுத்துவிட்டு, மாணவர்களைக் கூர்ந்து நோக்கியபடியிருந்தேன். எப்பொழுதும் பாடங்களில் மிகச் சமர்த்தனாக விளங்கும் அவனைக் காணவில்லை. எங்கே அவன்? ஏன் வரவில்லை?என்ற கேள்விகள் என் மனதுள் கிளர்ந்தன.

'சிற்றம்பலம் வரவில்லையா?' 'இல்லை ஐயா!' என்று பதிலிறுத்தனர் மாணவர். 'ஏன் வரவில்லை?' நான் கேள்வி தொடுத்தேன்.

அவர்கள் சிரித்தனர். என்னிடத்திற் பேசுதற்கு அவர்களுக்கு அதிக துணிச்சல் வேண்டுமெனினும் சமயாசமயங்களில், என் முகக்குறிப்பைக் கண்டு பயந்தெளிந்து பேசுகின்ற பாடம், அவர்களுக்குக் கைவந்த கலை! 'சுடலையாண்டி, எங்கே போவான்? அங்கேதானிருப்பான். இன்று எவ்வாறோ நாலோ, ஐந்தோ சதம் எடுத்துக்கொண்டு வந்துசேர்வான்.

நாளைக்கு நமக்கெல்லாம் 'பெருமை' காட்டியபடியே 'ஐஸ்பழம்' வாங்கிச் சாப்பிடுவான்!' அவர்கள் தமக்குள் கதைத்துச் சிரித்தனர். 'என்ன பேசுகிறீர்கள்? சற்று அதிகாரத்தோடு கேட்டேன்.

'சிற்றம்பலம் சுடலைக்குப் போய் பணம் எடுக்கின்றவன் ஐயா. அங்கு கிடைக்கும் பணத்தைக் கொண்டுதான். வகுப்பு முடிந்ததும் மலையாளத்தானிடம் 'ஐஸ்பழம்' வாங்கிச் சாப்பிடுபவன் ஐயா.....' சிற்றம்பலத்தின் 'கைச்செலவு'க்குப் பணம் கிடைக்கும் வகையை அவன் பள்ளித்தோழன் தொடர்ந்து விவரித்தான்!

எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. சிற்றம்பலம் என்ற அந்தச் சிறுவனையும், அவன் குடும்பத்தினரையும் எனக்கு நன்கு தெரியும். 'வாழ்ந்து கெட்ட' குடும்பம்! வறுமையின் கோரப்பிடிக்குள், அந்தச் சின்னஞ்சிறு குழந்தை மனதின் அசாதாரணத் துணிவு பெருவியப்பளிக்கின்றதன்றோ!

பட்டின நாகரிகத்தின் எல்லையை, எட்டிப்பிடித்துவிட்ட அந்த ஊரின் மயானத்தில், சிறுவன் சிற்றம்பலம் பணம் தேடுகின்றானாமே! எப்படி? நாள் தவறா விட்டாலும், மாதத்தில் பலபேரைத் தன்னுள் சாம்பர் மேடாக்கி வரும் அந்தப் பயங்கர பூமியில், பணம் விளைகிறதா?

ஏன் விளையாது? வாய்க்கரிசியோடு போடப்படும் சில்லறைக்காசுகள், சுடலையில் பிற கிருத்தியங்களுக்காக வீசப்படும் காசுகள் எல்லாம் தீ மூட்டப்பட்ட பின்னர், பிரேதத்துடன் சேர்ந்து வெந்து, கருகி, உருமாறிக் கறுத்துவிடுமே!

ஏன், அன்றைக்கு வாய்ப்பாடு அட்டை வாங்கச் சிற்றம்பலம் தந்த ஐந்துசதக் குத்தியும் அப்படித்தானே கறுத்திருந்தது. அதனை எதிலோ வைத்து நன்றாக அழுத்தித் தேய்த்து ஒளியேற்ற முயன்ற அவன் முயற்சியின் முத்திரைகூட அதிலே பதிந்திருக்கவில்லையா.....!

சிற்றம்பலம்..... நீ என்ன 'நூதனமான பிறவி'யடா.....! அவன்மீது என்னையறியாமலே ஆழமான பரிவு பிறந்தது. கணித பாடமும், மாணவர்களும் என் மனத்திரையிலிருந்து மறையத்தொடங்கினர்.

"பேய்வாழ் கானகத்தே நின்றாடும் பிராணையல்ல" பணம் தேடும் சிற்றப்பலவனைக் காண என் நெஞ்சுதுடித்தது!

உடல் முழுவதும் சுடலைச் சாம்பர் படிந்த கோலம். கோவணாண்டியாக, கையில் ஒரு நெடிய தடியுடன், சாம்பர் மேடுகளைக் கிளறித், தட்டிச், சில்லறைக் காசுகள் சேர்க்கத் துரித முயற்சியில் தன்னை மறந்து இயங்கிக்கொண்டிருப்பவன் சிற்றம்பலம்!

வாய்பாடு அட்டை, ஐஸ்பழம், எழுதுகோல் இவற்றுக்கு அவனுக்கு சில்லறை வேண்டும். கொடுப்பவர் எவரும் இலர், அவனைப் பொறுத்தவரை.....!

ஆனால், ஊர் அவனைப்போலச் சுடலையாண்டியாகவா இருக்கிறது?

கொளுத்தும் வெயிலிலும் 'வெண்சுருட்டு'ப் பொதிகளையே புகையாக ஊதித்தள்ளும் வாலிபச்சிங்கங்கள், கோகுலகானக் கண்ணனைக் காணச் செல்லும், இராதையைப் போலப்

படமாளிகையில் 'காதல் மன்ன'னைத் தரிசிக்கச் செல்லும் 'வீராங்கனைகள்.....' மண்ணையும் விண்ணையும் ஒன்றாக்கி, மாத மும்மாரி பொழியச் செய்து, நாட்டையே சொர்க்கலோகமாக்கி விடுவோமென மேடையில் முழங்கும் அரசியல் தலைவர்கள் நன்றாக வாழ்கிறார்கள்.

அந்தச் சின்னஞ்சிறு குழந்தை மட்டும், ஊரே அருவருக்கும், வெறுக்கும், நினைத்து நெஞ்சு நடுங்கும், மயான பூமியில் 'சல்லிக்காசுகள்' பொறுக்கப்படாதபாடு படுகிறது!

என்ன உலகம்! இதுவும் ஒரு வாழ்வா? துவிச்சக்கர வண்டியை ஓசைப்படாமல் மெல்ல எடுத்து, பிரதான வீதியில் நிறுத்தி, எனது பயணத்தைத் தொடங்கினேன்.

அவன் - அந்த முயற்சியில் ஆழ்ந்து கிடந்தமையால் என்னைக் காணவே இல்லை. கண்டிருப்பானாயின் என்ன எண்ணுவானோ.....!

பாடசாலைத் தொடக்கமணி ஒலித்து ஓய்ந்தது. வகுப்பு ஆரம்பித்தது. நாலைந்து நாள்களாகச் சிற்றம்பலத்தை அந்தப் பக்கமே காணவில்லை. என்னுள்ளம் அவன் வருகைக்காக ஏங்கித் துடித்தது. அவனுக்கும் எனக்கும் என்ன உறவு? ஆசிரியன் நான். அவன் என் மாணவன், என்னிடம் பயிலும் முப்பது பேரில் ஒருவன்தானே! மற்றையவர் அனைவரிலும் காணாத எதனை அவனிலே காணத் தவிக்கிறேன்?

'சிற்றம்பலம் ஏனோ பாடசாலை வரவில்லை?' 'ஐயா! அவனைப் பேய் அடித்துவிட்டதாம்! ஏதோ காய்ச்சலாகக் கிடந்து புலம்புகின்றானாம். இன்று கடுமையாகி விட்டதனால் அரசினர் மருத்துவமனைக்குக் கொண்டு போயிருக்கிறார்களாம்!' கண்களில் நீர் ததும்ப அவனது பள்ளித் தோழன் இப்படிச் சொன்னான். கூடப் பழகிய குற்றமல்லவா? அந்த மாணவன் நிலை குலைந்து, உளஞ்சாம்பி, உருகினான்.

நான் என்ன மனிதனா? மரக்கட்டையா? என் கண்கள் ஊற்றெடுக்க ஆரம்பித்தன. விம்மி, விம்மி அழவேண்டும்போலிருந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன். மாணவர்களும் என்னை வியப்புடன் பார்க்கின்றனர். எனக்கென்ன, அவன் கதை தெரியாதா? கண்ணாரக் கண்டிருக்கிறேனே அவன் செயலை! பாவம்; திரும்பிவருவானோ, அல்லது திரும்பாமலே போய்விடுவானோ! யாரறிவார்?

பேயோ, பூதமோ இவற்றைப்பற்றி ஆராய வேண்டிய அவசியம் இதுவரை எனக்கு நேரவில்லை. பேயுமில்லை, பூதமுமில்லை என்று அடித்துப் பேசிவிட்டு அந்தரங்கத்தில் 'மாந்திரீகம்' செய்ய ஆள் தேடும் பகுத்தறிவு வாதியுமல்லன் யான்! ஆனால்.....?

சிற்றம்பலம் எப்படி நோயுற்றான்? அவனுக்காக இறைவனை வேண்டிக்கொள்வதைத் தவிர வேறொரு செயலும் எனக்குப் புலப்படவில்லை. அவ்வாறே அம்பலக்கூத்தனை வாயார, நெஞ்சார வழுத்தினேன். அவனருள் செய்வான் என மனந் தேறினேன்.

மனம் ஒருநிலைப்பட்ட உணர்வில், பாடசாலை என்ற நினைவே போய்விட்டது! என்னுள் நானாக விவரிக்கவொண்ணாப் பரவசக் காட்சியில் மூழ்கினேன்.

சூலந்தரித்த சிவன், எமபாசந்தவிர்க்கும் அரன், ஒரு சுடலையாடி, சுடலையாண்டியன்றோ, நெற்றிக்கண் மின்ன, விரிந்த செஞ்சடை வீறுற்றாட, தரித்துள்ள புலித்தோல் விழித்தெனை நோக்க, காதார் குழையாடக் காட்சிதருகின்றான் அகத்தில்.....! புறம் மறைந்துவிட்ட புதுநிலை, பாடசாலை, மாணவர், உலகம் எங்குற்றனரோ....!

காலைநேரம், புதிய மனத்தெளிவுடன் துவிச்சக்கர வண்டியை வேகமாக மிதித்து வருகிறேன். அதோ ஒருதாய் 'பரபரப்பு'டன் என்னை நோக்கி விரைந்து வருகிறாள்.

அவள் - சிற்றம்பலத்தின் அன்னையல்லவா? என்ன செய்தி சொல்வாளோ....! நெஞ்சம் பலமாக அடித்துக் கொள்கிறது.


'ஐயா, என் மகனை நேற்றுத்தான் அரசினர் மருத்துவ மனையிற் கொண்டுபோய்ச் சேர்ந்திருக்கிறேன். கடுமையான காய்ச்சலில் வருந்தியவன். இரவு எவ்வளவோ சுகப்பட்டுவிட்டான். என் உயிர் மீண்டுவிட்டது ஐயா!

அவள் கன்னங்கள் நனைந்தன, நீரினால், என்னுளம் குளிர்ந்தது உவகையால்.

'பலநாள்களாகப் பாடசாலைக்கு வரவில்லை. அதுதான் உங்களிடம் சொல்லிவிட்டு மருத்துவ மனைக்குப் போகலாமென்று வந்தேன்!' அந்தத் தாய் சொன்னாள். சொற்களின் பெண்மையில் தாய்மை பிரவகிக்கிறது.

'கடவுள் கைவிடமாட்டார். போய்வா அம்மா!' அந்த அன்னை மனநிறைவுடன் வேகமாக நடந்தாள். நானும் பாடசாலை நோக்கி விரைந்தேன். இந்தச் சின்னஞ்சிறு சுடலையாண்டியை. அந்தப் பென்னம்பெரிய சுடலையாடி, காப்பாற்றிய செயலை, என் மாணவர்களிடஞ் சொல்லி மகிழவேண்டாமா; என்ன....?

**(புங்குடுதீவின் முதுபெரும் எழுத்தாளரான அமரர் நாவேந்தன் சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம் ஆதியாம் துறைகளில் முத்திரை பொறித்தவர். அவரது சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற 'வாழ்வு' சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்ற சிறுகதை இதுவாகும்.)**



# குங்குமப் பொட்டு

-நாகேசு தர்மலிங்கம்

நான்கு திசைகளிலும் இருந்து வரும் பிரதான வீதிகள் சந்திக்கும் நாற்சந்தி. அந்தச்சந்தியில் சடைத்து வளர்ந்து நிழல் பரப்பிக் கொண்டிருக்கும் ஆலமரம். அதனால் அந்தச் சந்திக்கு ஆலடிச்சந்தியென்றே பெயர் வழங்கப்படுகிறது. அந்தச் சந்தியில் ஒரு பிள்ளையார் கோயில், சங்கக்கடை, வாசிகசாலை, ரீயூசன் சென்ரர், சிறிய பஸ் தரிப்பு நிலையம், நாகமுத்தாச்சியின் தேத்தண்ணிக்கடை, இன்னும் வேறு கடைகள் என்று அமைந்திருப்பதனால் அந்தக்கிராமத்தில் ஒரு சிறிய நகர்த்தன்மையை அந்த ஆலடிச் சந்தியே காட்டுகிறது. கிராமத்தில் வசிக்கும் பெரும்பாலானவர்களின் பொழுது போக்கு இடமே அந்தச் சந்திதான். வெய்யில் வெக்கை தாங்கமுடியாத கோடை காலம் என்றாலும் மழைகொட்டும் மாரிகாலம் என்றாலும் அங்கு வருவோருக்கு அந்த ஆலமரம் குடை விரித்து பாதுகாப்பு வழங்கும்.

இன்றும் வழமைபோல் அந்தக்கிராமத்தின் பொழுது போக்குக்கூட்டம் அந்த ஆலநிழலின் கீழ் நின்று சுகம் காணுகிறது. கிராமத்தின் புதினங்கள், இலங்கை, உலக அரசியல் என்று அவர்கள் வாதப் பிரதிவாதங்களைச் செய்வார்கள். அந்தக்கிராமத்தின் பெரும்பாலான ஆண்கள், கொழும்பு, வெளிநாடு என்றே தங்கள் ஜீவனோபாயத் தொழிலைச் செய்து வருகிறார்கள். இவர்கள் விடுமுறையில் அந்தக்கிராமத்திற்கு வந்துவிட்டால் அந்தச் சந்திக்கு வராமல் இருக்கமாட்டார்கள். அந்தச் சந்திக்கு வந்து அங்குகூடும், நாலுபேரோ வாதப் பிரதி வாதங்கள் செய்தால் முழுக்கிராமத்திற்கும் இன்னார் கொழும்பில் இருந்தோ, வெளிநாட்டில் இருந்தோ வந்து விட்டார் என்று தெரிய வந்து விடும்.

நேற்று இரவு கொழும்பில் இருந்து விடுமுறையில் தனது கிராமத்துக்கு வந்த சிவா தன்னுடைய சயிக்கிளைத் துடைத்துக் காற்றடித்து ஆலடிச்சந்தியை நோக்கி மிதிக்கிறான் தான் ஊருக்கு வந்த செய்தியை அறிவிக்கவேண்டும் என்ற ஆவலைவிட இன்னுமோர் ஆவலே அவனுடைய மனத்தில் கனத்தது. ஒரு கிழமைக்கு முன் கிடைத்த நளாயினியின் கடிதமே அந்தக் கணத்தில் சந்திக்குப் போய் நண்பர்களைப் பார்த்துவிட்டு அப்படியே நளாயினி வீட்டு ஒழுங்கைப் பக்கமாகச் சயிக்கிளைத் திருப்புவதே அவனுடைய நோக்கம். நாளாயினியின் வீடு சற்று தூரத்தே கிராமத்தின் தெற்குப் பக்கதில் அமைந்திருக்கும் அமமன் ஆலயத்துக்கு முன்னால் செல்லும் சிறிய ஒழுங்கைக்குள் அமைந்திருக்கிறது.

கணேச தீபம் ~~~

போட்டு ரவுனில் பஸ்ராண்டில நிற்கிறன் அடுத்த பஸ்ஸில் நீங்க ரவுணுக்கு வாங்கோ, கட்டாயம் வாங்க எதிர்பர்த்துகொண்டு நிற்பன்

உடல் நடுங்க பஸ்தரிப்பின் இரும்புத் தூணை அழுத்திப் பிடித்தபடியே நளாயினி கூறினாள். அந்தக் கிராமத்தில் இருந்து பட்டினத்திற்குச் செல்ல பஸ் ஆடி, ஆடி, பெரிய ஓசையை எழுப்பிக் கொண்டு கரிப் புகையைக் கக்கிக் கொண்டும் வந்து அந்த பஸ்தரிப்பு நிலையத்தில் பிறேக் போட்டது.

"சரி நளா ரவுண் பஸ்ராண்டில நில் நான் அடுத்த பஸ்ஸில் வாறன்." கையசைத்துக் கூறிய சிவா அதிவேகமாக தனது சயிக்கிளை வீட்டை நோக்கி மிதித்தான்.

நேற்று ராத்திரித்தான் கொழும்பில் இருந்து வந்த களைப்போடு இன்று அவசர அவசரமாக ரவுணுக்குச் சிவா வெளிக்கிட்டது அவனுடைய அம்மாவுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. வெளிக்கிட்ட சிவா ரவுணுக்குப் போவதற்காக மீண்டும் ஆலடி சந்தி பஸ் தரிப்புக்கு வந்தான். அவன் வரவும் மற்றுமோர் பஸ் அவனடைய அவசரத்துற்கு ஏற்ப வந்த போதிலும், மெல்ல மெல்ல ஊர்ந்து ரவுணை நோக்கிச் சென்றது. அந்த பஸ்ஸின் வேகத்தைவிட பண்ணைப் பாலத்தினூடாக அவனுடைய மனத்தின் வேகம் பல தடவைகள் பட்டினத்தின் பஸ்தரிப்பு நிலையத்திற்குச் சென்று திரும்பியது. இறுதியாகக் கொழும்பில் ஒவ்வீசுக்கு வந்த நளாயினியின் கடிதம் பற்றிய சிந்தனை தோன்றியது.

"உங்கள் வீட்டில் உங்களுக்குப் பெண் பார்த்துவிட்டார்கள். வெகுவிரைவில் அப்பெண்ணுக்கும் உங்களுக்கும் பதிவுத் திருமணம் நடைபெற உள்ளது. இச் செய்தியை நான் உங்கள் எதிர்கால மனைவி கௌரி மூலமே அறிந்தேன். அவள் எனது முன்னைய நாள் பள்ளித் தோழி...." நீண்ட அந்தக் கடிதத்தின் இந்தளவே அவன் நினைவில் செக்கு மாடாகச் சுழன்றது.

தன்னை அறியாமல் அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. தனது தனிமையிலான சிரிப்பை பஸ்ஸிற்குள் உள்ள மற்றவர்கள் பார்க்காத விதத்தில் சுதாகரித்துக் கொண்டான்.

மாப்பிள்ளைக்குத் தெரியாமல் பதிவுத் திருமணம். யாரந்தக் கௌரி? என்று அம்மா, அப்பா இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே. பஸ்ஸின் கடைசிச் சீற்றில் இருந்த சிலருக்கு ஒருவித ஆத்திர உணர்வும் ஏற்பட்டது.

"சொறி நளா, நான்வந்த பஸ் ஊர்ந்து வந்தது. அதுதான் லேட்டாப்போச்சுது." பஸ்ஸை விட்டிறங்கிய சிவா கூறினான்.

கணேச தீபம் ~~~

"தம்பி நானே உன்னை ஊருக்கு வரச்சொல்லிக் கடிதம் போட நினைச்சனான். நல்ல காலம் நீயே வந்திற்ற. எல்லாம் தெங்கத்திடல் பிள்ளையாற்ற வேலை தான்."

"இப்ப ஏன் பிள்ளையாரை இழுக்கிறீங்க? ஏன் என்னை ஊருக்கு வரச் சொல்ல நினைச்ச நீங்க? அதை முதல்ல சொல்லுங்க."

வெளிக்காட்ட முடியாத ஆத்திர உணர்வுடன் சிவா கேட்டான். "உனக்கு மேற் கூடிய ஒரு நல்ல சம்பந்தம் பாத்திருக்கிறம், பெட்டை வடிவான பெட்டை, நல்ல சீதனம் தாய் தகப்பனும் நல்ல குடும்பம் ஆவணி பிறக்கச் செய்யலாம் எண்டு யோசிக்கிறோம்."

"எனக்கு இப்போதைக்குக் கல்யாணம் வேணாம். கல்யாணம் கட்டிற நேரத்தை சொல்லுவன். புறமோஷன் எக்சாம் எடுக்கவேணும். அதுக்குப் பிறகு தான் கல்யாணம்.

அப்பா சொல்லி முடிப்பதற்குள் சிவா குறுக்கிட்டுக் கூறினான்.

"எனக்கு எல்லாம் தெரியும். உனக்கு இப்ப கல்யாணம் வேணாம் எண்டில்லை. ஆனால் நாங்க பேசிற அந்தப் பெட்டை வேணாம். அவ்வளவுதான்."

"விஷயம் விளங்கினாச் சரி. இனியொண்டும் இதைப் பற்றிக் கதைக்காதீங்க.; "அப்ப அவன் சண்முகத்தின்ர மகளைத்தான் நீ முடிக்கப்போறயா?"

ஜன்னல் ஓரத்தில் இதுவரை நின்ற அம்மாவே வந்து பொறுமை இழந்து கேட்டா.

"ஓம் நான் கலியாணம் கட்டினா அவள் நளாயினியைத் தான் கலியாணம் கட்டுவன். இல்லாட்டி இப்படியே பிரமச்சாரியா இங்க ஊருக்கு வராம அங்க கொழும்பில இருந்திடுவன். சிலவேளை உங்கட கண்ணில் முளிக்காமல் எங்கயாவது வெளிநாடு எண்டு போயிடுவன்."

பெற்றோரின் பதிலை எதிர்பார்க்காமல் சிவா சிறிய தாயாரின் வீட்டை நோக்கி நடந்தான்.

இப்போது சிவா முன்பைப் போல் ஊருக்கு அதிகமாக வருவதில்லை. சம்பளம் எடுத்த மறுநாள் மணியோடருடன் வீட்டிற்கு ஒரு கடிதம் வரும். அவ்வளவுதான் அதேவேளை நளாயினியுடன் உள்ள தொடர்பும் வெறும் கடிதங்களாகவே குவிந்தன. இன்று வந்த கடிதம் சிவாவுக்கு அளவிலாத சந்தோஷத்தை ஏற்படுத்தின. ஓர் ஏக்கத்தையும் தந்தது. அந்தக் கடிதத்தில்... என் சோதனை முடிந்து விட்டதென்றும் இனிக் கொழும்பில் வெள்ளவத்தையில் அக்கா வீட்டில் வந்து தங்கி ஏதாவது படிக்கப் போகிறேன்; என்ற செய்தியும் இருந்தது.

கணேச தீபம் ~~~

"ஐயா என்ன நடந்தது? இதில பச்சைச் சாறியோட வந்த பிள்ளையை ஏனையா ஏத்திக்கொண்டு போறாங்க;

"வேட்டிகட்டியிருந்த வயது முதிர்ந்த ஒருவரிடம் சிவா பதற்றத்துடன் கேட்டான்"

"தம்பி அந்தப் பிள்ளை உங்களுக்குத் தெரிஞ்ச பிள்ளையா?"

"ஓமய்யா என்ன நடந்தது விஷியத்தைச் சொல்லுங்க"

"தம்பி அந்தப் பிள்ளை குங்குமப் பொட்டோடே அம்மன் சிலை மாதிரி வந்தது. பொட்டோட வந்தது அவங்களுக்குப் பொறுக்கயில்லை. ஐடென்ரிக் காட்டக் கேட்டுப்பாத்தினம். வேற கதையிலல்லாமல் ஏத்திக் கொண்டுபோகீனம்"அந்த முதியவர் அப்படிக் கூறியதும் சிவாவுக்குத் தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது.

"ஐயோ என்ர நளாயினி! என்னால தானே உனக்கு இந்தக் கதி, நான்தானே உன்னைப் பொட்டு வைக்கச் சொன்னனான்."


தலையில் அடியாக் குறையாய் புலம்பியபடி நளாயினியின் அக்கா வீட்டை நோக்கி ஓடினான்.

இரண்டு நாட்களுக்குள் சிவா அரைவாசிக்கு மெலிந்து விட்டான். அலுவலகம், சாப்பாடு, நித்திரை, குளிப்பு என்று ஒன்றுமேயில்லை.


நளாயினியை வைத்திருக்கும் இடத்தை பல சிரமத்துக்கு மத்தியில் கண்டுபிடித்து விட்டார்கள். ஒரு நாளில் ஓரிரு வார்த்தைகள் மட்டுமே கதைப்பதற்கு சிவா அனுமதிக்கப்பட்டான்.


நளாயினி வருவதற்கு எல்லாவிதமான முயற்சிகள் செய்தபோதிலும் அவன் மனம் சந்தேகப் புயலில் ஊசலாடியது. அவள் ஊரில் சயிக்கிள் பழகிய காலத்தில் விழுந்து எழும்பிய போது ஏற்பட்ட காயத்தின் உராய்வுகளின் தளும்புகள் இப்போது ஆராயப்படுகின்றனவாம்.

**(அமரர் நாகேசு தர்மலிங்கம் யாழ் புங்குடுதீவு கணேச மகாவித்தியாலத்தின்
பழைய மாணவர், புங்குடுதீவிலும் கொழும்பிலும் தபாலதிபராக கடமையாற்றியவர்.
"அந்நியம்" என்ற அவரது சிறுகதைத் தொகுதியில்
இச் சிறுகதை இடம்பெற்றது.)**



# கட்டுரைகள்





# புங்குடுதீவுக் கல்விப் பாரம்பரியம் அன்றும் இன்றும்

**பேராசிரியர் கா. சுகபாலன்**
*தலைவர் - புவியியற்றுறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

எந்தவொரு நாட்டினதும் அல்லது பிரதேசத்தினதும் சிறந்த பண்பாட்டு வளர்ச்சிக்கும் மக்களது உயர்ச்சிக்கும் அங்கு நிலைபெற்றிருக்கக்கூடிய கல்வி நிலையே அளவுகோலாகக் கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கும் சிறந்த பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கும் முன்னுதாரணமாகத் திகழும் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் கல்வியே மூலவளம் எனக் கருதி முதலிடம் கொடுத்து வருகின்றனர் என்பதில் எவருக்கும் இருவேறுபட்ட கருத்துக்கள் கிடையாது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவகப் பகுதியில் நடுநாயகமாக அமைந்துள்ள புங்குடுதீவுக் கிராமமும் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலையில் வரலாற்றுக் காலம் முதல் சிறப்பான இடத்தில் இருந்துள்ளது என்பதை வரலாற்றாதாரங்கள் மூலமாகவும் செவிவழித்தகவல்கள் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. குறிப்பாக கல்விப் பாரம்பரியத்தினைப் பொறுத்தவரையிலான வரலாறானது செவிவழித் தொடர்ச்சியாகவே இருக்கின்ற நிலையில் ஆங்கிலேயர் ஆட்சியினைத் தொடர்ந்து இக்கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தினைப் பற்றித் தொடர்ச்சியாக அறியக்கூடியதாகவிருந்த போதிலும் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றே கூறல் வேண்டும்.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே புங்குடுதீவுக் கிராமத்திலும் கல்விப் பாரம்பரியத்தினை அறியத் தொடங்கிய காலம்தொட்டு கோவில்களில் புராண படலங்களை விளக்குதல், பிரதேசத்திற்கேயுரிய நாடகக் கூத்துக்களை நடித்துக் காட்டல், நிலாப்பள்ளி, குருகுலப் பள்ளி, திண்ணைப் பள்ளி, கோவில் பள்ளிகள் போன்றவற்றை நல்ல பெரிய ஆசான்கள் நிறுவி சமய இலக்கிய மற்றும் பொதுக் கல்வியினைப் போதித்து கல்விப் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்றதற்கான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது. அச்சுவாகனம் இல்லாத அக்காலங்களில் ஓலைச் சுவடிகளில் எழுதிவைக்கப்பட்ட பல வரலாற்று நிகழ்வுகள் அவற்றினை உரிய முறையில் பராமரிக்காத நிலையில் அவற்றில் பல அழிந்துவிட்டதனால் பல விடயங்களை நாம் தொலைத்துவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் ஆங்கிலேயர் ஆட்சியின் பின்னரைப் பகுதியிலிருந்து இக்கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தினையும் அவற்றிற்காக உழைத்தவர்களையும் அறிந்துகொள்ள முடிகின்றது. 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளில் பாடசாலைகள் உருவானபோதிலும் 20ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியிலிருந்து பாடசாலைகள் பல தோற்றம் பெற்று

வளர்ச்சியடைந்தமைக்கு இக்கிராம மக்கள் கல்வியில் கொண்டிருந்த அதீத அக்கறையே காரணம் எனலாம். குறிப்பாக 1910ஆம் ஆண்டு கணேச வித்தியாசாலை என்ற சைவப் பாடசாலையின் ஆரம்பத்தினை உதாரணமாகக் கொள்ளலாம்.

புங்குடுதீவுக் கிராமத்தின் பொருளாதார சமூக பண்பாட்டு பாரம்பரியமானது தென்னிந்தியாவுடனும் ஏனைய தீவுகளுடனும் நீண்டநெடும் காலமாகத் தொடர்புகொண்டிருந்தது. அந்த வகையில் இத்தீவின் கல்வி மேம்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதற்குப் பலர் பல வழிகளிலும் ஈடுபாடு கொண்டு உழைத்து வந்துள்ளனர் எனினும் அவர்களில் சிலர் பற்றியே அறிய முடிகின்றது. இத்தீவில் ஏழாந்தலைமுறையினரான சட்டம்பி சேதுநாதர் என்பவன் அந்நாளிலே கால்நடையாகக் காசிக்கு யாத்திரை சென்று வந்தனர் எனவும் அவரால் எழுதப்பட்ட புராண காவிய ஏடுகளில் சில இன்றும் அவரது உறவினர்களால் போற்றப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இவர் இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன்னர் பெருங்காடு புட்டினிக்குளத்தின் வடகரையில் திண்ணைப் பள்ளியொன்றினை நிறுவி கல்விபோதித்தார் எனக் கூறப்படுகின்றது. இவர் வழியே சட்டம்பி குமார் என்று செல்லமாக அழைக்கப்பட்ட குமரகுருச் சட்டம்பியார் பல திண்ணைப் பள்ளிகளை நிறுவி தமிழ் கற்பித்துள்ளார். இவர் கவிபாடும் வல்லமை பொருந்தியவராக இருந்துள்ளதுடன் பஞ்சாங்கம் அச்சேறாத அக்காலத்தில் சோதிடம் சொல்லியும் எழுதியுமுள்ளார். இவரது கல்விப் புலமையையும் சோதிட ஆராய்ச்சியினையும் இத்தீவு மக்கள் மட்டுமன்றி நாடே நன்கறிந்திருந்தது. அவரது சேவை முழுநாட்டுக்குமே பயன்பட்டது. அவரைத் தொடர்ந்து பங்குடுதீவு மேற்கில் வாழ்ந்து வந்த பரமானந்த சட்டம்பியார் ஒரு பிறவிப்புலவர். அவர் நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் கவிதை வடிவில்பாடி மகிழ்விப்பதுடன் நாடகப் பாணியிலும் கவிதைகளை ஆக்கும் திறன் கொண்டவர். நெடுந்தீவுக் கடலில் படகு கவிழ்ந்து பல உயிர்கள் பறிபோனது பற்றி கவிதையாக, கண்ணீர்க்காவியம் படைத்ததுடன் அதனை நாடகமாக்கி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார். இவ்வாறாக பல "சட்டம்பியார்கள்" இக்கிராமத்தின் கல்வி விழிப்புணர்வினை மேற்கொண்டு வந்துள்ளனர். எனினும் அவற்றினை ஆவணப்படுத்தக்கூடிய வகையில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

**ஆங்கிலேயர் வருகையினைத் தொடர்ந்து கல்விநிலை:**

1505ஆம் ஆண்டு போர்த்துக்கீசரும் 1658 இல் ஒல்லாந்தரும் 1796இல் ஆங்கிலேயரும் இலங்கையினை பகுதியாகவும் முழுமையாகவும் அதிகாரம் செலுத்தி ஆட்சி செய்து வந்துள்ளனர். முதலிருவரும் கல்வி வளர்ச்சியிலும் பார்க்க தம் தம் சமயங்களைப் பரப்புவதில் அக்கறை கொண்டிருந்தனர். இத்தேவையை முன்னெடுத்துச் செல்லக் கல்வியினை ஒரு கருவியாகக் கையாண்டிருந்தனர். தேவாலயங்களில் சமய போதனைக் கல்வி வழங்கப்பட்ட போதிலும் இத்தீவில் உள்ள மக்களின் சிறு எண்ணிக்கையினரே மதமாற்றத்திற்குட்பட்டனர். ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியில் மதத்திற்கு அப்பால் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்றே கூறல் வேண்டும். அவர்கள் தம்நாட்டில் கைத்தொழில்புரட்சியின் உத்வேகம் காரணமாக

கல்வியில் பெரும் அக்கறை கொண்டவர்களாக இருந்துள்ளமையால் தாம் சென்றடைந்த பிரதேசங்களிலும் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்த்தி வந்துள்ளனர். அந்த வகையில் புங்குடுதீவுக் கிராமம் உட்பட யாழ்ப்பாணத் தமிழர்களின் கல்வியில் குறிப்பாக ஆங்கிலக் கல்வியில் அக்கறைகொண்டுழைத்தனர். இக்கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவம் அவர்களது பொருளாதார மேம்பாட்டுடன் தொடர்புடையதாக அமைந்திருந்தது.

**கிறிஸ்தவப் பாடசாலைகளின் உதயம்:**

புங்குடுதீவுக் கிராமத்தின் கல்வியினை முன்னெடுத்துச் செல்வதில் கல்விக் கூடங்களே பெரும்பங்கு கொண்டுழைத்துள்ளன. புங்குடுதீவு வாழ் மாணவர்களின் கல்வியினை முன்னெடுக்கும் வகையில் ஆங்காங்கே சில அபிமானிகளால் நடாத்தி வந்த கிராமப் பாடசாலைகளையும் அரசாங்க விதிகளுக்கு உடன்பாடற்றவை எனக்கூறி அவற்றைச் செயற்படாது செய்தனர். இக்காலத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் சார்ந்தே ஒரு சில பாடசாலைகள் இயங்கி வந்துள்ளன. இந்நிலையில் 1833 ஆம் ஆண்டு கத்தோலிக்க மிசனரிமார்களால் ஸ்தாபிக்கப்பட்ட றோமன் கத்தோலிக்கப் பாடசாலையே அரசின் ஆதரவுடன் இயங்கியதாகத் தகவல்கள் கூறுகின்றன. இதனைத் தொடர்ந்து 1850ஆம் ஆண்டில் அமெரிக்க மிசனரிகளைச் சேர்ந்தவர்கள் பெருங்காட்டில் ஒரு திண்ணப் பள்ளியினை ஆரம்பித்தனர். அதன் ஆரம்ப கர்த்தா உயர்திரு றிச்சட் கணபதிப்பிள்ளை என்பவராவார். இது 1873ஆம் ஆண்டு புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையாக உயர்வடைந்தது. இதன் தலைமை ஆசிரியராக அவரே கடமையாற்றினார் எனத்தெரியவருகின்றது. இவர் சிறந்த கல்விமான். இவரது மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்றவர்களாக இருந்துள்ளனர். இவரது மாணவர்களில் அமரசிங்க வாத்தியார், நாகலிங்க வாத்தியார், பொன்னையா வாத்தியார், இராமநாத சட்டம்பியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள், இவர்களுடன் நல்லதம்பி வாத்தியார், சரவணமுத்து உடையார், பசுபதிப்பிள்ளை விதானையார் போன்றோரும் கல்விப் பணியை முன்னெடுத்து வந்துள்ளனர்.

மேலும் 1850 - 1870 இற்கும் இடையில் சின்ன இறுப்பிட்டியிலும் மடத்துவெளியிலும் அமெரிக்க மிசன் பாடசாலைகளை நிறுவிய போதிலும் காலத்தினை உறுதிப்படுத்த முடியவில்லை. காலப் போக்கில் மடத்துவெளியில் இயங்கிவந்த அமெரிக்கமிசன் பாடசாலை கமலாம்பிகை வித்தியாசாலையுடன் இணைக்கப்பட்டுவிட்டது. எது எவ்வாறெனினும் கிறிஸ்தவப் பாடசாலைகளும் கிறிஸ்தவ மதத்தினை பின்பற்றியோரும் புங்குடுதீவின் கல்வி வளர்ச்சிக்குத் தம்மாலான பங்களிப்பினை நல்கி வந்துள்ளனர் என்றால் மிகையாகாது. தென்னிந்திய திருச்சபையின் ஆயராகவிருந்த பேராயர் டீ. ஜே. அம்பலவாணர் இவ்வூரைச் சேர்ந்தவர். மேலும் கத்தோலிக்க மதத்தினர் இக்கிராம மக்களின் எண்ணிக்கையில் குறைவாகவிருந்த போதிலும் கல்விப் பணிக்கும் அரும்பெரும் தொண்டாற்றினர். உதாரணமாக திரு. நடராசா, இளைப்பாறிய

அதிபர் சு. யோ. பூராசா, அருட்சகோதரி விக்ரறின் போன்றோர் கல்விப் பணியினை முன்னெடுத்துச் சென்றவர்கள். குறிப்பாக திரு. பூராசா அவர்கள் புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் செயற்பட்டும், அந்தோனியார் தேவாலயத்தினூடாகவும் கல்விப் பணியினை ஆர்வத்துடன் முன்னெடுத்துச் சென்றவர் என்பது குறிப்பிடத்தகக்கது. 1990 களைத் தொடர்ந்து ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் மேற்குறித்த கிறிஸ்தவப் பாடசாலைகள் இயங்கவில்லை

**சைவப் பாடசாலைகளின் தோற்றமும் வளர்ச்சியும்:**

சைவத்தினையும் தமிழையும் வளர்ப்பது மட்டுமல்லாது ஆங்கிலத்தினை சமயநெறி நின்று போதிப்பதற்கு வாய்ப்பில்லாத நிலை காணப்பட்டிருந்த காலப் பகுதியில் நாவலர் பெருமானின் பெருமுயற்சியினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. நாவலரின் தொண்டினை அறிந்து சேர் பொன் இராமநாதன் சைவவித்தியா விருத்திச் சங்கத்தை ஆரம்பித்து பல சைவப்பாடசாலைகளை ஆரம்பித்தார். இதன் தொடர்ச்சியே புங்குடுதீவிலும் சைவப் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு உந்துசக்தியாகவிருந்துள்ளது.

**புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலையின் உதயம் :**

யாழ்பப்ாணக் குடாநாட்டில் சைவப் பாடசாலைகள் சைவவித்தியா விருத்திச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு வருவதை அறிந்த உயர்திரு வ. பசுபதிப்பிளை அவர்கள் அவர்களை அணுகி புங்குடுதீவிலும் ஒரு சைவப் பாடசாலையினை நிறுவித்தருமாறு கேட்டுக்கொண்டார். சேர் பொன் இராமநாதன் அவர்கள் இந்நற்காரியத்திற்கு உடன்பட்டு பாடசாலையை ஆரம்பிக்குமாறு கூறி அதற்கு இயன்றளவு உதவி வழங்குவதாக கூறலானார். இதனை அடுத்து 1910ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3ஆம் திகதி புங்குடுதீவு கிழக்கில் ஸ்ரீகணேச வித்தியாசாலை என்ற பெயர் கொண்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அதன் தலைமை ஆசிரியராக உயர்திரு கா. நமசிவாயபிள்ளை அவர்கள் கடமையாற்றினார். இப்பாடசாலை செயற்பட்டுவந்த போது நிதிக்கஷ்டத்தினாலும் மாற்றாரின் அரசியல் தலையீட்டினாலும் நிலைகுலையவே உயர்திரு வ. பசுபதிப்பிள்ளை அவர்களின் பெரும் முயற்சியினால் 1914ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆம் திகதி அரசின் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இப்பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வரவே 1923ஆம் ஆண்டு உயர் வகுப்புக்களைக் கொண்ட மத்திய பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது. 1910 - 1990 ஆம் ஆண்டு வரையும் மிகச் சிறப்பான வளர்ச்சியை எய்தியதுடன் இங்கு கற்ற மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிகவுயர்ந்த பதவிகளை அலங்கரித்து வந்துள்ளனர். 1991ஆம் ஆண்டு இத்தீவிலிருந்து மக்களின் ஒட்டுமொத்த இடப்பெயர்வால் இப்பாடசாலை நிலைகுலைந்த போதிலும் 1996ல் இருந்து சொந்தக் கட்டடத்திலேயே இயங்கி கல்விப் பணியினை முன்னெடுத்து வருகின்றது.

**எனைய பாடசாலைகளின் வளர்ச்சி:**

கணேச வித்தியாசாலையினைத் தொடர்ந்து இதேகாலப் பகுதியில் பராசக்தி வித்தியாசாலையினை ஆரம்பித்தனர். 1914ஆம் ஆண்டு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாசாலையும், 1926 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையும் ஆரம்பிக்கப்பட்டன எனத் தெரிய வருகின்றது. இதனையடுத்து 1925 - 1939ஆம் ஆண்டுகளுக்கிடையில் சண்முகநாதன் வித்தியாசாலை (1925), சேர் துரைசாமி வித்தியாசாலை (13.11.1939), திருநாவுக்கரசு வித்தியாசாலை (1935), ராஜராஜேஸ்வரி வித்தியாசாலை (1937), கமலாம்பிகை வித்தியாசாலை (16.9.1935) எனப் பல சைவப் பாடசாலைகள் புங்குடுதீவு மண்ணில் ஸ்தாபிக்கப்பட்டன.

இலவசக் கல்வியின் தந்தையெனப் போற்றப்படும் சி. டபிள்யூ. கன்னங்கரா என்பவர் மத்திய மகா வித்தியாலயம், கனிஷ்ட வித்தியாலயம் என நாடு முழுவதும் ஆரம்பித்து இலங்கை வாழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரம் ஊட்டியவர். அந்தவகையில் அப்போதைய தீவுத்தொகுதி சட்டசபை உறுப்பினர் சேர் வைத்திலிங்கம் துரைசாமி, திரு. வ. பசுபதிப்பிள்ளை திரு. ஆ. சரவணமுத்து, திரு. க. யோகுப்பிள்ளை போன்றோரது பெரு முயற்சியின் விளைவாக புங்குடுதீவு மகா வித்தியாலயம் 17.01.1946 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வித்தியாலயம் ஆரம்பத்தில் ஸ்ரீ கணேச வித்தியாசாலை வளாகத்திலேயே இயங்கி வந்த போதிலும் புங்குடுதீவு மக்களால் போற்றிப் புகழப்படும் திரு. அம்பலவாணர் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தற்போதைய அமைவிடத்திற்கு 0303.1948 ஆம் ஆண்டு மாற்றப்பட்டு இன்று வரை சிறப்பான பணியினை இக்கிராம மக்களுக்கு வழங்கி வருகின்றது. சுதந்திரத்தினைத் தொடர்ந்து குறிக்காட்டுவான் அரசினர் பாடசாலை (1957) அரியநாயகன்புலம் அரசினர் பாடசாலை 3.5.1948 என்ற இரு பாடசாலைகளை அரசாங்கம் ஸ்தாபித்தது. இந்நிலையில் புங்குடுதீவில் 15 பாடசாலைகள் இயங்கிய நிலையில் இங்கு வாழ்ந்த மக்கள் ஆரம்பக் கல்விக்கு மேல் கல்வியினை தமது சூழலிலேயே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிட்டியது என்றே கூறல் வேண்டும்.

**கல்விப் பாரம்பரியத்தின் முன்னோடிகள் :**

20ஆம் நூற்றாண்டின் முதல் காலப் பகுதியில் திருவாளர் சி. கணபதிப்பிள்ளை, வைத்தியர் வே. கணபதிப்பள்ளை, ஆசிரியர் நீ. சேதுபதி, நீ. ஆறுமுக வாத்தியார், நா. தில்லையம்பல வாத்தியார், நாகமணியர், நல்லதம்பி வாத்தியார் போன்ற பலர் கல்விப் பாரம்பரியத்தினை முன்னெடுத்துச் சென்றுள்ளதுடன் மக்களால் மதிக்கப் பெற்றவர்களாக இருந்துள்ளனர். மேலும் புங்குடுதீவினைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கை வதிவிடமாகும் பொண்ட வி. கந்தப்பிள்ளை என்பவர் நாவலர் பெருமானுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தவர். நாவலர் வழியில் சைவத்தையும் தமிழையும் தீவக மக்களுக்கு வளர்த்த பெருமை இவருக்கேயுரியது. இக்காலத்தில் புங்குடுதீவில் உயர்திரு வ. பசுபதிப்பிள்ளை விதானையார் சரவணமுத்து உடையார் போன்றோர் அவர் வழி நின்று சைவத்திற்கும் தமிழிற்கும் அருந்தொண்டாற்றியதுடன்

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

புங்குடுதீவுக் கிராமத்தில் பலர் சட்டத்தரணிகளாக தம்மை உயர்த்தி நீதிச்சேவையிலும் பொதுச் சேவையிலும் தமது பங்களிப்பினை நல்கி வந்துள்ளனர். இவர்களில் காலஞ்சென்ற திரு. ப கதிரவேலு அவர்கள் முக்கியமானவராவார். தீவக கூட்டுறவு வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர். திருவாளர்கள் மு. நேமிநாதன், மா. தியாகராசா, மற்றும் காலஞ்சென்ற எஸ்.கே. மகேந்திரன் போன்றோர் ஏனையவர்களாவர். கல்விப் புலமையுடன் கூடிய பலர் கிராம, பிரதேச விருத்தி கருதி, அரசியலில் ஈடுபட்டோர் இக்கிராமத்தில் பலர் வாழ்ந்துள்ளனர். குறிப்பாக கிராம சபைத் தலைமைப் பொறுப்பினை ஏற்று கிராம வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்கள் திருவாளர்கள் வ. பசுபதிப்பிள்ளை விதானையார், ச. அம்பலவாணர், அதிபர் க. செல்லத்துரை, அதிபர் வீ.வ. நல்லம்பி, அதிபர் எஸ். சபாரத்னம் (பெரிய சபா வாத்தியார்) வே.சி. அம்பிகைபாகன் (குமாரசாமி), கு.வி. தம்பித்துரை, கா. மதியாபரணம் போன்றவர்களைக் குறிப்பிட்டுக்கூற முடியும். இவர்கள் தவிர பாராளுமன்றத் தேர்தலில் க. அம்பலவாணர் (பெரியவாணர்) எஸ். அமரசிங்கம், வீ.வ நல்லதம்பி, ப. கதிரவேலு, ப. கனகலிங்கம் என்போர் போட்டியிட்டபோதிலும் வெற்றிபெறவில்லை. இருப்பினும் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் திரு. வே. க. சோமசுந்தரம் அவர்கள் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவுக் கிராமத்தின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியவர்கள் திரு. க. அம்பலவாணர் (பெரியவாணர்), திரு. ச. அம்பலவாணர் ஆகிய இரட்டையர்கள். இவ்விருவரும் தமது வாழ்நாள் முழுவதும் இக்கிராமத்தின் வளர்ச்சியையே கருத்திற்கொண்டு உழைத்தவர்கள். இவ்விருவரும் அன்று இக்கிராமத்தில் பிறந்திருக்காது விடின் இன்றும் நாம் தோணியில்தான் பிரயாணம் செய்துகொண்டிருப்போம். சிறு திருத்த வேலைகளுக்குக் கூட பணம் ஒதுக்கும் நிலையில்லாத இன்றைய சூழலைக் கருத்திற்கொண்டு நோக்கின் மூன்று மைல் பாலத்தினை போட்டு மக்களை வீதிப் போக்குவரத்தினூடாக பயணிக்க வைத்த அந்த பெருமகன்களுக்கு இக்கிராம மக்களாகிய நாம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளோம். அவர்களுக்கு மடத்துவெளிப் பாலத்திற்கு அருகில் சிலை நிறுவி புகழ்பாட வேண்டும்.

**இலக்கியத்துறையில் புகழ் பெற்றவர்கள்:**

இலக்கியத்துறையில் ஈழத்திலும் சர்வதேசத்திலும் புகழ்பெற்றவர்கள் பலர் இக்கிராமத்தினைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் முதன்மையான ஸ்தானத்தில் விளங்குபவர் அமரர் மு. தளையசிங்கம் அவர்களாவர். இவரது இலக்கிய ஆய்வுகள் பல்கலைக்கழகங்களின் இலக்கிய விற்பன்னர்களால் ஆய்வுப் பொருளாகப் போற்றிப் புகழப்படுகின்றது. இவைதவிர நாவேந்தன், தம்பிஐயா தேவதாஸ், நா.க. பத்மநாதன், க. திருச்செல்வம், த. இளங்கோவன், ஐ. சிவசாமி, மு.நேமிநாதன், இந்துமகேஸ், த. சிவதாசன், எஸ்கே. மகாலிங்கம், சோம சச்சிதானந்தன், க. செல்வரத்தினம், எஸ். எம். தனபாலன், சித்ராமணாளன், ரவீந்திரன், நா. க. சாந்தலிங்கம், ஆர்.ஆர். பிரபா, வை.த. தளையசிங்கம், சி. சுந்தரதாசன், சு. கோகுலதாசன், மு. கோவிந்தன், ரஞ்சித் ரவீந்திரன், பாரதி கண்ணம்மா போன்ற பலர் ஆக்க இலக்கியம் படைத்து புகழ் பெற்றுள்ளனர்.

கணேச தீபம் ~~~

**இடப்பெயர்வும் கல்வி நிலையும்:**

1991ஆம் ஆண்டு இக்கிராமத்திலிருந்து ஒட்டுமொத்தமாக மக்கள் இடப்பெயர்வினை மேற்கொண்டபோது சகல பாடசாலைகளும் தவிர்க்க முடியாத நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் புங்குடுதீவு மகாவித்தியாலயம் மட்டும் இடப்பெயர்வுக்குட்பட்ட மாணவர்களைக் கருத்திற்கொண்டு இயங்கிவந்தது. எனினும் 1996ஆம் ஆண்டு தீவுப் பகுதிக்கான தரை வழிப்பாதைத் தொடர்பு மீண்டும் உருவாகவே இடம்பெயர்வினை மேற்கொண்ட மக்களில் கணிசமானோர் மீளக் குடியேறியதன் விளைவாகப் புங்குடுதீவில் ஐந்து பாடசாலைகளை கல்வி இலாகா இயங்க வைத்தது. மகாவித்தியாலயம், கணேச வித்தியாலயம், சித்திவிநாயகர் வித்தியாலயம், சுப்பிரமணிய வித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம் என்பனவே அவையாகும். 2009ஆம் ஆண்டு மே மாதம் வன்னியில் நிகழ்ந்த இறுதி யுத்தத்தினை அடுத்து இவ்வூரைச் சேர்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் இக்கிராமத்திற்கு மீளவே 2010 ஆம் ஆண்டு தை மாதம் முதல் சேர். வை. துரைசுவாமி வித்தியாலயத்தினை கல்வி இலாகா மீளத் திறக்க அனுமதியளித்துள்ளது. இவை தவிர 9 பாடசாலைகள் இன்னும் செயலிழந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

**புலம்பெயரந்த கிராம உறவுகளின் கல்வி நிலை:**

புங்குடுதீவுக் கிராமத்திலிருந்து ஏறத்தாழ 12000 பேர் சர்வதேசங்களில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் கணிசமானோர் நலிந்து போயுள்ள கிராம வளர்ச்சிக்கு தம்மாலான உதவிகளைப் புரிந்து வருகின்றனர். மேலும் இக்கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் அவர் தம் வாரிசுகள் தாம் வாழும் நாடுகளில் உயர் கல்வித் துறையிலும் தொழில் வாய்ப்பிலும் மிகச் சிறப்பானவர்களாக தம்மை அடையாளம் காட்டி வருகின்றனர். பலர் மிகச் சிறந்த மருத்துவர்களாகவும் பொறியியலாளர்களாகவும் சட்டத்தரணிகளாகவும் தகவல் தொழில்நுட்பவியலாளர்களாவும் ஏனைய துறைசார் வல்லுநர்களாகவும் மிளிர்ந்து வருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அவர்களது முழுமையான பட்டியல்கள் உரியவாறு கிடைக்கப்பெறாதுள்ளமை ஒருபுறமிருக்க கிடைக்கக்கூடிய பட்டியல் மிக நீளமானதாகவிருப்பதனாலும் அதனை இக்கட்டுரையில் குறிப்பிட்டு கூறமுடியவில்லை.

**இடப்பெயர்வின் பின்னரான கல்வி நிலை:**

1991ம் ஆண்டில் நிகழ்ந்த இடப்பெயர்வின் விளைவாக வசதி படைத்த, வெளிநாட்டுத் தொடர்பினைக் கொண்டவர்களின் இடப்பெயர்வானது பெருமளவிற்கு நிரந்தர இடப்பெயர்வாகவே மாறிவிட்டது. எனவே மீள் இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களில் பெரும்பாலானோர் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்ந்துவரும் மக்களாவர். இவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில்

பெருமளவிற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாக இருக்கவில்லை. அதேவேளை பாடசாலைகள் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே இயங்கி வருகின்றமையால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கவில்லை. அதாவது போக்குவரத்து பிரச்சினை பாதுகாப்புக்கெடுபிடி பெற்றோரின் அக்கறையின்மை, மின்சார வசதியின்மை, கற்றலுக்கான சூழல் குடும்பங்களில் காணப்படாமை, பெரும்பாலான ஆசிரியர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வருகை தரல், அவர்களது போக்குவரத்தில் ஏற்படக்கூடிய தாமதங்கள் போன்ற பல காரணிகள் மாணவர்களின் கல்விக்கான சூழலை பெரிதும் பாதிப்பனவாக அமைந்திருக்கின்றன.

எவ்வாறெனினும் வன்னி யுத்த முடிவும் ஆறாவது ஜனாதிபதித் தேர்தலும் தீவுப் பகுதிக்கான போக்குவரத்தில் கணிசமான மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதாவது பாதுகாப்புக்கான பரிசோதனைகள் கைவிடப்பட்டதன் விளைவாக மக்கள் விரைவான போக்குவரத்தினை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில் மக்கள் மீள் இடப்பெயர்வும் நகரத்துடனான தொடர்புகளும் அதிகரிக்கும் பட்சத்தில் கல்வி நிலையிலும் மாற்றத்தினை ஏற்படுத்த வாய்ப்புண்டு எனக் கொள்ளலாம்.

**கல்வி வளர்ச்சியில் சர்வதேச உள்நாட்டு உதவிகள்:**

புங்குடுதீவுக் கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு உள்நாட்டிலிருந்தும் சர்வதேசத்திலிருந்தும் காலத்துக்குக் காலம் உதவிகள் கிடைக்கப் பெற்று வருகின்றன 1960களின் முற்பகுதிகளில் திரு. கா. மதியாபரணம் அவர்களின் தலைமையின் கீழ் புங்குடுதீவுக் கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் செயலாளராக முன்னாள் அதிபர் சு. யோ. பூராசா அவர்கள் கடமையாற்றினார். இக்கழகத்தின் வாயிலாக புங்குடுதீவுப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பல்வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. 2000ஆம் ஆண்டில் திரு. வி.ரி. தமிழ்மாறன் அவர்களின் தலமையின் கீழ் செயலாளராக திரு. இராமலிங்கம் அவர்களையும் பொருளாளராக ஆன்மீக துணைப் பேராசிரியர் திரு. முருகானந்தன் அவர்களையும் கொண்ட கொழும்பு - புங்குடுதீவு அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர். மேலும் வடஇலங்கை சர்வோதயத்தின் அறங்காவலர்களின் தலைமையின் கீழ் மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருவதோடு கல்வி வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வருகின்றனர். குறிப்பாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் கிராமத்தை நேசிக்கும் உறவுகளின் உதவியைக்கொண்டு மாணவர்களுக்கான போசாக்குத் திட்டம், கற்றல் உபகரணங்களை வழங்கும் திட்டம், குடிநீர்த்திட்டம், துவிச்சக்கர வண்டி வழங்கும் திட்டம், கணனிக் கற்கைத்திட்டம், புலமைப்பரசில் திட்டம், பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்களுக்கான சுய உதவித்திட்டம் போன்ற நலத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

புங்குடுதீவுப் பாடசாலைகள் பலவற்றில் நன்னீர்ப் பிரச்சினை உண்டு. 1971ஆம் ஆண்டு புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவர்களுக்கு நன்னீர் வழங்கும் முகமாக ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய வளவிலிருந்து குழாய் வழியாக மகா வித்தியாலயத்திற்கு குடிநீர்த் திட்டத்தினை செயற்படுத்தியவர் உயர்திரு நா. க. மயில்வாகம் என்பவராவார். இது காலத்தின் தேவையாகப் போற்றப்பட்ட போதும் காலப்போக்கில் செயலிழந்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. 2002இல் புங்குடுதீவைச் சேர்ந்த கல்விப் புலத்தோடு தொடர்புடையவர்களினால் புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச் சபை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு பாடசாலைகளின் வளர்ச்சியிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலும் அதீத அக்கறையுடன் செயலாற்றி வருகின்றனர். மேற்குறித்த நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு புலம்பெயர்ந்த மக்களினதும் வர்த்தகர்களினதும் உதவிகள் பெருமளவுக்குக் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**எதிர்காலக் கல்வி நில**

இக்கிராம கல்வியில் ஆர்வம்கொண்டோர் மற்றும் அரச சார்பற்றோர் நிறுவனங்கள் ஊக்கமும் ஆக்கமும் கொண்டு உழைத்து வருகிற போதிலும் மாணவர்களின் தேவையினை பூர்த்தி செய்வதாகவில்லை என்றே கூறல் வேண்டும். குறிப்பாக பெற்றோரின் வறுமை, பிள்ளைகள் கல்வியில் அக்கறையின்மை, போக்குவரத்துப் பிரச்சினை, கல்வி கற்பதற்கான சூழல் வீடுகளில் காணப்படாமை போன்ற பலவற்றிற்கு தீர்வு காணப்படல் வேண்டும். நாட்டில் ஏனைய பகுதிகளில் தனியார் கல்வி நிறுவனங்கள் பெரும் பங்கு வகித்து வருகின்றன. ஆனால் இக்கிராமத்தில் தனியார் கல்வி நிறுவனங்களை உருவாக்கி மாணவர்களின் கல்வியில் ஊக்கம் கொள்ள வைக்க வேண்டும். அது மட்டுமல்லாது ஆசிரியர்கள் மாணவரின் கல்வியில் மன நிறைவு தரக்கூடிய வகையில் செயற்படும்போது கல்விநிலை உயர்வடைய வாய்ப்புண்டு. கல்வி அமைச்சும் பின்தங்கிய இக்கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சியில் அக்கறை கொள்ளல் அவசியமாகின்றது. குறிப்பாக ஆசிரியர்களுக்கான வதிவிடங்களை உரிய வசதிகளுடன் அமைத்துக்கொடுப்பது காலத்தின் தேவையாகவுள்ளது. அதுமட்டுமல்லாது 21ஆம் நூற்றாண்டுக்கான சர்வதேச கல்வி முறையை மேற்கொள்வதற்கேற்ற அடிப்படைக் கல்வி குறிப்பாக ஆங்கிலம் கணனி போன்றவற்றை மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். இதுவே இக்கிராமத்தின் இன்றைய தேவையாகவுள்ளது.



# புங்குடுதீவிலே நிலவி வரும் சமய பண்பாட்டு மரபுகள் – ஒரு நோக்கு

**– கலாநிதி வி. சிவசாமி**
*ஓய்வுபெற்ற பேராசிரியர்*

யாழ்ப்பாணக் குடாநாடு போன்று, இதனையடுத்துள்ள பல தீவுகளும் நீண்டகால சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்டுள்ளன என்பது இலக்கிய நூல்கள், தொல் பொருளியற் சின்னங்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இத்தீவுகள் இன்றைய காலத்திலும் பார்க்க முன்னர் கூடுதலான நிலவளம், நீர்வளம், இயற்கை வனப்புக் கொண்டிருந்தன. இதனாலே தான் மக்கள் இவற்றிலே நீண்டகாலமாக வாழ்ந்து வந்துள்ளனர். இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்டகால போர்ச்சூழ்நிலை, அமைதியின்மை காரணமாக இவை இன்று நன்கு பொலிவிழந்து காணப்படினும் இவற்றின் முன்னாள் சிறப்புகளை நினைவு கூருதல் நன்று.

இத்தீவுகளில் ஒரு முக்கிய தீவாக வேலணைத்தீவு(லைடன் தீவு) க்கும் நயினாதீவுக்கும் இடையிலே புங்குடுதீவு உள்ளது. இஃது இரண்டு தீவுகளுக்கு இடையில் இருப்பதால் ஒல்லாந்தர் இதனை "மிடில் பேர்க்" என அழைத்தனர். புங்கு எனும் மரம் அல்லது பிரியங்கு எனும் கொடி இங்கு காணப்பட்டமையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். எனக் கருதப்படுகின்றது. இது 11.2 சதுரமைல் பரப்பு கொண்ட "ப" கரவடிவிலானது. இங்குள்ள மண் பொதுவாகச் சாம்பல் நிறமுடையதாகும். சில இடங்களிலே குறிப்பாக வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு கரையோரமாக மணலும் காணப்படுகின்றது. இத்தீவில் பல இடங்களில் சிறிய, பெரிய குளங்கள் உள்ளன. இக்குளங்கள் முன்னர் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தன. இதனால் நீர்வளம் - குறிப்பாக நன்னீர் வளம் குறிப்பிட்ட அளவு பேணப்பட்டது. ஆனால் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிவை படிப்படியாகக் கவனிக்கப்படவில்லை. இப்போக்கும், பொதுவாக மழைவீச்சிக்குறைவும், வேறு சில காரணங்களும் நன்னீர் வளத்தினை நன்கு பாதித்துள்ளன. பொதுவாக மழைக்காலத்திலே நன்னீர் பல இடங்களிலும் கிடைக்கும். இதைப் பயன்படுத்தி அங்குமிங்கும் உள்ள தோட்டங்களிலே கத்தரி, மிளகாய், பாகல், புடோல், மரவள்ளி, புகையிலை முதலியன குறிப்பாக 1970கள் வரை பயிரிடப்பட்டு வந்தன. அதேவேளையிலே வயல்களிலே நெல்லும், மேட்டு நிலங்களிலே வரகு, எள்ளு, பயறு, உழுந்து முதலியனவும் பயிரிடப்பட்டன. குறிப்பிட்ட சில ஏனைய நிலங்களிலிவை பச்சைப்பசேல் எனக் காணபதற்கு அழகாக இருக்கும். அறுவடை காலத்திலே பல இடங்களிலே நெல், வரகு சூடுகளைக் காணலாம். இந்தக் காட்சி இன்றைய தலைமுறையினருக்குப் புதினமாக மட்டுமன்றி நம்பமுடியாத ஒன்றாகவும் இருக்கலாம். எனினும் இவை உண்மையே. இதற்கான

கணேச தீபம் ~~~

எனவே ஆதிகாலம் தொட்டு இங்கு ஓர் ஆன்மீக பாரம்பரியம் தொடர்ந்து நிலவி வருவது குறிப்பிடற்பாலது. இத்தகைய பாரம்பரியம் ஏனைய தீவுகள் சிலவற்றிலாவது நிலவுகின்றது. மதங்கள் வேறுபடினும் வழிபடுவோன் நாடும் இறைவன் ஒருவனே; ஆன்மீகமும் ஒன்றே.

கோவிலே இந்துப் பண்பாட்டின் நிலைக்களம். வேற்று நாட்டவரின் (போர்த்துக்கீசர், ஒல்லாந்தர்) ஆதிக்கத்தாலும், மக்கள் சமய மரபுகளை நன்கு பேணாமையாலும் பிரித்தானியர் ஆட்சிக்கு (கி.பி.19ஆம் நூற்றாண்டு) முற்பட்ட காலங்கள் பற்றி நன்கு அறிய முடியாதுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல கோவில்கள் போல இங்குள்ள பல கோவில்கள் 1800-1860க்குமிடையில் அமைக்கப்பட்டன என்பது 1890ஆம் ஆண்டில் அரசாங்க ஆதரவில் எழுதப்பட்ட யாழ்ப்பாணக் கோவில்களின் பதிவேட்டின் மூலம் அறியப்படுகின்றது. இதன்படி புங்குடுதீவு கிழக்கிலே 12 ஆலயங்களும் மேற்கிலே 8 ஆலயங்களும் அறியப்படுகின்றன. இவற்றிலே பெரும்பாலும் ஒரு நேரப்பூசை நடைபெற்றது. சில கோவில்களிலே நவராத்திரி விழா, மகோற்சவம், புராணபடனம் முதலியன இடம் பெற்றன. சில மண்ணினாலும், வேறு சில கல்லினாலும் அமைக்கப்பட்டிருந்தன.

கோவில் பற்றிய விபரங்களிலே பொதுவாக அதனை நிறுவியவர் பெயர், நடத்துபவர்(மனேஜர்) பெயர், நிறுவப்பட்ட ஆண்டு, பூசை, திருவிழா (நடைபெற்றால்) அதற்குச் சமூகமளித்தோர் தொகை முதலியன ஓரளவாவது இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டுகளாகப் பெருங்காடு கந்தசுவாமி கோவில் (1805) அமைத்தவர் முருகர் காசிநாதர், மனேச்சர் விசுவநாதர் நாகநாதன், கல்கட்டடம், ஒரு நேரப்பூசை, 500 மக்கள் (தேரோட்டத்தின் போது) பங்குபற்றினர். கண்ணகை அம்மன் கோவில் (1800) அமைத்தவர்கள் நரசிம்ம முதலியார் முத்துக்குமாருவும் மற்றையோருமாவர். கல்கட்டடம். ஒருநேரப் பூசை, தேரோட்டத்திற்கு 800 மக்கள் பங்கு பற்றினர். போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இப்பதிவேட்டில் இடம் பெறாத சில கோவில்களும் இருந்துள்ளன. இக்காலப்பகுதியிலே (1800 -1860) பல கோவில்கள் அமைக்கப்பட்டமையை நோக்கும்போது நாவலர் பெருமான் காலத்திலும், அவருக்குச் சற்று முன்பும் ஏற்பட்ட இந்து சமய விழிப்புணர்வின் தன்மையை அறியலாம். இன்று சிறிதும் பெரிதுமாகச் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆலயங்கள் உள்ளன. இவற்றுள் ஆகமச் சார்பான, ஆகமச் சார்பற்ற கோவில்களும் அடங்கும்.

19ஆம் நூற்றாண்டிலமைக்கப்பட்ட கோவில்கள் பெரும்பாலும் சிறியனவாக இருந்தன. அக்காலப் பொருளாதார நிலையிலே பாரிய கட்டடங்கள் கொண்ட கோவில்களை அமைக்க முடியாது. ஆனால் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒருசாரார் தென்னிலங்கையிலே குறிப்பாக வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். மேலும் ஒருசாரார் மலேசியாவிற்கும் சென்றனர்.

கணேச தீபம் ~~~

இவர்களுட் பலர் சிறந்த புராணக் குறிப்பாகக் கந்தபுராண வித்தகர்கள். நாவலர் போற்றிய கந்தபுராண கலாசாரம் இங்கும் நன்கு போற்றப்பட்டது. இங்குள்ள சில கோவில்களிலே கந்தபுராண படனமும் பயன் சொல்லுதலும் ஆண்டுதோறும் பல்லாண்டுகளாக நடைபெற்றன. நாவலரின் சிஷ்யபரம்பரையினர் சிலர் இங்கு வாழ்ந்தனர். திரு.கந்தப்பிள்ளை வேலணையிலே வாழ்ந்தவராயினும் அவரின் முன்னோர் இவ்விடத்தைச் சேர்ந்தவர்கள். வேலணையைச் சேர்ந்த "சைவ"நாகலிங்கம் என்பவரிடம் மேற்குறிப்பிட்ட பலர் கற்றனர்.

புராணபடனம் சமய அறிவை மட்டுமன்றித் தமிழறிவையும் மக்களிடத்தே வளர்க்க நன்கு உதவிற்று. கந்தபுராணத்தை செவிவழியாக கேட்டு மனனம் செய்த ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் இருந்தனர். கந்தப்புராணத்தை விடப் பெரியபுராணம், திருவாதவூரர் புராணம் முதலியனவும் சைவத்திருமுறைகளும் நன்கு பாராயணம் செய்யப்பட்டன. சமய அனுஷ்டானம், விருந்தோம்பல் நன்கு போற்றப்பட்டன.

சைவசமயம், சைவசித்தாந்தம் பற்றிய சில நூல்களை மேற்குறிப்பிட்ட சிலர் இயற்றியுள்ளனர். திரு.சி. இ.சதாசிவம் பிள்ளை ஆசிரியர் திருக்கேதீச்சரத்திலுள்ள அம்பாள் பற்றி 'கௌரியம்மை பிள்ளைத் தமிழ்' எனும் நூலையும் வேறு சிலவற்றையும் எழுதியுள்ளார். வித்துவான் அ.கனகசபை சைவசித்தாந்த நூல்கள் சிலவற்றிற்கு உரை எழுதியுள்ளார். இவர்களிருவரும் கவிஞர்களாக கோவில்கள் பற்றிய பாடல்களும் இயற்றியுள்ளனர். திரு.அ.கனகசபை புங்குடுதீவு இடப்பெயர்கள் பற்றி ஓரளவு ஆய்வு செய்தவர். காந்தீயவாதியாகச் சமூகச்சீர்திருத்தத்திலும் ஈடுபட்டவர். சி.குருமூர்த்தி சாஸ்திரியார் அறிவானந்த ஞானகுருதீபம் எனும் நூலினை 1940லே மலேசியாவிலே வெளியிட்டுள்ளார். இவரும் புங்குடுதீவிலுள்ள சில ஆலயங்கள் பற்றிப் பாடல்களையும், செல்வசந்நிதி முருகன் பற்றிய "நான்மணிமாலை" யும் இயற்றியுள்ளார். 19ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த இராமலிங்கம் சட்டம்பியார் கேரநகர் (கேரதீவு) அரிகரபுத்திரனார் (ஐயனார்) பற்றிப் பதிகம் பாடியுள்ளார்.

பிரபல எழுத்தாளர்களான திரு.தளையசிங்கமும் அவரின் சகோதரரான பொன்னம்பலமும் ஆன்மீகத்திலும் ஈடுப்பட்டுவந்தனர். பிரபல தமிழ்ப் பேராசானும், சைவசித்தாந்த வித்தகருமான மறைமலை அடிகளின் (சுவாமி வேதாசலத்தின்)தாயார் இவ்வூரைச் சேர்ந்தவர் எனவும், அவருடைய தாயார் இங்கு வாழ்ந்த போது மகன் அவருக்கு உதவி செய்ததாகவும் அமரர் வித்துவான் அ.கனகசபை கட்டுரை ஆசிரியருக்கு நம்பகமாகக் கூறியுள்ளார். இத்தீவிலே நிலவிவரும் ஞான, ஆன்மீக பாரம்பாரியத்திற்கு எடுத்துக்காட்டாகப் பிறிதொரு முக்கியமான நிகழ்வினையும் குறிப்பிடலாம். அதாவது சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே இலங்கைத் தமிழ் மக்கள் பலர் தமிழரின் நலனுக்காக ஒரு பெரிய யாகம் செய்யத் தீர்மானித்தனர். அதனை எந்த

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

அவரின் சோதிட, வைத்திய மரபினைத் தொடர்ந்துள்ளனர். இலக்ஷ்மணப்பிள்ளையின் பேரனாகிய கலாநிதி.கா.சிவகடாட்சம் தம் முன்னோரைப் பின்பற்றி தழிழர் மருத்துவம் அன்றும் இன்றும் எனும் தலைப்பிலே மேலைத்தேய மருத்துவத்துடன் இதனை ஓரளவு ஒப்பிட்டு ஒரு சிறந்த ஆய்வு நூலாகவும் கைந்நூலாகவும் எழுதியுள்ளார்.

திரு.சி.குருமூர்த்தி சாஸ்திரியார், திரு.சி.கணபதிப்பிள்ளை, திரு. தம்பிப்பிள்ளை முதலியோரும் பிரபல வைத்தியர், சோதிடர்களாகச் சென்ற நூற்றாண்டிலே விளங்கினர். திரு. குருமூர்த்தி சாஸ்திரியார் 'அநுபவ வைத்தியம்' எனும் தலைப்பிலே தமது அநுபவவாயிலான மருந்துவமுறை பற்றி எழுதிய கையெழுத்துப் பிரதி 1991ம் ஆண்டு இடப்பெயர்வின் போது மறைந்து விட்டது.

இங்குள்ள பல கோவில்கள் யாழ்ப்பாணத்திலிருந்தும், தமிழ்நாட்டிலிருந்தும் வரவழைக்கப்பட்ட ஸ்தபதிகளால் அமைக்கப்பட்டவை. பெருங்காட்டுச்சிவன் கோவில் கோபுரம் இவ்விடத்தைச் சேர்ந்த கட்டிடக்கலைஞர் திரு.கனகசபை, அவரின் மகன் ஆகியோரால் அமைக்கப்பட்டதாகும். இவர்கள் வேறு சில கோவில்களை அமைப்பதிலும் ஈடுபட்டனர். "சோமு" எனப் பொதுவாக அழைக்கப்படும் திரு.சோமசுந்தரம் சிறந்த சிற்ப, குறிப்பாக ஓவியக்கலைஞர். ஒருவரைப் பார்த்த மாத்திரத்திலேயே தத்ரூபமாக வரைந்துவிடுவார். இவருடைய மக்களும் சிறந்த ஓவியர்கள்.

கரகம், காவடி, நாட்டுக்கூத்து முதலிய நாட்டுப்புறக் கலைகளில் வல்லுநர் சிலர் இங்கு வாழ்ந்தனர். இக்கலைகளுக்கான வாய்ப்பாட்டிசையிலும் வாத்தியங்களான உடுக்கு போன்றவை வாசிப்பதிலும் விற்பன்னர் சிலரும் இருந்தனர். திரு.சி.நல்லத்தம்பி இக்கலைகளுக்கான வாய்ப்பாட்டிசை, வாத்தியக்கலையிலே மிகச்சிறந்து விளங்கினார். கரகாட்டம், காவடிக்கான வாய்ப்பாட்டிசையை ஏற்றவாறு இவர் பாடி வாத்தியத்தை வாசிப்பது மிக ஜனரஞ்சகமாக இருக்கும். இவரின் இனிமையான குரல்வளம், ஆட்டத்திற்கான தாள அமைப்பு முதலியன நன்கு குறிப்பிடற்பாலன. திரு.ச.ஆறுமுகம் சிறந்த கரகாட்டக்காரர்.

திரு.க.சிவராமலிங்கம் அவரின் சகோதரர் ஈழத்துச் சிவானந்தன் முதலியோர் சிறந்த சைவசமயப் பேச்சாளர்கள். இந்துப் பண்பாட்டிலே இசை ஒரு முக்கிய அம்சமாகும். இங்கு இந்துப் பண்பாட்டிலே தோய்ந்த இசைக்கலைஞர்கள் வாழ்ந்தனர். இன்றும் வாழுகின்றனர். எடுத்துக்காட்டுகளாக முன்னர் குறிப்பிட்ட திரு.நா.தில்லையம்பலம் சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்தவர். இவர் பண்ணிசை, கர்நாடக இசையிலும் புலமை வாய்ந்தவர். இவற்றுடன் இவர் கந்தபுராணம், திருமுறைகள் முதலியவற்றினைப் பாடி பொருள் கூறுவது யாவரையும் கவரும்.

அவரின் "கணீர்" என்ற குரல்வளம் குறிப்பிடற்பாலது. இவரைவிட சி.குருமூர்த்தி சாஸ்திரியார் அவரின் சகோதரர் திரு.சி. நல்லதம்பி முதலியோரும் குறிப்பாகப் பண்ணிசை நாட்டாரிசையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். திரு.சி.அப்பாப்பிள்ளை, கு.விநாயகமூர்த்தி முதலியோரும் திருமுறைகளை இனிமையாகப் பாடினர். இவர்களைவிட பொன்.சுந்தரலிங்கம், அவரின் சகோதரர் பொன்.சுபாஸ் சந்திரன், இராசலிங்கம், தாமோதரம்பிள்ளை முதலிய பிரபல கர்நாடக இசை வாய்ப்பாட்டுக் கலைஞர்கள், வீணைக்கலைஞர் கனக சுந்தரம்பிள்ளை, வயலின் கலைஞர் நடராஜா முதலியோர் குறிப்பிடற்பாலர்.

யாழ்ப்பாணத்திலே கர்நாடக இசையைப் பிரபல்யமாக்கியவர்களிலே குறிப்பிடத்தக்கவரான புத்துவாட்டி சோமசுந்தரத்தின் தாயாரும் பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்களான திரு.என்.ஆர்.கோவிந்தசாமி, என்.ஆர்.சின்னராசா ஆகியோரின் தாயாரும் இவ்விடத்தைச் சேர்ந்தவர்களே.

சில கோயில்களிலே திருமுறைகள் முறைப்படி ஓதப்பட்டு வந்தன. நாதஸ்வரம், தவில் கலைஞர் சிலர் இங்கு வாழ்ந்து கோவிலிலே சேவகம் செய்து வந்தனர்.

இவ்வாறு பல வழிகளிலே சிறப்புற்று விளங்கிய இந்து சமயப் பண்பாட்டிலே 1991ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரிய இடப்பெயர்வு ஒரு முக்கிய திருப்புமுனையாகும். இதனால் இங்கு நிலவிய உட்கட்டமைப்பு பெருமளவு நிலைகுலைந்து விட்டது. இதை மீள அமைக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தோர் கணிசமான தொகையிலே திரும்பி வந்தாலோ அல்லது இங்குள்ளவர்கள் தற்போது உள்ளவர்கள் முனைப்பாகச் செயற்பட்டாலோ தான் சமகால நிலை மேம்மடும். 1991 - 1995 வரை மேற்குறிப்பிட்டவாறு ஏற்கனவே நன்கு நிலவிய இந்து சமயப் பண்பாடு நன்கு பாதிப்புற்றது. கிராஞ்சியம்பதி சிவன் கோவிலைத் தவிர ஏனைய கோவில்களிலே நித்திய பூசைகள் கூட ஒழுங்காக நடக்கவில்லை எனக் கூறப்படுகிறது. அந்த ஆலய சிவாச்சாரியர் குடும்பத்தினர் இன்னல்கள் மத்தியிலே தம்முடைய கோவிலில் இடம்பெற வேண்டிய பூசைகளையும் பிறவற்றையும் இயன்ற அளவு செய்து வந்தனர்.

1954ம் ஆண்டு கண்ணகி அம்மன் கோவில் முன்றலிலே சிலப்பதிகார மகாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இலங்கை, இந்திய தமிழ்ப் பேராசான்கள் இதிலே பங்குப்பற்றிச் சிறப்பித்தனர். பல இடங்களிலிருந்தும் பெருந்தொகையான ஆர்வலர்கள் இங்கு வந்து சென்றனர்.

1996 தொடக்கம் படிப்படியாக எல்லாக் கோயில்களிலும் நித்திய, நைமித்திய பூசைகள் இடம்பெறலாயின. சில ஆண்டுகளாக பூசைகளின்றியிருந்த கோவில்கள் திருத்தப்பட்டோ, திருத்தி

கணேச தீபம் ~~~



# மனித விழுமியக் கல்வியும் அதன் தேவையும்

- கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

கல்வியின் முதன்மை நோக்கம், கற்போரை அறிவு, மனிதப் பண்புகள், ஒழுக்கம், விழுமியங்கள் என்பவற்றில் சிறந்து விளங்குபவர்களாக உருவாக்குதல் ஆகும். பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்பது வள்ளுவர் வாய்மை மொழி. உலகம் இற்றைவரை அழியாது நிலைத்திருப்பதற்குக் காரணம், மனிதப் பண்புடையார் ஒரு சிலராதல் இன்னும் வாழ்ந்துகொண்டிருந்தலேயாகும் என்ற உண்மை உணரப்பட வேண்டியது. தற்காலக் கல்விமுறை, இம் முதன்மை நோக்கத்தை கைநழுவவிட்டு வருவதை உணரக்கூடியதாக உள்ளது. அதன் விளைவுகள், உலக சமுதாயத்தில் இன்று தெளிவாகத் தென்படுகின்றன. அவை எதிர்மறையாக உள்ளன. இந்நிலைமையை நீடிக்க விடுதல் ஆகாது. "வாழ்க்கைக்கு உறுதுணையாக வருவது நூற் நற்கல்வியே" என்பது திருமூலர் திருவாக்கு. அந்த வழியில் வந்த நாம் அதனை உதாசீனஞ் செய்வது ஏற்புடைத்தன்று. "கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்", என மொழிந்தவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர். எத்தகைய கல்வியைக் கற்க மறுப்பவன், வாழமறுத்தவன் ஆகின்றான், என்னும் வினா தற்பொழுது எழுகின்றது. இதற்குரிய சரியான விடையைத் திருமூலர் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே தந்துள்ளார். வழங்கப்படும் கல்வி, "தூய நற்கல்வி"ஆக அமைய வேண்டும் என்பதே திருமூலர் நிலைப்பாடு.

கல்வி எதிர்மறைப் பாங்கிலும் அமையலாம் என்பதை, முக்காலமும் உணர்ந்த முனிவர் திருமூலர், கல்வி, தூய்மையும் நன்மையும் கொண்டு இலங்க வேண்டும் என்ற நோக்கில் "தூய நற்கல்வி" என விளம்பியதிலிருந்து, அறியக் கூடியதாக உள்ளது.

இந்தத் "தூய நற்கல்வி" யையே விழுமியக் கல்வி என்றும், அறவியல் கல்வி என்றும், பண்பாட்டு ஒழுக்க நெறிக் கல்வி என்றும் தற்காலத்து அறிஞர்கள் அழைக்கின்றனர். "கல்விக்குப் பயன் அறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம்", என்கிறார் நாவலர் பெருமான். ஒழுக்கத்தையும் மனிதப் பண்புகளையும் மனிதரில் விருத்தி செய்யாத கல்வி தூய நற் கல்வி ஆகாது.

தமிழ் மரபுக் கல்வி பண்டு தொட்டுத் தூய நற்கல்வியாகவே வளர்ந்து வந்துள்ளது. மக்கள் வாழ்வு சீரும் சிறப்பும், அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக அமைய வேண்டுமாயின், அவர்களிடம் கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கும் ஒருங்கே காணப்பட

வேண்டும். தொல்காப்பியர் இதனைத் தமது நூலில் வெளிப்படுத்துகிறார். இந்நான்கினுள்ளும் கல்விக்கே முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. அன்பும் அறனும் வாழ்க்கையின் பண்பும் பயனும் என்பர் திருவள்ளுவர். அன்பு, அறம் என்னும் விழுமியங்கள் கல்வி மூலமே விருத்தி பெற்றன.

தமிழ்க் கல்வி நெறி அதன் நோக்கங்களையும் அடையும் பயன்களையும் தெளிவாக வரையறுத்துள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் அடைதல் தமிழ்க் கல்வி நெறியின் நோக்கமாகும். நோக்கம் அடையப்படும் போது. அது பயன் ஆகின்றது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறம், அடையப்படும் பயனாக மட்டுமல்ல, இந்நான்கு நோக்கங்களையும் அடையப்பெறுதற்குக் கைக்கொள்ளப்பட வேண்டிய வழியாகவும் அமைகின்றது. பொருள், இன்பம், வீடு என்னும் மூன்றையும் அறவழியில் நின்றே அடையப்பட வேண்டும். பொருளை அறவழியில் ஈட்டி, அறவழியில் செலவு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். "தீவினை விட்டு ஈட்டல் பொருள்" என்கிறார், ஔவையார். அவ்வாறே, இன்பத்தையும் அறம் சார்ந்து அளவோடு அனுபவித்தலே முறையாகும். "அறத்தால் வருவதே இன்பம்", என்பது வள்ளுவர் தரும் செய்தி. அறம் தவிர்ந்த வழிகளால் பெறப்படும் இன்பம், விரைவில் துன்பமாகி விடும். இவ்வாறு அறவழியில், பொருள் ஈட்டி, இன்பம் துய்த்து அறவாழ்வு வாழ்பவர்களுக்கு வீடு எனப்படும் முத்திப் பேறு உறுதியாகிவிடும். முத்தி என்பது விடுதலை; பேரின்ப வாழ்வு; பிறப்பு, இறப்புக்களால் ஏற்படுகின்ற துன்பங்களிலிருந்து விடுதலை. மனிதப் பிறவியின் இறுதி நோக்கமும் இதுவாகும்.

தமிழ் மக்களின் வாழ்க்கை நோக்கங்களே, கல்வி நோக்கங்களாவும் விளங்கி வந்துள்ளன. இதிலிருந்து, தமிழ் மக்களுடைய கல்வி, வாழ்க்கையோடு தொடர்புபட்டதாகவும்; வாழ்வின் செம்மைக்கும் தூய்மைக்கும் வழிவகுப்பதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், தமிழ்க் கல்விநெறி, அறவியல் கல்வியாக, விழுமியஞ் சார் கல்வியாக, ஒழுக்கக் கல்வியாக, அதனால் தூய நற்கல்வியாக விளங்குகின்றது.


கல்வி தரும் அறிவின் பெருவளரச்சியும், பொருள் மற்றும் இன்பத்தின் மிகை வளர்ச்சியும் தூய்மையினதும் அறத்தினதும் அடிப்படையில் ஏற்படாவிடின், அந்தக் கல்வியால் கேடுகள் மலியுமே தவிர ஆக்கம் ஏற்படாது என்று நம்முன்னோர் கொண்டனர். அறிவின் பெருவளர்ச்சியினால் தற்காலத்தில் உலகில் ஏற்படுகின்ற கெடுதல்கள், அனர்த்தங்கள் என்பவற்றைக் கண்ணாரக் காண்கின்றோம். அறிவின் பயனாக அடையப்பட்டுள்ள விஞ்ஞான, தொழினுட்பப் பாரிய அபிவிருத்தி, ஆக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதிலும், அதிக அளவில் அழிவிற்கே பயன்படுத்தப்படுகிறது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அறிவு, "அற்றங்காக்கும் கருவி" என்ற வள்ளுவர் நிலைப்பாட்டிலிருந்து இன்று விலகி கொண்டுவிட்டது. அறிவு, மனித குலத்தை அழிவினின்றும் காக்கும் கருவியாக அமையும் போதே, "அற்றங்காக்கும் கருவி" யாக விளங்க முடியும். அறவியல் கல்வி தரும் அறிவுதான் ஆக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அதேவேளை அழிவு வராமல் காக்கும் கருவியாகவும் அமைகின்றது.;

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

இருள் சூழ்ந்திருக்கும். இருளில் நடைபெறுபவை திருட்டும் புரட்டும் படுபாதகங்களுமேயாகும். உடலின் அளவற்ற தேவைகளையும், ஆசைகளையும் சுருக்கி உயிர் நல உணர்வோடு சம்பந்தப்பட்டிருக்கும் போதே, உள்ளொளி பெருகும், உலப்பிலா ஆனந்தம் கிட்டும், அமைதி நிலைக்கும். கல்வியின் அதி உச்ச நிலை உள்ளொளி பெருக்குதல். இந்த ஒளி வெளியில் பரவும்போது. இல்லாமை ஒழிந்து, உலகில் நிறைவு, ஆன்மிகம், பூரணத்துவம், அமைதி, ஆனந்தம் நிலவும் என்பது உறுதி. கல்வியின் சாதனை இதுவாக இருக்கும் பட்சத்தில், கல்வியே கருந்தனம் என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிடும். "மனிதனில் உள் உறையும் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி" இது சுவாமி விவேகானந்தர் கல்விக்குத் தந்த வரைவிலக்கணம். அன்பும் கருணையும்; நீதியும் உண்மையும் மனிதனிடம் மறைக்கப்பட்ட நிலையில், உள்ளே, அகத்தே உறைகின்றன. அவற்றை மறைத்திருக்கும் அறியாமையை நீக்கி, வெளியே கொணர்வதே கல்வியின் பணி. "மாந்தர்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக்கொணர்ந்து விளக்கம் பெறச் செய்வதே கல்வி", எனக் காந்தியடிகள் கல்விக்கு வரையறை கண்டுள்ளார். உடல் நலம் பெறக் கல்வி, மனம் நலமும் வளமும் பெறக் கல்வி, உயிர் நலமும் ஈடேற்றமும் பெறக் கல்வி - இவையாவும் ஒருங்கிணைந்த கல்வி, சமநிலைக் கல்வி, இன்றைய தேவை.

"மனிதன் எந்த அளவு அறிவைப் பெருக்குகிறானோ, அந்த அளவு, அறநெஞ்சத்தை வளர்த்துக் கொள்ளவில்லை எனில் அந்த அறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத்தில் போய் முடியும்; என்பது தத்துவப் பேரறிஞர் பேட்ரண்ட் றசல் தரும் கருத்து. "முழுமையான கல்வி என்பது நுண்ணறிவுப் பயிற்சியோடு மனத்தூய்மையையும் ஆன்மிக நெறிகளையும் கற்பிப்பதாக இருக்க வேண்டும்" டாக்டர் இராதாகிருஷ்ணன். மேலைத்தேயக் கீழைத்தேய அறிஞர்கள், ஒருமித்த குரலில், மனித விழுமியக் கல்வி, அறிவியல் கல்வி என்பவற்றின் இன்றியமையாமையை உணர்த்தியுள்ளனர். "கல்வியானது உயர் உணர் கல்வியாகவும்; அன்பையும் கருணையையும்; உண்டாக்கக்கூடியதாகவும்; ஒழுக்கத்தை வளர்ப்பதாகவும்; நீதி, விழுமியங்களைப் பேணுவதாகவும்; செயல் விளைவு உணர் கல்வியாகவும்; வாழ்க்கையை நல்லறமாக அமைக்க உதவும் கல்வியாகவும், உலகத்தோடு இணைந்த ஒத்த கல்வியாகவும்; உலக அமைதியை ஏற்படுத்தும் கல்வியாகவும் அமைய வேண்டும்". இது தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி தரும் கல்வித்தத்துவம். இன்றைய மாணவ சமுதாயம் விஞ்ஞானம், தொழினுட்பம், கணனி நுணுக்கம் உள்ளிட்ட உலகியல்சார் அறிவுகளைக் கல்விமூலம் அறிந்திருப்பினும்; தம்மைப் பற்றி அறிந்து கொள்ளவும், வாழ்வியல் விழுமியங்கள் மற்றும் அறநெறிப் பண்புகள் பற்றித் தெளிந்து கொள்ளவும் கல்வி இடமளிக்கவில்லை என்ற குறைபாடு இன்று பெரிதும் உணரப்படுகிறது. ஆகவே இக்குறையை நீக்கி, கல்வியை முழுமையானதாக ஆக்குவதற்கு, விழுமியக் கல்வி, அறவியல்கல்வி என்பவற்றைத் தற்காலக் கல்வி முறையோடு இணைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். மனிதரை மனிதத் தன்மைகளுடனான மனிதர் ஆக்கக் கல்வி உதவ வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.



# புதுயுகமும் அதை நோக்கிய மாற்றங்களும்

- மு. தளையசிங்கம்

தற்காலம் ஒரு புதுயுகத்தை நோக்கி மாறிக்கொண்டிருக்கிறது. நாம் இரு உலகங்களுக்கிடையே கிடந்து போராடிக்கொண்டிருக்கின்றோம். ஒன்று செத்துக்கொண்டிருக்கிறது; மற்றது பிறக்கத் துடிக்கிறது; பிறந்துகொண்டிருக்கிறது.

இன்று இது பெரும்பாலாரும் ஏற்றுக்கொள்ளும் கருத்தாகும். ஆனால், பிறந்து கொண்டிருக்கும் புதுயுகத்தின் தன்மைகளைப் பற்றிப் புரிந்து கொண்டிருப்பவர்கள் மிகச் சிலரேதான்.

பிறந்து கொண்டிருக்கும் புதுயுகத்தைப் பொருள் முதல் வாத அடிப்படையில் பார்த்து சடம், உயிர், மனம் ஆகிய முத்தளங்களுக்குள்ளேயே முழுவதையும் காண முயலுபவர்கள்தான் பெரும்பாலான இன்றையப் புரட்சிக்காரர்களாய் இருக்கின்றனர். மார்க்ஸீயவாதிகளை இவர்களுக்கு உதாரணமாய்க் காட்டலாம்.

சடம், உயிர், மனம் ஆகிய தளங்களுக்கு அப்பாலும் உண்மை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்பவர்கள்கூட, புதுயுகமாற்றத்தை அந்த முத்தளங்களுக்குள்ளேயே காண முயல்கின்றனர். பெரும்பாலான சமயவாதிகளும் காந்தீயவாதிகளும் இந்த ரகத்தினரேதான்.

பிறந்த கொண்டிருக்கும் புதுயுகம் சடம், உயிர், மனம் ஆகிய முத்தளங்களுக்கும் அவற்றுக்குரிய தாமத, ரஜத, சாத்வீக, முக்குணங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு தளத்துக்கும் குணத்துக்குமுரிய வாழ்க்கை முறையைக் கோருகிறது என்பதைப் புரிந்து கொள்பவர்கள் தான் பிறந்துகொண்டிருக்கும் புதுயுகத்துக்கு உண்மையான உருவம் கொடுப்பவர்களாய் இருப்பர்.

மார்க்ஸீய சித்தாந்தம் புதுயுகத்துக்குரிய பெருந்தத்துவமல்ல. அப்படி அதை மாறாட்டஞ் செய்பவர்கள் சரித்திர வளர்ச்சியைப் பற்றியும், அது காட்டும் சான்றுகளைப் பற்றியும் சீராகத் தெரிந்து கொள்ளாதவர்களேதான்.

மார்க்ஸிய சித்தாந்தம் பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளில் ஆரம்பமான விஞ்ஞான ரீதியான லோகாயத அறிவுவாதத்தின் இறுதிக்கோலமேதான். இதைப் 'போர்ப்பறை" யில் "புதிய வார்ப்புகள்" என்ற கட்டுரையில் விரிவாக நான் விளக்க முயன்றுள்ளேன். அந்த வகையில் பார்க்கும்போதுஇன்றைய மார்க்ஸீயவாதம் காலங்காலமாகச் சமயஞானத்துக்குப் போட்டியாக வளர்ந்து வந்துள்ள லோகாயத வாதத்தின் இன்றைய இறுதிக்கோலம் என்றுதான் சொல்ல வேண்டும். அதனால் உடல், உயிர், மனம் ஆகிய முத்தளங்களுக்கு அப்பால் செல்ல முயலும் புதுயுகத்தின் பிறப்புக்கு மார்க்ஸீய சித்தாந்தம் வழி வகுக்கப்போவதில்லை. இதுகாலவரை மனவளர்ச்சியடைந்துள்ள மனித இனத்தின் ஒரு பகுதியினர் முழு உண்மையாக நம்பிய லோகாயத வாழ்க்கை முறையை அதன் விஞ்ஞான ரீதியான சீரான கோணத்தில் வளர்த்துக் காட்டியுள்ள ஒரு சித்தாந்தமே தான் மார்க்ஸீயவாதம். அந்த வகையில் புதுயுகப் பிறப்புக்குரிய சித்தாந்தமாயிருக்காமல் பழைய யுகவாழ்க்கையின், செத்துக்கொண்டிருக்கும் யுகவாழ்க்கையின் முடிவுக்குரிய இலக்கணமும் சிந்தாந்தமுமாகவே மார்க்ஸீயவாதம் இருக்கிறது.

ஆனால், அந்த முடிவைக்கூட அதனால் தனியாகவே கொண்டுவரமுடியாது.

காரணம் மனத்தளத்தில் இதுவரை ஒன்றோடொன்று போட்டியாகவும், அந்தப் போட்டி மூலமே ஒன்றுக்கொன்று உதவியும் பக்கபலமாகவும், வளர்ந்து வந்துள்ள இருபெரும் பார்வைப் போக்குகளுள் ஒன்றான லோகாயத வாதத்தின் இறுதிக்கோலமாக அது இருக்கிறதேயொழிய, மனத்தளத்தின் அடுத்த முக்கிய பார்வைப் போக்கான சமய சித்தாந்தப் பார்வையின் முடிவாகவும் அது இல்லை.

மார்க்ஸீய சித்தாந்தத்துக்கு விளக்கந்தர முயல்பவர்கள் மனத்தளத்துக்குரிய இந்த இரண்டு போக்குகளான லோகாயதவாதப் பார்வையையும் (Meterialist outlook) சமயவாதப் பார்வையையும் (Metaphysical outlook) இன்னும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும் வேறுபட்டதாகவுமே காண்கின்றனர்; விளக்குகின்றனர்.

அந்நிலையில், செத்துக்கொண்டிருக்கும் பழைய யுகவாழ்க்கை மனத்தளத்தையே அதன் இறுதி வளர்ச்சித் தளமாகக் கொண்டிருக்கும் வாழ்க்கையென்றால், அதன் சாவுக்குக்கூட மார்க்ஸீய சித்தாந்தத்தால் பூரணமாக இலக்கணம் வகுத்து வழிகாட்ட முடியாதிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

பழைய வாழ்க்கையின் முடிவைக் காட்டும் சித்தாந்தம், இதுவரை கண்ட பரிணாமத்தின் இறுதித்தளமாயுள்ள மனத்தளத்தின் இருபெரும் போக்குகளான லோகாயதப்போக்கையும் சமயப்போக்கையும் ஒரே வாக்கில் இணைக்கும் சித்தாந்தமாகவே இருக்க வேண்டும்.

இங்கு குறிப்பிடப்படும் யுகமாற்றம் என்பது சாதாரண சிறுகாலக் கட்ட மாற்றங்களைக் குறிப்பிடவில்லை. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில் அடிப்படையான மாற்றங்களைக் கொண்டு வந்த பழைய யுகமாற்றங்களை ஒத்த ஒரு பெருங் காலமாற்றமே இங்கு குறிக்கப்படுகிறது. சாதாரண வரலாற்று மாற்றங்களுமல்ல; மனித பரிணாம வளர்ச்சியில் இன்று ஒரு புதுப் பரிமாணம் ஏற்படப் போகிறது.

சடவுலகம் தோன்றி உயிர் தோன்றும் வரைக்கும் ஒரு காலப் பிரிவு பல கோடி வருடங்களைக் கொண்டதாக இருந்தது. அது சடத்தளம் உருவாகிய காலம். அது முழுமையடையும்போது உயிர் தோன்றுகிறது. ஆனால், உயிர் இனங்களின் வளர்ச்சியோடு சடத்தளத்திலும் திரும்பவும் வளர்ச்சி ஏற்படுகிறது. எனவே, ஒவ்வொரு தள வளர்ச்சியையும் ஒரு சுழல் வளர்ச்சியாகக் கொள்ள வேண்டும். சடத்தளச் சுழல் முழுமையடையும்போது உயிர்த்தளச் சுழல் தொடங்குகிறது. அந்த உயிர்த்தள வளர்ச்சி திரும்பவும் சடத்தளத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு சுழலாக இருக்கிறது. உயிர்த்தள வளர்ச்சி மனத்தள வளர்ச்சியில் முழுமையடைகிறது. ஆனால் மனத்தள வளர்ச்சி என்பது முந்திய சடத்தளத்திலும், பிந்திய உயிர்த்தளத்திலும் திரும்பவும் ஒரு புது வளர்ச்சியைப் புகுத்திய சுழல் வளர்ச்சியாகவே இருக்கிறது. மனத்தளம் வளர்ச்சியடைந்துள்ள மனிதனில், சடமும் உயிரும் ஒரு புதுப் பரிமாணங்களைக் காட்டும் பரிணாம வளர்ச்சியாக இருக்கிறது. அதுமட்டுமல்ல அப்படிப்பட்ட ஒரு புதுவளர்ச்சியைக் காட்டும் மனிதன், தனது புறச் சூழலிலுள்ள சடத்தளத்தையும் உயிர்த்தளத்தையும் புதுப்போக்கில் மாற்றியுள்ளான். இன்றைய நாகரிக வளர்ச்சி, மனிதனின் மனவளர்ச்சியானது புறச்சூழலுக்குரிய சடத்தளத்திலும் உயிர்த்தளத்திலும் மனத்தளத்திலும் ஏற்படுத்தியுள்ள பல்கோண மாற்றங்களைக் காட்டுகிறது.

சடத்தளத்துக்குரிய குணந்தான் தாமத குணம். வேகமற்ற மந்தக் குணம்.

உயிர்த்தளத்துக்குரிய குணந்தான் ரஜத குணம். இச்சையை வெளிப்படுத்தும் குணம். வேகம் பிறக்கும் குணம். செயல் வெளிப்படையாகத் தெரியும் குணம். அதனால் வளர்ச்சி மாற்றங்களும் துரிதமாகத் தூண்டப்படும் குணம்.

மனத்தளத்துக்குரிய குணந்தான் சாத்வீக குணம். உயிரின் இச்சைக்குரிய வேகம் **அறிவாலும்**, சீரிய சிந்தனையாலும் கட்டுப்படுத்தப்பட்டு அமைதி காணும் குணம், சீரிய செயலை **தூண்டும்** குணம்:

**மனிதன்** உடல், உயிர், மனம் ஆகிய மூன்று தளங்களுக்குரியவனாக இன்று இருக்கிறான். **அதனால் அந்த** மூன்று தளங்களுக்குரிய குணங்களும் அவனிடம் காணப்படுகின்றன.

இன்று மனத்தளம் முழுமையடைந்து மனத்தையும் கடந்த புதுத் தளம் மனித வளர்ச்சியில் வெளிப்படப் போகிறது. மனித இனமே உயிரினங்களின் உச்சப் பரிணாம வளர்ச்சியைக் காட்டுகிறது. அந்த இனத்திடமே அடுத்த தளம் வெளிப்படப் போகிறது.

மனதையும் கடந்த புதுத் தளம் புதிதாக உருவாக்கப்பட வேண்டிய ஒரு தளமல்ல. சடவுலகப் பார்வைக்குப் புலனாகாவிட்டாலும் ஏற்கனவே அது இருக்கிறது. அதற்கும் அப்பாற்பட்ட தளங்களும் இருக்கின்றன. இனிவரும் வரும் வளர்ச்சியில் தான் சகல மக்களும் அவற்றைக் கண்டு அனுபவிக்கும் நிலை ஏற்படும்.

இனிவரும் தளம் பேரறிவுத் தளமாகும். மனத்தளத்துக்கும் அப்பாற்பட்ட விஞ்ஞான மயகோசத்துக்குரிய பேரறிவு. அது வெளிப்படும்போது அதன் மூலம் திரும்பவும் உடல், உயிர், மனம் ஆகிய தளங்கள் புது வளர்ச்சிக்குள்ளாகும் ஒரு சுழல் ஆரம்பமாகும். அந்தச் சுழல் வளர்ச்சிக்குரிய யுகத்தில் உடலுடன், உயிருடன், மனதுடன் அவற்றைத் தனது பேராட்சிக்குட்படுத்தும் பேரறிவு (விஞ்ஞானமயகோசம்) எல்லாவற்றிலும் பேராட்சி நடத்தும். அதாவது புறச்சூழலும் அதற்கேற்றவாறு நிச்சயமாக மாற்றப்படும்.

பழைய யுகம் செத்துக்கொண்டிருக்கிறது என்பதற்கும், புதிய யுகம் பிறக்க முயன்றுக்கொண்டிருக்கிறது என்பதற்குமுரிய உண்மையான அர்த்தம் இதுதான்.

உடல், உயிர், மனம் ஆகிய மூன்று நிலைகளுக்கும் அவற்றுக்குரிய தாமத, ரஜத, சாத்வீக முக்குணங்களுக்கும் உரிய சுழல் முடிவடைந்து, அந்த மூன்று நிலைகளையும் முக்குணங்களையும் தனது பேராட்சிக்குட்படுத்தும் வெளிப்படையான பேரறிவின் ஆட்சிக்குரிய யுகச் சுழல் ஆரம்பித்துக் கொண்டிருக்கிறது. நான்காவது நிலைக்கும் நான்காவது குணத்துக்குமுரிய யுகச் சுழல் .

பேரறிவுத் தளம்

பேரறிவுக்குரிய, முக்குணங்களைக் கடந்த சத்திய குணம்.

மனத்தளத்தின் வளச்சியும் அதன் சாத்வீக குணத்தின் எழுச்சியும் ஏற்பட்ட காலத்திலிருந்தே மனிதனின் நாகரிக வளர்ச்சியும் சமயங்களின் எழுச்சியும் தோன்றின எனலாம்.

நாடோடிக் கூட்டங்களாய் வேட்டையாடித் திரிந்த பழைய கற்காலக் கட்டத்திலிருந்து நதிக்கரைகளில் நிலையாகக் குடியேறி விவசாயம் மேற்கொண்ட காலம் வரையுள்ள

இடைப்பகுதியில்தான் மனிதன் பூரணமாகத் தன்னை வெளியுலக வாழ்க்கையில் மிருக நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டான். இந்த இடைப்பட்ட காலப்பகுதியில்தான் மனிதனுக்குரிய உண்மையான மனத்தளம் என்பது உருவாகிற்று. அந்தக் காலப்பகுதியில் தான் மனிதனுக்கும் அவனது மனத்தளத்துக்குமுரிய விசேஷ குணமான சாத்வீக குணமும் எழுச்சி பெற்றது.

ஆயுதங்களின் உதவியையும் பொருட்களின் பயனையும் உணர வந்த மனம், இன்றைய பொருளை அடிப்படையாகக் கொண்ட நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டது. அதே மனத்தளத்தின் முதிர்ந்த குணமாக எழுச்சியுற்ற சாத்வீக குணம் சமய ஞானத்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை மனிதனிடம் வளர்த்தது.

அதனால் இந்த மனத்தள - சாத்வீக குண மனித நாகரீகத்தினதும் வாழ்க்கையினதும் பெரும் பார்வைப் போக்குகளாக இரண்டு போக்குகள் வளர்ச்சியடைந்துள்ளன.

முதலாவது பொருள்முதல்வாதம். இரண்டாவது, சமயத்தை ஏற்றுக்கொள்ளும் கருத்து முதல்வாதம். இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று போட்டியாக வளர்ந்து வந்திருந்தாலும், ஒன்றுக்கொன்று பக்கபலமாக நின்று உதவியுந்தான் வந்துள்ளன.

இன்று செத்துக்கொண்டிருக்கும் யுகம் மனத்தளத்துக்கு "உரிய யுகமென்றால், மனத்தளத்துக்குரிய இந்த இரண்டு சித்தாந்தப் போக்குகளும் மாற்றமுற்றுத் தான் ஆகவேண்டும். அது மட்டுமல்ல, பிறக்கவிருக்கும் பேரறிவுப் பெருந்தளத்திலிருந்தும் அதற்குரிய பெருந்தத்துவப் போக்கிலிருந்தும் பார்க்கும்போது இந்த இரண்டு சித்தாந்தப் போக்குகளும் ஒரே தளத்துக்குரிய இரு சகோதரப் போக்குகளேதான்.

இன்று இந்த இரண்டையும் ஒன்றையொன்று எதிர்த்த போக்குகளாகப் பார்ப்போர் காலத்தை உணராதவர்களாகவே இருப்பர். பிறக்கவிருக்கும் பெருந்தத்துவத்துக்கு உருவங்கொடுக்க விரும்புவோர் முதலில் இந்த இரண்டும் ஒன்றையொன்று தழுவி முழுமை அடையும் கோலத்தைக் காணவேண்டும். அந்த முழுமையிலேயே அவற்றின் அழிவுக்கும் அடுத்த பேரறிவுத் தளத்துக்குமுரிய பெருந்தத்துவத்தின் பிறப்புக்கும் வித்திருப்பதையும் கண்டு, அதைப் புத்திபூர்வமாகச் சிந்தனையாலும் செயலாலும் வளர்க்க வேண்டும்.



# பல்கலைக்கழக (உயர்கல்வியில்) ஆய்வு நெறிமுறைகள்:

முனைவர் கனகசபாபதி. நாகேஸ்வரன் -M.A.,Ph.D

உயர்கல்வியில் - பல்கலைக்கழக மட்டத்தில் - ஆய்வில் மாணவர்கள் முழு ஈடுபாட்டுடன் தொழிற்படவேண்டுமானால் ஆய்வின் அனைத்துப் பரிமாணங்களையும் அவர்கள் அறிந்துணரவேண்டும். இன்றைய உலகம் 'அறிவு அறிவு' என்று அரற்றுகிறது. இதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது அறிவியல் முன்னேற்றம்தான். அறிவுப் பசியும், அறிவியல் மனப்பான்மையும் இக்கால மக்களிடத்தில் மேலோங்கி நிற்கின்றன. எதையும் தாமே ஆராய்ந்து பார்த்து, அதன் நன்மை தீமைகளைக் கண்டறியவேண்டும் எனும் அறிவு வேட்கை, வாழ்வின் பலதுறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. இதன் விளைவாக ஆராய்ச்சிப்பணி எங்கும், எதிலும் முதன்மை இடத்தைப் பெறுகிறது.

இன்று அறிவுத்துறையில் "ஆராய்ச்சிக் கலை" தன்னிகரற்ற இடத்தைப் பெற்று விளங்குகிறது. கலைத்துறையில் மனிதவியல் துறையில் இத்தகைய ஆராய்ச்சி முறைகளை நம்முடைய முன்னோர்களும் பயன்படுத்தியுள்ளனர். காணல், கருதல், ஆராய்ச்சி எனும் முத்திற முறைகளின் மூலம், அவர்கள் ஆராய்ச்சியை நடத்தினர். நுட்பமாகக் கண்டறியாத 'ஆய்வு' களையும் அவர்கள் சுட்டினர். இந்த நெறிமுறைகளைப் பெரிதும் இலக்கண நூல்களிலும், மெய்ப்பபொருளியல் நூற்களிலும் நம்முன்னோர்கள் சிறப்பாக பயன்படுத்தினர். இந்த ஆய்வுக்கு, அவர்களுக்கு அடிப்படையாக அமைந்தது அளவை (தருக்க) நூல் அறிவு. இன்று 'ஆராய்ச்சி' செய்வதே ஒரு சிலருடைய 'தொழிலாக' அமைந்துவிட்டது. ஆய்வின் குறிக்கோள் பற்றிய கருத்துகள் யாவும், அறிவாராய்ச்சியில் ஈடுபடுவோர் கருத்தில் கொள்ளத் தக்கனவாகும். 'ஆய்வு', 'ஆராய்ச்சி' என்றால் என்ன?

"மனத்தின் அறிதிறன் கொண்டு அறிவியல் நெறிநின்று, ஆய்வுக்கருவிகளை முறையாகவும் நுட்பமாகவும் கையாண்டு அனுபவம் தரும் கருப்பொருளை பகுத்தும் தொகுத்தும், புதிய உண்மையைக் கண்டு நிரூபித்து அவ்வுண்மையைத் தேர்ந்த அறிவுத் தொகுதியில் உறுதியாக இடம்பெறச் செய்யும் செயலை ஆய்வு எனலாம்." எனும் விளக்கம் தெளிவானது.

'ஆய்வு என்பது பட்டங்கள் பெறுவதற்காகவே செய்யப்படுவது அன்று, அறிவார்ந்த வாழ்க்கை நடத்தவும் ஆய்வுமனம் தேவை. ஆய்வறிவு ஆழம், கூர்மை, தெளிவு, உறுதி ஆகிய பண்புகளை உடையதாக இருக்கும். முறையான ஒழுங்கும் முரண்படா அமைப்பும் ஆய்வறிவின் சிறப்புகள். இச்சிறப்புக்களைச் சாதாரண அறிவில் எதிர்பாக்கமுடியாது! உலகியலனுபவம், உள்ளத்துச் சிந்தனை ஆகிய இரண்டுமே ஆய்வுக்குத் துணை செய்கின்றன. சிந்தனையாளர்கள் பலரின் வாழ்க்கைக் குறிப்புகளும் ஆய்வுகளின் போக்கும் இக்கருத்தை உறுதி செய்கின்றன. உலகியல் அனுபவம் ஆய்வுக்கு ஆதாரக்களமாக அமைகிறது. ஆய்வின் தொடக்கமும் முடிவும் உலகியல் அனுபவத்தோடு தொடர்புடையன. அனுபவத்தைக் கீறிக் கிளறுவது சிந்தனையின் செயல். அனுபவம் சிந்தனை ஆகிய இரண்டின் கூட்டு முயற்சியால் 'ஆய்வு' நடைபெறுகிறது. உண்மைகள் வெளிப்படுகின்றன. எனவே 'ஆய்வு' என்பது மெய்ம்மையினைக் கண்டறியும் தேடல் பயிற்சியாகும். விதிகள், சந்தர்ப்பங்கள், தோற்றப்பாடுகள், பண்புகள், அமைப்புகள், கூறுகள், அலகுகள் போன்றவற்றில் எதனையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ளலாம். Research என்ற சொல் பிரெஞ்சு மொழிச் சொல்லான Recrcher" Researcher) என்பதிலிருந்து உருவாக்கப்பட்டதாகும். ஆய்வு என்பது மீளப்பரிசோதித்தல், ஆராய்தல், மீள விளங்கிக்கொள்ளுதல் அல்லது கவனமாக விசாரித்து அறிந்து கொள்ளல் என்றெல்லாம் பொருள்கொள்ளலாம். ஆய்வில் ஈடுபட முனைகின்றவர்கள் ஆய்வின் இயல்பு, நோக்கம், அறிவுலகில் ஆய்வின் பங்கு என்பனவற்றை அறிந்து கொள்ளவேண்டும்! 'ஆய்வு' என்பது மெய்ம்மையினைக் கண்டறியும் புலமைப் பயிற்சியாகின்றது. 'ஆய்வு என்பது தொடர்ச்சியான தேடலை முன்னெடுக்கின்றது. தேடல் தொடர்ச்சியாக இருப்பதனால் அதற்கு முடிவில்லை. அறிவின் எல்லைகளை ஆய்வுகள் முன்நோக்கி நகர்த்திய வண்ணமுள்ளன. முடிவில்லாத ஆய்வு நடவடிக்கைகள் பல்வேறு கிளைகளாகப் பிரிந்து இன்று வளர்ச்சியுற்று வருகின்றன.

'ஆய்வு என்பது மானுடச்செயல். 'ஆய்வு' என்ற செயல் மனத்தின் அறிதிறன்கொண்டு செய்யப்படுகிறது.

கண்டுப்பிடிக்கப்பட்ட உண்மை பிறரால் ஏற்கப்பட்டு பொது உடைமையாகும்பொழுது சமூகப் பயனை விளைவிக்கிறது. பிறரால் ஏற்கப்படும் போது புதிய கருத்து அறிவுத் தொகுதியில் இடம்பெறும் தகுதிபெறுகிறது. இப்புதிய கருத்தின் வரவால் அறிவுத்தொகுதி விரிவடைகிறது அல்லது மாற்றமடைகிறது. புதிய உண்மையைக் கண்டு நிரூபித்து அறிவுத் தொகுதியில் இடம்பெறச் செய்வதே ஆய்வின் குறிக்கோள்.

## 1.1 ஆய்வுப்பற்றிய வரைவிலக்கணங்கள்

அறிவைத் தேடுதலே ஆய்வாகின்றது. புதிய அறிவைத் திரட்டுவதற்குரிய ஒழுங்கமைந்த செயல்முறையே ஆய்வில் முன்னெடுக்கப்படுகிறது. 'ஆய்' என்ற கல்விச்செயல்முறை அறிந்ததில் இருந்து அறியாததை நோக்கிச் செல்லும் இயக்க விசையாகின்றது. ஆய்வின் வழியாக கண்டுப்பிடிப்புகள் நிகழ்கின்றன. புத்தாக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. புதிய விடயமொன்றை அறியும் விருப்புடன் ஆய்வு தொடர்புடையது. ஆய்வு என்பது புலமை சார்ந்த ஒரு தொழிற்பாடாகின்றது. பிரச்சினைகளை இனங்காண்பதும் பிரச்சினைகளுக்கு மீள்வடிவம் கொடுப்பதும் ஆய்வின் தொடக்கமாகின்றது. எண்ணக்கருக்களை (Hypothesis) உருவாக்குதல், தரவுகளைச் சேகரித்தல், ஒழுங்கமைத்தல், அட்டவணைப்படுத்தல், மதிப்பீடு செய்தல், தொகுத்தல், முடிவுகளை நோக்கி வருதல் என்றவாறு ஆய்வின் பரிமாணங்களை விளக்கினாலும் ஆய்வு என்பது மிகவும் எளிதான விடயமன்று. நடைமுறைகளில் இருந்து கோட்பாடுகளை நோக்கி நகர்ந்ததும் கோட்பாடுகளிலிருந்து நடைமுறைகளை அணுகுதலும் ஆய்வின் பிறபரிமாணங்களாகின்றன. ஆய்வின் வழியாகக் கோட்பாடுகள் கட்டியெழுப்பப்படுதலும், விதிகள் (Laws) கண்டறியப்படுத்தும் ஆய்வின் இறுதி வடிவங்களாகின்றன. ஆய்வின் பிரயோகங்களிலே பயனுடைமை (Utility) உட்பொதிந்திருக்கும்.

"அவதானிக்கப்படும் தரவுகளை வகைப்படுத்தல், பொதுப்படுத்தல், நிரூபித்தல் ஆகிய செயன்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு வழிவகுக்கின்றன செயன்முறை "ஆய்வு" எனப்படும்" என்பர் லுன்ட்பேர்க் (Lundberg)

"புதிய தகவல்களையும் தொடர்களையும் அறிந்து கொள்வதற்கும் அறிவினை விஸ்தரிப்பதற்கும் பயன்படுத்தப்படும் நுணுக்கமான விசாரணை அல்லது பரிசோதனையே ஆய்வு என்பர் பிரான்ஸிஸ் றுமல் (Francis Rummel)

"நோக்கங்களை நிரூபிப்பதற்கான முறைகள் மூலம் உண்மைகளைத் தேடுவதற்கான ஓர் அவசியமான ஒழுங்குமுறையான விசாரணையே ஆய்வு" எனப்படுகிறது. எனவே தொடர்புகளைக் கண்டறிவதற்கும் அவற்றிலிருந்து பரந்த கொள்கைகளை அல்லது விதிகளைப் பெறுவதற்கும் ஆய்வானது வழிவகுக்கும்" என்பர் கோபால் (Gopal M.H)

"ஓர் இனம் காணப்பட்ட பிரச்சினைக்கான தகவல்களையும் அதனுடைய கருத்துக்களையும் உண்மையாகவும் யதார்த்தபூர்வமாகவும் அறிவுப்பூர்வமாகவும் இனங்காணல் அல்ல தேடுதல் 'ஆய்வு' என விளக்குகிறார் குக் (Cook.P.M)

"ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட சில புலனாய்வுகளையும் கருதுகோள்களையும் உருவாக்கி அவற்றை இயற்கையுடன் தொடர்புபடுத்துவதே ஆய்வு" என்கிறார் கேர்லிங்கர் (Kerlinger)

சமூகவிஞ்ஞானங்களுக்கான கலைக்களஞ்சியம் "அறிவினைப் பொதுமைப்படுத்தவும் அதனை விஸ்தரிப்பதற்கும் திருத்துவதற்குமான நோக்கில் பொருத்தமான கருத்துக்கள், விளக்கங்கள், நோக்கங்கள், அடையாளக் குறிகள் என்பனவற்றைத் திறமையாகப் பயன்பாட்டிற்குள் கொண்டுவருதலே ஆய்வு" என விளக்குகிறது.

## 1.2 : ஆய்வின் நோக்கங்கள்

**ஆய்வின் பிரதான நோக்கங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்**

1. அறியாப்பொருளை அறிய முயலுதல்
2. மறைந்துள்ள யதார்த்தங்களையும் (facts) உண்மைகளையும் (Truth) கண்டறிய முயல்தல
3. பிரச்சினைகளும் தீர்வுகளும் சார்ந்த புதிய புலக்காட்சியை (Perception) ஏற்படுத்துதல்
4. புதிய விவரிப்புகளை முன்மொழிதல்
5. இருக்கும் அறிவினை மீளாய்வு செய்தல்
6. ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் வேறுபடுத்தி அறிதல்
7. மாறிகளுக்கிடையிலான (Variable) இணக்கங்களையும் இணக்கமின்மைகளையும் காணுதல்
8. கருதுகோள்களைப் (Hypothesis) பரீட்சித்தல்
9. புலமைப்பயிற்சி (Academic Exercise)
10. பிரச்சினைகள் தொடர்பான எண்ணளவுப் பெறுமானங்களையும் பண்பளவுப் பெறுமானங்களையும் கண்டறிதல்.
11. புதிய எண்ணக்கருக்களையும் (Concepts) கோட்பாடுகளையும் விதிகளையும் நிறுவுதல்
12. அறிவுப்பரப்பில் புதிய தூண்டல்கள்ளையும் துலங்கல்களையும் முன்வைத்தல்.
13. புதிய தீர்மானங்களை எடுப்பதற்கு உதவுதல்
14. ஆய்வுகள் வழியாக சமூகப்பயனுடைமைக்கு உதவுதல்
15. பழைய ஆய்வுகளின் உண்மை நிலைமைகளைக் கண்டறிதல்
16. ஆய்வின் செயற்பாடுகள் தொடர்பான திறனாய்வுகளை முன்னெடுத்தல்
17. சமகாலப்பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் தன்மைகளை ஏற்படுத்தல்

## 1.3 ஆய்வின் பண்புகள்

பேராசிரியர் வை. நந்தகுமார் (2008:8-9) தமது "ஆய்வுமுறையியல் முறைகளும் நுட்பங்களும்" என்னும் நூலின் ஆய்வின் பொதுவான பண்புகள் என மேல்வருவனவற்றை விவரித்துள்ளார்.

1. ஆய்வானது ஒரு விஞ்ஞான ரீதியிலான செயற்றிட்டமாகும். இது காரணத்திற்கும் (Cause) அதன் விளைவிற்குமான (Effect) தொடர்பை எடுத்துரைக்கும். அத்துடன் ஒரு பிரச்சனைக்குத் தீர்வை அல்லது ஒருவினாவிற்கு விடையைப்பெற வழிவகுக்கும்.

2. வெளியிடுவதற்கு வாய்ப்பான விதிகள், கொள்கைகள் அல்லது கோட்பாடுகளைப் பொதுமைப்படுத்தல், விருத்திசெய்தல் என்பனவும் ஓர் ஆய்வின் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

3. ஆய்வானது அவதானிப்புச் சார்ந்த அனுபவங்களிலும் அல்லது (Empirical) சான்றுகளிலும் தங்கியிருக்கும்

4. ஆய்வுகளின் மூலம் சரியான முடிவுகளும் திடமான பெறுபேறுகளும் தெளிவான விளக்கங்களும் (Accurate Investigations) தீர்க்கமான விசாரணைகளும் விவரணங்களும் (Descriptions) பெறப்படும்.

5. முதலாம் தர மற்றும் இரண்டாம் தர மூலகங்களிலிருந்து புதிய தகவல்களைத், தரவுகளைச் சேகரித்தலைக் கொண்டதாக அமைதலும் ஓர் ஆய்வின் பண்பாகும்.

6. முடியுமான விடத்து உண்மையான மூலத்தரவுகளைப் புள்ளியியல் முறையில் சேகரிப்பதனையும் அவற்றிற்குப் புள்ளியியல் அளவைகளில் விளக்கங்களை வழங்குவதாகவும் இவை அமைவுறுகின்றன.

7. ஆய்வானது அது மேற்கொள்ளப்படும் துறையில் ஆழ்ந்த அறிவைத் தேடித்தரும்.

8. சேகரிக்கப்படும் தரவுகள், பயன்படுத்தப்படும் முறைகள், பரிசோதனைகள் என்பவற்றைத் தர்க்க ரீதியாகப் பிரயோகிக்கக் கூடிய வகையில் ஆய்வு அமைவுறுகின்றன.

9. ஆய்வானது மிகவும் பொறுமையாக மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருப்பதுடன் இதில் ஆய்வானது தனிப்பட்ட உணர்வுகள் விருப்பு வெறுப்புகள் என்பன இடம்பெறாதவகையில் அமைவதும் கவனத்திற்குரியது

10. ஆய்வுபல சமயங்களில் சவால்களை எதிர்நோக்குவதாக அமையும். ஏனெனில் பிரபல்யமற்ற முடிவுகளைப் பெறுமிடத்து அவற்றிற்குச் சமூகத்தில் அங்கீகாரம கிடக்கப்பெறாமலும் போகலாம்.

11. குறித்த ஒரு துறையில் அறிவினைப்பெறுவதற்கு அல்லது முன்னேறுவதற்கு ஆய்வுகள் ஒரு கருவியாக அமையப்பெறும். அதேவேளை ஆய்வானது அத்துறையின் வளர்ச்சியின் அளவினை (Rate) தூண்டுவதாகவும் அமையப்பெறும்.

12. ஆய்வானது மனிதனது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உருவானதாகும். எனவே, இதன் தேவையும் நோக்கமும் மனித இனத்திற்குச் சேவை செய்வதாகவே அமைவுறும்.

## 1.4 ஆய்வு சிறப்பாக அமைவதற்கான அடிப்படைகள்

ஆய்வொன்று சிறப்பாக அமைவதற்கான அடிப்படைகளுள் முதன்மைப்பெறுவது ஆய்வாளனது நடுநிலையான தன்மையிலேயே தங்கியுள்ளது. ஆய்வாளன் எப்பொழுதும் தனது சொந்த விருப்பு வெறுப்புகளைத் தள்ளிவைத்துவிட்டு, உள்ளதை உள்ளபடி தனது ஆய்வில் வெளிக்கொணரவேண்டும். அதுவே சமூகத்திற்கு பயன்தரக்கூடியதாக அமையும். அக்குறிக்கோளை அடைவதற்கு பின்வரும் ஆலோசனைகளையும் நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டியது அவசியம்.

1. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள் அல்லது பிரச்சினை அல்லது எண்ணக்கரு பற்றிய தெளிவு இருத்தல் வேண்டும்
2. ஆய்வாளருக்கு அந்த ஆய்வுப் பொருள் பற்றிய அறிவு, முன் அனுபவம் பற்றிய மதிப்பீடு அவசியமாகின்றது.
3. நன்கு தெரிந்த விடயங்கள் யாவை, தெரியாத விடயங்கள் யாவை, ஓரளவு தெரிந்தவை யாவை, ஊகித்து அறிந்தவை யாவை என்பவை பற்றிய தெளிவைப் பெற்றிருத்தல்
4. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள் பற்றி இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகள், அவற்றின் முடிவுகள் முதலியவற்றைத் தொகுத்துக் கொள்ளல் வேண்டும்.
5. குறித்த ஆய்வுக்குரிய வள ஆளனியினர், வள நிலையங்கள், வளபொருட்கள் பற்றிய விவரங்களைத் திரட்டிக் கொள்ளல். தேவைப்படின் இதற்கு இணைய வலைப்பின்னல்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. மேற்கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஆய்வு பொருள் பற்றிய அறிவின் இயல்புநிலை (State of Knowledge) பற்றித் தெரிந்துகொள்ளல்
7. பொருத்தமான முறையியலைப் பயன்படுத்தி ஆய்வை முன்னெடுத்தல்.
8. போதுமான அளவுக்குத் தகவல்களைத் திரட்டுதல்
9. ஆய்வின் வழியாக மெய்ம்மைக்கு ஒளிபாய்ச்சுதல்
10. தான் எதிர்பாராத முடிவுகள் ஆய்வுகளிலே வெளிவந்தாலும் மனங்கோணாது ஏற்றுக்கொள்ளல்.

## 1.5 ஆய்வாளருக்கு இருக்கவேண்டிய குணவியல்புகள்:

ஆய்வாளரின் கல்விப்பின்புலம், நடுநிலைமை, நேர்மைப்பண்பு, புறவயப்பாங்கு, விழிப்பாயிருக்கும் பண்பு, நுண்மதிப்பாங்கு, கடின உழைப்பு முதலியவை ஆய்வாளரின் முக்கியமான பரிமாணங்களாக உள்ளன. ஆய்வாளரின் தன்னம்பிக்கை, கலந்தாலோசிக்கும் திறன் முதலியவை வளமான ஆய்வுக்குத் துணைநிற்கும். கல்வியியல் ஆய்வுகள் மனிதக் காரணிகளுடன் தொடர்புபட்டுள்ளமையினால் தனிமனித இயல்புகள், சமூக இயல்புகள், பண்பாட்டுக் கோலங்கள், சமூக அசைவியக்கங்கள் முதலியன பற்றிய அறிக்கை ஆய்வாளருக்கு இன்றியமையாதது.

கல்விச்சார் ஆய்வுகளின் போது கல்விக் கோட்பாடுகள், உளவியல், கற்பித்தலியல், கலைத்திட்டம், கல்விமுகாமை, கல்வித்திட்டமிடல், கல்வி சார்ந்த கருத்தியல்கள் கல்விப்புள்ளி விபரவியல், கல்விச் சமூகவியல், கல்வி நுட்பவியல், ஒப்பியற் கல்வி, ஆற்றுப்படுத்தல், சீர்மியம் (Counselling) போன்ற துறைகளில் ஆய்வாளருக்கு உள்ள அறிவானது ஆய்வின் செம்மைக்கும் பொருண்மைக்கும் அடிப்படையானதாக கருதப்படுகிறது.

## 1.6 தத்துவம் சார்ந்த ஆய்வு

புத்தி ஜீவிகளது நோக்கில் ஆய்வு தத்துவம் சார்ந்ததாக அமையப் பெறுகிறது. இவர்களது சிந்தனைகள் யாவும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன. தத்துவார்த்த நோக்குகளுட் சில வருமாறு:

1 உள்பொருள்வாதம் (Ontologies)
2 அனுபவமுதல்வாதம்
3 முறையியல்
4 புலனறிவு வாதம்
5 கட்டமைப்பு வாதம்
6 மானிட வாதம்

## 1.7 முதனிலை தரவுகள்

முதனிலைத் தரவுகள் மேல்வரும் அடிப்படையில் திரட்டப்படுகின்றன

1. அவதானிப்புகள்
2. பங்குபற்றல்
3. நேர்காணல்
4. வினாக்கொத்து
5. கலந்துரையாடல்கள்(தனி/குழு)

## 1.8 இரண்டாம் நிலைத் தரவுகள்

இரண்டாம் நிலைத் தரவுகள் மேல்வரும் மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. இலக்கியங்கள்
2. சஞ்சிகைகள்
3. நூல்கள்
4. ஆய்வுக்கட்டுரைகள்
5. செய்தித்தாள்கள்
6. புள்ளிவிபரத் திணைக்களம்
7. அரசாங்க, கூட்டுத்தாபன புள்ளிவிபரத் திரட்டுகள்
8. இணையத்தளம்

## 1.9 ஆய்வின் படிமுறைகள்:

1. ஆய்வின் பிரச்சினைகளை இனங்காணலும் ஆய்வின் முக்கியத்துவத்தினை நோக்குதலும்
2. ஆய்விற்கான பிரச்சினைகளை வரையறை செய்தல் அல்லது பொருளினைத் தெரிவுசெய்தல்
3. ஆய்விற்கான நூல்களினை மீளாய்தல்
4. ஆய்வின் எல்லையை வரையறை செய்தல்
5. ஆய்வின் கருதுகோள்களை அமைத்தல்
6. ஆய்வு நடவடிக்கைக்கான நுட்பமுறைகளைத் தெரிதல், மேற்கொள்ளல்
7. தகவல்களையும் தரவுகளையும் திரட்டுதல்
8. பெறப்பட்ட தகவல்கள், தரவுகள் திருப்திகரமானவையா எனப் பரிசீலித்தல்
9. தரவுகளை ஒழுங்குப்படுத்துதலும் பகுப்பாய்வு செய்தலும்
10. அட்டவணைகள், வரைபுகள் வரைபடங்கள் என்பவற்றை அமைத்தல்
11. ஆய்வின் அறிக்கையை எழுதுதல்
12. ஆய்வு அறிக்கையைச் சரிபார்த்து மீள வடிவமைத்தல்
13. வெளியிடுதல்

உழைப்புக்கு அஞ்சுகின்றவர்களால் உண்மையை அடையமுடியாது. கடுமையான பிரச்சினையை ஆராய்கின்றவரே ஆய்வுக்களத்தில் வீரராம்.

## 1.10 இலக்கியக் கல்வியும் ஆய்வும்:

இலக்கியத்துறை ஆய்வு வரலாற்று ஆய்வு முறையோடு நெருங்கிய தொடர்புடையது. இலக்கியம் எல்லாத் துறைகளோடும் தொடர்புடையது என்றாலும் தத்துவத்தோடு நெருக்கமான தொடர்புடையது. தத்துவங்களை சுவைபடச் சொல்வது இலக்கியம். அரசியல், பொருளியல், உளவியல், தத்துவம், சமயம், சமூகம், மனித உணர்வுகள் என்ற பலகோணங்களில் இலக்கியத்தை ஆராய்தல் வேண்டும். இலக்கியக் கருத்துக்களை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்திட வேண்டும்.

இலக்கியங்கள் மனித உணர்வுகளின் வெளிப்பாடாக இருப்பதால் உளவியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யலாம். குறிப்பாகக் காப்பியங்களில் வரும் உறுப்பினர்களின் பண்புநலன்களை உளவியற் கோட்பாடுகளின் துணைக்கொண்டு ஆராய்வது பயன்தரும். வேற்றுமொழி, வேற்றுநாட்டு இலக்கியங்களோடு ஒப்பீடு செய்யும் ஒப்பாய்வு மனிதச் சமுதாய மேம்பாட்டுக்கும் ஒருமைப்பாட்டுக்கும் துணை செய்யும். இலக்கியப் படைப்புகளும் ஆய்வுகளும் மனிதனுக்கு அமைதியையும் மகிழ்வையும் தரக்கூடியனவாக இருக்க வேண்டும். பலதுறைகளோடும் பல இலக்கியங்களோடும் இணைத்துப் பார்க்கும் இலக்கிய ஆய்வுகள் சிறப்புறும். ஆய்வாளருக்கு அறிவு நிலை ஓங்கியும் உணர்வுநிலை ஒடுங்கியும் இருக்கவேண்டும். தாம் உணர்ச்சி வசப்படுவதும் பிறரை உணர்ச்சி வசப்பட வைப்பதும் அறிவியல் ஆய்வாளருக்கு ஒவ்வாத செயல்கள்.

**முடிவாக**

உயர்கல்வி (பல்கலைக்கழகக் கல்வி) ஆய்வுநெறிமுறைகளை ஓரளவு வரன்முறையாக அறிந்துகொள்வதற்கு இக்கட்டுரைக் கருத்துகள் ஓரளவு உதவலாம். பல்கலைக்கழக ஆய்வுநெறிமுறையிலே ஆய்வுவழிகாட்டிகள் (Supervisis) பிரதானமானவர்கள். அவர்களது வழிகாட்டல்களை அனுசரித்தே ஆய்வாளன் தமது ஆய்வை முன்னெடுக்க வேண்டும். பல்கலைக்கழக 'ஆய்வு முறை' என்று சில விதிமுறைகள் உள. அவற்றை அனுசரித்தும், ஏற்றுக்கொண்டும், ஆய்வேட்டினைத் தயாரிப்பது உசிதமானது, ஏற்புடைமை மிக்கது,

**இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்ட உசாத்துணை நூல்கள்:**

1. நாராயணன் க.(1987, ஆய்வு எது? ஏன்? எப்ப? ( A logical Approach to Research) ஸ்ரீ கோமதி அச்சகம் சென்னை.

2. நந்தகுமார்.வி(2008) ஆய்வுமுறையியல் முறைகளும், நுட்பங்களும், (Research methodology – Methods and Techniques) Uni Arts (Pvt) Ltd, Colombo – 13

**முற்றும்.**



# இலக்கியமும் மொழித்திறன் வளர்ச்சியும்

**கவிஞர் த. துரைசிங்கம்**
*கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)*

மனிதன் தன் எண்ணங்களை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் கருவி மொழியாகும். மொழி இல்லாமல் மனித இனம் இல்லை எனலாம். மொழித்திறன் என்பது மொழியை முறையாக ஒலித்தல், அதில் உள்ள சொற்களை எடுத்தாளுதல், சொற்களால் உருவான வாக்கியங்கள் மூலம் தகவல்களை வெளிப்படுத்துதல் ஆகியனவற்றைக் குறிக்கும். சமுதாயத்தில் மொழி கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுகிறது. கருத்துப் பரிமாற்றம் வலிமையும் விளைபயன் மிக்கதாகவும் அமைவதற்கு மொழித் திறன் அவசியமாகும்.

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பன மொழியில் பெறக் கூடிய அடிப்படைத் திறன்களாகும். இத்திறன்களே கற்றவரை மற்றவரிடமிருந்து வேறுபடுத்தியும் மேம்படுத்தியும் காட்டுவனவாகும். இந்நான்கு திறன்களையும் வளர்ப்பதற்கு கல்வியியல் அணுகுமுறைகள் பல உள்ளன. அவை திறனின்தன்மை, திறன் வளர்க்கும் முறைகள், திறன் வளர்ச்சியைத் தேர்ந்தறியும் முறைகள் ஆகியனவற்றுள் அடங்கும்.

**கேட்டலின் தன்மை:**

கல்வியில் கேட்டல் என்பது பரந்துபட்ட பொருளைக் கொண்டது. ஒலியைக் காது ஏற்கும் செயல் கேட்டலாகும். வெளிப்படும் ஒலிகளைச் செவியில் ஏற்று அவற்றிற்குப் பொருளை உணர்த்துவது கேட்டலாகும். கேட்டலின் போது உயிரியற் செயலும் அச்செயலால் உளவியல் இயக்கமும் நடைபெறுகின்றன. இரு இயல்களும் இணைந்த கேட்டலைச் செவிமடுத்தல் எனலாம். மொழியைக் கற்பதற்கு முதல் நிலை வாயில் செவியே. செவிச் செல்வத்தின் பெருமையினைப் போற்றிய வள்ளுவரும் "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" எனக் கூறியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது. ஐம்பொறிகளைக் கற்றலின் வாயில் கள் என்பர் ஐம்பொறிகளுள் செவியும் ஒன்று. செவியே கேட்டலுக்கு உரியது. நமது நடைமுறை வாழ்க்கையிலும் கல்வி கற்கும் காலத்திலும் கேட்டலுக்கேற்ற வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படுகின்றன. கேட்டலின் வழிதான் கற்றலின் பெரும்பகுதி நிகழ்கிறது. எனவே கற்றலின் அளவை மேம்படுத்தக் கேட்டலின் திறன் வளர்க்கப்படுதல் மிகமிக அவசியமாகும்.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

**ஒலிநயம் :**

செய்யுளில் அமையும் ஒலிநயம் அதைப்படித்த அளவிலேயே இன்பம் தருவதாகும். இனிய ஓசையால் படிப்போருக்கு இன்பம் ஊட்டப் படைப்பாளர்கள் ஒலிநயம் மிக்க சொல்லாட்சியை மேற்கொள்ளுகின்றனர். இலக்கண நூல்கள் ஒலிநயத்தை மோனை, எதுகை, இயைபு என வகைப்படுத்திக் கூறுகின்றன. எதுகை ஒலியால் இன்பம் தரும் பாடல் ஒன்றை நோக்குவோம்.

**"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவமனுங்க**
**செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி**
**அஞ்சொவிள மஞ்ஞையென அன்னமென மின்னும்**
**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள".**

ஒரு பெண்ணின் வருகையைப் புலப்படுத்தும் இக் கம்பராமாயணச் செய்யுள் எதுகை ஒலியால் அதன் மெல்லோசையால் படிப்போர்க்கு இன்பம் தருவதைக் காணலாம். இதே போன்று வல்லோசையால் படிப்போரை இன்புறுத்தும் மற்றோர் பாடலைப் பார்ப்போம்.

**உறங்குகின்ற கும்பகன்ன உங்கள் மாயவாழ்வெலாம்**
**இறங்குகின்றது இன்றுகாண் எழுந்திராய் எழுந்திராய்**
**கறங்குபோல விற்பிடித்த காலதூதர் கையிலே**
**உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்து உறங்குவாய்.**

**சொல்நயம் :**

ஒலித்தொகுதியில் பொருள் குறியீடு அமைய அவை சொல்லாகிறது. ஒவ்வொரு சொல்லும் அது கொண்டுள்ள அமைப்பு, பொருள் இவற்றால் தனித்தன்மை கொண்டிலங்குவதைக் காணலாம். சொல்நயம் மிக்க பாடல்களையே அனைவரும் விரும்புவர்

**தொடர் நயம் :**

தொடர்ச்சியான பொருளைத் தரும் சொற்தொகுதியே இங்கு தொடர் எனக் குறிக்கப்படுகிறது. படைப்போனின் படைப்புத்திறனையும் உத்தியையும் எடுத்துக் காட்டவல்லது தொடராட்சியாகும். இனிய தொடர்கள், பழமொழிகள், உவமைத் தொடர்கள், மரபுத் தொடர்கள் என்பன தொடர் சார்ந்த மொழி அமைப்புக்களாகும்.

**பொருள்நயம் :**

இலக்கியப் படைப்பாளனின் சொன் முறையே பொருள் நயம் எனப்படும். செய்யுளில் அமையும் கற்பனை, பொருள் செறிவு, சிலேடை போன்றன பொருள் நயத்தின் பாற்படும்.

**உவமை நயம் :**

கவிஞர்கள் ஒரு பெருளை - செய்தியைச் சுவை படவும் அழகு படவும் கூற உவமையைக் கையாளுவர். புறாக்கள் வட்டமாய்க் கூடி இரையுண்ணும் காட்சியைக் கூறும் பாவேந்தர் பாரதிதாசன்

**"இட்ட தோர் தாமரைப்பூ**
**இதழ் விரித்திருத்தல் போலே**
**வட்ட மாய்ப் புறாக்கள் கூடி**
**இரையுண்ணும்..." எனப் பாடுகிறார்.**

நட்பிற்கு இலக்கணம் கூறவந்த வள்ளுவரும்

**"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு" என்று கூறுகிறார்**

இத்தகைய உவமைகளை நயம்பட எடுத்துக் காட்டுவதன் மூலம் மாணவர்களின் மொழித் திறன்களை வளர்ச்சிபெறச் செய்யலாம். இலக்கியங்களைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களின் மொழித் திறன் வளர்ச்சியோடு மாணவர்களின் பண்பாட்டு வளர்ச்சியினையும் பேணலாம். தமிழ் இலக்கியத்தில் நமது உயர்ந்த பண்பாட்டினை உணர்த்தும் கருத்துக்கள் பலவுள. அவற்றைப் படிக்கச் செய்வதன் மூலம் மாணவரது பண்பாட்டினை வளர்த்தல் முடியும்.

**"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"**

**(கலித்தொகை)**

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்."**

**(திருக்குறள்)**

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா"**

**(புறநானூறு)**

கணேச தீபம் ~~~



# கல்வி உளவியல் ஆசிரியர் தொழிலுக்கு முன்னர் வழங்கப்பட வேண்டியதன் அவசியம்

- திரு. தர்மலிங்கம் சிறீகரன் (ஆசிரியர்)

உளவியல் என்றால் என்ன என்பதற்கு தொடக்க காலங்களில் அளிக்கப்பட்ட விளக்கமானது "ஆன்மாவைப் பற்றிய அறிவு" என்றிருந்தது. பின்னர் "மனம் பற்றிய அறிவு" எனக் கொடுக்கப்பட்ட விளக்கமும் திருப்தி அளிக்காமையினால் "நனவு நிலையைக் குறிக்கும் அறிவியல்" என விளக்கமளிக்கப்பட்டது. இக்கருத்தும் ஏற்கப்படாத நிலையில் தற்காலத்தில் 'நடத்தை பற்றிய அறிவே உளவியல்' என்கின்றனர். இருப்பினும் நவீன உளவியல் சிந்தனைளர்கள் "நடத்தை பற்றிய ஒரு நேரிடையான அறிவியலே" உளவியல் என்கின்றனர்.

கல்வி உளவியல் என்பது மாணவரிடம் ஏற்படும் நடத்தை மாற்றங்களைப் பற்றிய அறிவாகும். பொது உளவியல். சமூகவியல், குழந்தை உளவியல் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கண்டுபிடிப்புக்களை கல்விச்செயற்பாட்டில் பிரயோகிப்பதே இக்கல்வி உளவியலின் பிரதான நடவடிக்கையாகும். இந்தக் கல்வி உளவியலானது மாணவரின் உடல், உள, மனவெழுச்சி, சமூக வளர்ச்சிகள் பற்றிய விடயங்களையே பெருமளவிற்குக் கொண்டுள்ளது. மாணவரின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் கற்றலினூடாக அவர்களுக்கு வழிகாட்டுதலில் கணிசமான அளவிற்கு ஆசிரியர்க்கு கல்வி உளவியல் உதவுகிறது. பாடம்சார் நிபுணத்துவத்தை ஆசிரியர் பெற்றிருக்கும் அதேவேளை கல்வி உளவியல் தொடர்பான போதிய விளக்கமும் புரிந்துணர்வும் அனுபவமும் அவர் பெற்றிருப்பது அவசியமாகும். மனம்சார் உழைப்புக்களில் உள்ளடங்கும் ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு கல்வி உளவியல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அதுவும் ஆசிரியர் தொழிலுக்கு முன்பே வழங்கப்படுவது மிகமிக அவசியமாகும்.

கல்வி உளவியல் மாணவரின் உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூகத்தொடர்பு ஆகியவற்றின் வளர்ச்சி நிலைகள் மாணவரின் தேவைகள் விருப்பு வெறுப்புக்கள், மனப்பான்மை, ஆளுமைப்பண்புகள், தனியாள் வேறுபாடுகள் என்பவற்றையும் மாணவர்கள் எவ்வாறு கற்கின்றனர்? அவர்களிற்கேற்ற கற்பித்தல் முறைகள் எவ்வாறு ஒழுங்குப்படுத்தப்படுகிறது? வகுப்பறைக்கவிநிலை, வகுப்பறை முகாமைத்துவம், அறிகைக்கு ஆதாரமான புலக்காட்சியை வளப்படுத்தல் என்பன போன்ற பல விடயங்கள் முக்கியத்துவப்படுத்துகிறது.

ஆளுமைமிக்க மனிதனை உருவாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கு என்பது கல்வி உளவியலாளர் வாதமாகும். உடல், உள, மனவெழுச்சி பெற்ற ஒருவனையே ஆளுமை உடையவனெனக் கருதலாம். உளநலங்குன்றியவர்களால் சமூகத்திற்கு ஏற்படுத்தப்படும் பிரச்சனைகள் பலவாகும். எனவே பாடசாலைகள் கல்வியைக் கற்பித்தல் மட்டுமன்றி ஆரோக்கியமான உடல், உள நலங்கொண்ட சமூகத்தை, நற்பிரஜைகளை உருவாக்க பொறுப்பை சமூகம் பாடசாலைகளிடம் ஒப்படைத்துள்ளது. எனவே சமூகப்பிரதிநிதியாகவும் பெற்றோரிற்கு பதிலீட்டாளராகவும் மத்தியஸ்தராகவும் அக ஆதரவாளராகவும் பல வகிபாகங்களை வகிக்கும் ஆசிரியர் சிறந்த அறிவுடையோனாக இருப்பது மட்டுமன்றி மாணவரின் உளவியல் தேவைகளை புரிந்து கொள்ளக்கூடியவராக உளவளவாளராக மாணவரின் மனவெழுச்சி உறுதிப்பாட்டிற்குத் துணைநிற்பவராக மாணவரிடம் உளவலிமை, சுயநம்பிக்கையை ஏற்படுத்துபவராக பாடசாலையின் தூரநோக்கை அடையக்கூடிய உளநலங் கொண்டவராக இருப்பதன் மூலம் மாணவரின் உளநல விருத்தியைப் பேணமுடிவதோடு சிறப்பாகச் செயலாற்றவும் முடியும். இதற்காக ஆசிரியர் பணிக்கு வருவதற்கு முன்பே கல்வி உளவியல் பற்றிய அறிவை ஆசிரியர் பெற்றிருப்பது மிக அவசியமாகும்.

ஆசிரியர் பெறும் தொழிலுக்கு முன்னரான கல்வி உளவியல் பற்றிய அறிவு, கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் உயிர் நாடியாக விளங்கும் மாணவரின் தேவைகளை இனங்காணவும் நடத்தைகளை விளங்கிக்கொள்ளவும் எதிர்வுகூறுவதற்கும் இயலுமானதாக இருப்பதோடு தேவைக்கேற்ப நடத்தைமாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படும் நடத்தைமாற்றத்தை அடையமுடியாமல் சிக்கல்படும் மாணவர்களுக்கு வேண்டிய பின்னூட்டல்களை வழங்கவும் உறுதுணையாக இருக்கிறது. அதுமட்டுமன்றி மாணவரிடம் நற்பண்புகளும் நடத்தைமாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை ஆசிரியர் ஒருவர் கல்வி உளவியலின் துணையுடனேயே அறிந்துகொள்ள முடியும். மேலும் கல்வியின் குறிக்கோள் சமூகத்தேவைக்காக மாணவரின் நடத்தையை மாற்றியமைப்பதாகும். இம்மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் மாணவரை நன்கறிந்து விளக்கம் பெற்ற பின்னரே அதனைச் செயற்படுத்தக்கூடியதாக இருக்கும். மாணவரை அறிவதென்பது உளவியல் சார்ந்திருப்பதால் ஆசிரியர் பணிக்கு வருவதற்கு முன்பே கல்வி உளவியல் பற்றிய அறிவை ஆசிரியர் பெற்றிருப்பது அவசியமாகும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர்களிற்கிடையே பரஸ்பர தொடர்புகள் இருக்கும் போதே சிறந்த பெறுபேற்றை அடையமுடியும். ஆசிரியர் - மாணவர்களிடையிலான இடைவெளி அதிகரிக்கும் போது தரமான வளமான கற்றல் நிகழ வாய்ப்புக் குறைவாகும். தொடர்பின் நெருக்கமே சிறப்பான கற்றலுக்கு உதவும். ஆசிரியர் - மாணவர்களிற்கிடையில் ஏற்படும் இடைவினைகள் மனவெழுச்சிப்பரிமாற்றங்களோடு ஒன்றிணைந்திருப்பதனால் வகுப்பறையானது செயல்திறன்மிக்க உளவியல் நிலைப்பட்ட

சமுதாயமாக மாற்றமடைகின்றது. இதன்மூலம் மகிழ்ச்சியான கற்றல் சூழல் மாணவர்க்கு ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி ஆசிரியர் - மாணவர்களுக்கிடையில் ஏற்படும் சுமூக உறவுகள், அது சமூக மனவெழுச்சி, முதிர்ச்சி என்பனவற்றை பெறுவது இலகுவாக்கப்படுகிறது. ஒரு மாணவனை எவ்வளவு தூரம் ஆசிரியர் தன்பால் ஈர்க்கின்றாரோ அவ்வளவிற்கவ்வளவு அவ்வாசிரியரின் பாடத்தில் மாணவர் ஆர்வங்காட்டுவார். மாணவர் மனங்களை வெல்வதன் மூலம் ஆசிரியர் சாதிக்கும் விடயங்கள் அதிகமானவை. எனவே சிறப்பான ஆசிரியர் - மாணவர் தொடர்பினால் ஆசிரியரது தொழில்சார் பணி இலகுவாக்கப்படுவதொடு மாணவர்களது உளநலமும் விருத்தியடைய உதவுகிறது. ஆகவே ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர் தொடர்புகள் உருவாகும் வகையில் கற்றல் கற்பித்தல் முறைகளைச் செயற்படுத்துவதற்கு கல்வி உளவியல் பெரிதும் வழிகாட்டுவதால் அக்கல்வி உளவியல் ஆசிரியர் தொழிலுக்கு முன்பே வழங்கப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

கற்பித்தல் என்றால் என்ன? என்பதை விளங்கிக்கொள்வதே கல்வி உளவியலின் அடிப்படை எண்ணக்கருவாக இருக்கிறது. பிள்ளை விருத்தி தொடர்பாக கல்வி உளவியல் மூலம் ஆசிரியர் பெறும் அறிவு மாணவர்களின் விருத்தி மட்டத்திற்குப் பொருத்தமான கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மேற்கொள்ள உதவுகிறது. ஆசிரியரின் கற்பித்தல் நடத்தை மாணவரின் அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்துவதாக அறியப்பட்டுள்ளது. எனவே கற்பித்தலின் அடிப்படைகளை விளங்கிச் செயற்படுவதன் மூலமே வகுப்பறையை செயல்திறனுடன் வைத்திருக்க முடிவதோடு அதுவே வகுப்பறை கற்பித்தலின் வெற்றியாகவும் அமைந்துவிடுகிறது. அறிகை வாதம், நடத்தை வாதம் பற்றிய சிந்தனைகள் சிறப்பான வகுப்பறைக் கற்பித்தலுக்கு உறுதுணையாக உள்ளன. வகுப்பறைக் கற்பித்தலின் வெற்றி, மாணவரின் சிந்தனை விருத்தி, பிரச்சனை விடுவித்தல் என்பன கல்வி உளவியல்சார் கோட்பாடுகளை கோட்பாட்டு அடிப்படையில் கற்பதால் ஏற்படுகிறது. எனவே தொழிலுக்கு முந்தைய கல்வி உளவியல் பற்றிய அறிவு ஆசிரியருக்கு அவசியமாகும்.

கலைத்திட்டத்தை உள்ளடக்கிய உளவியலாக கல்வி உளவியல் இன்று வளர்ச்சி பெற்றுள்ளது. யாருக்கு கற்பிப்பது? கற்பிக்கவேண்டியவை எவை? எவ்வாறு கற்பிப்பது? எத்தகைய விளைவுகளுடன் கற்பிப்பது? மாணவர் அடைவுகளை எப்படி மதிப்பிடுவது? தண்டனைகள் எவ்வாறு வழங்கப்படுகிறது? பாடசாலையில் மாணவர் உளநலம் எவ்வாறு பேணப்படுகிறது? எவ்வாறு மாணவர் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்? எவ்வாறு வகுப்பறையை முகாமைத்துவம் செய்வது? எவ்வாறு ஒருவரின் ஆளுமை மற்றவர் மீது செல்வாக்குச் செலுத்துகிறது? சமூக விருத்திக்கு ஏற்ற வகையில் எவ்வாறு மாணவர் உருவாக்கப்படுகின்றார்கள்? போன்ற செயற்பாடுகளில் கல்வி உளவியல் நேரடியாகப் பங்கெடுத்து வளப்படுத்துவதால் தொழிலுக்கு முந்தைய கல்வி உளவியல் பற்றிய அறிவு ஆசிரியருக்கு அவசியமாகும்.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~



# படைப்பாற்றல் பற்றிய சில கருத்தோட்டங்கள்

**பேராசிரியர். சோ. சந்திரசேகரம்**
*(கல்விப் பீடாதிபதி, கொழும்பு பல்கலைக்கழகம்)*

மரபுவழிக் கல்விச் சிந்தனையின்படி கல்வி என்பது பிள்ளைகளில் உள்ள சிறந்தனவற்றை வெளிக்கொணர்வது. சுவாமி விவேகானந்தா போன்ற சிந்தனையாளர்கள் இக்கருத்தை வலியுறுத்தி வந்துள்ளனர். கல்விச் செயற்பாடானது, பிள்ளைகள் தமது சுய ஆற்றலையும் புத்தாக்கச் சிந்தனையையும், குறிப்பாகத் தமது படைப்பாற்றலை, ஆக்கத் திறனை வெளிக் கொணர்வதற்கான வாய்ப்புகளை வழங்குதல் வேண்டும். இச்சிந்தனையின் அடிப்படையான அனுமானம் பிள்ளைகள் பாடசாலைக்கு வரும்போதே உள்ளார்ந்த ஆற்றல்களை உடையவர்களாக வருகின்றார்கள். அவ்வாற்றல்களை அவர்கள் வெளியிடவும் பயன் தருமுறைகளில் அவ்வாற்றல்களைப் பயன்படுத்தவும் பாடசாலைகள் வாய்ப்புகளை வழங்க வேண்டும். பாடசாலைப் பாட ஏற்பாடு அதற்கேற்ற ஏற்பாடுகளையும் வாய்ப்புகளையும உடையதாக இருததல் வெண்டும் என்பது பல கல்விச் சிந்தனையாளரது கோட்பாடாகும்.

எவ்வாறாயினும் இன்று நடைமுறையில் உள்ள கல்வி முறையானது தீர்மானிக்கப்பட்ட பல கல்விக் குறிக்கோள்களுக்கேற்ற பாடவிடயங்களைத் தெரிவு செய்து அவற்றில் மாணவர்களை உரிய தேர்ச்சிகளை அடைய வேண்டும் என எதிர்பார்க்கின்றது. பாட ஏற்பாடு, பாடவிடயம், பாடநூல்கள், யாவும் அரசால் தெரிவு செய்யப்பட்டு அவ்விடயங்களில் மாணவர்கள் தேர்ச்சி பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மனனம் செய்தல், திரும்ப திரும்பக் கற்று பாடவிடயத்தை நினைவில் இருத்தல், க.பொ.த.சாதாரணநிலை, உயர்தரநிலைப் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்தல்,அதற்கு தனியார் போதனை நிலையங்களை நாடுதல் என்பனவே இன்றைய கல்விச் செயற்பாடடின் மையப் பொருளாக விளங்குகின்றன. இதில் படைப்பாற்றல் வளர்ச்சி, ஆக்கத்திறன், பிள்ளைகளின் சுயசிந்தனை வளர்ச்சி போன்ற அம்சங்கள் முற்றாக 'அடிபட்டு' , கவனிப்பாரற்றுப் போகின்றன. இத்தகைய கல்விச் செயற்பாட்டில் மாணவரின் படைப்பாற்றல் திறன்களை இனங்காணுதல், அவறைப் பேணுதல், வளர்த்தல், அங்கீகரித்தல், அவற்றைத் தேசிய அபிவிருத்தி நோக்கிப் பயன்படுத்தல் போன்ற உயரிய கல்வி நோக்கங்கள் பின்தள்ளப்பட்டுள்ள ஒரு கல்வி முறைமையையே நாம் உருவாக்கி உள்ளோம்.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

கற்பித்தல் நுட்பங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். ஆய்வாளர் கருத்தின் படி படைப்பாற்றல் வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் நடத்தை, மனப்பாங்கு, திறன்கள் என்பனவே கூடிய பங்களிப்புச் செய்யக் கூடியவை. ஆயினும் ஆசிரியர்கள் பெரும்பாலும் 'தாம் சொல்வதுதான் வேதவாக்கு' என்ற முறையில் பணிபுரிகின்றனர். படைப்புச் சிந்தனை வகுப்பறையில் குழப்பங்களையே ஏற்படுத்தும். பிள்ளைகளின் புதிய, வழமைக்கு மாறான சிந்தனைகள் வகுப்பறையின் நாளாந்த பணிகளைப் பாதிப்பன, வகுப்பறை நிர்வாகம் பாதிப்படையும் என ஆசிரியர்கள் கருதுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

படைப்பாற்றல் வளர்ச்சியானது பல காரணங்களால் முக்கியத்துவம் பெறுகின்றது. மனித சமூகத்தின் கலாசார வளர்ச்சியின் முக்கிய உந்து சக்தியாகப் படைப்பாற்றல் விளங்கி வந்துள்ளது. இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியானது ஒரு வகையில் படைப்பாற்றலின் விளைவேயாகும். மனிதனுக்கு மகிழ்ச்சியை வழங்கும் இசை, ஓவியம், இலக்கியம் மற்றும் கலை வடிவங்கள் அனைத்தும் படைப்பாற்றலின் விளைவேயாகும். உளவியலாளரின் கருத்தின்படி படைப்பாற்றல் என்பது புதிய சிந்தனைகளை உருவாக்க உதவுவது. தொடர்பற்றனவாகக் காணப்படும் பல்வேறு விடயங்களுக்குள் புதிய தொடர்டபுகளை இனங்காணச் செய்வது.

படைப்பாற்றலைப் பற்றி விரிவாக விளங்கிக் கொள்ள நான்கு விடயங்கள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

1. **படைப்புச் சிந்தனையில் இடம்பெறும் படிமுறைகள்** (Process)
2. **படைப்பாளி** (Person)
3. **படைப்புச் சிந்தனையின் விளைப்பொருள்** (Product)
4. **படைப்பாற்றல் வளர்க்கப்படப் பொருத்தமான சூழல்**

படைப்பாற்றலினால் உருவாக்கப்படும் பொருளைக் கொண்டு படைப்பாற்றல் பற்றிச் சிந்திக்க முடியும். உதாரணமாக ஓவியம், கவிதை, கதை, கொள்கை (Theory), தீர்வு (Solution) போன்றன. இவற்றில் ஒரு தனித்தன்மையும் தனிச் சிறப்பும் புதுமையும் இருத்தல் வேண்டும். அத்துடன் அப்புதிய படைப்பினால் ஒரு பயனும் இருத்தல் வேண்டும்.

படைப்பாற்றல் தொடர்பான படிமுறையில் படைப்பாளி முதலில் பிரச்சினைகளை உணருகின்றான். தகவல்களில் காணப்படும் குறைகளையும் இடைவெளிகளையும் இனங்காணுகின்றான். அதன் பின்னர் இப்பிரச்சிகைள், இடைவெளிகள் தொடர்பான அனுமானங்களை (சாத்தியமான தீர்வுகளை) உருவாக்கி அவற்றைப் பரீட்சித்தும் திருத்தியமைத்தும்பெறுபேறுகளை அறிவிக்கின்றான். தனியாள் இவ்வாறு இடைவெளிகளை நிரப்ப முயற்சிக்கையில் படைப்புப் பணியிலேயே ஈடுபடுகின்றான்.

மேலும் பல வேறுபட்ட சிந்தனைகளுக்கிடையில் உள்ள தொடர்புகளை அவன் கண்டறிந்து அவற்றில் ஓர் இணைப்பைக் காணும் முயற்சியும் படைப்புப் பணியின் பாற்பட்டதேயாகும். புதிய இணைப்பில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத அம்சங்கள் இடம்பெறும்போது தீர்வானது படைப்புப் பணிகளுள் ஒன்றாக அமைகின்றது.

படைப்பாளியொருவரின் ஆக்கச் சிந்தனை அவரது விசேட துறை பற்றியதாக மட்டும் அமையாது. அவர் பிற துறைகள் பற்றிச் சிந்தித்து சில பொதுமைகளைக் கண்டறிவார். பல்வேறு துறைசார்ந்த சிந்தனைகள் (வரலாறு, புவியியல், பொருளியல்) ஒன்றிணையும்போது உருவாகும் புதிய கலப்புச் சிந்தனைகள் பலவாக அமையும்போது அவற்றில் ஓரிரண்டு புதிய படைப்பாக அமைய இடமுண்டு.

**படைப்பாளிக்குரிய ஆற்றல்கள்:**

ஒருவர் படைப்பாளியாக உருவாக வேண்டுமாயின் அவர் குறிப்பிட்ட சில ஆற்றல்களையும் ஆளுமைப் பண்புகளையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவை எவை என்பது பற்றிப் பல ஆய்வாளர்கள் இனங்கண்டுள்ளனர். (Paul Guilford, E.de Bono போன்றோர்) இவர்கள் மனிதரின் சிந்தனைச் செயற்பாட்டை விரி சிந்தனை (Divergent thinking) குவி சிந்தனை (Convergent thinking) எனப் பிரித்து ஆராய்ந்தனர். இவ்விருவகை சிந்தனைகளும் எதையாவது படைக்க உதவும் என்றும் விரிசிந்தனை என்பது பல்வேறு திசைகள் நோக்கியது என்றும் குவி சிநதனையானது பிரச்சினைகளுக்கான ஒரேயொரு தீர்வுக்கு மட்டும் இட்டுச் செல்வது எனவும் அவர்கள் விளக்கினர். பொதுவாக விவேக சோதனைகளின் போது வினாக்களுக்கு ஒரேயொரு விடையே இருக்கும். 3,6,9 ..... என்ற வினாவுக்கு விடை 12 ஒன்றேயாகும். இது குவி சிந்தனைக்கு உதாரணமாகும். ஆனால் விரி சிந்தனையில் விடைகள் பலவாக அமையும். வானொலி, தொலைக்காட்சியின் பயன்கள் எவை? பாடசாலைப் பரீட்சைகளை ஒழித்துவிட்டால் என்ன ஆகும்? இதுபோன்ற வினாக்களுக்குப் பல விடைகள் இருக்கும்.

விரி சிந்தனையில் படைப்பாளி பல மாற்றுச் சிந்தனைகளை முன் வைக்கும் ஆற்றலுடையவனாகின்றான். உதாரணமாக ஒரு கவிஞன் தனது மனதில் தென்படுகின்ற ஏராளமான சொற்களில் சிலவற்றைத் தெரிந்து பயன்படுத்துகின்றான். அடுத்து படைப்பாளி இதுவரை எவரும் சிந்திக்காத ஒன்றைக் கூறும் ஆற்றலை உடையவனாக இருத்தல் வேண்டும். (Originality) மேலும் அவன் உருவாக்கும் பல்வேறு சிந்தனைகள் வெவ்வேறு வகைப்பட்டவனாய், நெகிழ்வுடையனாவாய் (Flexibility) இருத்தல் வேண்டும். இவ்வெவ்வேறு வகையான சிந்தனைகளை வெளியிடுவதும் ஒரு ஆற்றலாகும். அத்துடன் படைப்பாளி தனது சிந்தனைகளின் முழு விபரங்களையும் தரும் (Elaborate) ஆற்றலுடையவனாக இருத்தல் வேண்டும்.

பிரச்சினை தீர்க்கும் வழிமுறைகள் பற்றிய ஆற்றல்களும் படைப்பாற்றலின் பாற்பட்டவையாகும். இவ்வாற்றல்களை மாணவர்கள் கற்று. விருத்தி செய்து கொள்ள முடியும். ஒரு பிரச்சினையை உணர்தல், அதனை வரையறை செய்தல், பிரச்சனை தொடர்பான தகவல்களைத் தேடல், மாற்றுத் தீர்வுகளை இனங்காணுதல், முரண்பட்ட சிந்தனைகளையும் தீர்வுகளையும் கருத்திற் கொள்ளல், அவசரப்பட்டு முடிவுகளைச் செய்யாதிருத்தல், புதுமையான சிந்தனைகளைத் தேடல் என்பன இத்தகைய ஆற்றல்களாகும்.

பகுப்பாய்வுப் படி முறைகளைப் பயன்படுத்தாது முடிவுக்கு வர உள்ளுணர்வைப் (Intuition) பயன்படுத்தும் ஆற்றல் படைப்பாளிக்கு இருத்தல் வேண்டும். பல விஞ்ஞானிகள் தமது விசாரணையைத் தொடங்கு முன்னர் உள்ளுணர்வினூடாக விடைகளைக் கண்டறிந்துள்ளனர். புதியனவற்றை அறிவதற்கு விஞ்ஞான முறைகள் தவிர்ந்த வேறு வழிமுறைகளும் (Other ways of knowing) இருப்பதாகப் பல அறிஞர்கள் கூறுவர். யூகிப்பதும் (Guessing) ஒரு வகையான உள்ளுணர்வுச் சிந்தனையே! ஆயினும் மாணவர்கள் யூகமாக விடை தருவதைப் பொதுவாக ஆசிரியர்கள் விரும்புவதில்லை. ஏனெனில் பாடத்தைச் சரியாக படிக்காத மாணவர்கள் யூகங்களைக் கையாள்வதுண்டு. இவ்வுள்ளுணர்வு பற்றி விரிவாக ஆய்வுகள் செய்யப்படவில்லை.

**ஆளுமைப் பண்புகள்**

படைப்பாற்றலுடன் தொடர்புடைய பல ஆளுமைப் பண்புகள் உள்ளன. முதலில், படைப்பாற்றல் மிக்கவர்கள் கூடிய செயலூக்கம் (Motivation) உடையவர்களாகக் காணப்படுகின்றனர். தமது சமூக, பொழுதுபோக்குப் பணிகளில் ஈடுபாடு காட்டாது தமது ஆராய்ச்சிப் பணியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர்கள் புகழ்பெற்ற விஞ்ஞானிகளாக மாறினர். விஞ்ஞான ஆய்வுப் பணியில் ஈடுபட்ட பல விஞ்ஞானிகள், அப்பணியில் செலுத்திய ஊக்கம் காரணமாக இலக்கியம், இசை, பயணங்கள் என்பவற்றைத் தவிர்த்துக் கொண்டனர். இவர்கள் கிழமை முழுவதும் நீண்ட நேரம் ஆய்வுப் பணியில் ஈடுபட்டமைக்குக் காரணம் அப்பணியில் இருந்த ஆர்வமே!

கற்பனையும் தொலைநோக்கும் கொண்ட விஞ்ஞானிகள் நீண்ட நேரம் பணிபுரிந்து உழைத்து அறிய வேண்டியதைத் தமது சிந்தனையால் கண்டு கொள்கின்றனர். பயனற்றவை, தேவையற்றவை எவை என்பதைச் சிந்தித்து அறிந்து அவற்றை ஒதுக்கி விடுவதால் படைப்புப் பணி இலகுவாகின்றது.

படைப்பாளிகளின் மற்றொரு ஆளுமைப் பண்பு, அவர்களுடைய சுதந்திரமான சிந்தனையும் சுதந்திரமான மதிப்பீடுகளுமாகும். பிறருடைய கருத்துக்கள் தவறெனப்பட்டால் அவர்கள் அதனைச் சுட்டிக் காட்டத்தயங்குவதில்லை.

படைப்புப் பணியில் ஈடுபடும் எவரும் சிக்கலான மயக்கமான, தெளிவற்ற நிலைமைகளை எதிர்நோக்குவர். அவர்கள் கண்ட பெறுபேறுகள் திட்டவட்டமானவையாக அமையாது. சிலருக்கு இந்நிலைமைகளைத் தைரியமாக எதிர்நோக்க முடியாது. அந்த அளவுக்குப் பொறுமை இருக்காது. எழுத்தாளர், கலைஞர்கள், மற்றும் படைப்பாளிகளிடம் நடாத்தப்பட்ட பரீட்சையொன்றில் அவர்கள் தெளிவற்ற, சிக்கலான, ஒழுங்கற்ற வடிவங்களையே (Figures) விரும்பத்தக்கனவாகத் தெரிவு செய்தனர் என ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். இப்பரீட்சையில் பல வடிவங்கள் தரப்பட்டு அவற்றில் பிடித்தமானவற்றைத் தெரிவு செய்யுமாறு படைப்பாளிகள் கேட்கப்பட்டனர்.(Figure Preference Test).

படைப்பாளிகளின் மற்றொரு பண்பு, அவர்கள் தமது சொந்த சிந்தனைகளிலேயே முற்றாக மூழ்கி இருப்பதாம் (Introvert - அகமுகி). சமூக வைபவங்களில் கலந்து கொள்வதில்லை. தமது வேலையுடன் தொடர்பின்றி பிறரைச் சந்திப்பதில்லை. பெருமளவுக்குத் தனிமையை விரும்புவர். தமது சிந்தனையை மேற்கொள்ள இது உதவும்.

படைப்பாளிகள் திறந்த மனதுடன் புதிய சிந்தனைகளையும் கருத்துக்களையும் பெரிதும் விரும்புவர். துருவி ஆராய்ந்து நோக்க விரும்புவர். இப்பண்பு பொதுவாகப் பிள்ளைகளிடம் காணப்படுவது. எதனையும் கூர்ந்து அவதானிக்கும் பண்பு, தாம் சந்திக்கும், காணும் புதிய, வழமைக்கு மாறான விடயங்களில் ஈடுபாடு காட்டும் பண்பு என்பனவும் படைப்பாளிகளிடம் காணப்படும்.

கலைஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள் போன்றோரிடம் கூடிய அழகியல் ஈடுபாடும் இருக்கும். ஆனால் விஞ்ஞானிகளிடமும் இப்பண்பு அவதானிக்கப்பட்டுள்ளது. ஐன்ஸ்டைன் இசையில் ஆர்வமுடையவராக விளங்கினார். இந்திய விஞ்ஞானி பாபா இசை நிகழ்ச்சிக்காகவே அடிக்கடி அவுஸ்திரியா சென்றார். சில படைப்பாளிகளிடம் புலமைசார் பண்புகள் அதிக அளவிலும் வேறு சிலரில் ஆளுமைப் பண்புகள் அதிக அளவிலும் படைப்பாற்றலை நிர்ணயிப்பதில் பங்கு கொள்ளும்.

மாணாக்கரது ஆக்கத்திறன் (Creativity) வளர்வதற்கான பாடங்களும், செயல்களும் கல்வி ஏற்பாட்டில் இடம்பெறவேண்டும். புதியன புனைவதற்கான பல வாய்ப்புகள் பாடசாலைகளில் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இவ்வாய்ப்புகள் அவர்களது தனித்தன்மை (Individuality) வளர உதவும். இத்தகைய வாய்ப்புகள் பாடசாலைக்கல்வியில் இல்லாமற் போகுமாயின் பாடசாலைக் கல்வியின் வழியே சுவையற்ற, சலிப்பூட்டக் கூடிய ஒருமைப்பாட்டினையே மாணாக்கர் யாவரும் பெறுவர்.

# சிறுவர் இலக்கிய வளர்ச்சி – ஒரு நோக்கு

**- புலவர் பூங்குன்றன்**

சின்னஞ் சிறுவர்களுக்குப் பல்வேறு ஒலிகளைக் கேட்பதில் ஆசை. தாமும் அவ்வாறு ஒலி எழுப்பி மகிழ்வதில் ஆசை. தாளம் போட்டுப் பாடுவதில் ஆசை. தாளத்திற்கேற்பத் தாமும் அங்கங்களை அசைத்துத் துள்ளிப் பாடுவதில் ஆசை. விடுகதைகள் போடுவதில் ஆசை. சிறுகதைகளைக் கேட்பதில் ஆசை. கதைகளில் வரும் பறவைகள், மிருகங்கள் போல் பாவனை செய்வதில் ஆசை.

இந்த ஆசைகள் எல்லாம் அவர்களது பிறப்பு, முதல் வளர்ச்சி பெற்று வந்தவையாகும். தினசரி வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் உண்ணும் போதும் உறங்கும் போதும் ஓடும் போதும். ஆடும் போதும், துள்ளும் போதும் அவர்கள் தம் மூச்சிலும் பேச்சிலும் ஒவ்வொரு அங்க அசைவிலும் தாள, லய உணர்ச்சிகளைக் காண்பிக்கிறார்கள். இந்த உணர்ச்சிகளைச் சீரான முறையில் வெளிப்படுத்தினாற்றன் அவர்களது வாழ்வு பூரணப் பட்டதாக அமையும்.

சிறுவர்கள் தமது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டியது அவர்களது வளர்ச்சிக்கு மிகமிக அவசியமாகும். இனிய இசையும், தாளமும் அவர்களை வளர்க்கிறது. அவர்கள் தம் ஆற்றல்களைத் துலங்கச் செய்கிறது. நல்ல பண்புள்ள உள்ளத்தை உருவாக்குகிறது.

"குழந்தைகளுக்கு, சிறுவர்க்களுக்கு எழுதுவது மிகவும் கடினம். சொல்லும் கருத்தும் எளிமையாக இருக்க வேண்டும். உள நூல் அறிவும் இதற்குத் தேவை" என்கிறார் டாக்டர் மு. வரதராசன்.

சிறுவர்கள் பெறற்கரிய பெருஞ் செல்வம். "செல்வமற்ற ஏழைகளின் செல்வம் சின்னஞ் சிறுவர்களே" என்பது மேலை நாட்டுப் பழமொழியாகும். பெறுதற்கு அரிய செல்வமான சிறுவர்களின் வாழ்வு சீரழியாமல் செம்மை பேணுவதற்கு சிறப்புறுதற்குச் சிறுவர் இலக்கியம் பெரிதும் துணைபுரிகிறது. சிறுவர் இலக்கியம் வளர வளரச் சிறுவர்களின் வாழ்வு வளம்பெறும். அவர்கள் தம் வாழ்வு வளம் பெறச் சமுதாயம் வளம் பெறும். சமுதாயம் வளம்பெற நாடு வளம் பெறும். இந்த உண்மையை நன்குணர்ந்தே சிறுவர் இலக்கியம் வளர வேண்டுமென விரும்புகின்றோம்.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

வளைந்து வளைந்தே போகும் பாம்பு அல்ல
வழிநெடுக நீருதவும், மழையும் அல்ல
காடு மலை சுற்றி வரும் கரடியல்ல
கடலிலே மூழ்கிவிடும் மீனும் அல்ல - அது என்ன, ( - ஆறு)

இத்தகைய விடுகதைகளே சிறுவர் பாடல் வளர்ச்சியில் முதல் நிலையாகும்.

**நாட்டுப்புறப் பாடல்கள்:**

சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் இரண்டாவது நிலை நாட்டுப் புறப் பாடல்களின் தோற்றமாகும். நாட்டுப்புறப் பாடல்களை நமது தாய்மாரும் பாட்டிமாரும் இயற்றியிருக்க வேண்டும். அவர்களது வாய் வழியாகப் பிறந்த பாடல்கள் இன்று ஏடுகளில் எழுத்தளவில் இடம்பெற்றுக் கிராமிய இலக்கியமாகிவிட்டன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடல்களைக் குறிப்பிடலாம்.

**சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு**
**சாயக் கிளியே சாய்ந்தாடு.....**

**கை வீசம்மா கை வீசு**
**கடைக்குப் போகவாம் கை வீசு.....**

**காக்கா காக்கா பறந்து வா**
**கண்ணுக்கு மை கொண்டுவா....**
**குருவி குருவி பறந்துவா**
**கொண்டைக்குப் பூ கொண்டுவா....**

இவ்வாறு பறவைகளையும் பிள்ளைகளையும் அழைக்கும் பாடல்களை நாட்டுப் புறப் பாடல்களில் நாம் பரக்க காணலாம்

**நீதிப் பாடல்கள்:**

சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் மூன்றாவது நிலை நீதிப் பாடல்கள் சம்பந்தப்பட்டனவாகும். சிறுவர்களின் ஒழுக்கம், அறிவு, மனப்பாங்கு என்பனவற்றை விருத்திசெய்யும் நோக்கிலும் நீதிநெறிகளை அறிந்துகொள்ளும் வகையிலும் நீதிப் பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஔவையார் அருளிய ஆத்திசூடி நீதிப் பாடல்களில் முன்னிலை பெறுகிறது.

சிறுவர்கள் இவற்றைச் செய்ய வேண்டும், இவற்றைச் செய்யக் கூடாது என அறிவுறுத்தும் வகையில், நீதி கூறும் பாடல்களாக ஆத்திசூடி அமைந்துள்ளது.

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்

போன்றனவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஔவையார் பாடிய மூதுரை, நல்வழி, கொன்றை வேந்தன் போன்றன யாவும் சிறுவர்களுக்கு மட்டுமல்ல வளர்ந்தோருக்கும் நீதி புகட்டுவனவாகவுள்ளன.

ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றனவற்றில் சிறுவரின் வயதுக்குப் பொருந்தாத அறிவுரைகள் பல இருக்கின்றன. இதனால் இவற்றைச் சிறுவர் நூல்கள் என ஏற்றுக்கொள்ளல் ஆகாது என வாதிடுவோரும் உள்ளனர்.

தையல் சொற் கேளேல்
மைவிழியார் மனை அகல் ( - ஆத்திசூடி)

துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
பிறன் மனை புகாமை அறனெனத்தகும் ( - கொன்றைவேந்தன்)

இவைபோன்றன சிறுவர்க்கு ஒவ்வாதென்பாரும் உளர்

சிறுவர்களுக்காக எழுதிய முதல் ஆண்பாற் கவிஞர் அதிவீர ராம பாண்டியன் என்பர். இவர் எழுதிய வெற்றி வேற்கை அறிவுரை பகரும் வகையிலேயே அமைந்துள்ளது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"
"கல்விக்கழகு கசடற மொழிதல்"
"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே".

இவையெல்லாம் வெற்றிவேற்கை தரும் அறிவுரைகளாகும். இவை சிறுவர்களின் அறிவாற்றலுக்கு அப்பாற்பட்ட கருத்துக்களையே போதிக்கின்றன.

அதிவீரராமபாண்டியனின் பின்வந்தவர் உலக நாதர். இவர் சிறுவர்களுக்கெனப் படைத்த நூல் உலக நீதி. இதில் இடம்பெற்றுள்ளன யாவும் வளர்ந்தோருக்குப் பயன்படத்தக்க நீதிகளையே பெரிதும் எடுத்துக் கூறுகின்றன.

"ஒதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்"
"கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
இருதாரம் ஒரு நாளும் தேட வேண்டாம்"

என்பன இதற்கு நல்ல சான்றாக அமைந்துள்ளன.

இதனாற்றான் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலக நீதி போன்றன சிறுவர் நூல்கள் அல்ல எனக் கூறப்படுகிறது. டாக்டர் மு. வரதராசன், து. பெரியசாமித்தூரன், அழ-வள்ளியப்பா போன்றோரும் இதனையே வலியுறுத்தியுள்ளனர். எனினும் ஔவையார், அதிவீரராம பாண்டியன், உலக நாதர் போன்றோரின் நூல்களில் சிறுவர் தம் எதிர்கால வாழ்வுக்குப் பயன்படும் பல கருத்துக்கள், நீதிகள் நிறைந்துள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை.

**19ஆம் நூற்றாண்டில் :**

சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் நீதிப் பாடல்களின் தோற்றத்தைத் தொடர்ந்து இயற்கைக் காட்சிகள், பறவைகள், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றை, சிறுவர்கள் விரும்புவனவற்றைப் பாடுபொருளாக்கிப் பாடும் பாடல்கள் பல உருவாயின. இதனைச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் நான்காம் படி நிலை எனக் கூறுவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்த்தவக் கவிஞர் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை 184 வரிகள் கொண்ட "பால்யப் பிரார்த்தனை" என்னும் சிறுவர் நூல் ஒன்றை இயற்றியுள்ளார். இயேசு பெருமானைப் போற்றித் துதிக்கும் வகையில் இந்நூல் அமைந்தது. அதில் ஒரு பகுதி வருமாறு

"பத்தி யாய்ச் செபம் பண்ணவே
சுத்த மாய்த் தெரியாதய்யா
புத்தி யோடு உமைப்போற்ற -நற்
சித்த மீந்திடும் இயேசுவே..."

இவ்வாறு இப்பாடல் தொடர்ந்து செல்கிறது. 1886 ஆம் ஆண்டில் ஈழத்தவரான தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் "பால்யக் கும்மி" என்னும் சிறுவர்க்கான பாடல் நூலை வெளியிட்டுள்ளார். இதுவே ஈழத்திலும் தமிழகத்திலும் முதன் முதல் வெளியான சிறுவர் பாடல் நூலாகும்.

**20ஆம் நூற்றாண்டில் :**

இருபதாம் நூற்றாண்டு சிறுவர் இலக்கியம் வளம்பெற்ற காலமெனலாம். சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாவல்கள், சிறுவர் நாடகங்கள், சிறுவர் பத்திரிகைகள், சிறுவர்க்கான திரைப்படங்கள் அனைத்தும் வெளிவந்த காலம் இதுவாகும். எனவேதான் 20ஆம் நூற்றாண்டைச் சிறுவர் இலக்கியம் செழிப்படைந்த காலமென அழைக்கின்றனர்.

இருபதாம் நூற்றாண்டைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் சிறுவர் இலக்கிய முன்னோடியாக விளங்கியவர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை ஆவார். அவரே 1901 இல் சிறுவர் பாடல்கள் எழுதத் தொடங்கினார். அவரின் பின் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1915 இல் பாப்பாப் பாட்டை எழுதி ஞானபானு என்னும் இதழில் வெளியிட்டார். பாரதியாருக்குப் 15 ஆண்டுகளுக்கு முன்னரே கவிமணி சிறுவர் பாடல் எழுதிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கவிமணியே சிறுவர் விரும்பும் பொருள்களை, காட்சிகளை, விளையாட்டுப் பொருட்களைப் பாடுபொருளாக்கியவர். சிறுவர்களின் வயதுக்கும் அறிவுக்கும் ஏற்ற சொற்களையும், கருத்துக்களையும் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திப் பாடல்கள் படைத்த பெருமைக்குரியவராகிறார். சிறுவர்கள் மீது பேரன்பு கொண்டவர் கவிமணி. அதனாற்றான் அவர்களுக்கெனப் படைத்த மலரும் மாலையும் என்னும் நூலைச் செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியருக்கு உரிமையாக்கினார்.

கவிமணியின் சிறுவர் பாடல்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **விலங்கு, பறவை, உயிரினம் பற்றிய பாடல்கள்**
2. **இயற்கைப் பொருள்கள், காட்சிகள் பற்றியவை**
3. **சிறுவர் விரும்பும் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள்**
4. **உள்ளத்து உணர்வைப்பற்றிய பாடல்கள்**
5. **கதைப்பாடல்கள்**
6. **மொழிபெயர்ப்புப் பாடல்கள்**

சிறுவர் பாடல்கள் எழுதும் கவிஞர்கள் பொதுவாகச் சோகச் சுவையைப் பாடல்களில் வடிப்பதில்லை. ஆனால் கவிமணி தமது சொந்தப் பாடல்களிலும் மொழிபெயர்ப்புப் பாடல்களிலும் சோகச் சுவை ததும்பும் பாடல்கள் பலவற்றைப் படைத்துள்ளார். குழந்தையை இழந்த தாயின் துயரத்தை வடிக்கும் முதல் துயரம் என்னும் பாடல் படிப்போரின் கண்களைக் கலங்கச் செய்யும் தன்மைவாய்ந்தது எனலாம். இனிய ஓசை நயமும் எளிய சொற்களும் கொண்டவை கவிமணியின் பாடல்கள். அவை காலத்தைவென்று நிலைத்து நிற்பதற்கு இவையே காரணமாகும்.

தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி
அம்மா என்குது வெள்ளைப் பசு - உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி.

நாவால் நக்குது வெள்ளைப் பசு – பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப் பசு – மடி
முட்டிக் குடிக்குது கன்றுக் குட்டி.

இப்பாடலில் வெள்ளைப்பசு என்ற சொல் நான்கு முறை வந்துள்ளது. கன்றுக்குட்டி என்ற சொல்லும் நான்கு முறை இடம்பெற்றுள்ளது.

சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் ஐந்தாம் படிநிலையாக 20ஆம் நூற்றாண்டில் எழுந்த பாடல்கள் விளங்குகின்றன. தமிழகத்தில் கவிமணியைத் தொடர்ந்து பாரதியார், பாரதிதாசன், சுத்தானந்த பாரதியார், வாணிதாசன், தமிழ் ஒளி, கா. நமச்சிவாய முதலியார், மணி திருநாவுக்கரசு, மயிலை சிவமுத்து, அ.கி.பரந்தாமனார், அழ. வள்ளியப்பா, ர. அய்யாசாமி, செல்வகணபதி, திருச்சி பாரதன், மதிஒளி, தமிழ்முடி, லெமன், ரா. பொன்ராசன், நாரா - நாச்சியப்பன், குழ -கதிரேசன், ஆலந்தூர் மோகன ரங்கன் முதலானோர் அருமையான சிறுவர் பாடல்களைப் படைத்துள்ளனர்.

ஈழத்தில் சிறுவர் இலக்கியம் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. நவாலியூர் சோமசுந்தரப் புலவர், மா. பீதாம்பரன், க. வேந்தனார், அல்வாயூர் மு. செல்லையா, முது தமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி, யாழ்ப்பாணன், இ. நாகராசன், வ. இராசையா, பண்டிதர் க. வீரகத்தி, எம். ஸி. எம். சுபைர், கோசுதா, திமிலைத் துமிலன், இ. சிவானந்தன், ச. அருளானந்தம், த. துரைசிங்கம், பி.பி. அந்தோனிப்பிள்ளை, வித்துவான் சி. குமாரசாமி, வாகரை வாணன், யசோதா பாஸ்கரன், மயிலங்கூடலூர் பி. நடராசன், கல்வயல் வே. குமாரசாமி, அம்பி, சாரணா கையூம், ச.வே. பஞ்சாட்சரம் போன்றோர் அருமையான பாடல்கள் பலவற்றைப் படைத்துள்னர்.

சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் ஆறாம் படி நிலையாக அமைவது கதைப் பாடல்களும் மொழிபெயர்ப்புப் பாடல்களுமாகும். கவிமணி, அழ. வள்ளியப்பா போன்றோரின் கதைப் பாடல்கள் எளிமையும் இனிமையும் கொண்டனவாக உள்ளன. கவிமணியின் ஆசிய ஜோதி, உமர் கயாம் பாடல்கள் மொழிபெயர்ப்புப் பாடல்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. பாட்டிலே காந்திகதை, ஈசாப் கதைப்பாடல்கள் போன்றவை குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் அருமையான படைப்புக்களாகும்.

சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் ஏழாம் படிநிலையாக இசைப் பாடல்கள், கீர்த்தனைகள் போன்றனவற்றைக் குறிப்பிடலாம். கவிமணி, பாவேந்தர் பாரதிதாசன், பெ. தூரன் போன்றோர் இத்துறையில் வழிகாட்டியுள்ளனர்.

சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் எட்டாம் படிநிலையாக அமைவது சிறுவர் நாடகங்களாகும். இன்று சிறுவர் நாடக நூல்கள் பல வெளிவந்துள்ள போதிலும் முதன்முதலாகச் சிறுவர்க்கென நாடகம் எழுதிய பெருமை ஈழத்துப் புலவரான நவாலியூர் க. சோமசுந்தரப் புலவரையே சாரும். "சிறுவர் சல்லாப நாடகம்" என்னும் பெயரில் இது அமைந்துள்ளது.

**திரைப்படப் பாடல்கள்:**

இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த திரைப்படங்களில் சிறுவர்க்கேற்ற அருமையான பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. இவற்றைத் திரைப்படப் பாடல்களென நாம் ஒதுக்கி விடமுடியாது. இவையும் சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் ஒரு படிநிலையாகவே (ஒன்பதாம் படிநிலை) அமைந்துள்ளன. இந்த வகையில் பாவேந்தர் பாரதிதாசனாரின் "தலைவாரிப் பூச்சூடி உன்னை..." என்னும் பாடல் குறிப்பிடத்தக்கதாகும்.

**"கண்ணே பாப்பா...."**
**"மிட்டாய் வாங்கக் கடைக்குச் செல்லலாம்..."**
**"சொல்லு பாப்பா நீ சொல்லு பாப்பா..."**
**"அம்மாவும் நீயே அப்பாவும் நீயே..."**
**"சிரித்து வாழ வேண்டும், பிறர்சிரிக்க வாழ்ந்திடாதே"**
**"நல்ல பேரை வாங்கவேண்டும் பிள்ளைகளே..."**


இவ்வாறான திரைப்படப் பாடல்கள் சிறுவர் இலக்கிய வளர்ச்சி நிலையினையே எடுத்துக் காட்டுகின்றன.

பாபநாசம் சிவன், உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன், வாலி, வைரமுத்து, பழனி பாரதி போன்ற கவிஞர்கள் சிறுவர்க்கான பாடல்களைத் திரைப்படங்களுக்கு எழுதியுள்ளனர். அவை இசையோடு ஒலிக்கும் போது சிறுவர்கள் மட்டுமன்றிப் பெரியவர்களும் உளமுருகிக் கேட்டு மகிழ்கின்றனர்.

தமிழ்க் காவியங்களைச் சிறுவர்களும் அறிந்துகொள்ளும் வகையில் அவற்றை மிகச் சுருக்கமாகச் சிறுவர் காவியங்களாகச் சிலர் படைத்துள்ளனர். அவர்களுள் ஏ. அய்யாசாமி குறிப்பிடத்தக்கவர். இராமாயணம், சிலப்பதிகாரம் ஆகிய காவியங்களைச் சிறுவர் காவியங்களாக பாலராமாயணம், சிறுவர் சிலம்பு என்னும் பெயர்களில் இவர் நூல்களாக வெளியிட்டுள்ளார். ஈழத்தவரான த. துரைசிங்கம் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கண்ணகி, மாதவி ஆகியோரைப் போற்றும் வகையில் கற்புக்கனல், மாதவி மாண்பு என்னும் சிறுவர் காவியங்களைப் படைத்துள்ளார்.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~



# மனித உரிமைகள் கல்வி: வழிகாட்டியா அல்லது வாழ்க்கையா?

- வி. ரி. தமிழ்மாறன்

Barbarians fight; the most cultivated conqueror teaches.
(Hans Mgnus Enzensbuerger)

**அறிமுகம்:**

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று கூறக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் யார் இந்த "உயர்ந்தோர்" என்பது பற்றிய அறிதலில் நாம் அதிகம் அக்கறை செலுத்துவதில்லை. மனித உரிமைகள் கல்வியின் உண்மையான நோக்கம் எங்கள் எல்லோரையும் ஏதாவதொரு விதத்தில் இந்த "உயர்ந்தோர்" என்ற வரைவிலக்கணத்துக்குள் கொண்டுவருவதுதான். மனிதனின் அடிப்படை இயல்பினை முன்னிறுத்திப் பேசுவதையே மனித உரிமைவாதிகள் தங்களது தாரக மந்திரமாகக் கொள்கின்றார்கள். ஆயினும் எந்தெந்த விடயங்கள் மனிதனின் அடிப்படை இயல்பாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதில் நாட்டுக்கு நாடு, காலத்துக்கு காலம் மக்களுக்கிடையில் ஒருமித்த அபிப்பிராயம் இருப்பதில்லை. ஆயினும் அத்தகைய ஒருமித்த அபிப்பிராயத்தை உருவாக்குவதில் தொடர்ந்தும் நாம் ஈடுபடவேண்டுமாயின் மனித உரிமைகள் கல்வி அவசியமாகின்றது.

மனித உரிமைகள் கல்வியின் அவசியம் என்பது மனித உரிமைகள் என்பதனதும் கல்வி என்பதனதும் முக்கியத்துவத்தின் ஒன்றுசேர்க்கை என்பதால் இரட்டிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது. எனவே கல்வி என்றால் என்ன? மனித உரிமைகள் என்றால் என்ன? என்பதை இந்நோக்கில் முதலில் வரைவிலக்கணப்படுத்திக் கொள்ளவேண்டும்.

வரலாற்றில், கல்வியானது மக்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புபட்டதும் கலாசாரம் பற்றியதுமான அக்கறைகளின் வெளிப்பாடாகவே இருந்து வந்துள்ளமையைப் பார்க்கின்றோம். அன்றாட வாழ்வில சம்பந்தப்படும் விடயங்கள் என்னும்போது அவைபற்றிய யுக்திகளைக் கற்றுக் கொள்ளுதல் என்பது இளவயதினருக்கு அவசியமாகின்றது. இது இன்னொரு விதத்தில் பொதுமைப்படுத்துதல் தொடர்பான பயிற்சியாகவும் கருதப்படுவதுண்டு. உதாரணமாக நீர் குளிர்மையானது, தீ சுடும், நாய் கடிக்கும் போன்ற புற உணர்வுசார் விடயங்களிலிருந்து பொதுமைப்படுத்துதலைச் செய்து அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல். இதனைப் புறவாழ்வுசார் விடயங்கள் என அடையாளங் காணலாம்.

கலாசாரம் சம்பந்தப்படும் விடயங்கள் என்னும்போது கூடுதலான அளவுக்கு அக உலகுசார் விடயங்களாக இவை அமைகின்றமையைக் காணலாம். மக்களுடையதும் சமூகங்களதும் மத, தத்துவார்த்த, சமூக விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகள் தொடர்பான தெரிதலையும் அறிவையும் வளர்த்தலையும் கல்வி இயலச் செய்கின்றது! இதனையே மகாத்மா காந்தியும் 'Educate the child for life through Life' என்று கூறியதன் மூலம் வலியுறுத்தினார் என நம்பலாம். அதாவது அகவாழ்வு விடயங்களைத் தவிர்த்ததாகக் கல்வி இருக்க முடியாது என அவர் கருதியிருக்கலாம்.

இதனையே இன்னொரு விதமாகவும் கூறலாம். கல்வியை லௌகீக சுகங்களை அடைவதற்குப் பயன்படுத்த முனைந்தால் அது புறவாழ்வு சார்ந்ததாகி ஒரு கருவியாகவே மீந்திருக்கும். அதனையே அகவாழ்வு விடயங்களுக்கு துணையாகக் கொண்டால் அது தன்னளவிலேயே ஒரு வாழ்க்கையாகிவிடுகின்றது. கீழைத்தேய நாடுகளில் கல்வியானது இங்ஙனம் அகம், புறம் என பகுத்து நோக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

**கல்வியும் மனிதனும்:**

ஆயினும் ஐரோப்பாவில் அறிவொளிக்காலம் வரை கல்வி என்பது பெற்றோரதும் தேவாலயத்தினதும் தலையாய பணியாக இருந்து வந்துள்ளமையைப் பார்க்கும்போது கல்வியின் அகவாழ்வு அம்சமே அப்போது மேலோங்கியிருந்திருக்கும் எனலாம். நவீன, மதச்சார்பற்ற அரசுகள் தோற்றம் பெற்றதன் பின்னரே கல்வி என்பது பொதுமக்கள் கரிசனைக்குரிய ஒரு விடயமாக மாற்றம் பெற்று விட்டது. பின்னர் 18 ஆம் நூற்றாண்டில், பிள்ளைகள், பெற்றோர், தேவாலயம், மற்றும் கல்வி நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையிலான சிக்கலான கல்வி உறவுகளை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு அரசுகள் தலையிட்டு வலுவான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி நேரிட்டது.

இதில் முக்கியமாக அவதானிக்க வேண்டியதொரு விடயம் உள்ளது யாதெனில், கல்வி புறவாழ்வுடன் சம்பந்தப்படல் என்பது கல்வியில் தேவாலயம் கொண்டிருந்த இறுக்கமான பிடியைத் தளர்த்துவதனுடனேயே ஆரம்பமாயிற்று எனலாம். இதில் இருதுறையினருமே பரஸ்பர விட்டுக்கொடுப்புக்களைப் பின்னாட்களில் செய்து கொள்ள வேண்டியும் ஏற்பட்டது. தேவாலயம் போன்ற தனியார் நிறுவனங்கள் புறவாழ்வுக் கல்வியை முற்றாக நிராகரிக்காமலும் அரசானது அகவாழ்வுக் கல்வியினை அங்ஙனமே அறவே ஒதுக்கி விடாமலும் சமூகத்தை ஒழுங்குப்படுத்துவதில் ஈடுபட்டன.

மேற்குலக தாராளவாத அரசுகள் இது விடயத்தில் காட்டிய அபரிமிதமான ஈடுபாடு சிலவேளைகளில் முரண்பாடானதாகவும் தோன்றலாம். இம்முரண்பாடு John Stuart Mill என்பவரால் பின்வருமாறு சித்திரிக்கப்படுகின்றது:

It is in case of children that misapplied notions of liberty are a real obstacle to the fulfillment by the State of its duties... Consider, for example, the case of education. Is it not almost a self – evident axiom that the State should require and compel the education, up to a certain standard, of every human being who is born its citizen?"[2]

Mill இனுடைய கருத்தில், பிள்ளைகளுக்குப் போதிய கல்வியறிவை ஊட்ட வேண்டியது பெற்றோரின் முதன்மைக் கடமையாகும் என்பதுடன் பெற்றோர் அக்கடமையைச் சரிவரச் செய்கின்றார்களா என்பதை மேற்பார்வை செய்வதே அரசின் கடமையாதலும் வேண்டும். அரச பாடசாலைகள் என்பன குறைநிரப்பிகள் என்ற வடிவத்தில் மட்டுமே இதில் பங்குபற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இக்கருத்தின் முக்கியத்துவம் நாளடைவில் எப்படி மனித உரிமைகள் என்ற விடயத்தில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது என்பதைப் பின்னால் பார்ப்போம்.

கல்வியின் பயன்பாட்டில் அகவாழ்வு, புறவாழ்வுப் பயன்பாடுகள் ஒன்றிணைக்கப்படும் போதே அது மனித இயல்புகளை முதன்மைப்படுத்தும் தேவையை தன்னகத்தே வரித்துக் கொள்கின்றது எனலாம். Jean Rousseau தனது Emile என்ற நூலில் 'Liberation of the child is the major aim of education என்று கூறுவதையும் Bertrand Russell 'on Education' என்பதில் Knowledge is wielded by love' என்று கூறுவதையும் இங்கே பொருத்திப் பார்க்கலாம்.

கல்வியானது மனிதனை அவனது, அவளது ஆளுமையையும் கௌரவத்தையும் சுதந்திரமான முறையில் வளர்த்துக் கொள்வதையும் சுதந்திரமான சமூகமொன்றில் தீவிரமான ஈடுபாட்டைக் கொண்டிருப்பதையும் இயலச் செய்வதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதில் மேற்குலகில் படிப்படியான கருத்தொருமைப்பாடு ஏற்படலாயிற்று. அகம், புறம் என்பவற்றுக்கிடையிலான ஒரு பாலமாக மனித இயல்பினை முதன்மைப்படுத்தும் அவசியம் இதனூடே உணரப்பட்டது.

எப்போது மனித இயல்பானது கல்வியில் முதன்மைப்படுத்தப்படுகின்றதோ அப்போதே அதில் மனித உரிமைகள் விடயமும் இடம்பிடிக்கத் தொடங்கிவிடுகின்றது என்றே கொள்ள வேண்டும். இங்கே மனித உரிமைகள் என்று எதனைக் கருதுகின்றோம் என்று தெளிவாக்கிக் கொள்வது அவசியமாகின்றது.

மனித உரிமைகள் என்றால் என்ன? கல்விக்குக் கூறப்படும் பல்வேறு வரைவிலக்கணங்கள் போன்றே மனித உரிமைகள் பற்றியும் பலவேறு வரைவுகள் கூறப்படுகின்றன. அத்துடன் இந்த வரைவுகள் நாட்டுக்கு நாடு கருத்தியல் ரீதியில் ஆழமான வேறுபாடுகளையும் பிரதிப்பலித்து

நிற்கின்றன. தேசிய அரசுகளின் தோற்றமும் மதச்சார்பின்மையும் மேற்கத்தைய நாடுகளில் ஏற்படுத்திய தாக்கங்களின் விளைவாக, அவற்றின் கலாச்சாரமானது தனிமனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஆட்சியாளனிடமிருந்து பாதுகாப்பது எப்படி என்ற சிந்தனையின் அடிப்படையில் உதித்தவையாகவே மனித உரிமைகள் வாதம் முன்னறிகின்றது. ஆனால் கீழைத்தேய நாடுகளில் இத்தகைய நேரடி மோதல்போக்கு காணப்பட்டதில்லை.

குறிப்பாக, சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களுள் ஒருவரான John Locke முன்வைத்த 'இயற்கை உரிமைகள்" என்பதன் விளக்கத்தின்படி, குடிமக்களது இயற்கை உரிமைகளை மீறாதபடி பார்த்துக்கொள்ளுதலை நோக்கமாகக் கொண்டே சமூக ஒப்பந்தம் செய்யப்படுவதால் அந்தப் பணியிலிருந்து அரசு தவறும்போது அது கண்டிக்கப்படடு மாற்றியமைக்கபடலாம் என்பதுடன் அரசின் அத்தனை தத்துவங்களும் குறிப்பிட்ட அந்த நோக்கத்துக்காகவே பயன்படுத்தப்படவும் வேண்டும் என்ற முன்நிபந்தனையும் அங்கே உள்ளது என்பது பெறப்படும். இந்த இயற்கை உரிமைகளின் பரிணாம வளர்சியின் விளைவானதாகவே மனித உரிமைகள் இன்று நோக்கப்படுகின்றன. இதில் இரு விடயங்கள் கவனிக்க வேண்டும். ஒன்று, மனிதனின் உரிமைகளும் சுதந்திரங்களும் இயற்கையானவை என்பதால் அவை யாரிடமிருந்தும் எந்த நோக்கத்துக்காகவும் பெறப்படுபவை அல்ல என்பது ஒருபோதுமே பூரணமானதாக (not absolute) இருக்கவும் முடியாது என்பதாகும்.

இந்த அடிப்படையில் மனித உரிமைகள் என்பன அரசின் அதிகார தத்துவங்களின் மீதான மட்டுப்பாடுகள் என்றே பலராலும் பார்க்கப்படுகின்றன. ஆனால் இது உண்மையில் முழுதான ஒரு விளக்கமாக இருக்கவும் முடியாது. மனித உரிமைகள் அரசுக்கான கடிவாளம் என்பதற்கும் அப்பால் அது தனிமனித வாழ்வின் நிறைவுக்காக ஏனையவர்கள் கொண்டிருக்கும் கடப்பாடுகளையும் குறிப்பதாக இன்று விளங்கிக்கொள்ளப்படுகின்றது. Jean Rousseau வினுடைய சமூக ஒப்பந்த விளக்கமான "பொது விருப்பு" (General will) என்பதற்கு இன்று கொடுக்கப்படும் விளக்கமும் இதுவேதான். இந்தளவில், மனித உரிமைகள் என்பன மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கான அனைத்துத் தேவைகளுடனும் சம்பந்தப்பட்ட சுதந்திரங்களாக இருக்கும் என்றே இன்று நம்பப்படுகின்றது.

இதை இன்னும் விரிவாகப் பார்க்க வேண்டும். மனித உரிமைகள் என்ற சொற்பதம் ஐ.நா.வின் தோற்றத்துடன் அறிமுகமான ஒன்றாகும். அதற்கு முன்னைய காலங்களில் இந்த உரிமைகள் அரசியற் கோட்பாடுகளாகவும் ஜனநாயக விழுமியங்களாகவும் மட்டுமே அறியப்பட்டிருந்தன. இரண்டாம் உலக யுத்தம் தந்த படிப்பினைகளின் பின்னரேயே இந்த உரிமைகள் சட்ட வடிவம் பெற வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

உலகைப் பொறுத்தவரையில், மனித உரிமைகள் பட்டியல் என்பது முதன்முதலாக, 1948 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் (Universal Declaration of Human Rights (UDHR) மூலமே அறிமுகமாகியது. இப்பிரகடனம் ஐ.நா.வின் பொதுச் சபைத் தீர்மானம் ஒன்றாகவே நிறைவேற்றப்பட்டிருந்தது. இப்பிரகடனத்தின் முக்கியத்துவத்தைக் கூறப்புகுந்தோர் இது பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட French Declaration of the Rights of Man and Citizen (1789) என்பதற்கு அடுத்தபடியாக உலக வரலாற்றில் அதிசயங்களை நிகழ்த்திய சாசனம் என்று வியக்கின்றனர். பிரான்ஸில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் ஏனைய நாடுகளையும் பாதித்தது போலவே மனித உரிமைகளின் பிரகடனத்தாலும் உலகில் பல்வேறு அரசியல் மாற்றங்கள் தொடர்ச்சியாக, ஆனால் மிகக் குறுகிய ஒரு காலப்பகுதியில் ஏற்படத் தொடங்கின. 1950 களிலும் 60களிலும் நூற்றுக்கணக்கான குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெறுவதற்கு இப்பிரகடனமே வழிவகுத்தது என்பதை அரசியல் வரலாற்றாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

உலகினுடைய மனச்சாட்சி என்று போற்றப்படும் இப்பிரகடனத்தில் உள்ள ஏற்பாடுகள் யாவும் சர்வதேச ஏற்புடைமை கொண்டவையாகக் கருதப்பட வேண்டும் என்றும் எந்தவொரு அரசுமே இதிலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் விடுவதற்கான காரணங்களைத் தேடுதல் அநாவசியமானதென்றும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எல்லா நாடுகளாலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை என்றளவில் இப்பிரகடனத்தின் ஏற்பாடுகள் சர்வதேச சட்டத்தில் நாடுகளைக் கண்டிப்பாகப் பிணிக்கின்ற 'வழக்காற்றுச் சர்வதேசச் சட்டத்தின்" ஒருபகுதியாகவே இன்று கருதப்படுகின்றன. இதனாலேயே இப்பிரகடனத்திலுள்ள ஏற்பாடுகளை உள்வாங்கி பல்வேறு நாடுகளது அரசியலமைப்புக்களும் அடிப்படை உரிமைகள் அத்தியாயங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. மேலும், உலக அரங்கில் ஓர் அரசொன்றின் அங்கீகாரம், கௌரவம், அந்தஸ்து என்பன மனித உரிமைகளுக்கு அது வழங்கும் மதிப்பினைக் கொண்டே அளவிடப்படுகின்றன.

**மனித உரிமைகள் (சட்டக்) கல்வி :**

தனிநபர்களையும் குழுக்களையும் பொறுத்தளவில் தத்தமது உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்குமான மதிப்பளிப்பைக் கோருவதற்கு முன்னோடியாக அவை பற்றிய அறிவைப் பெற்றிருத்தல் அவசியமாகின்றது. இந்த உரிமைகள், சுதந்திரங்கள் மறுக்கப்படுகையில் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் நிவாரணங்களைக் கோருவதற்கும் இத்தகைய அறிவு அவசியமாகின்றது. கல்வியைக் கற்போரின் குறிக்கோள் என்ன? கல்வி கற்பிப்போரின் இலக்கு என்ன என்ற விடயங்களில் சர்வதேசச் சட்டம் ஏன் கரிசனை கொண்டுள்ளது எனபதற்கான காரணத்தை இதனால் விளங்கிக் கொள்ளலாம்.

கணேச தீபம் ~~~

தங்களது அரசியலமைப்புக் கோட்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின்படி அரசுகளும் கற்பித்தலும் தொழிலில் உள்ளோர் யாவரும் தத்தமது நாடுகளிலுள்ள கல்வி வளங்கள் யாவும் இன வாதத்துக்கு எதிராகப் பாவிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். குறிப்பாக, பாடவிதானங்களும் விதந்துரைக்கப்படும் பாடநூல்களும் மானிட ஐக்கியம் பற்றியும் மானிடப் பன்மைத் தன்மை பற்றியுமான விஞ்ஞான பூர்வமானதும் ஒழுக்கநெறி சார்ந்ததுமான உள்ளடக்கங்களைக் கொண்டிருப்பதையும், தனிநபர்களுக்கிடையில் வித்தியாசம் எதுவும் பாராட்டப்படக்கூடாது என்பதையும் உறுதிப்படுத்தும் அணுகுமுறையிலான கருத்துக்களையே உள்ளடக்கியிருக்கும்படி பார்த்துக் கொள்வதையும் இப்பொறுப்புடைமை உள்ளடக்குகின்றது. இதற்கான முறையான பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

அங்ஙனமே இப்பிரகடனத்தின் 6வது உறுப்புரையின் 2வது பந்தியானது சமூகத்தில் பாரபட்சமான செயற்பாடுகள் ஒழிக்கப்படுவதற்கும் ஏற்ற முறையில் இயற்கை விஞ்ஞானத்திலும் சமூக விஞ்ஞானத்திலும் எங்ஙனம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிவூட்டப்பட வேண்டும் என்று கூறி நிற்கின்றது. மேலும் இதே பிரகடனத்தின் 8வது உறுப்புரையின் 2ஆம் 3ஆம் பந்திகள் முறையே இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் மற்றும் கலாசாரக் கற்கைகளில் விசேட நிபுணர்களின் வகிபாகமும் பொறுப்புடைமையும் எங்ஙனம் இருக்கவேண்டும் என்று அறிவுரைக்கின்றது.

பெண்களுக்கெதிரான எல்லா வடிவங்களிலுமான பாரபட்சங்களை ஒழிப்பதற்கான சமவாயத்தின் (CEDAW 1979) 10வது உறுப்புரையானது பெண்களுக்கான சமத்துவ உரிமையினை உத்தரவாதஞ் செய்வதற்காக ஆண்களதும் பெண்களதும் வகிபாகம் பற்றிய எல்லா மட்டங்களிலும் எல்லா வடிவங்களிலான கல்வியிலும் படிந்துறைந்த (Stereotyped) கருத்தமைவுகளை இல்லாதொழிக்கும் வகையில் பாடநூல்களையும் பாடசாலைத் திட்டங்களையும் கற்பித்தல் முறைமைகளையும் மீளாய்வு செய்வதற்கு அரசு உடன்படுவதாக கூறுகின்றது.

சிறுவர்கள் உரிமைகள் தொடர்பான சமயவாதத்தின் (Convention on the Rights of the Child of 1989) உறுப்புரை 29 (1) அரசுகளின் கடப்பாடுகளை இன்னொரு கோணத்திலிருந்து விதித்துரைக்கின்றது:

பிள்ளையினுடைய கல்வியானது மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் மதிப்பளித்தலை வளர்க்கும் நோக்குடனானதாக இருக்க வேண்டும் என்றும், சுதந்திர சமூகத்தில் பிள்ளையினுடைய பொறுப்பான வாழ்க்கை என்பது புரிந்துணர்வு, சமாதானம், சகிப்புத் தன்மை, பாலியற் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையிலுள்ள எல்லா மக்கள், தேசங்கள், இன, மத, ஆதிவாச மூலங்கொண்ட குழுக்களிடையேயான நட்புறவின் அடிப்படையிலும் தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

இதுதவிர கற்பிக்கப்படவேண்டிய விடயங்களில், மானிட கௌரவம், ஆள்சார் சுதந்திரம், சமவாய்ப்பு, பாலியற் சமத்துவம், பெண்களின் உரிமைகள், சுதந்திர சமூகத்திலான வாழ்வுரிமைகள், இன-மத-மொழி அடிப்படையிலான பாரபட்சங்களை ஒழித்தல். வலதுகுறைந்தோரின் உரிமைகள் (rights of the differently abled person) அற ஒழுக்க பொறுப்புடைமைகள், சுயநிர்ணய உரிமை, குடியேற்றவாத ஒழிப்பு நியாயம், சமாதானம் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் என்பன கட்டாயமாக இடம்பிடிக்க வேண்டியவையாகின்றன.

இங்ஙனமாகக் கற்பிக்கப்படல் என்பது ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை கல்வி என்றளவில் நிற்காமல் முறைசார், முறைசாரா வடிவங்களிலும் அமைந்திருக்கலாம் என்பதே வலியுறுத்தப்படுகின்றது. இது தொடர்பில 1993 ஆம் ஆண்டின் Vienna Declaration (adopted by the World Conference on Human Rights) முத்தாய்ப்பு வைப்பதாக அமைந்துள்ளது,

The World conference on Human Rights reaffirms that States are duty – bound to ensure that education is aimed at strengthening the respect of human rights and fundamental freedoms ..The Conference calls on all States and institutions to include human rights, humanitarian law, democracy and rule of law as subjects in the curricula of all learning institutions in formal and non-formal setting.[8]

மேலும் மனித உரிமைகள் கல்வி என்றதும் வழக்கத்தில் அடையாளங் காணப்படும் அல்லது நமக்கு உடனடியாகவே ஞாபகத்துக்கு வரும் வரலாறு, அரசியல் விஞ்ஞானம், அரசாங்கம், சமூக கல்வி போன்ற பாடங்களே நமக்கு ஞாபகத்தில் வரலாம். ஆனால் தற்போது இந்த வகுப்பாக்கங்கள் தகர்க்கப்பட்டு எல்லாப் பாடநெறகளினூடும் எங்ஙனம் மனித உரிமைகள் போதிக்கப்படலாம் என்பது புதிதாக விளக்கியுரைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, புவியியல் இயற்கை விஞ்ஞானம், தொழில்நுட்பக் கல்வி, தொழிற்கல்வி, கணிதம், இலக்கியம் மற்றும் நுண்கலைகள் என்பவற்றினூடும் மனித உரிமைகள் போதிக்கப்படுவதற்கான வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக புவியியல் பாடத்தை எடுத்துக்கொண்டால் உலக மட்டத்தில் எந்தெந்த நாடுகளில் மக்கள் பொருளாதார சமூக உரிமைகளைத் திருப்தியான அளவுக்குப் பெற்றுள்ளார்கள், அவற்றின் விளைவாக அடையப்பட்டிருப்பவை என்ன? எத்தகைய சமூக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பவற்றைக் கற்பிக்கும்போது சமூக, பொருளாதார உரிமைகளின் சட்ட வடிவம், அவற்றின் முக்கியத்துவம் என்பவற்றின் மீது போதிய கவனஞ்செலுத்துதல் தேவையாகின்றது. அடிக்கடி பட்டினிச் சாவுகள் ஏற்படுவதன் காரணம் என்ன? பஞ்சம், போசாக்கின்மை போன்ற காரணங்களால் ஏற்படும் பெயர்வுகள் எங்ஙனம் உரிமை மீறல்களை எற்படுத்துகின்றன என்பதை அறியவும் இப்பாடத்தினூடு வாய்ப்பு கிடைக்கும். குறிப்பாக

கணேச தீபம் ~~~


கணேச தீபம் ~~~

யொலிக்க தொடங்கிவிட்டது. எனவே இனியும் இக்கற்கைநெறி ஆடம்பரக் கல்வியாகவோ அல்லது மனிதனை மையப்படுத்தாத விதத்தில் வெறும் ஒழுக்க நெறிசார் உபதேசங்களாகவே கருதப்பட்ட காலம் கழிந்துவிட தற்போது மனித உரிமைகள் கல்வி என்பது தனிமனிதனின் இருப்புக்கும் உயிர்பிழைப்புக்குமான உத்தரவாதத்தை வழங்குவதாக வந்துவிட்டதால் இது வாழ்க்கைக் கலையாக மாறிவிட்டதென்றே சொல்ல வேண்டும்.

கல்வியை வழங்காத சமூகம் பண்பாடுள்ளதாக விளங்க முடியாது என்று கூறப்பட்ட காலமொன்றிருந்தது. ஆனால் இதன் பொருள் இன்றைய நிலையில் மனித உரிமைகள் கல்வியை வழங்காத சமூகம் என்றே பதிலிட்டுப் பார்க்கப்பட வேண்டியது கட்டாயமாகி விட்டது எனலாம்.

**Footnotes**

1. K Halvorsen, Notes on the Realisation of the Human Right to Education' Human Rights Quarterly vol.12919910P.31
2. J.s.Nill On Liberty London 1859 (Pelican Classics. 1974) p.175
3. UN doc A/47/38
4. Res 47/135 of 18 December 1992
5. UNESCO doc. SHS-87/CONF.401/15 of 16 May1988.UN doc. A?CONF.157/PC/42/ Add.6;UN doc.E/C12.1993.SR.2
6. 29 International Legel Materials 1305, (1990)
7. UN Res.47/135 of 18 December,1992
8. UN doc.A/CONF.157/23,part I,para 33.
9. R.F.Niebling (ed) A Journey of Poems:An Original Anthology of Verse, New York,(1964), pp85-86



# செல்வம் என்பது சிந்தையின் நிறைவே

**இ.க. சிவஞானசுந்தரம்** M.A.

*தகைசார் ஓய்வுநிலை ஆசிரியர் கல்விவள ஆலோசகர்*

இவ்வுலகில் மனிதர் பலவகையினர். நிலையின் இழிந்தமாந்தர் மிகப்பலர். மறைந்து ஒழுகும் மாந்தர் பலர். வினைவகையான் வேறாகும் மாந்தரும் பலர். உள்ளத்தனைய உயர்வுடைய மாந்தர் சிலர். நிறைமொழி மாந்தர் மிகச் சிலர். உலகம் போற்றும் உத்தமர் திருவள்ளுவர் கண்ட சீருடை மனிதர் உலகில் இலர். ஆயினும் அவர்கூறும் சிறப்புடை மனிதராக வர முயல்வோரும் உளர். இவ்வித மனிதரில் பலர் தம்வாழ்க்கை சிறக்க நிலையற்ற புறப்பொருட்களையே நாடுகின்றனர். நம்புகின்றனர்: தேடி அலைகின்றனர்.

மனிதனுக்கு உணவு, உடை, உறையுள் மட்டுமே தேவை என நினைக்கின்றோம். இன்று ஒருவனுடைய வாழ்க்கை நிலையை அவனது பங்களா, சொத்து, வாகனம் என்பவைகளை வைத்தே முடிவுசெய்து விடுகின்றோம் அல்லவா, மனிதனுக்கு உடைமைகளாக இவையே பேசப்படுகின்றன. ஆனால் வள்ளுவப்பெருந்தகை இவ்வாறு கருதவில்லை. அவர் மனிதனுக்கான பத்து உடைமைகள் பற்றிப் பேசுகின்றார். இவைகளே ஒருவனது செல்வங்கள். இவை அனைத்தும் அகத்தால் அமையும் உடமைகளே. இவ் அக உடைமைகளைக் கொண்டால் புற உடைமைகள் மனிதனைத் தேடிவந்து தானே அடையும் என அவர் எண்ணினார். இதையே, "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் உழை" அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, அறிவுடைமை, பொறையுடைமை, அருளுடைமை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, நாணுடைமை இவ்வகைப் பத்து உடைமைகள் தான் ஒருவனுக்கு நிரந்தர செல்வமாக நிற்கும், நிலைக்கும். ஏனைப் புறவுடைமைகள் தற்காலிக நிலையற்ற செல்வங்களே. அவை இன்றிருக்கலாம். ஆனால் என்றும் இருக்கும் என்று கூறுவதற்கில்லை. இங்கு கூறப்பட்ட அக உடைமைகள் அனைத்தையும் கொண்டவரையே சிறப்புடைச் செல்வம்மிகு மாந்தர்களாக வள்ளுவப் பெருந்தகை கருதினார்.

ஆனால் மனிதர் இன்று சிறப்பாகக் கருதும் பொருள்கள் பல. பொருள் இருந்தாற்றான் எல்லோரும் செய்வர் சிறப்பு. எனக்கருதிப் பொருள் ஈட்டுவதே சிறப்பு என வாழ்நாள் பூராகவும் புறச்செல்வத்துக்கு மனிதன் அடிமையாவதைக் காண்கின்றோம். "உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா" "குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்"

என்பதை உணராது பொருட் செல்வத்தைப் பாடுபட்டுத் தேடி வைக்கின்றனர். இச் செல்வம் கொண்டோர் பலரிடம் சிந்தையில் நிறைவு அதாவது மகிழ்வு உண்டா, நிம்மதி உண்டா என ஆராயின் அது முயற்கொம்பாகவே அமைந்துவிடுகின்றது. பொருள் சேர்க்கவேண்டும் எனக் கூறிய ஔவைப்பாட்டி "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" எனக் கூறியவர் மீண்டும் தனது வாக்குண்டானில் "மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல உருவும் உயர்குலமும் எல்லாம் - திருமடந்தை ஆம்போது அவளோடு ஆகும், அவள் பிரிந்து போம்போது அவளோடும் போம்." எனப் புறப்பொருளின் நிலையற்ற தன்மையைக் கூறினார் என்க. என்றோ ஒருநாள் நீ சேர்த்து வைக்கும் புறப்பொருள் யாவும் உன்னைவிட்டு நீங்கி உன்னை வெறுமையாக்கிவிடும் என்பதை அவர் உணர்த்துகிறார்.

எனவே தேடப்படும் செல்வமானது அறத்தொடு வாழ்வதற்கு உதவுவதாக நேரிய வழியில் பெறப்பட்டதாக அளவுடன் அமைந்து விடுவதாக அமையவேண்டும். எது எவ்வாறாயினும் செல்வம் என்பது மனித வாழ்வில் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தருவதாக அமைய வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. நிச்சயமில்லாத, நிரந்தரமில்லாத செல்வங்கள் மனித வாழ்வில் நிம்மதியற்ற நிலையையே ஏற்படுத்துகின்றன என்பதைச் செல்வந்தர்களே ஒப்புக்கொள்வர். இங்கே செல்வம் ஈட்டல் தவறு என்பது கருத்தல்ல அச்செல்வம் ஈட்டும் வழி அளவு என்பன, "தூக்கி வினை செய்" "கேட்டில் உறுதி கூட்டும் உடைமை" கொண்டதாக அமையவேண்டும் என்பதையே உணர்த்தி நிற்கின்றது.

புறச்சொத்துக்கள் நிரந்தரமானவை எனக் கருதி அவைகளைச் சேர்க்கும் செல்வந்தர்களின் உள்ளங்களை உலுக்கும் நிகழ்ச்சிகளை அவர்களால் வெளியே கூறமுடியாது, தம் உள்ளத்துள்ளே போட்டு அடக்கிப் பதட்டமடைகின்றனர். செல்வத்தால் எதையும் செய்யலாம் எனத் தம்முள் மார்பு தட்டுவோரிற் பலர் தம் சிந்தையில் மகிழ்வின்றிச் சிரிக்க வேண்டும் என்பதற்காகச் சிரிப்பவர்களாகவும், புறவாழ்க்கையில் பிறருக்காக வாழ்பவர்களாகவும் இருக்கின்றனர்.

செல்வங்களைப் பொருட் செல்வம், கல்விச் செல்வம் எனப் பார்ப்பின் முன்னையது நிலையில்லாதது. நீரால், நெருப்பால் அழியக்கூடியது. கள்வரால் கவரக் கூடியது. என்றோ ஒருநாள் தம் கையைவிட்டு வேறொருவன் கை போகக்கூடியது. இச் செல்வத்தால் வந்த புகழ் விலைமகள் போன்றது. இன்று ஒருவர் நாளை ஒருவர் என்பதாகிவிடும். ஆனால் கல்விச் செல்வத்தால் வந்தபுகழ் நிலைத்திருப்பது, நிம்மதி தருவது, கல்விச் செல்வம் நீரால், நெருப்பால் அழியக்கூடியதன்று. கள்வரால் வஞ்சகமாகக் கவரக்கூடியதன்று. கொடுக்கக் கொடுக்கப் பெருகக் கூடியது "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு" (215) என்றார் வள்ளுவப் பெருந்தகை. இச்செல்வம் அடைந்தோர் பிறரால் நிரந்தரமாகக் காமுறப்படுகின்றனர்.

சாதாரண தொழில் செய்து உழைக்கும் தொழிலாளி நிரந்தர சொற்ப ஊதியத்துடன் குடும்பத்தை ஓட்டும் அரச உத்தியோகத்தரின் வாழ்க்கையின் செம்மை, நிம்மதிகண்டு பேசிப் பெருமூச்சு விடும் செல்வந்தர்களை நாம் காண்கின்றோம்.

சிலநாள் இவ்வுலகில் வாழப்போகும் எம்மிடையே இருக்கவேண்டியது எது? இச் சின்நாளில் எமது உள்ளம் மகிழ்வுடன் இருக்க வேண்டுமல்லவா? பாதையோரத்தில் வாழும் பல தொழிலாளர்களின் குடும்பங்களைப் பார்க்கின்றோம். அந்தியடைந்ததும், தம் குடும்பத்துடன் கூடிக்குலாவி தனது கைப்பொருளுக்கேற்ப உணவும், பொருளும் கொணர்ந்து பகிர்ந்து மகிழும் குடும்பத்தையும்,

**"பாடுபட்டுத் தேடி பணத்தைப் புதைத்து வைத்துக்**
**கேடுகெட்ட மானிடரையும்"**

ஒப்பவே நோக்குங்கள். எங்கே நிம்மதி? இவ்வாறு தேடி வைத்த செல்வத்தை "ஆவிதான் போனபின்பு யரோ அனுபவிப்பார்" தான் உண்ணாது. தன் குடும்பம் அனுபவியாது பிறருக்கு மனமுவந்து கொடுக்காது சேர்த்து வைக்கும் இச்சொத்தை ஒருநாள் யாரோ ஒருவன் அவர்பின் அனுபவிக்கப் போகின்றான் என்பதை இவர்கள் உணர்கிறார்களா, இல்லை.

ஆனால் அளவோடு தேடி அளவுடன் செலவழித்து அடக்கமுடன் இருக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சி கொந்தளித்துப் பாய்கின்றது. அவர்கள் உள்ளம் மகிழ்வால் நிறைந்து பிரவாகித்துப் பொங்கி வழிகின்றது. எனவே செல்வம் என்பது பொருட்செல்வத்தால் மட்டும் சிந்தை மகிழ்வெய்தும் என்று கருதற்க. இவனது சிந்தை மகிழும் செல்வமே செல்வம். இதனையே, செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்றனர் என்பதை உணரவேண்டும். தனக்கும் பிறருக்கும் பயன்படும் அகச் செல்வமானது உள்ளத்தில் மகிழ்ச்சியையும் அமைதியையும் ஏற்படுத்தும் அல்லவா, இதைவிடுத்துப் புறச்செல்வமே வாழ்க்கைக்குத் துணை எனச் செல்வோர். அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும் என்பதனை நினைவிற்கொள்ள வேண்டும்.

நாம் செல்வந்தர்கள் என எண்ணி வறுமையடைந்தோரின் வாழ்வைப் புறந்தள்ளி நகைப்போர் பலரிடம் நிம்மதி இருக்கின்றதா? இவர்களிடம் மகிழ்ச்சி காணப்படுகின்றதா, இவையில்லாத செல்வத்தை யார் மதிப்பார்? இச் செல்வம் என்றோ ஒருநாள் இருந்த இடம் தெரியாமல் அகன்றுவிடும் என ஒரு பொழுதாவது இவர்கள் எண்ணுகிறார்களா? செல்வந்தர்களில் பலர் தம் உடன் பிறப்புகளுடன் உற்றார் உறவினர்களுடன் கொண்டாட உறவு கொள்ள முன் நிற்கிறார்களா? இவர்களுடன் உறவாடல் நகைப்புக்குரியது என எண்ணும் இச்செல்வர்கள் ஒருநாள்,

**"செல்வர்யாம் என்று தாம் செல்வழி எண்ணாத**
**புல்லறிவாளர் பெருஞ்செல்வம் - எல்லில்**
**கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி**
**மருங்கு அறக் கெட்டுவிடும்"**

என்று நாலடியாரில் கூறப்படுவது போல் தோன்றி மறைந்துவிடும். செல்வம் உடையோம் என எண்ணும் இவர்களின் செல்வம் இரவில் மேகத்தில் தோன்றிய மின்னலைப் போலத் தோன்றி பின் இருந்த இடம் தெரியாது மறைந்துவிடும் என்பதையே இங்கு உணர்த்தப்படுகின்றது.

சான்றாக ஓர் ஆசிரியன் ஒருவன் சிறந்த அறிவாளி கற்றோரால் காமுறப்படுபவன். இவன் தன் ஓய்வு நேரத்தில் தன் உறவினரின் கடையொன்றில் ஒருபொழுது போய் நாற்காலியில் அமர்ந்து உரிமையாளரோடு உறவுமுறையில் அளவளாவிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் வெள்ளை உடையில் அரைக்கைச் சேட்டுடன் ஒருவர் வந்தார். அவரது கழுத்தில் வடம்போலச் சங்கிலி மின்னின. அதேபோன்று கையில் வளையலெனக் கைச்சங்கிலி. மேளகாரன் மேளம் அடிப்பதற்குப் போடப்பட்ட இறப்பர் பட்டிபோல் விரல்களில் தங்க மோதிரம் துலங்கின. அவரைக்கண்ட கடை உரிமையாளர் தன் ஆசனத்தைவிட்டு எழுந்தார். வாருங்க முதலாளி என்றவர் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஆசிரியரைப் பார்த்து ஒருக்கா இடத்தை விடுங்க எனக்கூற ஆசிரியர் எழுந்து விலக, அவ்விடத்தில் முதலாளி அமர்ந்துகொண்டார். ஆசிரியர் எழுந்து நீண்ட நேரம் நிற்கின்றார். வருகைதந்த முதலாளியிடம் குசேலம் விசாரித்து அவருடன் கலந்துரையாடி இனிய பதார்த்தம் வழங்கி, மரியாதைப் படுத்தி வழியனுப்பிய பின்னர் தன் உறவினரான ஆசிரியரை அமரும்படி கூறினார். அப்போது அவரே கூறுகின்றார், வந்தவர் பெரிய கோடீஸ்வரன். அங்கு கடை, இங்கு கடை, மாடி வீடு மூன்று நான்கு, நிலபுலம் என அடுக்கிக் கொண்டே சென்றவர் இறுதியில் இவர் தன் மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து இருக்கிறார் என்றார்.


இப்போது கூறுங்கள் செல்வம் என்பது எது? சிந்தையின் மகிழ்வா? அன்றேல் புறச் சொத்துக்களா? ஆசிரியரின் கல்விச் செல்வம் அங்கே மதிக்கப்படவேயில்லை. அதற்காக ஆசிரியர் கவலைப்படமாட்டார் ஏனெனில், கற்றவரைக் கற்றவரே காமுறுவர் என்பதைத் தன் உறவினர் அறிந்திருக்க இடமில்லை. நிரந்தரமற்ற நிம்மதி தராத செல்வம் ஏனோதான் மதிக்கப்படுகின்றது. இது போலி மதிப்பே. செல்வந்தன் ஒருவன் எதனை எண்ணுதல் வேண்டும். தனக்கு அமைந்திருக்கும் வசதி, சூழல் பிறருக்கும் இருக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்வானாயின் அவன் மகாத்மா ஆகிவிடுவான், சமுதாயம் எளிதில் வளர்ந்துவிடும். ஆனால் அவ்விதம் எத்தனை பேர் எண்ணுகின்றனர். பேருக்கும் புகழுக்கும் செல்வத்தை வீணே கொடுக்கும் பதர்களாகவே இவர்கள் வாழ்க்கை அமைந்துவிடுகின்றது.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~



# கற்றலை அற்புதமாக்குதல்

**மு. பொன்னம்பலம்**

இன்றைய மாணவர்களையும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களையும் நினைக்கும் போது எனக்கு எப்பொழுதுமே நினைவில் எழுவது, அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் கூற்றே

தன் மகனுக்குப் போதித்த ஆசிரியருக்கு லிங்கன் எழுதிய கடித வாசகங்கள் அவை: "என் மகனுக்கு பாடங்களை கற்பிக்கும் போது இயற்கையின் அழகை ரசிக்கவும் கற்றுக் கொடுங்கள். வானத்தில் வட்டமிடும் பறவைகளையும் தூரத்தெரியும். மலைகளில் நழுவியோடும் ஆற்றின் அழகையும் ரசிக்கக் கற்றுக்கொடுங்கள். இது மட்டுமல்ல, பரீட்சையில் என்மகன் சித்தியடையாது போனாலும் அவன் யாரையும் ஏமாற்றாதிருக்கக் கற்றுக்கொடுங்கள். அத்தோடு புத்தகங்களை வாசிக்கத்தூண்டுங்கள். அதில் பொதிந்துள்ள அற்புதங்களைக் கண்டறிய அவனுக்கு வழியசமையுங்கள்.....

இவ்வாறும் இதற்குமேலும் தன்மகனுக்கு கல்விபுகட்டிய ஆசிரியருக்கு அவர் எழுதிக்கொண்டு போகிறார். எச்சந்தர்ப்பத்திலும் அவர் தன் மகன் வகுப்பில் முதல் தரத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்பது பற்றியோ, பட்டம் பெறவேண்டும் என்பது பற்றியோ பிரஸ்தாபிக்கவில்லை. இதையே இன்றைய உளவியல் ஆய்வு கூறும். ஒரு மாணவன் தான் படிக்க விரும்புவதை தேர்வு செய்யும் சுதந்திரத்தை அவனுக்கே கொடுத்து விடுங்கள் என்கிறது அது. ஆபிரகாம் லிங்கன் விரும்பியதும் அஃதே. இதன் மூலம் அவர் விரும்பியதெல்லாம் உடலும் மனமும் ஆரோக்கியப்பட்ட நிலையில் தன் மகன் வளரும் சிறப்பான வளர்ச்சியையே

லிங்கன் தனது மகன் எவ்வாறு ஆசிரியரால் வழிநடத்தப் படவேண்டும் என்று நினைத்ததற்கும் இன்று நம்மிடேயே வாழும் சிறுவர்கள் அவர்தம் பெற்றோராலும் ஆசிரியர்களாலும் கையாளப்படும் முறைக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. நம் சிறுவர்கள் முன்னே பரீட்சை என்பதே பிசாசுபோல் விரிகிறது.

மழலை மாறாத இளமையின் போதே புலமைப் பரிசில் பரீட்சை, பதினைந்து வயதில் க.பொ.த. சாதாரணப் பரீட்சை இன்னும் வளரிளம் பருவம் மாறுவதற்கு முன்னரே உயர்தர பரீட்சை. பரீட்சையே இளமைக்காலம் அனைத்தும் பூதாகரமாக விரிந்த நிலையில், நம் மாணவர், லிங்கன் கூறிய இயற்கையின் அழகையோ, வானில் வட்டமிடும் பறவையின் அழகில் உளம் தோய்வதையோ, பாடப்புத்தகங்கள் நீங்கிய சுவைமிக்க நூல்களின் அற்புதங்கள் தம் உணர்வுகளுக்கு உயிர்ப்பூட்டுவதையோ அனுபவித்ததில்லை.

இதனால் படிப்பென்ற பேரில் ஒருவகை நோய்க்கூறுகொண்ட இளஞ்சமூகமே உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு பெற்றாரினதும் ஆசிரியரினதும் இலட்சியம் மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும் முகாமைத்துவப் பட்டதாரிகளையும் உருவாக்குவதே நோக்கமாக இருக்கும் போது, இந்த எல்லைக் கோட்டினை எட்டாதவர்கள் விரக்திக்குள்ளும் எட்டியவர்கள் ஏனையவர்களைத் துச்சமாகப் புறந்தள்ளும் தன் முனைப்புக்குள்ளும் வீழ்வதென்பது ஒருவகையில் எதிர்மறை (Negative) உடன்பாடு (Postitive) என்கிற இருவகையான நோய்க் கூறுதான்.

இந்தப்பரீட்சை என்கிற ஒன்றின் பூதாகரமான விரிவில் இளஞ்சமூகத்துள் கொழுந்து விட்டுச் சுடர ஆரம்பிக்கும் மனிதம் என்கிற அருஞ்சக்தி முளையிலேயே கிள்ளி எறியப்படுகிறது. இதனால் பரீட்சை மூலம் தம் இருப்பை இழந்த மாணவரும் மாணவியரும் எதிர்காலம் பற்றிய தம் நம்பிக்கை விழ்ச்சியில் பலவித குற்றச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் தம் இழந்த "இருப்பை" நிலைநாட்ட முற்படுகின்றனர். ஈற்றில் இவர்கள் நோய்க் கூறு கொண்ட பிறழ்வுற்ற மனநோய்க்காரர்களாக (Psychopaths) மாறுகின்றனர். அவ்வாறே பரீட்சையில் வெற்றி பெற்றவர்கள் தம்மை அளவுக்கு மீறி வீங்கவைத்து சமூகத்தை துச்சமாக மதிக்கின்ற (Megalomaniac) இன்னொரு வகை மனநோயளர்களாக மாறுகின்றனர். இன்றுள்ள பிரச்சினை இதுதான். அதனால் இன்று நடைமுறைப்படுத்தப்படும் கல்வி முறைக்குள் புதிய இரத்தம் பாய்ச்சப்படவேண்டும். இப்படிச் சொல்வதால் யாரும் மருத்துவர்களாகவும் பொறியியலாளர்களாகவும், பட்டதாரிகளாகவும் வருவதற்கான படிப்பை மேற்கொள்ளக் கூடாதென்பதல்ல அர்த்தம். படிப்பு முக்கியம். ஆனால் அதை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் லிங்கன் கூறிய அமுதவாசகங்களையும், அதேயளவு முக்கியத்துவம் கொடுத்துக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் இன்னும் முக்கியம்.

விண்ணில் கூவிச்செல்லும் பறவைகளையும் தன்னோடு தானே கலகலத்துக் கதைத்துக் கொண்டோடும் ஆற்றையும், மௌனித்து நிற்கும் மலைகளையும் ரசிக்கவும் அற்புதமான நூல்களை வாசிக்கவும் படிப்போடு சமாந்தரமாகச் செய்யவேண்டும். இயற்கையின் அற்புதத்தில் இறும்பூதெய்தலும் அற்புதமான புத்தகங்களை வாசித்தலும் தூர்ந்துபோன மனிதனின் ஆழ உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும். "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு" என்று வள்ளுவர் கூறியதும் இதனால்தான். இளமையிலிருந்தே பிறநூல்களைக் கற்றலை, கவிதை, கதைகளை வாசித்தலைப் பழக்கமாக்கிக் கொள்ளல் வேண்டும். இது பரீட்சைக்கான படிப்பின் பாரச்சுமையை இறக்கி வைக்கவும் வாழ்க்கையின் பலபக்க அழகை ரசிக்கவும் இட்டுச் செல்வதோடு மனிதனானகவும் உயரச்செய்யும். நூல்களே மனிதர்களை நெறிப்படுத்தியுள்ளன. எழுத்தாளர் நஸ்கினதும் ரோல்ஸ்ரோயினதும் நூல்களே மகாத்மாகாந்தியின் ஆத்மசோதனைக்கு காலாய் இருந்தன.

புத்தகங்களை வாசித்தல் என்பது வெறுமனே "புத்தகப் பூச்சி"களாக இருப்பதென்பதல்ல அர்த்தம். கூடவே வெளியே வந்து இயற்கையை ரசிக்கவும் அவ்வப்போது இன்னிசையைச் செவிமடுத்து தம் மனங்களில் படிந்துள்ள அழுக்குகளைக் கழுவி மெய் மற்ந்திருக்கச் செய்யவும் ஆசிரியர்கள் மாணவர்களை ஆற்றுப் படுத்த வேண்டும். இதிலேயே பூரணமான சமூக உருவாக்கம் தங்கியுள்ளது.

# யான் கண்ட புங்குடுதீவு

- அறிஞர் குல. சபாநாதன்

**(1951 ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஸ்ரீகணேச வித்தியாசாலைப் பழைய மாணவர்சங்க வெள்ளி விழா மலரில் இடம்பெற்ற கட்டுரை)**

இருபது வருடங்களுக்கு முன் என்ற ஞாபகம். அரசாங்க விடுமுறை நாட்களில் ஊர் சுற்றிப் பார்ப்பது என் வழக்கமாதலால், ஒரு விடுமுறைக் காலத்தில் எங்கள் தீவுக்கயலில் உள்ள தீவுகளைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென யானும் என் நண்பர் இருவரும் விரும்பினோம். முதலிற் புங்குடுதீவைப் பார்க்கத் தீர்மானித்தோம். சுருவில் துறைக்குச் சென்று வள்ளமேறி புங்குடுதீவுத் துறைமுகத்தையடைந்தோம். புது இடத்துக்குப் போவதாற் கொஞ்சம் உணவும் கைகாவலாக எடுத்துச் சென்றோம். துறைமுகத்திலிருந்து குடிமனைகள் உள்ள இடத்துக்கு அதிக தூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது. வெய்யில் அகோரம் தாங்க முடியவில்லை. வேறு வழியில்லாமையால் நடந்து சென்றோம். இதற்கிடையில் பசியும் கிளம்பிவிட்டது. புங்குடுதீவில் எனக்குத் தெரிந்தவர்கள் அப்பொழுது ஒருவருமில்லை. ஆனால் அங்குள்ள பெரியார் ஒருவரைப் பற்றிப் பெயரளவிற் கேள்விப்பட்டிருந்தேன். எனினும் நேரிற்கண்டு பழகியது கிடையாது. அவரையாவது ஒருமுறை போய்ப்பார்ப்போம் என்று நாங்கள் மூவரும் முடிவுசெய்தோம். அவர் வீட்டை விசாரித்துக் கொண்டு ஒருவாறு போய்ச் சேர்ந்தோம். வீட்டுப் படலையைத் திறந்ததும் "வாருங்கள்! வாருங்கள்!!" என்று ஒரு வயோதிப் பெரியார் புன்முறுவல் பூத்த முகத்துடன் வரவேற்றார். எங்களுக்கென்றால் பெரிய திகைப்பாயிருந்தது. அரையில் நாலுமுழ வேஷ்டி, தோளில் ஒரு சிறு துண்டு, நெற்றியில் விபூதிப் பூச்சு, காலில் ஒரு சோடி மிதியடி, முத்துப்போன்ற அழகிய பற்கள், ஆரோக்கியமான தேகக் கட்டு, பொலிவான தோற்றம். நாங்கள் இன்னார் என முதலில் அறிமுகப்படுத்தினோம். "இப்பொழுது அதிக வெய்யில் எறிக்கிறது. நீங்கள் இங்கே சற்று ஆறி, பகற்போசனம் முடித்துக்கொண்டு ஊர்சுற்றிப் பார்க்க புறப்படலாம். எனது வண்டிலிற் போகலாம்" என்றார். எங்களுக்குத் தூக்கிவாரிப்போட்டது. இந்த மனுஷன் பெரிய உளநூற் தத்துவஞானி போலல்லாவா விளங்குகின்றார் என நினைத்தோம். பருத்தி புடைவையாகக் காய்த்தது மாதிரி இருந்தது எங்களுக்கு அந்த நேரத்தில். "நாங்கள் உணவு கொண்டு வந்திருக்கிறோம் உங்களை இந்த நேரத்திற் சிரமப்படுத்த விரும்பவில்லை" என்று சொன்னேன். ஆனால் அவர் இசையவில்லை. சிறிது நேரத்துள் அறுசுவையுணவு அளித்தார். விருந்தோம்பலில் தீவு மக்களுக்கு ஒப்பாரு மிக்காரும் இலர் என்றே சொல்லலாம்.

புங்குடுதீவினை வெளியூரவர்கள் பெரும்பாலும் அறியவந்தது. ஸ்ரீமான் பசுபதிப்பிள்ளை அவர்கள் மூலமேயென்றுகூடச் சொல்லலாம். வெளியூர்களிலிருந்து புங்குடுதீவுக்குச் செல்பவர்களை உபசரிப்பதில் இப்பெரியார் கைதேர்ந்தவர். ஆங்கிலமும் தமிழும் அழகாகப் பேசுவார். இவர் முதலிற் கிராம விதானையாகக் கடமையாற்றிப் பின்னர் கிராமச்சங்கத்

கணேச தீபம் ~~~

பியகுகதிஸ என்பது பியங்கு தீபத்து, தீசன் எனப்பொருள்படும். பியங்க தீபத்துத் தீஸன் ஒரு விகாரையைக் கட்டினான் எனவும், பியகுக திஸ எனப்படும் விகாரை இஸிகிரயன் கட்டினான் எனவும் பொருள் கொள்ள இச்சாஸனம் இடந்தந்து நிற்கின்றது. எங்ஙனம் பொருள் கொண்ட போதிலும் பியங்கு தீபத்தில் தீஸன் என்ற துறவி ஒருவர் தலைசிறந்து விளங்கினார் என்பதிற் சந்தேகமில்லை. துட்டகெமுனு ஆட்சிக் காலத்தில் பியங்குதீபத்தில் வாழ்ந்த தீஸன் என்னும் பிக்கு ஆகாயமார்க்கமாக வந்து அரசனிடம் பிச்சை கேட்டானென மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவர் தலைசிறந்த துறவியாக விளங்கியதால் இவரே வல்லிபுரத்தில் விகாரையைக் கட்டியிருத்தல் கூடும். அன்றேல் இவருடைய ஞாபகார்த்தமாக இவ்விகாரை கட்டப்பட்டிருத்தல் கூடும். பியகுகதிஸ என்ற சொற்றொடரிலுள்ள பியகுக என்னுஞ் சொல், பியங்குதீபத்தையே குறிப்பதாகும். பியங்குதீபம் என்பது பதினைந்தாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற நம் பொத்த என்னும் நூலிற் குறிக்கப்பட்டுள்ள புவங்குதீவயி என்பதேயாகும். பியங்கு தீபம் சிறந்த ஒழுக்கமுள்ள பௌத்த துறவிகள் வாழ்ந்த புனித ஸ்தலம் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

**தீவின் பெயர் வரலாறு**

புவங்கு என்பது மஞ்சள் நிறமும் வாசனையுமுள்ள சிறிய பூக்களுள்ள ஒரு வகை மரமாகும். இதனை "ருக்மல்" எனச் சிங்களத்திற்கூறுவர். இது சமஸ்கிருதத்தில் "பிரியங்கு" எனப்படும். இதன் தமிழ்ப் பெயர் இன்னதென்பது சரியாகப் புலப்படவில்லை. இது ஆராயப்பட வேண்டியதொரு விடயமாகும். நறுமணம் வீசும் பூக்கள் நிறைந்த தீவு என்றே சரித்திராசிரியர் ஒருவர் இத்தீவினைக் குறிப்பிட்டுள்ளார். மகாவம்சத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பேராசிரியர் கைசர் அவர்கள் இத்தீவினை "மஞ்சள் தீவு" எனக் குறிப்பிட்டுள்ளார். மஞ்சள் நிறப்பூக்கள் இருந்தமையால் இப்பெயர் ஏற்பட்டிருத்தல் கூடும்.

வடமாகாண இடப்பெயர் வரலாற்றினை ஆராய்ந்த திரு. எஸ். டபிள்யு. குமாரசுவாமியவர்கள் **புங்குடுதீவு** எனும்பெயர் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் - "புங்குடுதீவு" சிங்களம், புவங்கு **தீவயின**, புவங்கு - இலங்கைக்குச் சிறப்பாயுள்ள ஒரு பூமரம். தமிழர் இச்சிங்களப் பெயரைப் **புங்குடை**யதீவு என்று பெயர்த்து வழங்கிய துண்டேல் அது புங்குடுதீவு என்று விகாரப்படுதல் எளிது

**(யாழ்ப்பாண வைபவ கௌமுதி)**

**புராதன புங்குடுதீவு:**

**பண்டை**ஞான்று புங்குடுதீவுப் பூந்தோட்டங்களில் நிறைந்திருந்த அன்றலர்ந்த மலர்களை **இளந்தென்றல் அணை**ந்து தீவு முழுவதற்கும் நறுமணம் பரப்பியது. புள்ளிமான் கூட்டம் **துள்ளிவிளை**யாடின. கானமயில்கள் தோகை விரித்தாடின. வெள்ளாடுகள் மக்களுக்குப் போதிய **பாலுணவளித்தன. பிக்குகள்** வகிக்கும் "ஆராமம்" எனப்படும். ஆசிரமங்கள் பல இருந்தன.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

# பூகோள மயமாக்கல் சூழலில் "அறிவு உருவாக்கம்"

- வி. எஸ். இந்திரகுமார் B.A. (Dip in Ed.)

"இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் புதிய நம்பிக்கைகள், புதிய எதர்பார்ப்புக்கள், பிணக்கில்லா பெருவாழ்வு போன்றவற்றை வேண்டி நிற்கும் ஒரு சூழ்நிலையில், நாம் இன்று வாழ்ந்து வரும் உலகம் பயங்கரமான போர்கள், வன்செயல்கள், மற்றும் குற்றச் செயல்கள் என்பவற்றினாலும் பெருகி வரும் அரசியல் கொந்தளிப்புக்களினாலும் சிதைந்து சின்னாபின்னப்பட்டு கிடக்கிறது. சமாதானம், செல்வச் செழிப்பு, மற்றும் சகவாழ்வு என்பவற்றுக்கான எதிர்பார்ப்புக்களை குழப்பங்கள் மலிந்த உலக அரசியல், பொருளாதாரம் சமூக ஒழுங்கை களங்கப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தப் பின்புலத்தில் மேலைத்தேய அதிகார வர்க்கமும் அதன் மும்மூர்த்திகளான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக மயமாக்கல் என்று அழைக்கப்படும் சிக்கலான சர்ச்சைக்குரிய செயன்முறையை முன்னெடுத்துச் செல்கிறது. அத்துடன் மேலைத்தேச ஊடக வலையமைப்புக்களும் உலகின் கைத்தொழில் குழுமங்களும் எமது உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள சகலவிதமான பிரச்சினைகளுக்கும் துரதிர்ஷ்டங்களுக்குமான சர்வ நிவாரணியாக உலக மயமாக்கலை சிபார்சு செய்து வருவதுடன் புதிய பொருளாதார வாழ்வும் வளமும் கிடைக்கும் என வாக்குறுதி தருகிறன. ஆனால் இவர்கள் வளர்முக நாடுகளில் வாழும் பல கோடிக்கண்கான மக்கள் வறுமை, வேலையில்லா பிரச்சினை மற்றும் போசாக்கின்மை என்பவற்றின் பிடியில் சிக்கித் திணறிவருகின்றனர். மறந்துவிடுகின்றனர்.

இந்நிலையில் தான் இன்றைய "உலக மயமாக்கல் சூழலில் அறிவு உருவாக்கம் பற்றிய தேடல் நமக்கு வேண்டும். உலக மயமாக்கல் செயன்முறையை தெளிவாக புரிந்துகொள்வதற்கும் அதனை சரியான வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து நோக்குவதற்கும் இதன் அடிப்படைகளை கண்டறிவது அவசியமாகும்" உலக மயமாக்கல் என்பது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயன்முறையாகும். அது பொருளாதார தொழினுட்ப கலாசார மற்றம் அரசியல் பிணைப்புக்களுக்கூடாக உலக மக்களை மிக அருகில் எடுத்து வருவதுடன் அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது. மிக முக்கியமானதாக இருந்துவரும் பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்கும் போது பூகோள மயமாக்கல் என்பது அனைத்து நாடுகளினதும் வளர்ந்துவரும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும் தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது.

உலக மயமாக்கல் என்பது ஒரு புதிய விடயமல்ல. அது 16ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கிழக்கிந்திய வர்த்தக கம்பனி போன்ற வர்த்த நிறுவனங்களின் ஸ்தாபிதத்துடன் ஆரம்பமானதுடன் ஏகாதிபத்திய வாதம் மற்றும் காலனித்துவம் என்பவற்றின் கீழ் புதிய உத்வேகத்தினைப் பெற்றுக்கொண்டது. இன்று இடம்பெற்றுவரும் உலக மயமாக்கல் பழைய உலக மயமாக்கலில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகிற. நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒருங்கிணைப்புச் செயன்முறை 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் உருவாகியதுடன் 1870 - 1913 காலப் பிரிவின் போது உலகப் பொருளாதாரத்தில் முன்னெப்பொழுதும் இருந்திராத அளவிலான பெரு மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்காலப் பிரிவின் போது பல நாடுகள் உலக மயமாக்கலின் அடிப்படைக் குணாம்சமான உயர் அளவிலான திறந்த தன்மையைக் காட்டின. பொருட்கள் மூலதனம் என்பவற்றின் அசைவு தொடர்பாக நிலவி வந்த பெருந்தொகையான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதுடன் பொருளாதார நடவடிக்கையிலான அரசாங்கத்தின் தலையீடு குறைந்த பட்ச மட்டத்தில் வைக்கப்பட்டிருந்தது. உலக மயமாக்கல் நிகழ்வின் இந்த முதலாவது கட்டம் முழுவதிலும் உலக விவகாரங்களில் பிரிட்டன் தனது மேலாதிக்கத்தை செலுத்தி வந்தது. 1ம் உலக மகாயுத்தத்தின் ஆரம்பம் இந்தக் கட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்ததன் பின் 6 தசாப்த காலத்திற்குள் உலகம் தீவிரமான மாற்றங்களை எதிர்கொண்டதன் விளைவாக ஐக்கிய அமெரிக்க குடியரசு சர்வ வல்லமை பொருந்திய ஒரு நாடாக எழுச்சி பெற்றதை தொடர்ந்து அதன் எழுச்சியுடன் 1970 களின் தொடக்கத்தில் உலகமயமாக்கலின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகியது. இதனுடன் இன்னுமோர் அம்சமாக ஒரு தேசிய நாணயத்தைக் கொண்ட பொருளாதார வல்லரசொன்று உலகமயமாதலுக்கு அவசியமாக இருந்தமையாகும்.

இந்த நிலையில்தான் பூகோள மயமாக்கல் சிந்தனைளில் அறிவு உருவாக்கம் பற்றிய சர்வதேச கோட்பாடுகள் எழுச்சி பெறத் தொடங்கின. முழு உலகமும் ஒரு பூகோள கிராமமாக சுருங்கி வரும் ஒரு பின்புலத்தில் உலகளாவிய ரீதியில் பொருளாதாரங்கள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலை வரவர அதிகரித்துச் செல்லும் நிலையில் தனியார் மயமாக்ததிற்கும் உலகமயமாக்கத்திகுமான அறிவார்ந்த ஆதரவை உருவாக்குதல் அவசியமானதொன்றாக கருதப்படுகிறது. உலகம் பொருளாதார வளர்ச்சிக்கும் அறிவு உருவாக்க சிந்தனைகளுக்கும் ஏதுவான காரணிகளாக ஐந்து பிரதான கூறுகளை அவதானிகக்லாம்.

1) சர்வதேச நிதிச் சந்தைகளில் ஏற்பட்டு வரும் துரித வளர்ச்சி
2) குறிப்பாக பல்தேசிய கம்பனிகளிடையே வர்த்தகத்தில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி
3) வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் காணப்படும் பெரும்பாய்ச்சல்
4) உலகளாவிய சந்தைகளின் எழுச்சி
5) உலக மயமாக்கப்பட்டுள்ள போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் வசதிகளின் பெருக்கத்துக்கூடாக தொழினுட்பங்கள் கருத்துக்களும் வியாபித்துச் செல்லல் போன்றன அடங்கும். இவற்றின் பொருளாதார பலத்தை தம்வசம் வைத்திருக்கும் அமெரிக்கா, ஜரோப்பா, யப்பான், சீனா மற்றும் ருஷ்யா போன்ற ஐந்தும் வல்லரசுகளாக எழுச்சி பெற்று நிற்கின்றன.

எவ்வாறாயினும் உலகமயமாக்கலின் அனுகூலங்கள் நாடுகளுக்கிடையில் சமமான முறையில் பகிரப்படவில்லை என்று ஐ.நா.வின் மானிட அபிவிருத்தி அறிக்கை பல ஆவணங்களுடன் தெட்டத் தெளிவாக்கியிருக்கிறது. இந்நிலையில்தான் உலக மயமாக்கலின் கீழ் பலதரப்பட்ட நாடுகளும் அனுகூலங்களைப் பெறும் நோக்கிலான அடிப்படையில் உலக வங்கி பல ஆய்வுகளை மேற்கொண்டு சில திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதில் அறிவு உருவாக்கம் பற்றிய உலக வங்கியின் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கன என்றாலும் சமகாலத்தில் எமது சிந்தனை செயல்வாதம் போன்றவற்றில் உலக வங்கி ஏற்படுத்தி வரும் பிரமைகளை நாம் களைந்து முன்னேற வேண்டும் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்று உலகளாவிய ரீதியில் அறிவுருவாக்கச் செயற்பாடுகளில் பொருளாதார வளம்மிக்க நாடுகளும் பன்னாட்டு நிறுவனங்களும் அரசு சார்புடைய அரசு சார்பற்ற நிறுவனங்களும் ஆதிக்கம் செலுத்தி வருவதைக் காண்கின்றோம். இவற்றில் உலக வங்கி ஓர் அறிவு வங்கியாக வேண்டும் என்று அதன் தலைவர்

ஜேம்ஸ் உல்மென்சான் 1996ம் ஆண்டு விடுத்த வேண்டு கோள் இன்று பெரும்பாலும் நடைமுறைக்கு வந்துவிட்டதாகவே கருதப்படுகின்றது. உலக வங்கி காலந்தோறும் அறிவை உற்பத்தி செய்து அதனை உலகெங்கிலும் பற்பல கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்து செயல்படுத்துவதற்கு பயன்படுத்தியதாகவும் வங்கியின் பொருளாார நடவடிக்கைகளைப் போலவே இதுவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் கூறினார.

அறிவுருவாக்கத்தில் உலக வங்கி இந்தளவு முனைப்புடன் செயற்படுவதற்கு என்ன காரணங்கள் எனப் பார்த்தால் உலகளாவிய வறுமையை ஒழிக்கவும், மக்கள் வாழ்நிலையை மேம்படுத்தவும் உதவும் திறனைக் கண்டறிவதற்கே என்று கூறப்படுகிறது. இன்றைய உலகமயமாக்கல் சூழலில் கடன்பெறும் நாடுகள் கொள்கை வகுப்பதில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக உலக வங்கி தலையிட்டு வருகிறது. தாராளமயம் தனியார் மயம், உலக மயம் நோக்கி இந்நாடுகளை வலுக்கட்டாயமாக தள்ளி உலகளாவிய தனியார் முதலீட்டைப் பெருக்குவதில் தனியார்மயத்தின் மூலமாக வணிகரீதியில் செயல்பட்டு தனிநாடுகளை சந்தைகளாக மாற்றுவதே இதன் நோக்கம். இந்த பின்னணியில் தோற்றம் பெற்ற உலகமயமாக்கலுக்கு பல நாடுகளிலுமிருந்து எதிர்ப்பக் கிளம்பியவுடன் தொடர்ந்து செயற்பட கண்டுபிடிக்கப்பட்டதுதான் இந்த அறிவுருவாக்கத்திட்டம்; இதன் உருவாகத்தில் லட்சக் கணக்கான சம்பளம் பெறும் சர்வதேச வல்லுனர்கள் அடங்குவர். இவர்கள் பெரும்பான்மை மக்களின் பாரம்பரிய அறிவையும் திறனையும் மதிக்காமல் மேற்சொன்ன தனியார்மய - தாராளமய - உலகமயமாக்கத்தையே நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. தகவல்கள் ஆதாரங்கள் அனுபவங்கள் என இவற்றில் எதுவுமே கணக்கில் கொள்ளப்படவில்லை.

கணேச தீபம் ~~~

மேற்கொள்ளப்பட்டு பெரிய நீர்அணைகளுக்கான உலக ஆணையம் (WCD) வெளியிட்ட அறிக்கை எதிர்ப்பாளர்களின் வாதங்களை ஒப்புக்கொண்டது. இதன் அச்சுறுத்தலை புரிந்துகொண்ட உலக வங்கி கடன் கொடுக்கல் நழுவல்போக்கை கையாண்டது. கடன் கொடுக்காமல் ஒதுக்கிய உலக வங்கியிடமிருந்து பெரிய நீர் அணைகளை கட்ட திட்டமிட்டிருந்த அரசுகள் கடன் தருமாறு வற்புறுத்தின. இதற்கு பிரதியுபகாரமாக வங்கி பயன்படுத்திய முறைதான் அறிவு உருவாக்கம் எனும் செயற்பாட்டு வடிவமாகும். இவ்வாறு மறைமுகமாக கண்ணுக்குப் புலப்படாத வங்கியின் மேலாதிக்க செயற்பாடுகளால் எதிர்மறை விளைவுகள் புலப்படாமலே போய்விடுகின்றன. வங்கி தயாரிக்கும் அறிக்கைகள் யாவும் நன்மை தருவனவாகவே தயாரிக்கப்படுகின்றன. உலக வங்கியின் ஆய்வு முடிவு மத நம்பிக்கைகளைப் போல கேள்வியின்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

உலக வங்கியின் நிதி மேலாதிக்கத்துக்கு வங்கி வழங்கும் கடன்கள் மட்டுமே காரணமல்ல. உலகின் தனியார் முதலீட்டுக்கு ஆதாரமான பல நிதி நிறுவனங்களுடன் உலக வங்கிக்கு பலவகை தொழில் ரீதியான தொடர்புகள் உள்ளன. வங்கியின் கடன் வழங்கும் கொள்கை, அறிவுப் பகிர்வு, ஆகியவற்றில் பெருந்தொழில் முதலீட்டாளர்களின் பன்னாட்டு பெரு முதலாளித்துவ நிறுவனங்களின் பங்கும் இருக்கிறது. உலக வங்கி மூலமாக கடன் வழங்குவதால் ஆண்டு ஆண்டு தோறும் இத்தகைய நிறுவனங்களுக்கு பல கோடி டொலர் வருமானம் ஒப்பந்தங்கள் மூலமாகவும் ஆலோசனை வழங்கல் மூலமாகவும் கிடைக்கிறது. அறிவை உருவாக்குவதிலும் பரவலாக்குவதிலும வங்கியின் மேலாதிக்கத்துக்கு பரந்துபட்ட வலைப்பின்னலே காரணம். பல நாடுகளைச் சேர்ந்த ஆய்வு நிலையங்களின் அறிவுஜீவிகள், ஆசிரியர்கள், தொழில் வல்லுனர்கள, அரசு சாரா நிறுவனங்கள் அரசு அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து இந்த வலைப் பின்னலும் சேகரிக்கப்படும் அறிவு அந்தந்த நாடுகளின் அறிவு உற்பத்தியாகும் அமைப்புக்களுள் ஊடுருவ வழி செய்கின்றது. உலக மயமாக்கல் சிந்தனயின் உச்ச பரிணாமத்தின் மற்றொரு வடிவம் தான் உலக வங்கியின் பணிகளில் ஒன்றாக கருதப்படும் வேறு மாற்று ஏதும் இல்லை (There is no Alternative - TINA) எனும் எண்ணத்தை ஆழப் பதியச் செய்வது. உலக வங்கியின் கொள்கைக்கு அது உருவாக்கும் அறிவுக்கு மாற்று இல்லையென நம்பி செயலற்றுப் போகச் செய்வது.

எனவே அதன் அறிவு உருவாக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அதன் மேலாதிக்கத்தை உழைத்து நொருக்குவதே இன்று நம்முன் உள்ள சவால். உலக வங்கி இந்த விளையாட்டில் பங்கேற்கும் பல நிறுவனங்களில் ஒன்று என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அத்துடன் ஜனநாயக மயப்படுததப்பட வேண்டியது அழிவு உருவாக்கம் மட்டுமல்ல அதன் இலக்குகளை முடிவு செய்யும் முறையும் கூடத்தான். என்று உணர வேண்டும். அறிவு உருவாக்கம் என்ற செயலை அதிக லாபம் என்ற குறிக்கோளிலிருந்து விலக்க வேண்டும். பொதுமக்கள் நலன், சமத்துவம், நீதி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை உருவாக்கும் நோக்கம் கொண்டதாக மாற்ற வேண்டும்.

# யாழ்ப்பாணத்தின் குடும்ப அமைப்பு ரீதியான மாற்றம்

**ந. சசிகுமார்** B.A. (Hon)

**ஆசிரியர்**

குடும்பம் என்பது உலகப் பொதுமையான ஒரு அமைப்பாகும். ஒரு தொகுதி மக்கள் ஒன்றாகவும் அல்லது தொகுதியாகவும் வாழும் நிலையைக் குறிக்கும். அது இரத்த உறவாலும் விவாகத்தாலும் குடும்பமாகக் காணப்படுகிறது. ஆனால் அமைப்பு. நிர்வாகம் என்பன பண்பாட்டுக்கு பண்பாடு வேறுப்பட்டதாகக் காணப்படுகிறது. சமூக கலாசார சூழ்நிலைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கெர்ள்ளும் சிறந்த ஒரு அமைப்பே குடும்பம் என்பதால் குடும்பங்களை

1. விரிவாக்கப்பட குடும்பம்
2. தனிக் குடும்பம்
3. தனிப்பெற்றோர் குடும்பம்
4. மீள உருவாக்கப்பட்ட குடும்பம்

என வகைப்படுத்தலாம்.

தற்காலத்தில் பெரிய குடும்ப அமைப்பு விகிதாசாரம் குறைவடைந்து வருகிறது. சிறிய குடும்பம் தான் இன்று அதிகமாக காணப்படுகிறது. கூட்டுக் குடும்பத்தில் மூன்று பரம்பரையான மக்கள் சேர்ந்து வாழ்ந்துள்ளனர். உதாரணம் : தகப்பன், தாய், மகன், மகள், பேரன், பேத்தி, பூட்டன், பூட்டி என்பவர்கள் சேர்ந்து கூட்டாக வாழுதல் ஆகும். இன்று இந்நிலமை குறைந்துவிட்டது. விரிந்த குடும்பம் ஒன்றின் உறுப்பினர்களின் தொடர்பு நிலையை ஒட்டி.

1. நேர்வழி விரிந்த குடும்பம்,
2. கிளைவழி,
3. தந்தைவழி,
4. தாய்வழி

என நோக்கப்படுகிறது.

கணேச தீபம் ~~~

மேலும் தொடர்ச்சியான போரினால் தமிழர் தாயகங்களிற் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கணவனது இழப்பிற்கான பிரதான காரணமாக அமைவது வன்செயலாகும். இன்றைய வன்செயல் போர் கணவரை இழந்த பெண்களின் எண்ணிக்கையினை அதிகரித்த வண்ணமே உள்ளது. இதனால் உள, உணர்வு ரீதியான பிரச்சினைகள் பண்பாடுசார் பிரச்சினைகள் மற்றும் பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகிறது. அடுத்து மணப்பெண்ணை திருமண ஒப்பந்தம் காரணமாக வெளிநாட்டுக்கு அனுப்புதல் இன்றைய எமது குறிப்பிடத்தக்க பண்பாடாக மாறியுள்ளது. இது ஒருவகையான நாகரிகம் ஆகும். ஆனால் இதனால் ஏற்பட்ட சமூக மற்றும் பண்பாட்டு உளவியல் பிரச்சினைகள் ஏராளம். அதுமட்டுமன்றி, திருமணமாகாத பெண்களின் எண்ணிக்கை எமது பகுதிகளில் அதிகரித்துள்ளது. பெண்களின் உயர்கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகவும், பெண்கள் வேலைக்குச் செல்வதன் காரணத்தினாலும் பெண்களின் திருமண வயது அதிகரித்துக் காணப்படுவதுடன் திருமணம் செய்யாமல் இருப்பதற்கு சீதன நடைமுறையும் இன்னொரு சமூக தடங்கலாகவும் இருப்பதனைக் காண்கிறேம.

மேலும் தொடர்ச்சியான இடப்பெயர்வு அகதி வாழ்வு, நலன்புரி நிலய வாழ்வு, ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதனால் தகாத உறவுகளும், கருக்கலைப்பு அதிகரிப்பும் இன்று வடக்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. மேலைத்தேய கலாசாரம் தான் உயர்வானது என்ற உளப் பாங்கு எம்மக்கள் மத்தியில் குறிப்பாக இளையோர் மத்தியில் காணப்படுகிறது. யுத்தத்தினால் மேலைத்தேய நாட்டிற்கு வலிந்து புலம்பெயர்ந்த எம் உறவுகள் எம் பிரதேசங்களில் மீளக் குடியேற விரும்பாது மேலைத்தேய பண்பாட்டிற்கு அடிமையாகும் போக்கு உள்ளது. இன்று எமது சமூகத்தில் தங்கியிருப்போர் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது. இந்நிலை ஒரு பிரச்சினையாகவே கருதப்படுகிறது. போரினால் தனிமைப்படுத்தப்பட்ட முதியவர்கள், புலம்பெயர்ந்த பிள்ளைகளைப் பிரிந்த பெற்றோர் தங்கி வாழும் ஒரு துர்ப்பாக்கிய நிலை இன்று எமது பகுதிகளில் உள்ளது. ஊனமுற்றோர் தொகை அதிகரித்துள்ளது. இதனால் தங்கியிருப்பது ஒரு பிரச்சினையாக உள்ளது. மேலும் வேலையில்லாமல் இருப்போர் ஏனையோரில் தங்கியிருக்கின்றனர். இதனைவிட யாழ் குடும்பங்களுக்கு வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிதி மூலம் அடிப்படைய வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே, எமது சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் இன முரண்பாடு தீர்க்கப்படும் வரை இச் சமூக விவகாரத்தினால் ஏற்படும் விளைவுகளையும் தாக்கங்களையும் கட்டுப்படுத்தவே முடியாது. எமது நாடு, சமூகம் தொடர்பான தூரநோக்கு காத்திரமானது. குறுகிய மனப்பாங்குகளைக் களைந்து வாழ முற்பட வேண்டும். இதன் மூலம் புதிய சமுதாயம் உருவாகும்.

**உசாத்துணை நூல்கள்**

1. ரிச்சேட் அ.எ. (2006) சமூகபொருண்மைகள் கோட்பாடுகளும் பிரயோகங்களும் - சமூகவியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்.

2. மானுடம் (2001) சமூகவியல் ஏடு 4. வெளியீடு சமூகவியல் சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# சாதி தமிழினச் சாபக்கேடு – ஒரு திறந்த மடல்

**- சிவஞானசுந்தரம் பகிராஜ்**
*மருத்துவபீடமாணவன் இறுதியாண்டு,*
*ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம்,*
*கொழும்பு.*

எவ்வளவுதான் அறிஞர்களையும், ஆர்வலர்களையும், சமூகத்தில் மிக உயர்ந்த பலரையும் நாம் உருவாக்கினாலும், நாம் இன்னமும் உலகை எதிர்கொள்ளத் தயார் இல்லை என்பது: "தமிழ் இனி மெல்லச் சாகும்" என்றும், "கடவுள் தான் இனித் தமிழனைக் காப்பாற்ற வேண்டும்" என்றும் பலர் கூறுவதிலிருந்து புலனாகின்றது. அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும், இங்கிலாந்துக்காரனுக்கும் இடையில் உள்ள மதம் இனம் கடந்த அரசியல் சாராச் சமூகங்களிடையேயான உறவும் அவர்களை வல்லரசாக்க உதவியது என்பது உண்மையே, ஒன்றுபட்டு நின்ற இனமெதுவும் தலை குனிந்ததாகச் சரித்திரம் இல்லை. நாம் வல்லரசாகா விட்டாலும் பரவாயில்லை, ஒரு ஒன்று பட்ட இனமாகவேனும் எம்மை இனம் காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வெறுமனே அரசியல் மட்டும் ஓர் இனத்தின் முன்னேற்றத்திற்கு வழிசமைக்கும் என்பது ஏதோ ஒரு வகையில் பொய்யாக்கப்பட்டுள்ளதை நாம் நன்கு அறிவோம்.

"ஒன்று படுவோம்", "வெல்வோம்" என்ற வாசகங்கள், எமக்குள் புரையோடிப்போயுள்ள சில அடிப்படை வாதப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரைவெறும் வாய்ப்பேச்சு வீண் பேச்சாகவே இருக்கும் என்பதே என்னுடைய வியாக்கியானம். அப்படிப்பட்ட பல பிரச்சனைகள் இன்று தீர்க்கப்பட்டு வந்தாலும் மிக அடிப்படையான ஒரு பிரச்சினை எமது இனத்தில் ஆழ ஊடுருவி படித்தவன், படிக்காதவன், ஏழை , பணக்காரன் என்று எந்த ஒரு வித்தியாசமும் பார்க்காமல் எமது இனத்தின் ஒற்றுமையை கறையானைப் போல் அரித்து வருகின்றது என்பதே, வெளியில் நின்று தமிழினத்தை உற்று நோக்கிய பொழுது நான் விளங்கிக் கொண்ட உண்மை. "சாதிப்பிரச்சினை" ஒன்றைத் தவிர வேறோன்றாக அப்பிரச்சினை இருக்கமாட்டாது என்பதை 21ம் நூற்றாண்டில் உலகத்தின் அசுர வளர்ச்சியைக் கண்டு கதிகலங்கிப்போய் நிற்கும் ஒவ்வொரு தமிழ் இளைஞனும் யுவதியும் மறுக்க மாட்டார்கள் என்பதில் இளைஞனான எனக்கு எந்த ஐயப்பாடும் இல்லை.

இந்த உண்மையை இன்றைய சந்ததியினர் இனம் கண்டு மாற்றமுயலும் பொழுது மாறுகிறார்கள் தானே பிறகு நீ ஏன் வீண்பேச்சு பேசுகின்றாய்: என்ன பிரயோசனம்? என்று நீங்கள் வினாத் தொடுக்கலாம். அவசியமிருக்கிறது. ஏனென்றால் சாதிபற்றிய அடிப்படைவாதக் கோட்பாடுகள் மாற்றமடைந்து வந்தாலும் அவற்றை இன்றுவரை கட்டிக்காத்து வந்த அடிப்படை வாதிகளின் கூச்சல்கள் இன்னமும் குறையவில்லை என்பதே எனது மனக்கவலை. உலகின்

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

இரண்டாம் வினாத்தாள் தரம் ஒன்று முதல் ஐந்து வரையிலான சகல பாடப்பரப்புகளில் அடங்கியுள்ள விடயங்களில் ஆசிரியர் துணையுடன் மாணவர் திரட்டியுள்ள திறன்களை அணுகி ஆராயும் வகையிலும், பாட அனுபவங்கள், ஆசிரியர் வழங்கும் அனுபவங்கள் ஆகியவற்றின் காரணமாக மாணவரிடத்தே விருத்தியடைந்துள்ள அறிவு, திறன், மனப்பாங்கை மதிப்பீடு செய்யும் வகையிலுள்ளது. இவற்றிற்குத் தக்க விடையளிக்க மாணவர்களைப் பயிற்ற வேண்டும். சீரான பயிற்சியும், ஊக்குதலும் இதற்கு மிகமிக அவசியமாகும்.

ஐந்தாம்தரப் புலமைப்பரிசிற் பரீட்சைக்கு ஆரம்ப வகுப்பு மாணவர்களை வழிப்படுத்துவோர் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான பாடத்திட்டங்களில் நல்ல தேர்ச்சியுடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் செயற்திறன் சார்ந்த கற்பித்தலை மேற்கொள்வோராக இருத்தல் அவசியம். வருங்காலப் பிரஜைகளான இன்றைய மாணவர்கள் வளமான வாழ்வுகாண செயற்திறன் மிக்கவர்களாக திகழ வழிகாட்டும் வல்லமையுடையவர்களாக விளங்க வேண்டும். இதனையே இன்றைய மாணவர்கள் வளமை வாழ்வுக்காண செயற்திறன் மிக்கவராகத் திகழ வழிகாட்டும் வல்லமையுடையவர்களாக விளங்க வேண்டும். இதனையே இன்றைய கல்விச் சமூகம் எதிர்பார்க்கின்றது.

# தீவகம் – ஒரு வரலாற்று நோக்கு

- பேராசிரியர் வி. சிவசாமி

யாழ்ப்பாணக்குடாநாடு போன்று அதனையடுத்துள்ள பிரதான தீவுகளும் நீண்டகால வரலாறு கொண்டவை. இவற்றிலே வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு (காரைநகர்) ஆகிய ஏழு (சப்த) தீவுகள் நன்கு குறிப்பிடத்தக்கவை. இவையே இங்கு தீவகம் எனத்தொகுப்பாக அழைக்கப்பட்டுள்ளன. புவியியல் ரீதியிலும் வரலாற்று ரீதியிலும் இவை யாழ்ப்பாணக் குடா நாட்டின் ஒன்றிணைந்த பகுதிகளாயினும் இவற்றிற்குத் தனிச்சிறப்பியல்புகளும் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியான வரலாற்றினைக் கூறும் இலக்கிய மூலகங்களோ வாய் மொழி மரபுகளோ இல்லை. ஆனால் சில ஐதீகங்களும் மரபுகளும் உள்ளன எனினும் புராதன இலங்கை வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், பௌத்த ஜாதகக் கதைகள், மணிமேகலை, நம்பொத்த, கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் முதலிய இலக்கிய நூல்கள், சாசனங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள், மட்பாண்டங்கள், இடப்பெயர்கள், சில வாய்மொழி மரபுகள் முதலியவனவற்றின் துணைகொண்டு புராதன, மத்தியகால வரலாறு பற்றி ஓரளவு கூறலாம். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் கால ஆவணங்கள், வரலாற்றாசிரியர் குறிப்புக்கள். அவ்வக்கால இந்துக்கோவில்கள், கோட்டைகள், கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயத் தேவாலயங்கள் முதலியன பிற்பட்ட கால வரலாற்றினை அறிவதற்கு ஓரளவு உதவி புரிவன போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் பிறசமய அழிவுக் கொள்கையினாலே, யாழ்ப்பாணக் குடாநாட்டைப் போன்று இங்கிருந்த முற்பட்ட கால இந்துக் கோவில்களும், பிறவழிபாட்டிடங்களும் அழிக்கப்பட்டு விட்டன. அவ்வாறாயினும், அண்மைக்காலத்திலே சில பழைய கோவில்களின் சின்னங்கள் சில கிடைத்துள்ளன. இவை பற்றிப் பின்னர் கூறப்படும். மேலும் அண்மைக்காலத்திலே ஆங்கிலேயரான பேராசிரியர். ஜோன் காரஸ்வெல் அல்லைப்பிட்டி போன்ற இடங்களில் நடத்திய ஆய்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் நடத்திய அகழ்வாய்வுகள், மேலாய்வுகள், யாழ்ப்பாணத் தொல்லியற் கழகத்தினர் நடத்திய மேலாய்வுகள், இவர்களுக்கு முன் முதலியார் குலசபாநாதன், போன்றோர் செய்த சில ஆய்வுகள் மூலம் வரலாற்று உண்மைகளை அறிய முடிகிறது. இத்தீவுகளின் சில கேந்திர நிலையங்களில் ஒழுங்கான அகழ்வாய்வுகள் மேலும் நடத்தப்படின் இவற்றின் வரலாறு துலங்கும். எவ்வாறாயினும், வரலாற்று மரபுகள் முறைப்படி பேணப்படாமை பெரிய குறைபாடாகும்.

வரலாற்றுரீதியிலே நோக்கும்போது யாழ்ப்பாணக் குடாநாட்டிற் போன்று, இவற்றிலும் கிறித்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டு மக்கள் நடமாட்டங்கள் நிலவி வந்துள்ளன என்பதில் ஐயமில்லை. இத்தீவுகள் அமைந்திருக்கும் நிலையம் இவ்விடங்களிலே குடியேறிய மக்களைப்

பற்றி ஓரளவாவது அறிய உதவும். இவை யாழ்ப்பாணக்குடா நாட்டிற்கு அண்மையிலுள்ளன. அதேவேளையில் தென்னிந்திய குறிப்பாகத் தமிழ் நாட்டுக்கரையோரப் பகுதிக்குச் சற்றுத் தொலைவில் உள்ளன. எனவே ஒரு புறத்தில் இந்தியாவிலுள்ள தமிழ்நாடு, கேரள, ஆந்திர பிரதேசம் மாநிலங்களிலிருந்து காலம் தோறும் மக்கள் சிலர் வர்த்தகம், மீன் பிடித்தல், புதிய நாடுகளுக்குச் செல்லும் ஆவல் , சமய ஆர்வம் முதலிய காரணங்களாலும் பல்லவ, பாண்டிய, சோழ, விஜயநகரப்பேரரசுகளின் ஆதிக்கப் படர்ச்சிகளைத் தொடர்ந்தும் இவ்விடங்களிலே வந்து குடியேறியிருப்பர். இக்குடிபெயர்ப்புகளில் தமிழ்நாடு தான் பிரதான பங்கு பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. தமிழ்நாட்டில் இருந்து இங்கு ஏற்பட்ட குடியேற்றம் பற்றிக் கைலாயமாலை (196-197), யாழ்ப்பாண வைபவமாலை ஆகியன குறிப்பிடுகையில் யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரிய மகாராசனின் வேண்டுகோளின்படி செய்யூர் இருமரபும் துய்ய தனிநாயகன் எனும் வேளாளன் நெடுந்தீவிலே குடியிருத்தப்பட்டான் எனக் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தையடுத்த தீவுகளில் தமிழகத்திற்கு மிக அண்மையிலுள்ளது நெடுந்தீவாகும். இந்தியாவிலிருந்து இங்கு வந்த மக்களில் ஒரு சாரார் காலப்போக்கில் மற்றைய தீவுகளிலுல் குடாநாட்டிலும் குடியேறியிருப்பர். தனிநாயகனின் குடும்பத்தைச் சேர்ந்தோர் எனத் தம்மைக் கூறிக்கொள்வோர் மற்றைய சில தீவுகளிலும் உளர். எனவே, தனிநாயகனின் வழி வந்தோர் வேறு சில தீவுகளிலும் தொடர்பு கொண்டிருந்தனர் எனலாம். தமிழ் நாட்டிலிருந்து தீவகத்திற்கும், குடாநாட்டிற்கும் புலம் பெயர்ந்த மக்கட் புலப்பெயர்ச்சியின் ஓர் அலையெனக் குறிப்பிட்ட தனிநாயகன் பற்றிய கதையினைக் கொள்ளலாம்.

தமிழ் நாட்டிலிருந்து தீவகத்திற்கு வந்து குடியேறிய மக்களில் ஒரு சாரார் தீவகத்திற்குத் தென்கீழ்த்தீசையிலுள்ள பூநகரிப் பிராந்தியத்திற்கும் சென்று குடியேறியுள்ளனர் என்பது அண்மைக்காலத்திலே வரலாற்று விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரத்தினம் பூநகரியிலே மேற்கொண்டுள்ள ஆய்வுகளாலும் தெளிவாகின்றது. மேற்குறிப்பிட்டது போன்று இதற்கு முன்னரும் பின்னரும் மக்கட் புலப்பெயர்ச்சிகள் தீவகத்திலும், குடாநாட்டிலும் பூநகரியிலும் ஏற்பட்டிருக்கலாம். சில புலப்பெயர்ச்சிகள் நேரடியாகவே தமிழகத்திலிருந்து ஏற்பட்டிருக்கலாம். வேறு சில குடாநாட்டிலேற்பட்டுப் பின்னர் தீவகத்தில் ஏற்பட்டிருக்கலாம். இவை பெரும்பாலும் நேரடியாகவே தமிழ் நாட்டிலிருந்து ஏற்பட்டிருக்கலாம். பின்னர். வசதிகளையும் தொழில்வாய்ப்புகளையும் நாடி ஒரு சாரார் குடாநாட்டிற்கும் பூநகரிக்கும் சென்றிருப்பார். இன்றும் இப்போக்கு நிலவுகின்றது எனவே, பெரும்பாலும் ஒரு புறத்திலே குறிப்பாகத் தமிழகத்திலிருந்து, மறுபுறத்திலே சிறிதளவு குடாநாட்டிலிருந்தும் மக்கட் புலப் பெயர்ச்சிகள் தீவகத்திலே ஏற்பட்டிருக்கலாம். மேலும் இத்தீவுகள் அமைதியான இயற்கைச் சூழ்நிலையுள்ள இடங்களாவும் கருதப்பட்டு வந்தன.

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி விமலா பேக்லி, பேராசிரியர் புறொன்சன் முதலிய தொல்லியலாளர் நடத்திய ஆய்வுகளாலும் அங்கு பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் வெளிவந்தன. புங்குடுதீவின் வடபகுதியிலுள்ள ஊரதீவின் வடகரையில் வட்டக்கற்களாலான சிறு கிணறுகள் தென்பட்டனவாகக் கூறப்படுகின்றது. இத்தகைய கிணறுகள் வல்லிபுரம், பூநகரியில் கிராஞ்சி, திருக்கேதீச்சரம் முதலிய இடங்களிலும் காணப்பட்டன. ஊரதீவிலுள்ள ஐயனார் ஆலயம் குறிப்பிடற்பாலது. இது தற்பொழுது சிவாலயமாக விளங்கினாலும் பழமை வாய்ந்தது. இங்குள்ள கருங்கற்தூண் லிங்கம் வளர்வதாக ஐதிகமுண்டு. இதிலே சில எழுத்துக்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இவ்வெழுத்துக்கள் தமிழ் கிரந்த எழுத்துக்கள் எனக்கருதப்படுகின்றன. இவை செவ்வனே வாசிக்கப்பட வேண்டியவை. இதன்மூலம் இவ்வாலய வரலாறு மட்டுமன்றி இப்பகுதி வரலாறு மேலும் துலங்கலாம். மேற்குறிப்பிட்ட கிணறுகள் பெருங்கற்பண்பாட்டினைச் சேர்ந்தன எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் பூர்வீக குடிகளான யக்ஷர், நாகர் பற்றித் தீபவம்சம், மகாவம்சம் முதலிய நூல்கள் கூறுகின்றன. இவர்களிலே யக்ஷர் ஆதி - ஒஸ்ரலோயிட் இனத்தவர் எனவும், நாகர் திராவிடர் எனவும் வரலாற்றாசிரியர் அடையாளம் கண்டுள்ளனர். இந்நாகர் பெரும்பாலும் வடபகுதியிலே வாழ்ந்தனர். இவர்களிடையிலே நாகவழிபாடு பிரபல்யமாக விளங்கிற்று. நாகம்மாள் (நாகபூஷணியம்மன்), நாகதம்பிரான் கோவில்கள் தீவகத்திலே, குறிப்பாக நயினாதீவிலும் அனலைதீவிலும் உள்ளன. நாக, நயின எனும் பதங்கள் பாம்பு என்னும் பொருள்படும். நாகவழிபாடு இன்று இப்பகுதியில் பிரபல்யமாக விளங்குகின்றது. புராதன நாகர் மத்தியில் இவ்வழிபாடு நன்கு நிலவி வந்துள்ளது. வையாபாடல் நாகநயினார் தீவு (60) எனக் குறிப்பிட்டிருப்பது ஈண்டுக் கவனித்தற்பாலது.

பெருங்கற்பண்பாட்டினைச் சேர்ந்த திராவிடர் மத்தியில் புராதன இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் நிலவிவந்துள்ளன. எனவே புராதன தீவகத்திலே வாழ்ந்த திராவிடர், குறிப்பாகத் தமிழர் மத்தியிலே ஆதி இந்து சமயம் நலிவியிருக்கலாம்.

இதைத் தொடர்ந்து, இலங்கையின் பிற இடங்களிற் போன்று இங்கு பௌத்தம் பரவியிருக்கலாம். பௌத்தமரபினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் புராதன வரலாறு கூறும் தீபவம்சம், மகாவம்சம் முதலிய நூல்களிலே நாகதீபம் ஒருமுக்கியமான பௌத்தநிலையமாகக் கூறப்படுகின்றது. இங்கு புத்தபிரான் வந்து சென்றார் என்ற ஐதிகமுண்டு. நாகதீபம் எனும் பதம் பரந்த கருத்திலே வட இலங்கை முழுவதையும் குறிக்குமாயினும், சிறப்பாக நயினாதீவினையே குறிக்குமெனக் கருதப்படுகின்றது. பியங்குதீபம் பிறிதொரு முக்கியமான பௌத்தநிலையமாகக் கூறப்படுகின்றது. இங்கு புகழ்பெற்ற அர்உறந்தஸ் (பௌத்த ஞானிகள்) வாழ்ந்த1ரெனக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்விடம் பற்றி வல்லிபுரம் பொற்சாசனத்திலும் குறிப்பு உள்ளதெனக் கருதப்படுகின்றது. இவ்விடம் புங்குடுதீவு என அடையாளம் காணப்படுகின்றது. தீவகத்திலுள்ள கேரதீவு, மண்டதீவு முதலிய இடப் பெயர்களும் மேற்குறிப்பிட்ட நூல்களிலே வருகின்றன. எடுத்துக்காட்டாக அபித்த ஜாதகத்திலே பிராமணமுனிவரான அசித்த (அகத்தியர்) தனிமையை விரும்பி காசிக்கும் பின் (தமிழ் நாட்டிலுள்ள) காவிரிப்பூம் பட்டினத்திற்கும், அங்கிருந்து நாகர்களுடைய காரைதீவுக்கும் சென்றார் எனக் கூறப்படுகின்றது. அங்கே இவர் காரைச் செடியினை அவித்து உப்பு அல்லது வாசனைத் திரவியங்களைச் சேராது உண்டு, குகையிலே தன்னடக்கமுள்ள தூய துறவியாக வாழ்ந்தார் எனக் கூறப்படுகின்றது. துறவிகள் தனிமையையும் அமைதியையும் நாடி காடுகளிற் போன்று தீவுகளிலும் வாழ்ந்திருப்பர்.

மேலும் தமிழ் நாட்டுப் பௌத்த மரபினை அடிப்படையகக் கொண்டெழுந்த மணிமேகலையிலே கூறப்படும் மணிபல்லவம் நயினாதீவு என அடையாளம் காணப்படுகிறது. சிலர் இது காரைதீவு (காரைநகர்) எனவும் கருதுவர். மணிமேகலை, ஆபுத்திரன் ஆகியோர பற்றியும் அக்ஷய பாத்திரம் முதலியன பற்றியுமான ஐதிகங்கள் இன்று நயினாதீவிலே நிலவுகின்றன. எனவே தென்னிந்திய, இலங்கைப் பௌத்த மரபுகள் தீவகத்திலும் சங்கமித்துள்ளமை குறிப்பிடற்பாலது. அக்காலகட்டத்தில் இங்கு வாழ்ந்த பௌத்தர்களும் திராவிடர் குறிப்பாகத் தமிழர் எனலாம். இந்தியாவிற் போன்றும் இலங்கையின் பிறவிடங்கள் பலவிற் போன்றும் தீவகத்திலும் இந்துசமயம் பௌத்தம் அக்கம்பக்கமாக பல நூற்றாண்டுகள் நிலவியிருக்கலாம்.

நயினாதீவு எனும் பெயர் நயினாபட்டர் எனும் பிராமணர் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறியதைத் தொடர்ந்து இத்தீவுக்கு இடப்பட்ட பெயரென ஒரு சாரார் கருதுவர். இவரே அங்கிருந்த நாகதம்பிரான் கோவிலின் ஆதீ அர்ச்சகர் எனக் கூறப்படுகிறார். நயினார் என்னும் மக்கட்குழுவினர் இங்கு வந்து குடியேறியமையாலும் பெயர் வந்திருக்கலாமெனச் சிலர் கூறுவர். ஏற்கனவே குறிப்பிட்டவாறு நயினா எனில் பாம்பு எனப் பொருள்படும். நாகவழிபாடு நன்கு நிலவிய இடமாகையாலும் இப்பெயர் வந்திருக்கலாம். இதற்குப் பிராமணத்தீவு எனும் பெயருமிருந்தது. காரைச் செடிகள் அதிகம் இருந்தபடியால் காரைதீவு எனும் பெயர் ஏற்பட்டதெனக் கருதப்படுகின்றது. பிரியங்குக் கொடிகள் அதிகம் காணப்பட்டபடியால் பிரியங்குதீவு எனும் பெயர்வந்ததாகவும் அது மருவிப் பியங்குதீவு எனவும் புங்குடுதீவு எனப்பெயராயிற்று எனவும் ஒரு சாரார் கருதுவர். புங்கு எனும் மரத்தின் பெயரால் இப்பெயர் வந்திருக்கலாம் எனவும் சிலர் கருதுவர். மேலும் புங்கனூர், பூங்குடி முதலிய இடப்பெயர்கள் தமிழ் நாட்டிலுள்ளன. ஒருவேளை இப்பெயர்களில் ஒன்று மருவிப் புங்குடுதீவு எனவும் வந்திருக்கலாம். தீவுகளிலே மிக நீண்ட தீவு நெடுந்தீவு என அழைக்கப்பட்டது. மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து மிகத் தொலைவில் இருப்பதால் இப்பெயர் வந்திருக்கலாம். பசுக்கள் அதிகமாக இருந்தபடியால் பசுந்தீவு எனவும் இது பெயர்

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

கணேச தீபம் ~~~

தீவகற்பம், ஜாவா போன்ற இடங்களைச் சேர்ந்த சந்திரபானுவின் படையெடுப்பினாலும், வர்த்தகத்தொடர்பு போன்றவற்றினாலும் மலாய்த்தீவகற்பம், ஜாவா போன்ற தென்கிழக்காசியத் தொடர்புகளும் நிலவின எனலாம். எடுத்துக் காட்டாக தீவகத்திலுள்ள சில இடப்பெயர்களின் சாவான் (ஜாவாக்காரன்) வளவு, சீனன்புலம், கணக்களார் வளவு, செட்டியார் தோட்டம், செட்டிவளவு, பணிக்கன் புலம் போன்றவை முறையே ஜாவக, சீன, இந்தியத் தொடர்புகளைக் காட்டுவனவாகலாம். இந்நாடுகளைச் சேர்ந்த வணிகர் இவ்விடங்களில் தங்கியிருந்திருக்கலாம். அல்லது தொடர்பு கொண்டிருக்கலாம். கோவளம் என்னும் இடப்பெயர் காரைநகரின் மேற்குப் பகுதியிலும், குடாநாட்டின் வட கரையிலும் உண்டு. இதே பெயர் கேரள மாநிலக்கரையிலுமுண்டு. எனவே, அங்கிருந்து இவ்விடங்களுக்கு ஏற்பட்ட மக்கட் புலப்பெயர்ச்சி அல்லது வர்த்தக, பண்பாட்டுத் தொடர்பு அல்லது இவ் இரண்டினையும் இப்பெயர்காட்டுவதாகலாம். இது போலவே வேலணையிலுள்ள கரம்பன் எனுமிடம் கேரளத்திலுள்ளது. இதுவும் மேற்குறிப்பிட்ட தொடர்பு அல்லது தொடர்புகளை எடுத்துக்காட்டுவதாகலாம். தீவகத்திலுள்ள இடப்பெயர்கள் சிலவற்றிலே சில பழைய தூய தமிழ் வழக்காறுகளும் காணப்படுகின்றன. துருத்தியெனும் சொல் தீவையும் குறிக்கும். திருமுருகாற்றுப்படையில் (வரி. 203) இக்கருத்தில் வந்துள்ளது. புங்குடுதீவிலே குறிகாட்டுவானுக்கும் பிரதான தீவுக்குமிடையிலுள்ள சிறு தீவு நடுவுத்துருத்தி (நடுவே உள்ளதீவு) என அழைக்கப்படுகின்றது. களபூமி (போர்க்களம் அல்லது நெற் க்ளம்) என்னுமிடம் காரைநகரிலுள்ளது. களதீவு என்னுமிடம் புங்குடுதீவிலுள்ளது. புறநானூற்றுச் செய்திகளைக் குறிப்பாகப் புறப்பொருள் அம்சங்கள் சிலவற்றை நினைவூட்டும் வெட்சி யாமுனை, வியப்புலி, கரந்தலி, பாணாவிடை போன்ற இடப்பெயர்கள் புங்குடுதீவிலுள்ளன என அவ்வூர் முதுபெரும் சைவத்தமிழ் அறிஞர் வித்துவான் அ. கனகசபை கருதுகிறார். பசுத்தீவு என அழைக்கப்படும் நெடுந்தீவிலிருந்தும் அயலில் உள்ள கச்சதீவில் இருந்தும் பால், தயிர் நெய் முதலியன இராமேஸ்வரத்திலுள்ள இராமநாதசுவாமி கோயிலுக்கு கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் பெரிய புலம், பள்ளம்புலம், உயரப்புலம், மண்கும்பான், மடத்துவெளி, குறிகாட்டுவான் நெடுந்தீவு, பண்ணைத்துறை முதலிய இடப்பெயர்கள் குறிப்பிடற்பாலன. முதலாம் ராஜேந்திர சோழப் பெருமன்னனின் தென்கிழக்கு ஆசிய விஜயம் பற்றிக் கூறும் தமிழ் மெய்க்கீர்த்தியிலே அவன் வென்ற இடங்களிலொன்றாகப் பண்ணையும் குறிப்பிடப்படுகிறது. துறைநீர்ப்பண்ணை என அது குறிப்பிடப்பட்டுள்ளமை ஈண்டுக்கவனித்தற்பாலது. பண்ணைத்துறை இவ்விடத்தினதும் பண்ணைத்துறையினதும் பெயர், சோழரின் பெண்ணையாற்றுத் தொடர்பாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். பெண்ணைபண்ணையாகத் திரிபுற்றிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. ஆறுபோன்று இவையும் கடலையடுத்து இருப்பது கவனித்தற்பாலது. பெண்ணையாற்றுப் பகுதியிலிருந்து புலம் பெயர்ந்துவந்த மக்கள் இங்கே இறங்கிய போது இது தமது தாய்நாட்டிலுள்ள நிலம் போல இருந்தமையால் இப் பெயரிட்டனர் என்று ஐதீகமுண்டு, இது நன்கு ஆராயப்பட வேண்டியதாகும்.

தமது தாய் நாட்டிலுள்ள சில அம்சங்கள் தீவகத்திலே காணப்பட்டபடியாற் போலும் ஒல்லாந்தர் தாய் நாட்டிலுள்ள இடப்பெயர்கள் சிலவற்றை இவற்றிற்குச் சூட்டினர். அங்கு றையின் ஆற்றின் கீழ்ப்பகுதிகளில் தீவுகள் போன்ற நிலப்பகுதிகள் காணப்படுவது போல இங்கு கடல் நீரினால் சூழப்பட்டுள்ள தீவுகளை அவர்கள் அவதானித்தும் பெயரிட்டிருக்கலாம். இங்குள்ள கடல்களை அவர்கள் உவர்நீர் ஆறுகள் எனவும் தமது ஆவணங்களிலே குறிப்பிட்டுள்ளனர். இப்பெயர்ப்பட்ட வழக்காறு தீவகத்திலும் உண்டு. ஏழு தீவுகளையும் சூழ்ந்துள்ள கடல் நீர் ஒன்று சேருமிடம் ஏழாற்றுப் பிரிவு என அழைக்கப்படுகின்றது. இப்பகுதியிலே சுழி நீரோட்டமிருப்பதால் வள்ளங்கள் முதலியன இவற்றை விலக்குவன அல்லது கவனமாகச் செல்லுவன. ஒல்லாந்தர் வேலணையினை லெய்டென் எனவும் காரைதீவினை (காரைநகரை) அம்ஸ்ரர்டம் எனவும் புங்குடுதீவினை மிடில்பேர்க் எனவும் நயினாதீவை ஹர்லெம் எனவும், அனலதீவினை றொட்டர்டம் எனவும், நெடுந்தீவினை டெல்வ்ற் எனவும் அழைத்தனர். இவற்றுள் லெய்டன், டெல்வ்ற் ஆகிய இரண்டு பெயரும் இன்றும் வழக்கிலுள்ளன. ஊர்காவற்றுறையினைப் போர்த்துக்கீசர் காயெஸ் (Gaes) எனவும் அழைத்தனர். அங்கு ஜரி (உருண்டி)க் கோட்டையினைக் கட்டினர். யாழ்ப்பாணக் கடலை பாதுகாக்க அவர்கள் வோர்ட்டலெஷாடு காயெஸ் (Fortatexa do Caes) எனும் கோட்டையினைக் கட்டினர். இதன் அழிபாடுகள் உள்ள இடமே காரைநகர் மேற்கில் உள்ள ராசாவின் தோட்டமெனக்கருதப்படுகிறது. இவ்விடத்திலே இப்பகுதி மன்னரின் மாளிகை இருந்திருக்கலாம். டச்சுமொழியில் கயிற்ஸ் (Kayts) என அழைக்கப்பட்டது. இப்பெயர் ஒல்லாந்திலுள்ள ஓர் இடப்பெயராகும். காயெஸ் எனும் பெயர் முதலில் இதற்கு எதிரே காரைநகரிலுள்ள துறைமுகத்திற்கு இருந்ததாகவும் பின்னரே இவ்விடத்தினை குறித்ததாகவும் கருதப்படுகின்றது. ஆங்கிலத்தில் Kayts எனும் பெயரே இன்றும் நிலைத்துள்ளது.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சியினை நினைவூட்டும் கோட்டைகள் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் முதலிய இடங்களில் இன்றும் உள. இவற்றுள்ளே ஹமென்உறீஹீல் கோட்டை குறிப்பிடற்பாலது. காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்குமிடையேயுள்ள கற்பாறையிலான சிறுதீவிலிது அமைக்கப்பட்டடுள்ளது. இதிலிருந்து இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே செல்லும் கப்பல்களை அவதானிக்கலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளித் தொடர்புகளைக் கட்டுப்படுத்தக்கூடிய கேந்திர ஸ்தானமொன்றில் இது அமைந்துள்ளது. இதன் முக்கியத்துவத்தினைப் போர்த்துக்கீசர் உணர்ந்து ஒரு சிறு கோட்டையினை இங்கு கட்டினர். அவர்களுக்கு முன் யாழ்ப்பாணத்து மன்னரும் அதன் முக்கியத்துவத்தினை உணர்ந்திருப்பர். போர்த்துக்கீசரைத் தொடர்ந்து ஆதிக்கம் பெற்ற ஒல்லாந்தர் இவ்வாறு அழைத்தனர். இப்பெயரே இன்றும் நிலைத்துள்ளது. இவர்களின் கட்டிடக் கலைத் திறனுக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும். தொடர்ந்து பிரித்தானியரும் இதனைப் பயன்படுத்தி வந்தனர். அனலைதீவு போர்த்துக்கீசர் காலத்திலே டொனாகிளார எனும் மாதினால்

கணேச தீபம் ~~~

ஒல்லாந்தருடன் நடைபெற்ற போர்களில் அழிந்துவிட்டமை துரதிர்ஷ்டமே, எனினும் கோவாவிலும் லிஸ்பனிலும் சில முக்கியமான ஆவணங்கள் உள்ளன. ஒல்லாந்தர் கால ஆவணங்களைப் பிரித்தானியர் பெருமளவு பேணியுள்ளனர். எம்மவர் மத்தியிலே வரலாற்று மரபுகள் நன்கு பேணப்பட்டில. அதே வேளையில் எம் நாட்டிற்கு வந்து மேற்குறிப்பட்ட பிறநாட்டவர் எழுதி விட்டுச் சென்றுள்ள சில முக்கியமான ஆவணங்கள் இதுவரை நன்கு பயன்படுத்தப்படாமையும் துரதிர்ஷ்டமே, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் கால வரலாற்று மூலங்களைப் பயன்படுத்துவதில் வரலாற்று மாணவர் நன்கு கவனம் செலுத்தவேண்டும். மேற்குறிப்பிட்ட போர்த்துக்கீச, ஒல்லாந்த ஆவணங்கள், அறிக்கைகள், நூல்கள் மூலம் இக்காலகட்டத்திலே தீவகத்திலே வாழ்ந்த மக்களின் தொகை, அவர்களின் தொழில், தொழில் வாய்ப்புக்கள், பொருள்வளங்கள் முதலியன பற்றி ஓரளவாவது அறியலாம். தீவகத்திலே விவசாயம், மந்தைவளர்த்தல், மீன்பிடித்தல் வியாபாரம் முதலிய தொழில்களும் சாயவேர், சிப்பி, சங்கு, மீன், மான், முயல், ஆடு, மாடு, எருமை, குதிரை (நெடுந்தீவில்) பனை, தென்னை முதலிய மூலவளங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சிறுகாடுகளும் இங்கு இருந்தன. புங்குடுதீவிலுள்ள பெருங்காடு, கற்காடு, கோட்டைக்காடு, நாரந்தனையிலுள்ள பெரியகாடு போன்ற இடப்பெயர்கள் இதனை இன்றும் நினைவூட்டும். இவற்றில் மான், முயல் முதலிய மிருகங்களும் வாழ்ந்தன, இங்கு மான்கள் காணப்பட்டமை குறித்து ஒல்லாந்த ஆவணங்களும் குறிப்பிடுகின்றன. மானெழுவம், மானாவெள்ளை, மானங்கள் முதலிய இடப்பெயர்கள் அதனை நினைவூட்டுன போலும். கி.பி. 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே (1658-1665) ஒல்லாந்த மதகுருவாகக் கடமையாற்றிய் போல்டேயஸ் சுவாமிகள் புங்குடுதீவில் வாழ்ந்த ஆண்கள் ஏனைய இந்தியப் பகுதிகளிலுள்ளவர்களிலும் பார்க்க உயரமானவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் போர்த்துக்கீச, ஆசிரியர் சிலரின் கூற்றுப்படி தீவகத்திலே கடற்கொள்ளையரின் அட்டகாசங்களினால் மக்கட் தொகை அக்காலத்திலே குறைவாக இருந்ததாகவும், போர்த்துக்கீசர் வருகையினைத் தொடர்ந்து அமைதியேற்படக் கூடுதலான மக்கள் இங்கு வாழ்ந்தனர் எனவும் அறியப்படுகின்றது. இது எந்த அளவுக்கு வரலாற்றுண்மை என்பது ஆராயப்பட வேண்டியதாகும். சாயவேர் தீவகத்தின் பல இடங்களிலும் கிடைத்ததாயினும், காரைநகரிற் கிடைத்த சாயவேரே மிகச்சிறந்த ரகமானதாகக் கூறப்படுகின்றது. பருத்தியும், ஓரளவு பயிரிடப்பட்டது. பருத்தி அடைப்பு, பருத்திவளவு1 பருத்தித்தீவு முதலிய இடப்பெயர்கள் தீவகத்தில் உள்ளன. திரு. முத்தையாபிள்ளை என்பவர் பருத்தித்தீவிலே பருத்தி உற்பத்தியைப் பெரிய அளவில் தொடங்கினார் ஆனால், அங்கு பருத்திச்செடி நன்கு வளர்ந்தாலும் லாபகரமில்லாமையால் கைவிடப்பட்டது. ஆனால் பெயர் மட்டும் நிலைத்துள்ளது. நெடுந்தீவிலே நோலன் என்பவன் சணல் உற்பத்தியைப் பெருக்கினான்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியிலே, 19ம் நூற்றாண்டு முடிவிலும், குறிப்பாக இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியிலும் தீவக மக்களில் ஒரு சாரார் பெரிய, சிறிய வர்த்தகம்

செய்யும் நோக்குடன் தென்னிலங்கை சென்றனர். அங்கே அவர்களி சிலர் காலப்போக்கிலே பிரபல வர்த்தகர் ஆயினர். வேறு சிலர் மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றனர். இவர்களில் ஒருசாரார் அவ்விடங்களிலே தங்கிவிட்டனர், மற்றையோர் திரும்பிவிட்டனர். 1948ன் பின் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றதிட்டங்களை தொடர்ந்து ஒருசாரார் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் முதலிய மாவட்டங்களிலே குடியேறியுள்ளனர். 1983ல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து ஒரு சாரார், பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, கனடா, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். வேறு சிலர் சவுதி அரேபியா, ஓமான் போன்ற மேற்கு ஆசிய நாடுகளுக்கும் தற்காலிகத் தொழில் நாடிச் சென்றுள்ளனர். தீவக மக்களின் வரலாற்றினை நோக்கும் போது "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்னும் தமிழ் மூதுரைக்கு அவர்கள் நல்லதோர் எடுத்துக்காட்டாகவும் உள்ளனர். இத்தீவுப்பற்று நீண்டகால வரலாறும் தனித்துவமும் கொண்டதாகும். இப்பகுதி மக்களின் நாட்டுப்பற்று மொழிப்பற்று, சமயப்பற்று முதலியன குறிப்பிடற்பாலன. தீவகவரலாறு பற்றி மேலோட்டமான சில தகவல்கள் இச்சிறு கட்டுரையிலே தரப்பட்டுள்ன. விஞ்ஞான ரீதியிலே பல்வேறு வரலாற்று மூலங்களையும் நன்கு பயன்படுத்தி மேலும் இவ்வரலாறு விரிவாக எழுதப்படவேண்டும.

**(பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் தனது தாயார்**
**திருமதி விநாயகமூர்த்தி மகேஸ்வரிப்பிள்ளை அவர்களின் நினைவாக**
**1990 ஆம் ஆண்டு வெளியிட்ட நூலில் இடம்பெற்ற கட்டுரை)**

கணேசா, நூறு ஆண்டுகள்
நீ செய்த கல்விச் சேவை இமயத்தையும் மிஞ்சும்
வாழ்த்துக்கள்

With Best Compliments From:

# RAMSETHU & CO.

Importers, General Merchants
Commission Agents in Local Produce.

No:65, 4th Crooss Street,
Colombo-11,
Tel:2323686,2380374

கணேசா ஆண்டுகள் நூறு நீ செய்த சேவையை
இன்னும் ஆயிரம் ஆண்டுகள் நீ செய்ய
எம் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

*With Best Compliments From:*

# Sri Sai Ram

# Hotel

## (Pure Veg)



**We Undertake Party Orders**

**No. 149, New Chetty Street,**
**Colombo-13**

**Tel:- 077 6040394, 011 3137302**

கணேசா உன் நூறு ஆண்டுகள்
சேவை கண்டு பூரிக்கின்றது எம் இதயம்
உன் நூற்றாண்டு விழாசிறப்புற
வாழ்க வளமுடன் என வாழ்த்துகிறோம்

*With Best Compliments From:*

# S.P.S.
# Agency

**Importers, Exporters,General Merchants, & Commission Agents, for Local Productes.**

**No. 113, 4th Cross Street,**
**Colombo-11.**
**Tel:011-326204.**
**Fax:441824**

கணேசா நீ பிறந்ததோ சிறிய தீவில் நீ பெற்றடுத்த பிள்ளைகளோ
உலகமெங்கும் சாதனையாளர்களாய் இன்னும் பல நூறு ஆண்டுகள்
உன் சேவை தொடர வாழ்த்துகிறோம்.

*With Best Compliments From:*

# New Rathiga Jewellery & Courier Service

**Jewellery and Gem Merchants**
**Delivering Goods to All Countries**



**No. 134A, Sea Street,**
**Colombo-11**
**Tel:2328416,4991722**
**Mob:0777-734652,077-1906731**

கல்வி ஒளி யேற்றிய
ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்துக்கு
எம் நல் வாழ்த்துக்கள்

With Best Compliments From:

# OMEGA TRADERS

General Merchants & Commission Agents

NO.62 A, OLOD MOOR STREET
COLOMBO - 12.
TEL:2341747,2432350
FAX:2434905

ஸ்ரீகணேச மகா வித்தியாலயம் ஆண்டு நூறில்
மேலும் வளம்பல பெற்றிட வாழ்த்துகிறோம்.

With Best Compliments From:

# SOORYAA
# TRADES



215-B,Prince Street,
Colombo -11
Tel: 011-2380926

ஆண்டுகள் நூறு நீ செய்த சேவையை கணேசா
இன்னும் ஆயிரம் ஆண்டுகள் செய்ய வாழ்த்துகின்றோம்

*With Best Compliments From:*

# T.M.B.

# ENTERPRISE

General Merchants & Commission Agents

No. 18, Fourth Cross Street,
Colombo-11
Tel: 011-2338239 ,011-4999958

காலமெல்லாம் கல்விச் சேவை செய்து
நூற்றாண்டுவிழாக்காணும்
யா/ புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்திற்கு
எம் நல் வாழ்த்துக்கள்.

*With Best Compliments From:*

# PALLIGODA
## Trading Company

PVD

**Office:**
No.57,Old Moor Street,
Colombo - 12.

**Ware House:**
123/306,Nuge Road, Peliyagoda.
Tel: +94 (0) 11 5757330

Tel : + 94 (0) 77 7565857
: + 94 (0) 11 2432994
: + 94 (0) 11 4714124
: + 94 (0) 11 5330962
Fax : + 94 (0) 11 4714125

நூற்றாண்டுவிழாக்காணும்
யா/ புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்
இமயம் போல் வளர்ந்து மேலும்
சேவை செய்ய எம் நல் வாழ்த்துக்கள்.

**With Best Compliments From:**

# E.S.A

## E. Sittampalam & Son

**No. 223, Fifth Cross Street, Colombo-11.**
**Tel:- 011 2326587**
**Mobile:- 071 4543804**

கணேசா, நீ பிறந்ததோ சிறிய தீவில்,
நீ பெற்றெடுத்த பிள்ளைகளோ தரணி
எங்கும் சாதனையாளர்களாய்!

With Best Compliments From:

# Ranjitha Traders

Importers, General Merchants

No:- 180, Colombo Street, Kandy.
Tel:- 081 2232350, 2229155,
Fax 081 2229156
Mobile:- 077 7300041

No:- 136/F, Dam Street,
Colombo 12.
Tel:- 011 2431802-3
Fax:- 011 2431809

நூற்றாண்டுவிழாக்காணும்
யா—புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்திற்கு
எம் நல்வாழ்த்துக்கள்

*With Best Compliments From:*

யாழ்ப்பாணம்- கொழும்பு, கொழும்பு - யாழ்ப்பாணம்
லொறி போக்குவரத்து சேவை குதூகல ஆரம்பம்

# SNP ரான்ஸ்போர்ட் சேவிஸ்

சிவா நறுமணப் பூங்கா நிறுவனத்தினரால் யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு மட்டுமல்ல மக்களுக்காகவும் இலாபகரமான நம்பகரமான சேவையாக நடைபெறுகிறது. உங்கள் பொருள்களை கொழும்பிலோ யாழ்ப்பாணத்திலோ ஒப்படைத்தால் 72 மணித்தியாலத்தில் நீங்கள் வழங்கும் முகவரியில் பாதுகாப்பாக ஒப்படைப்போம்.

30 ஆண்டுகளாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற எமது நிறுவனத்தின் நான்கு லொறிகள் போக்குவரத்துக்குச் சேவையில் ஈடுபடுகின்றன.

குறுகியகால அழைப்புடன் நம்பகரமான உங்கள் பொருள்களை பாதுகாப்பாக ஒப்படைப்போம்

எங்கள் போக்குவரத்ததுச் சேவையில் இணைந்துக்கொள்ளுங்கள்.

பொருள்களுக்கான காப்புறுதி வசதியும் (Insured with Goods) உண்டு.

அழைப்புக்குச் செவி கொடுப்போம். அதன் பிரதிபலிப்பு சிறந்த நம்பிக்கையான சேவையை வழங்குவோம்.

சிறந்த சேவைக்கும் துரித விநியோகத்திற்கும்

**தலைமையகம்**
SNP Transport Service,
No 155, Old Moor Street,
Colombo-12. T.P:- 077 7277670.

யாழ்ப்பாணத்தில் சகல தொடர்புகளுக்கும்
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 2567, 0251 5670506

நூற்றாண்டுவிழாக்காணும்
யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்திற்கு
எம் நல்வாழ்த்துக்கள்.

With Best Compliments From:

# G.T.V. Enterprises (Pvt) Ltd

## Vijeya Enterprises

## Maharaja Food Products

Importers Exporters, Food Producers Forwarding &
Clearing Agents Cargo Services to all Countries by Air & Sea,
Courier Service, Sri Lankan Airlines Cargo Agents

No:- 170, Central Road, Colombo-12.
Tel:- 011 2 448928

No:- 288, George R. De. Silva mw, Kotahena, Colombo-13
Tel:- 011 3 150859

No:- G-2 146, Negombo Road, Wattala (Pearl Park)
Tel:- 011 2938152

No:- 225, Kasthuriyar Road, Jaffna.
Tel:- 021 2224338

No:- 37/4, Trinco Road, Batticaloa.
Tel:- 065 2227982

18/3, Dr. E.A. Cooray Mawatha, Colombo- 06-
Tel: 011-2 360 926, 011- 2 559 449, Fax: 011- 2361 139

நூறு ஆண்டுகள் தரணி எங்கும் தமிழர் புகழ்பாட
வழிசமைத்த கணேசா மேலும் பல நூறாண்டுகள்
உன் சேவை தொடர எம் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

**With Best Compliments From:**




# Astra
## Trading & co

**Importers, Exporters, General Marchants & Commission Agents**

**No:- 187, 5th Cross Street,**
**Colombo- 11. Sri Lanka.**
**Tel:- 011 2433717, 011 2433718**
**Fax:- 011 2424062**

தாய்மொழி புகட்டினாய்
தமிழராய் வாழ வழி செய்தாய்
தரணியெங்கும் தமிழர் புகழ் பாட வழிசமைத்தாய்
நூறு ஆண்டுகள் தழிழுக்கு நீ ஆற்றிய சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

With Best Compliments From:

# S.V.S.

## Murukesan Chettiyar

Dealers in All Kinds of Oil and
Cattle Foods Etc.

No: 231, 5th Cross Street,
Colombo-11
Tel:- 011 2329595

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

எம் மண்ணின் இயல்பான வாழ்வுக்கு
கல்வி தந்து மெருகூட்டினாய்
உந்தன் நூறு ஆண்டு கல்விச் சேவையை
போற்றுகின்றோம்.

With Best Compliments From:

# S.N.S. Trades

General Merchants and Commission Agents

No: 169, 5th Cross Street,
Colombo-11.
Tel:- 011 4563531, 011 2424261

நூற்றாண்டுவிழாக்காணும்
யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்திற்கு
எம் நல்வாழ்த்துக்கள்.

**With Best Compliments From:**

ESTD 1965

# Devi

## Jewellers (Pvt) Ltd.

## Precious Expression



**No. 131, Sea Street, Colombo-11**
**Sri Lanka.**
**Tel:- 011 2395001/5 Fax:- 011 2327101**
**E-mail:- info@devijewellers.lk**

கணேசா, வயது நூறை எட்டினாய்
எம் மக்கள் வாழ்வில்
கல்வியில் வளம் பல சேர்த்தாய்
தரணியில் உன்புகழ் இமயம்
போல் வளர எம் நல்வாழ்த்துக்கள்

With Best Compliments From:

# Maho Stores

General Merchants & Commission Agents

M.O.S

மாகோ களஞ்சியம்

No. 97C, (3)
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே.: 021- 2222818


No. 97C, (3)
Power House Road,
Jaffna,
Tel: 021- 2222818

With Best Compliments From:

நூறு ஆண்டுகள் தரணி எங்கும் தமிழர் புகழ்பாட
வழிசமைத்த கணேசா மேலும் பல நூறாண்டுகள்
உன் சேவை தொடர எம் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

# KARUNA STEEL

Importers, Wholesalers & Retailers of
General Hardware



No. 369 A, Old Moor Street,
Colombo-12, Sri Lanka.
Tel : 2392223/4, 2435124
Fax : 4627646
E-mail : info@karunasteel.com

No. 372 , Old Moor Street,
Colombo-12, Sri Lanka.
Tel : 2434046/2437651
Fax : 4714437
Website: www.karusteel.com

Stores: 388, Sri Sangaraja, Mawatha, Colombo-10. Tel: 2432950

நூற்றாண்டுவிழாக்காணும்
யா/ புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்
இமயம் போல் வளர்ந்து மேலும்
சேவை செய்ய எம் நல் வாழ்த்துக்கள்.

# SEAGULL *Residencies*

அன்பர்களே!



இலங்கையின் தலைநகரமான கொழும்பு,
வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி,
தெகிவளை ஆகிய பிரதேசத்தில்
பிரமாண்டமான அமைப்பில் வடிவமைத்து
உங்களின் கனவுகளுக்கு நிகரான வீட்டை
நிஜத்தில் உருவாக்கித் தருகின்றார்கள்.
கட்டிடத் துறையில் இலங்கையில்
முன்னணியில் இயங்கும்
Seagull Residence நிர்வனத்தினர்,
சிறந்த பொறியியலாளர்களின்
வடிவமைப்பில் உறுதியான சிறந்த
இல்லங்களை சுகாதார வசதிகளுடன்
நீங்கள் வாங்க விரும்பினால் தொடர்பு கொள்ளவும்

**Head Office : 03, Bagatalle Road, Colombo- 03**
**Tel : 5642964, 2501979**
**Hot Line : 0773315400, 0777354116, 0777874544**
**E-mail : seagullapp@sltnet.lk/ ashleyhills@gmail.com**
**Web : segullres.com**
**Site Office : 77, Lady Mc Callums Drive, Nuwara Eliya.**
**Tel : 052- 7402150, 052- 7900050, 052- 2222417**

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

தாய்மொழி புகட்டினாய்
தமிழராய் வாழ வழி செய்தாய்
தரணியெங்கும் தமிழர் புகழ் பாட வழிசமைத்தாய்
நூறு ஆண்டுகள் தழிழுக்கு நீ ஆற்றிய சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

**With Best Compliments From:**

# KUMARAVEL COY

General Merchants &
Commission Agents

**DEALERS IN PROVISIONS**

**No. 217,5th Cross Street,**
**Colombo.11. Tel: 011- 2421057**

கணேசா நீ அறுவடை செய்த
கல்விமான்கள் ஆயிரம் ஆயிரம்
இன்னும் பலரை அறுவடை செய்வாய் என்பது
கண் கூடு
நூற்றாண்டு வாழ்த்துக்கள்

With Best Compliments From:

# Theepam Traders

GENERAL MERCHANTS

No. 50, Dam Street,
Colombo- 12.
Tel: 011- 2326903

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

கன்னித் தமிழ்வளர்க்கும் கணேசா
நூறு ஆண்டுகள் என்ன.
இன்னும் பல நூறாண்டுகாலம் உன்
புகழ் அகிலமெல்லாம் பரவ
எம் இனிய நல்வாழ்த்துக்கள்.
வாழ்க வளமுடன்.

*With Best Compliments From:*

# SUN WEDDING CARDS

**SPECIALIST IN INDIAN & LOCAL WEDDING CARDS**

# Sun Printek

*Symbol of the Quality Printing*



**NO. 44-A, SRI KATHIRESAN STREET,**
**COLOMBO- 13. SRI LANKA.**
**TEL: +94- 11- 4614661**
**TELE/ FAX: +94- 11- 2433641**

**E-mail: sunwc@live.com Web: www.suncards44a.com**

கன்னித் தமிழ் வளர்க்கும்
ஸ்ரீ கணேச வித்தியாலயத்துக்கு
எம் நல்வாழ்த்துக்கள்.

*With Best Compliments From:*

# NEW VISHNU

# Trading Co

General Merchants &
Commission Agennts For Local Produce

No.174, 4th Corss Street
Colombo-11.
Tel: 011-324364,011-434874

நூற்றாண்டுவிழாக்காணும்
கணேசா நீ செய்த சேவைக்கு
வாழ்த்துச் சொல்ல வார்த்தை இல்லை.
வாழ்க வளமுடன் என
மனதார வாழ்த்துகிறோம்.

With Best Compliments From:

# Ainkarans Trading

General Merchants & Commission Agents

No:- 21, St,Jhons Road
Colombo-11.
Tel:011-2326740

யா — புங்குடுதீவு
கணேச மகா வித்தியாலயம்
நூற்றாண்டு விழாசிறப்புற
வாழ்த்துகிறோம்.

With Best Compliments From:

# ARUN
# TRANS WAAYS

**Prima Wheat Flour**
**Authorized Dealers**

No.165,Fifth Cross Street,
Colombo- 11
Tel: 011- 2543757

யா — புங்குடுதீவு
ஸ்ரீகணேச மகா வித்தியாலய
நூற்றாண்டு விழாவுக்கு
எம் நல்வாழ்த்துக்கள்.

**With Best Compliments From:**

# JAFFNA TRADERS

**General Merchants Commission Agents & Transporters**




**302, 338, 336, HOSPITAL ROAD,**
**JAFFNA.**
**TEL: 021-2229453,021-2228998**

கணேசா, வயது நூறை எட்டினாய்
முதிர்ச்சியும் அடைந்தாய், தோற்றத்தில்
அல்ல கல்விச் சேவையில்.
வளம் பல பெற வாழ்த்துக்கள்.

With Best Compliments From:

Kannan
Lodge

No:- 06, Sir Pon Ramanathan Road,
Thirunelveli, Jafnna.

எங்கள் இயல்பான வாழ்வுக்கு கல்வி தந்து
மெருகூட்டினாய் உன்தன் நூறு ஆண்டு
கல்விச் சேவை இன்னும் பல நூறு
ஆண்டுகள் தொடர வாழ்த்துகிறோம்.

*With Best Compliments From:*

# Abirami Multi Centre

# ABIRAMI TEXTILE

# Nathan's Shoe Palace

**NO. 155, 156, NEW MARKET, JAFFNA.**

With Best Compliments From:

# Amilex

## (PVT) LTD.

Importers, Wholesale and Retail
Dealers in Porcelain Ware,
Gift Items and Household Items Etc.



No. 222, Bodhiraja Mawatha,
Colombo-11, Sri Lanka
Tel: 011-2471472
Fax: 0112437451
e-mail: sales@amilex.lk
Web: www.amilex.lk

நூற்றாண்டுவிழாக்காணும்
யா—புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்திற்கு
எம் நல்வாழ்த்துக்கள்


*With Best Compliments From:*

# Gnanam Imports (Pvt) Ltd

**Importers & General Merchants**

**No:- 79,5th Cross Street, Colombo-11**
**Tel:- 011 2449255, 2439334**
**Fax:- 011 2393339**

வாழ்கவையகம் வாழ்கவளமுடன்



கணேசா நீ நூறு ஆண்டுகள் அல்ல
இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள்
எம்மண்ணுக்கும் எம்மக்களுக்கும்
கல்விச்சேவை செய்ய வாழ்க வளமுடன்.
எம் நல்வாழ்த்துக்கள்

# MAYOORA

## Gift Centre

**Mayoora Distibuters**

25, 1st Floor, New Market, Jaffna.
Tel: 021- 2222084, 0777-747095 Fax: 021- 2229151
E-mail: suthanmge@yahoo.com




14, New Market, Power House Road,
Jaffna. Tel: 021- 222 2084, Mob: 077-6199094

வாழ்த்து சொல்ல வார்த்தை தந்தாய்
வாழ்வதற்கு வழி செய்தாய்
கணேசா, உந்தன் நூறு ஆண்டு கல்விச் சேவை
தொடர வாழ்த்துக்கள்



வேலுப்பிள்ளை சோமசுந்தரம்
12ம் வட்டாரம், புங்குடுதீவு

கணேசா, வயது நூறை எட்டினாய்
முதிர்ச்சியும் அடைந்தாய், தோற்றத்தில்
அல்ல கல்விச் சேவையில்
வாழ்த்துக்கள்

With Best Compliments From:

# T.S.K.

## RICE AGENCIES

General Merchants & Commission Agents
Wholesale Dealers in Rice Ceylon Produce

No. 19 & 21, 4th Cross Street,
Colombo 11.
Tel:2438257, 2338238

நூற்றாண்டுவிழாக்காணும் எம் கல்விக்கு அன்னையாம்
யா – புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்திற்கு
எம் நல்வாழ்த்துக்கள்

*With Best Compliments From:*

# Mercury
## Trading Company

**No:- 203, Keyzer Street,**
**Colombo-11.**
**Tel: 2447660,2472058**

கல்வித் தாயே, நீ.
நூறு ஆண்டுகள் செய்த சேவை
இந்த அகிலத்தையே ஆளும்.
வாழ்க வளமுடன்!

**With Best Compliments From:**

# NB Foods (Pvt) Ltd.

**IMPORTERS & EXPORTERS**

152, Fourth Cross Street,
Colombo-11.
Tel:- 011 2338148, 011 2434920,
011 2320675, 077 896866
Fax:- 011- 2437802

கல்விக்குச் சின்னமாம் கணேசா
நூறாண்டுகள் நீ செய்த கல்விச் சேவை
இன்னும் பல நூறாண்டுகள் தொடர
எம் மனமார்ந்த வாழ்த்துக்கள்

*With Best Compliments From:*

# Thaya

# Traders

Generral Merchants, Commission Agents
& Retail Dealers

**No. p 276, Keyzer Street,**
**Colombo-11.**
**Tel:- 011 2439970**

கல்விக் கண் அளித்த கணேச மகா
வித்தியாலயம் இன்றுபோல் என்றும்
சிறந்திட வாழ்த்துகிறோம்.

With Best Compliments From:

# WOODLANDS COMPANY

Importers Exporters &
Commission Agents

Dealers in All Kinds Of Local Produce

No. 192,4th Cross Street,
Colombo-11
Tel: 011-2327451-011-2422426

கல்வித்தாயே கணேசா நீ
நூறு ஆண்டுகள் செய்த சேவை
இந்த அகிலத்தையே ஆழும் இன்னும்
உன் சேவை தொடர வாழ்த்துகிறோம்.

With Best Compliments From:

V.Manicam
&
Brother

No. 34, 4th Cross Street,
Colombo-11.
Tel:011-2323986, 011-2323408

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

தாய் ஊட்டிய பால் என் உடலை வளர்த்தது,
நீ ஊட்டிய கல்வி என் அறிவை வளர்த்தது,
கணேசா நீ என் தாய்க்கு சமன் அல்லவோ
என் தாய்க்கு நூற்றாண்டு வாழ்த்துக்கள்.

With Best Compliments From:

# Annai Nagaa Food City



COLOMBO OFFICE:

178, CENTRAL ROAD, COLOMBO- 12

TEL: 011 - 2391257, 011- 071-4716756,

FAX:2391257

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
எமக்கு அறிவு புகட்டிய அன்னையாம்
கணேசா ஆண்டு நூறில் வாழ்க வளமுடன்
என வாழ்த்துகின்றோம்.

*With Best Compliments From:*

# Om Saravana Co.

**Importers, General Merchants & Commission Agents**

**NO. 229, 5TH CROSS STREET,**
**COLOMBO- 11.**
**TEL: 011- 2433864, 2435168**